82|

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

தொகுதி - 21 எண் - 2

மார்ச் - 1992

C

D
V211,31'N92
N92.21.2
164972

வெளியீடு 7-1-1993 Issued 7-1-1993

821/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 30, 1992 - தொகுதி 21 எண். 2

Monday, the 30th March 1992 - Volume 21 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## உள்ளடக்கம்

30—3—1992


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள். .. 185—224

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. 224—249

2. சிறப்புக் குறிப்பு—

தர்மபுரி மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் சக்திவாய்ந்த கருவிகளை வைத்துக்கொண்டு நடமாடிவருவது குறித்தும், முதலமைச்சர் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அவசியம் குறித்தும் .. 250—280

3. உறுப்பினர் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைக்கப்படுதல். 280—282

4. கவன ஈர்ப்பு—

உதகமண்டலத்திலுள்ள இயங்கும் மண் ஆய்வுக் கூடத்தை வேறு மாவட்டத்திற்கு மாற்றுவது குறித்து .. .. 282—285

5. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. 285—373

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம் 371

(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச் சாலைகள். 372

| | பக்கங்கள் |
|---|---|
| மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி | 287, 288, 344—368 |
| திரு. மா. சுந்தரதாஸ் .. .. .. | 287—298 |
| *திரு. கா. ப. பட்டாபிராமன் .. | 298—303 |
| செல்வி பி. நிர்மலா .. .. .. | 303—307 |
| டாக்டர் தே. குமாரதாஸ் .. .. | 307—310 |
| திரு. கோ. ஜானகிராமன் .. .. | 310—315 |
| திரு. கு. சு. துரைமுருகன் .. .. | 315—32 |
| *திரு. டி. எம். ரங்கராஜன் .. .. | 322—327 |
| செல்வி எல். சுலோசனா .. .. | 327—330 |
| திரு. ஆர். முருகையா பாண்டியன் .. .. | 331—333 |
| திரு. சஞ்சய் ராமசாமி .. .. | 334—336 |
| திரு. சி. ஞானசேகரன் .. .. | 336—344 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 373 |


164972

D

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 17, பிரஜோற்பத்தி - திருவள்ளுவர் ஆண்டு - 2023
1992, மார்ச் 30, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப் படும் ".

நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன் மக்களுக்கு இறைவன் என உயர்வாகக் கருதப்படுவான்.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 377. திரு. என். பன்னீர்செல்வம். இருக்கையில் இல்லை. (i)

வினா எண் 378, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

378—

#### பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை.

*4250—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டைத் தொகுதியில் வீட்டுமனை இல்லாத பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இதுவரை எந்தெந்த கிராமத்தில் வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

---

@மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க 1-4-92 அன்று எடுத்துக்கொள்ளப் பெற்றது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். எங்களைப் போன்று ரிசர்வ் சீட்டில் வரக்கூடிய எம்.எல்.ஏ.க்களுக்கு ஒரு மிகப் பெரிய தொல்லை, ஏதோ அரிசனங்களுக்கு மட்டும்தான் செய்கிறோம், பிற்படுத்தப்பட்ட சாதியைச் சார்ந்தவர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்ற குறை இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் பல இடங்களிலே ஆதிதிராவிடர்களை விட பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்னும் மோசமான நிலைமையில் குடிசை வீட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு என்ன செய்திருக்கிறது ? ஏன் அவர்களுக்கு மனைப்பட்டா கொடுக்கவில்லை ? தனி அதிகாரிகளை நியமித்து அவர்களுக்கும் மனைப்பட்டா வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தால் கடன் வாங்கியாவது அவர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வார்கள். அதற்கு ஏதாவது அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டிலேயிருந்து முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், நரிக்குறவர் மற்றும் ஒட்டர் ஆகிய நான்கு பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரம் வீட்டுமனைப்பட்டா ஒதுக்குகிற திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனால் அதற்குப் பிறகு, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று பிரித்ததற்குப் பிறகு, 1990-ஆம் ஆண்டிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டா ஒதுக்குகிற திட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டிலே ஒரு கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாகவும், இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாகவும் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது நீங்கள் குறிப்பிடுகிற மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், சீர்மரபினருக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் ஒதுக்குகிற திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் முதலிலே இல்லை என்று சொன்னார்கள். இப்போது பணம் ஒதுக்கி இருப்பதாகச் சொல்லுகிறார்கள். பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டு வருகிறது ? அதோடு மாத்திரமல்லாமல் ஏற்கனவே சீர்மரபினருக்கு காங்கிரஸ் ஆட்சியின்போது நாங்கள் இனாமாக வீடுகள் கட்டிக்



கொடுத்தோமே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறதே, அதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு மிகவும் பின்தங்கிய நிலைமையில் உள்ள மக்களுக்கு இனாமாக வீடுகள் கட்டிக் கொடுக்கவும், அவர்களுக்கென்று தனியாக ஒரு பிரிவை ஆரம்பித்துகூட தற்போது இருக்கக்கூடிய குடிசைகளுக்கு பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இல்லை என்று சொன்னதற்குக் காரணம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நில ஒதுக்கீடு, வீட்டுமனை ஒதுக்கீடு இருக்கிறதா என்பது கேள்வி, ஆகவே நான் இல்லை என்று சொன்னேன். இப்போது இந்த வீட்டுமனை ஒதுக்குகிற திட்டம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனியாக இல்லை. மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கு என்று நான் விளக்கம் அளித்திருக்கிறேன். சென்ற ஆண்டு, 1991-92-லே கடந்த ஆறு, ஏழு மாதங்களில் சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் 600 பேர்களுக்கு இந்த வீட்டுமனை ஒதுக்கீட்டிற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இன்னும் கொஞ்சம் அதிகமாக அந்த வீட்டுமனை கையகப்படுத்துகிற திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக அரசுக்குத் தெரிவித்தால் நிச்சயமாக அங்கே நிலம் கையகப்படுத்துகிற திட்டத்தை அரசு நிறைவேற்றும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீர்மரபினருக்கு வீடுகள் கட்டித் தருகிற திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் பல முறை இந்த மன்றத்திலேயே கேள்விகளுக்குப் பதில் அளித்து இருக்கிறேன். அது, முன்னாலே சுமார் 3 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இப்போது 13 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து அப்படிப்பட்ட சீர்மரபினருக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. நிதி வசதி பற்றாக்குறை என்கிற காரணத்தினால் மத்திய அரசினுடைய உதவியையும் மாநில அரசு இப்போது, எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறது.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 379, திருமதி மரியம்உல் ஆசியா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

379—

பள்ளிகளுக்கு தன்னாட்சி அந்தஸ்து வழங்கல்.

*2386—திருமதி மரியம்உல் ஆசியா :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்லூரிகளுக்கு தன்னாட்சி அந்தஸ்து அளிக்கப்படுவதைப் போல் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளுக்கும் தன்னாட்சி அதிகாரம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

திருமதி மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நல்வாழ்விற்காக பல புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டு இருக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கல்வியினுடைய முன்னேற்றத்திற்காக பல ஆண்டுகளாக சிறந்த முறையில் செயலாற்றிக் கொண்டு இருக்கிற புகழ் பெற்ற பள்ளிகளுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்குவதற்கு உயர் கல்வியாளர்களின் குழு அமைத்து, ஆய்வு செய்து அதன்படி, அந்தப் பள்ளிகளுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்குத் தன்னாட்சி உரிமை தருவது என்பது ஒரு சிறந்த கொள்கைதான் என்றாலும், இப்போது கல்லூரிகளுக்குக் கொண்டு வந்து இருக்கிறோம். அப்படிக் கொண்டு வந்திருக்கிற அந்தக் கொள்கையை இன்னும் முழுமையாக அனைவரும் ஏற்றுக் கொள்ளாத நிலையில் நாம் பள்ளிகளுக்குக் கொண்டு வருவது என்பதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

திருமதி மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பள்ளிகளுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்குவதற்கு ஏதாவது நிபந்தனைகள் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு முடிவு செய்கிறபோது தான், நாம் நிபந்தனைகளை வரையறுத்து வெளியிட முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னாட்சி முறையிலே நவோதயா பள்ளி என்ற ஒன்றை நெடுங்காலத்திற்கு முன்னாலே தமிழகத்திலே



கொண்டு வருவதற்கு ஏற்கனவே முயற்சி செய்து அந்த முயற்சி கைவிடப்பட்டு இருக்கிறது. மீண்டும் இந்த அரசு நவோதயா பள்ளிகளை தமிழகத்தில் நிறுவுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, தன்னாட்சி அந்தஸ்துக்கும் நவோதயாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 380. டாக்டர் அ. செல்லக்குமார். இருக்கையில் இல்லை.

வினா எண் 381. திரு. தி. சாத்தையா. இருக்கையில் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : Hon. Speaker Sir, I put the Question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 381, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

381—

## மகளிருக்கென தனியாகத் தொழிற்கல்வி நிலையம்.

*5289-ஏ.—திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மகளிருக்கென தனியாகத் தொழிற்கல்வி நிலையம் (Polytechnic) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற பெருநகரங்களில் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பெருநகரங்களில் மகளிருக்கென தனி அரசு பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களிலே மகளிருக்கென பாலிடெக்னிக் இருப்பது எனக்கும் தெரியும். உங்களுக்கும் தெரியும். இருந்தாலும்கூட இன்றைக்கு நாம் நிறைய இனாமாக கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்து விட்டோம். ஆகையினால், பெண்கள் பிளஸ் 2, பி.ஏ., எம்.ஏ., என்று படித்துவிட்டு கல்லூரிகளிலும் வேலை கிடைக்காமல், கல்யாணமும் செய்துகொள்ள முடியாமல் மிகக் கொடுமையான நியில் இருக்கின்றார்கள். ஆகையினால் எங்கெங்கே ரிசர்வ் தொகுதி இருக்கின்றதோ அந்தப்

பகுதிகளெல்லாம் இந்தப் பெண்களுக்காக ஐ.டி.ஐ. ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கின்ற எண்ணம் இப்போது இல்லை. தனிப்பட்டவர் யாரேனும் ஆரம்பிக்க முன்வந்தால், அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆரம்பிப்பது என்பது வேறு. ஆனால், தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்க வேண்டுமென்றால், அங்கே சில வசதி இல்லாத பகுதிகள் இருக்கின்றன. வசதி இல்லாமல் கஞ்சிக்கே வழி இல்லாமல் இருக்கக்கூடிய பகுதிகளில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு ஒரு ஆதரவு கொடுக்கக்கூடிய அளவிலே மீண்டும் அரசே இந்த பாலிடெக்னிக்கை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்போது கஞ்சிக்கே வழி இல்லாத பகுதி என்று ஒரு பகுதி எதுவும் கிடையாது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : எல்லாப் பகுதிகளிலேயும் பாலிடெக்னிக்கை ஆரம்பிக்க தகுதி படைத்தவர்கள் இருக்கிறார்கள், டிரஸ்டுகள் இருக்கின்றன, அறக்கட்டளைகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே மேல்நிலைப் பள்ளிகளை எல்லாம் மிகவும் நல்ல முறையில் நடத்துகிற நிறுவனங்கள் எல்லாம் இருக்கின்றன. அது இல்லை என்று நாம் சொல்லிக்கொண்டே இருப்பதன் மூலம், என்றைக்குமே இல்லை என்ற நிலையிலே நாம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தகுதி உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வந்து ஆரம்பிப்பார்கள். அப்போது, அவர்கள் வந்து ஆரம்பிக்க நாங்கள் அனுமதி தருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய தொகுதியை மனதிலே வைத்துக்கொண்டு அனுமதி தருகிறேன்.



முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிருக்கான பாலிடெக்னிக் கல்வி நிலையம் என்னுடைய தொகுதியில் பட்டுக்கோட்டையில் ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது தொடர்பில்லாத துணைக் கேள்வி.

வினா எண். 382, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

382—

குடும்ப நலத் திட்டம் விரிவுபடுத்துதல்.

*5679—திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வீடு தேடிச்சென்று பணிபுரியும் குடும்ப நலத் திட்டம் ( Out Racah scheme on family welfare ) எத்தனை நகராட்சிகளில் செயல்படுகிறது ?

(ஆ) எல்லா நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

(இ) அத்திட்டத்தின் மூலம் விவரங்களை சேகரிக்க கணிப்பொறிகள் பயன்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) குடும்ப நலம் மற்றும் (தாய் சேய் நலங்களைப்) புறத் தொண்டாகச் செயல்படுத்தும் நகர மேம்பாட்டுத் திட்டம், 3 மாநகராட்சிகளிலும், 22 நகராட்சிகளிலும் மற்றும் ஒரு நகரியத்திலும் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இந்திய அரசின் இப்போதைய கொள்கைக்கிணங்க 1981-ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி 2 இலட்சம் மக்கட்தொகைக்கு மேல் உள்ள பெருநகரங்களுக்கு மட்டுமே இத்திட்டத்தினை விரிவுபடுத்தக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தினை அனைத்து நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் இப்போதைக்கு இல்லை.

(இ) கணிப்பொறிகள் ஏதும் பயன்படுத்தப்படுவதில்லை.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமென்பது குடும்ப நலம் பற்றி கணக்கெடுத்து முறைப்படுத்துகிற நல்ல திட்டமாகும். இந்தத் திட்டம் மத்திய அரசு நிதியுதவியால் செய்யப்படுகிறதா அல்லது மாநில அரசு நிதியால் அமல்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிதியுதவியோடு தான் இது செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் ஒரு பெண் அல்லது இரண்டு பெண் குழந்தைகள் பிறப்போடு நிறுத்திக்கொள்வார்களானால் அவர்களுக்கு டெபாசிட்டாக 2,000 ரூபாயும், படிப்பதற்கான நிதி புதவியும் அளிப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். சுவர்களில் குடும்பக் கட்டுப்பாடு விளம்பரம் எழுதுகிற நேரத்தில் இந்த வாசகங்கள் எழுதுவதற்கும், குடும்பக் கட்டுப்பாடு அட்டைகள் கொடுக்கிற நேரத்தில் அதிலே கூட இந்த வாசகங்களை அச்சிட்டுத் தருவதற்கும் முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது விளம்பரத்திற்கான நல்ல யோசனை. அரசாங்கம் அதுபற்றி ஆலோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 383. திரு. ஆர். முருகையா பாண்டியன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

383—

வன விளைச்சல் பொருட்கள் திருட்டு.

*2135—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி — கட்டபொம்மன் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி முண்டந்துறை, களக்



காடு ஆகிய பகுதிகளில் 1987, 1988, 1989, 1990, 1991 ஆகிய வருடங்களில் ஏலக்காய் மற்றும் வன விளைச்சல் பொருட்கள் திருட்டு நடைபெற்றனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1987 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை 151 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நான்கு வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அதில் இரண்டு வழக்குகள் முடிவடைந்துள்ளன. மீதி இரண்டு வழக்குகள் நிலுவையிலுள்ளன. இணக்கக் கட்டணமாக மொத்தம் ரூ. 12,600 குற்றவாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான அம்பாசமுத்திரம் தொகுதியில் பாபநாசம் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையில் நம்முடைய அரசாங்கத்திற்குச் சொந்தமான காடுகளில் ஏலக்காய்த் தோட்டம் போடுவதற்காக லீசுக்கு கிட்டத்தட்ட 350 ஏக்கர் விடப்பட்டிருந்தது. அந்த லீஸ் முடிந்ததும் சம்பந்தப்பட்டவர்கள் அங்கேயிருந்து வெளியேறாமல், கோர்ட்டுக்குச் சென்று தடையுத்தரவை வாங்கி இருக்கிறார்கள். அப்படி ஒரே ஒரு நபர் மட்டும் வாங்கியிருப்பதாகத் தெரிகிறது. அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு முக்கியமான பிரமுகர். இவர் 25 ஏக்கர் நிலத்திற்குத்தான் ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கக் காடுகளில் 350 ஏக்கர் நிலங்களில் ஏலக்காய் தானாக விளைந்து கொண்டிருக்கிறது .......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, இவர் 25 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு, 350 ஏக்கர் நிலங்களிலிருக்கிற ஏலக்காய் அத்தனையும் திருடி இந்த 25 ஏக்கர் நிலம் வழியாக அவர் கீழே இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 4, 5 இலட்சம் ரூபாய் அவருக்கு வருமானம் வந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்பு

மிகு அமைச்சர் அவர்கள் இதில் துரிதமாக நடவடிக்கையெடுத்து தடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே, ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் திருட்டு போகிற பொருள்களைப் பற்றிக் கேட்டார்கள். அதற்கு என்னிடம் விவரம் இருந்தது. அடுத்து உறுப்பினர் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று வழக்கில் இருக்கிற 25 ஏக்கர் நிலத்தை லீசுக்கு எடுத்தவர்கள் அதை வைத்துக்கொண்டே பக்கத்தில் இருக்கிற 350 ஏக்கர் நிலப்பரப்பில் இருக்கிற ஏலக்காய்த் தோட்டங்களிலிருந்து பொருள்களைத் திருடிச் செல்வதாகக் குறிப்பிட்டார்கள். இதைக் கருத்திலே கொண்டு, அரசு துரிதமாக நடவடிக்கையை மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல 25 ஏக்கர் நிலங்களைத் தவிர, மற்ற இடங்களிலேயிருந்து அவர்கள் எடுப்பார்களானால், அந்தப் பகுதியிலே அவர்களுக்கு யாராவது அதிகாரிகள் உறுதுணையாக இருப்பார்களானால். அவர்கள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 9—45

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் எனக்குத் திருப்தியாக இருக்கிறது. நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய பகுதிக்கு நிச்சயமாக வரவேண்டும். அதுவும் மதுவிலக்குப் பிரச்சாரத்திலே கதாநாயகனாக் நடிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்று இருக்கிற மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதிக்கு வந்தால், அங்கே எப்படி அந்தப் படத்தை எடுக்கலாம் என்கிற ஒரு நிலையைப் பார்க்கலாம். அதே நேரத்தில். அங்கே ஒரு அருவி ஓடிக் கொண்டிருக்கிறது.......

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> கேள்வியாகக் கேளுங்கள்.

<u>திரு. ஆர். முருகையா பாண்டியன் :</u> அதே நேரத்தில் அங்கே திருட்டுக்கள் எல்லாம் எப்படி நடக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்க்கலாம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வரவேண்டும். நிச்சயமாக அந்தத் திருட்டுப் பொருட்களுக்கு சில அதிகாரிகள் உடந்தையாக இருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதைப்பற்றி நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே தனியாகச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்து, இந்தக் குறைகளைப் போக்குவதற்



காக எங்களுடைய பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே வருவாரா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குப் படத்திலே நடிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிற நேரத்தில், திருட்டுப் போகின்ற பொருட்களை பார்ப்பதற்காக அங்கே வருகை தரவேண்டும் என்று சொன்னார்கள். மதுவிலக்கிலே கதாநாயகனாக நடிக்கின்றவர் திருட்டுப் பொருட்களைப் பார்ப்பதற்காக அங்கே வர முடியாது. இருந்தாலும் கூட, நீங்கள் சொன்ன கருத்துக்களை அரசு மனதிலே கொண்டு, துரித நடவடிக்கை மட்டுமல்ல, விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

<u>திரு. எஸ். எஸ். ராமசுப்பு :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, களக்காடு மலையில் பொருட்கள் திருட்டுப் போகின்றன என்பதைச் சொல்லியிருந்தார்கள். அந்த மலையிலே சிறிது நாட்களுக்கு முன்பாக பவளக் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த பவளக் கற்களை ஒரு சில விஷமிகள் வெட்டி எடுப்பதாகவும். வெட்டி எடுக்கப்பட்ட பகுதிகளிலே மக்கள் போக முடியாத அளவிற்கு அது நடந்திருக்கிறது என்பதையும் அரசு அறியுமா? அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்துறை அதிகாரிகள் ஆகியோரை வைத்துக்கொண்டு, ஆய்வு செய்கின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே பவளக் கற்கள் இருப்பதாகவும், அதைக் கேரள மாநிலத்திலே உள்ள சில பேர்கள் வெட்டிச் செல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார்கள். ஆகவே, நம்முடைய தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தத் துறைக்கு அறிவுரை வழங்கினார்கள். இந்தத் துறை அதை ஏற்று, அந்தப் பகுதியிலே யாரும் நடமாட முடியாத அளவிற்கு கடுமை

யான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா 384. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி இருக்கையில் இல்லை.

வினா எண். 385, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்,

385—

நெசவாளர்களுக்குக் குடியிருப்பு வீடுகள்.

*6140—திரு. அ. பாப்பா சுந்தரம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) குளித்தலை தொகுதியில் நெசவாளர் வாழும் பகுதியில் அரசு மானியத்துடன் குடியிருப்பு வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித்தரப்படும்?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு இல்லை என்று சொல்லியிருந்தாலும், குளித்தலை பகுதியிலே இருக்கின்ற நெசவாளர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். குளித்தலை, தண்ணீர்பள்ளம், தோகைமலை போன்ற ஊர்களில் பல வருடங்களாகப் போராடியும், அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, வீட்டு மனையைக்கூட அவர்களுக்கு வழங்காவிட்டாலும், அவர்களுக்கு வேறு இடத்திலே அங்கேயிருப்பவர்கள், வாங்கித்தர முன்வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அரசு கட்டித் தராவிட்டாலும் கூட, கிராமக் கூட்டுறவு வங்கியின் மூலமாக, நமது கைத்தறித் துறை அமைச்சர் மூலமாக அந்தத் துறை அமைச்சருக்கு சிபாரிசு செய்து கிராமக் கூட்டுறவு வங்கி



மூலமாக கடன் கொடுத்து, மானியத்தோடாவது, அவர்களுக்கு முன்னுரிமை தந்து, வீடுகள் கட்டித்தர ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில், 2 ஆயிரம் வீடுகள் கட்டித் தருகின்ற உத்தேசத்தோடு, மாண்புமிகு, தாய் உள்ளத்தின் தலைவி, புரட்சித் தலைவி, அவர்கள் இதற்காக 2 கோடி ரூபாய் மானியமாகவும் வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதியைச் சேர்ந்த நெசவாளர்கள், கூட்டுறவுச் சங்கத்திலே அங்கம் வகிக்கின்ற நண்பர்கள், அவர்களுடைய சொந்தச் செலவில், வீட்டு மனை பெற்று, அதனை நெசவாளர் சங்கத்தின் பேரில் பதிவு செய்த பிறகு கருத்துரு துறைக்கு அனுப்பி வைக்கப்படுமேயானால், இடைப்பட்ட ஆண்டில் 2 ஆயிரம் வீடுகள் கட்டுகிற திட்டத்தின் கீழ் உங்களுடைய பகுதிக்கும் ஆவன செய்யப்படும் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 9—50

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் இருக்கிற குளித்தலையில் நீங்கள் சொன்னது போலவே நிலப்பட்டா பெற்று கூட்டுறவுத் துறை மூலமாக அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அதைப் பரிசீலித்து இந்த ஆண்டு கட்டுவதற்கு நீங்கள் உதவுவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்றார் ஏசுபிரான். தட்டாமலேயே, கேட்காமலேயே கொடுக்கிற தாய் உள்ளத்தின் தலைவிதான் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, மனிதாபிமானத்தின் தலைவி, மனித நேயத்தின் தலைவி புரட்சித் தலைவி என்பதை உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி குளித்தலையோடு ஒட்டிப்பேச வேண்டும்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ஆயிரம் வீடுகளை இந்த ஆண்டு நெசவாளர்களுக்கு கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வீடுகளைக் கட்டுவதற்காக எந்தெந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன? நெசவாளர்கள் பெரும்பான்மையாக இருக்கிற இடங்களை தேர்வு செய்கிறீர்களா? எந்த அடிப்படையில் அந்த இடங்கள் தமிழ்நாட்டில் வீடுகளைக் கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, கூட்டுறவின் கீழ் செயல்படும் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகிக்கின்ற உறுப்பினர்களாக உள்ளவர்கள் தங்களுடைய சொந்த செலவில் நிலத்தைப் பெற்று அதனை அந்தச் சங்கத்தின் பேரில் பதிவு செய்த பிறகு, சங்கத்தினுடைய வாயிலாக மனுக்கள் பெறப்படுமேயானால், பிரேரணைகள் பெறப்படுமேயானால், அவைகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். இடத்தைத் தேர்ந்தெடுப்பது குறித்து தக்க குறிப்பேடுகள் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து தனிக் கேள்வி போடுவாரேயானால், தக்க விளக்கம் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குடியிருக்கும் நெசவாளர்களுக்குக் கட்டப்படுகிற வீடுகள், தறிக் கூடங்களுடன் கட்டப்படுகிற வீடுகளுக்கு அரசு கொடுக்கின்ற தொகை போதவில்லை. ஆகவே அதை உயர்த்தவேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா? அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஹட்கோ கடன் தொகை 14 ஆயிரமும், மைய அரசு மானியமாக 5 ஆயிரமும், மாநில அரசு மானியமாக 5 ஆயிரமும் ஒட்டு மொத்தமாக 24 ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. அது போதவில்லை என்று மனுக்கள் வந்திருக்கின்றன. இது பற்றி என்னுடைய துறை மானியத்திலே பேசுகிறபோது தெளிவாக எடுத்துரைக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 386. திரு இரா. நடேசன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.





386—

இரும்புப் பாலங்களை ஏலம் விட நடவடிக்கை.

*454—திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

திருவட்டார் தொகுதி, மார்த்தாண்டம்—குலசேகரம் சாலையில் இரும்பால் கட்டப்பட்டுள்ள திருவட்டார் பழைய பாலம், களியல் பாலம் இரண்டையும் ஏலத்தில் விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பாலங்களின் அந்த இரும்புப் பொருட்களை ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறினார்கள். இது சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னால் கட்டப்பட்ட பாலங்கள். அதற்குப் பதிலாக ஒரு களியல் பாலம் கட்டி 20 வருடங்கள் ஆகின்றன. திருவட்டாரிலே கட்டி 2 வருடங்கள் ஆகின்றன. களியல் பாலத்திலேயிருந்து 80 சதவீதத்திற்கும் அதிகமான இரும்புகளை திருடர்கள் களவாடி சென்று விட்டார்கள். ஆகவே அதில் இன்னும் நாட்களை கடத்தாமல் உடனடியாக ஏலம் போட்டு அவைகளை அரசாங்கத்திற்கே எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—55.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டார் பாலம் 1990 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு இப்போது போக்குவரத்து அதன் வழியாக நடந்து கொண்டு இருக்கிறது. இப்பாலத்தில் உள்ள இரும்பின் எடை 53 டன். இதனுடைய மதிப்பு 1 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய். அதைப்போல களியல் பாலத்திலே இருக்கக்கூடிய இரும்பின் எடை 40 டன். இதனுடைய மதிப்பு 1 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய். இந்த இரண்டு பாலத்திலே உள்ள இரும்புகளையும் விற்க வேண்டும். அரக்கோணத்திலே இருக்கின்ற தமிழ்நாடு எஃகு நிறுவனத்திலிருந்து இன்றைக்கு விவரங்களை கோட்டப் பொறி

யாளர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக நாம் முதலிலே தமிழ்நாடு ஸ்டீல் லிமிடெட்டிற்குத் தான் விற்கின்றோம். அவர்கள் எடுத்துக்கொள்ளாவிட்டால் தான் நாம் பொது ஏலத்திற்கு கொண்டு வந்து விற்கின்ற நடவடிக்கைகளை எடுக்கிறோம். ஆகவே இதன் அடிப் படையில் மேற்படி பாலங்களை உடைத்து அவற்றில் உள்ள இரும்புகளை எடுக்க நெடுஞ்சாலைத் துறையால் இன்றைக்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நடேசன் : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவட்டாறு பாலம் 50 டன்னுக்கு மேல் இருப்பதாகவும், திற்பரப்பு பாலம் 40 டன் இருப்பதாகவும் கூறினார்கள். நன்றி. திற்பரப்பு பாலத்திலே 40 டன்னில் 20 டன்னை திருடிச் சென்று விட்டார்கள். திருவட்டாறு பாலத்திலே உண்மையிலே 50 டன் இருக்கிறது. அதனுடைய மதிப்பு ஒரு லட்சத்து சொச்சம் அல்ல. பப்ளிக் ஏலத்திலே விட்டால் 4 இலட்சம் ரூபாய்க்கு மேலே போகும். ஆகையினால் அதை நன்கு உணர்ந்து அமைச்சர் அவர்கள் அதை பப்ளிக் ஏலத்திலே விட்டு, நல்ல தொகையிலே ஏலம் போட வேண்டும் என்று கேட்டு, அதையும் இந்த வருடமே செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது நம்முடைய தமிழ்நாடு ஸ்டீல் லிமிடெட்டிலே அங்கே கொடுக்கின்ற அந்த விலைப் பட்டியலைத்தான் சொன்னேன். ஆகவே நம்முடைய் தமிழ்நாடு அரசு நிறுவனத்திற்குக் கொடுக்கின்ற விலைப்பட்டியல் வேறு, பொது ஏலத்திலே விடுகின்ற நேரத்திலே பெறப்படுகின்ற விலைப் பட்டியல் வேறு. நாம் பொதுவாக நம்முடைய வேஸ்ட்டான இரும்புகளை எல்லாம் இன்றைக்கு தமிழ்நாடு ஸ்டீல் நிறுவனத்திற்குத் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த விலைப் பட்டியலின்படி தான் இந்த மதிப்பு இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழ்நாடு ஸ்டீல்ஸ் இந்த இரும்பை எடுத்துக்கொள்ளாவிட்டால் நாம் பொது ஏலத் திலே விடுகின்றோம். அப்படி வருகின்றபோது அதிகமான தொகைக்கு ஏலம் போகும் என்ற காரணத்தினாலே அதற் கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். என்றைக்குமே அரசுக்கு நஷ்டம் வருகின்ற வகையிலே நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளாது என்பதைத் தெரிவித்து, மிக வர்பகரமாகத்தான் எந்தப் பொருளையும் விற்கக்கூடிய சூழ்நிலையில் செயல்படுத்தும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 387, திரு. ஆ. சுப்புரத்தினம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

387—

மின் கட்டண பாக்கித் தொகையை வசூல் செய்ய நடவடிக்கை.

* 3419—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 28—2—1991 தேதியில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் மின் கட்டணம் பாக்கி வைத்திருப்போரின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களிடமிருந்து அப் பாக்கித் தொகையை வசூல் செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 28—2—1991 ஆம் தேதியில் 1 இலட்சம் ரூபாய்க்கு மேல் மின் கட்டணம் பாக்கியை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை 161. இன்றைக்குப் பெரும்பாலான மின் உபயோகிப்பாளர்கள் வழக்கு மன்றத்திலே சென்று தடைகளை வாங்கியிருக்கின்றார்கள். அந்தத் தடைகளை யெல்லாம் நீக்குவதற்கு மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு நம்முடைய ஒப்பற்ற தலைவி அவர்களுடைய ஆட்சி பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே இந்த மின் கட்டண பாக்கிகளை வசூலிக்க வேண்டும் என்று முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தடை உத்தரவுகள் எல்லாம் ரத்து செய் வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த முறையிலே இதை வசூலிப்பதற்கான நட வடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியும் இது தொடர்புடைய கேள்வியாக இருக்கின்ற காரணத்தி னால் அதுவும் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகிறது. வினா எண். 388. திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

**தொழில் நிறுவனங்களின் மின் கட்டண பாக்கித் தொகையை வசூல் செய்ய நடவடிக்கை.**

388—

* 4019—திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மின்துறைக்கு தொழிற்சாலைகள் கட்ட வேண்டிய மின் கட்டண பாக்கி எவ்வளவு?

(அ) மேட்டூர் மால்கோ நிறுவனமும் மின் கட்டண பாக்கி வைத்துள்ளதா?

(இ) தொழில் நிறுவனங்களின் மின் கட்டண பாக்கியை வசூலிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) (ஆ), மற்றும் (இ) : மின் துறைக்கு தொழிற்சாலைகள் கட்ட வேண்டிய மின் கட்டண பாக்கி எவ்வளவு என்று கேட்டிருக்கிறார்கள். 31—3—1991 முடிய ஏறத்தாழ 41 கோடியே 65 இலட்சம் ரூபாய். இரண்டாவது கேள்வி, மேட்டூர் மால்கோ நிறுவனமும் மின் கட்டண பாக்கி வைத்துள்ளதா என்று கேட்டிருக்கிறார்கள். அந்த கேள்விக்கு விடையாக பாக்கி வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாவது கேள்வி, இதற்கு நான் ஏற்கெனவே சொன்னதைப் போல இந்த வசூல் நடவடிக்கைகளை நம்முடைய மின் வாரிய சட்டத்தின் மூலம் 1978 ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றியிருக்கிறோம். ரெக்கவரி ட்யூஸ் ஆக்ட் கீழ். அதன் மூலம் வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை மின் வாரியம் மேற்கொண்டிருக்கிறது. தடை உத்தரவுகள் வாங்கப்பட்டிருக்கின்ற வழக்குகளுக்கு தடை உத்திரவை ரத்து செய்வதற்கு இன்றைக்கு நடவடிக்கைகளை மின்சார வாரியம் மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டண பாக்கியை வசூலிப்பதற்கு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகளை விவரித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத்தெரிவித்துக் கொண்டு, இன்றைக்கு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதாலும், வீட்டு உபயோகத்திற்கு மானியத்தில் மின்சாரம் வழங்குவதாலும் அரசுக்கு மிகப் பெரிய நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பது யாவரும் அறிந்த



உண்மை. ரூபாய் 1 லட்சத்திற்கு மேல் மின் கட்டண பாக்கி வைத்து இருப்பவர்கள் நிச்சயமாக வசதி படைத்தவர்களாகத்தான் இருக்க முடியும். எனவே. அப்படி மின் பாக்கி வைத்து இருப்பவர்களிடமிருந்து அந்த நிலுவையை வசூலிக்கும்போது அபராதத்தோடு, அதாவது வட்டியோடு வசூலிக்க, அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மால்கோ நிறுவனத்தின் மூலம் தான் அதிகமாக மின் கட்டணம் பாக்கி வசூலிக்க வேண்டியிருக்கிறது ; ஏறத்தாழ 20 கோடி ரூபாய்க்கு மேல். அது சம்பந்தமாக பல்வேறு நடவடிக்கைகள் தமிழக அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அது போக மற்ற நிறுவனங்களுக்கு எல்லாம் இருக்கின்ற நிலுவைகளை வசூலிப்பதற்கு நான் ஏற்கனவே சொன்னதுபோல் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கின்ற நேரத்தில் அவர்கள் தடை உத்தரவு வாங்கி விடுகிறார்கள். இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே அந்த தடை உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு பதில் மனுக்கள் எல்லாம் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, முறைப்படியான, சட்டப்படியான நடவடிக்கைகளை இந்த மின்சார வாரியம் மேற்கொண்டிருக்கிற காரணத்தால், வெகு விரைவில் இந்தத் தொகைகளை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிந்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் மால்கோ நிறுவனம் அதிகப்படியான மின் கட்டண பாக்கி வைத்திருப்பது இது அண்மைக் காலத்தில் ஏற்பட்டது அல்ல. நீண்ட நெடுங்காலமாக அந்த பாக்கிகள் தொடர்ந்து நிலுவையில் இருக்கிற காரணத்தால் இதை உடனடியாக வசூலிப்பதற்கு ஏதாவது அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மால்கோ நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் மின் வாரியப் பிரதிநிதிகள் தமிழக அரசு பிரதிநிதிகள் மற்றும் இந்திய அரசினுடைய சுரங்க நிறுவன பிரதிநிதிகள் இவர்கள் எல்லாம் கலந்து ஒரு திட்டத்தை ஆலோசித்து மின்சார வாரியத்திற்கும் மால்கோ நிறுவனத்திற்கும் இடையே 20—1—1989 இல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதற்குப் பின்னால் உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை 20—2—1989 அன்று திரும்பப் பெறுவதற்கான மனு செய்யப்பட்டது.

அதற்குப் பின்னால் தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழக அரசு மற்றும் மால்கோ தொடர்ந்த மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றம் 13—3—1991 அன்று மின்சார வாரியத்திற்கும் மால்கோ நிறுவனத்திற்கும் ஏற்பட்ட சமரசத்தை ஊர்ஜிதம் செய்தது. அதன்படி மால்கோ நிறுவனம், நிலுவைத் தொகையான ரூபாய் 25 கோடியே 76 லட்சம் ரூபாய் மின்சார வாரியத்திற்குக் கொடுக்கவேண்டும். மால்கோ நிறுவனம் மின் கட்டணம் 3/91 முதல் 8/91 வரை கட்டிவிட்டது. மேலும் 9/91 முதல் 31—12—1991 வரை கட்டவேண்டிய மின் கட்டணத்தை வசூல் செய்வதை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக்கொண்டது, மின்சார வாரியமும் அனுமதித்து இருக்கிறது. தொழில் துறையும், நிதி மறு முதலீட்டு நிறுவனமும் மால்கோ நிறுவனத்தை மூடிவிட்டதாக தாக்கீது அனுப்பியது. இதன் பேரில் மால்கோ நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தற்காலிக தடை உத்தரவு பெற்று இருக்கிறது. இந்த வழக்கை உயர்நீதிமன்றம் முடிவு செய்யாமல் உள்ளது. ஆகவே, இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. சமீப காலத்தில் மால்கோ நிறுவனம் ஒரு புதுப்பிக்கும் திட்டத்தோடு தமிழக அரசை அணுகி இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பின்னர் நல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் போராட்டக் காலங்களிலே நிலுவையில் நிற்கின்ற மின் கட்டணம் சில பகுதிகளில் அதற்குப் பிறகு கிணற்றில் நீர் அடியோடு வற்றி விட்ட காரணத்தால், அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளால் அந்தத் தொகையைக் கட்ட முடியாமல் தொடர்ந்து நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. அதோடு அதற்கு belated payment surcharge என்று ஒரு வட்டிப் போட்டு அந்தத் தொகை இன்று அந்த விவசாயிகளால் கட்ட முடியாத நிலைமை இருக்கின்ற தொகைகளை இப்போது விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால், அந்தத் தொகையைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா என அறிய. விரும்புகிறேன். அதோடு சில ஆயிரம் ரூபாய் மின் கட்டண பாக்கியை நிலவரி வசூல் சட்டத்தைப் பயன்படுத்தி வசூலிக்கின்ற மின்சார வாரியம் அதேபோன்று தொழிற்சாலையின் மின் கட்டண பாக்கி அதிகமாக வைத்து இருப்பவர்களிடமும் அந்த நிலவரி வசூல் சட்டத்தைப் பயன்படுத்தி வசூலிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டுள்ள கேள்வி தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகள் சம்பந்தமான பிரச்சினைகளைச் சொல்லியிருக்கிறார்கள். தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணத்தை வசூலிக்கின்ற நேரத்திலே நான் ஏற்கனவே சொன்னது போல் மின்சார வாரியம் மெத்தனமாக இருப்பது இல்லை. நாம் எடுக்கின்ற நடவடிக்கைகள் காரணமாகத்தான், தவறு செய்கின்றபோது அவர்கள் பாக்கியைக் கட்டாமல் இருக்கின்ற நேரத்தில், நடவடிக்கை எடுக்கின்ற நேரத்தில், இன்றைக்கு நீதிமன்றம் சென்று தடை உத்திரவு வாங்குகின்ற காரணத்தால் சட்டத்தை மதிக்கின்ற ஒரு மனப்பாங்கு இருக்கின்ற காரணத்தால் தான், நாம் பல்வேறு நடவடிக்கைகளை இன்று சட்ட ரீதியாக நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் ரெவின்யூ ரெகவரி ஆக்ட் என்று சொன்னார்கள். அதுவல்லாமல் இன்றைக்கு மின்சார வாரியமே 1978 ஆம் ஆண்டு இந்த ரெக்கவரிகளையெல்லாம் வசூல் செய்வதற்கு ஒரு சட்டம் இயற்றி இருக்கிறது என்று நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், இன்றைக்குத் தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. நாட்டினுடைய உற்பத்தித் திறனையும் இன்றைக்கு நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பின்னாலே கோர்ட் நடவடிக்கைகளையும் நாம் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த அரசுக்கு இப்படிப்பட்ட பிரச்சினைகளெல்லாம் வருகின்ற காரணத்தினாலேதான் உடனடியாக சில நடைமுறைகளைச் செயல்படுத்துவதற்கு சில சங்கடங்கள் உருவாகி இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது எந்தப் பகுதியில் இருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களேயானால் அந்த விவசாயிகளுடைய வசதி, அவர்களுக்கு இருக்கின்ற வாய்ப்புக்களை ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகளை மின்சார வாரியம் மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.05)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளியவர்கள் மின்சார பாக்கியைக் கட்ட தவறினார்கள் என்றால், 24 மணி நேரத்திலே நடவடிக்கை எடுக்கின்ற சட்டங்கள் உள்ள நிலையில் மிகப்

பெரிய தொழிற்சாலைகளை வைத்து கோடிக்கணக்கான ரூபாய் லாபம் அடைகிறவர்கள் வேண்டுமென்றே அரசுக்கு இதுபோன்ற நிலுவையில் இருக்கக்கூடிய மின் கட்டண பாக்கியை வசூல் செய்ய ** கடுமையான சட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார பாக்கிகளை வசூல் செய்வதற்காக நான் ஏற்கனவே சொன்னதைப்போல, இன்றைக்கு நல்ல சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. இதற்கு ** தேவையில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டிலே அந்த ஓரே ஒரு நிறுவனத்திலேதான் அதிகமாக பாக்கி இருக்கிறது என்று நான் சொன்னேன். மற்றவைகளைப் பொறுத்தமட்டிலே குறைந்த அளவிலேதான் வைத்து இருக்கிறார்கள். குறிப்பாக, நம்முடைய ஒப்பற்ற தலைவி, டாக்டர் புரட்சித்தலைவியுடைய அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலே, இந்த நிலுவைகளையெல்லாம் வசூலிப்பதற்காக நாங்கள் ஒரு திட்டம் தயாரித்து இன்றைக்கு அதற்கான முனைப்பான நடவடிக்கைகளில் இறங்கி இருக்கின்றோம். ஆகவே ஏற்கனவே இருக்கின்ற சட்டங்களை வைத்துக்கொண்டு இந்த மின்சார பாக்கிகளை இந்த அரசு வசூல் செய்ய முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ** கடுமையான கிரிமினல்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிற சட்டம். இந்தக் கேள்வியில் ** என்று குறிப்பிட்ட சொற்றொடர் நீக்கப்படுகிறது. அமைச்சருடைய பதிலிலும் சேர்த்து. திரு. கே. செல்வராஜ்.

<u>திரு. கே. செல்வராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டணங்களை வசூலிக்கின்றபொழுது சாதாரண விவசாயிகள் கட்டாவிட்டால் அவர்களுடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுகின்றன. வீடுகளுடைய கரண்ட் சார்ஜ் கட்டாவிட்டால் உடனடியாக மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. அதுபோல, பெரிய தொழிலதிபர்கள், வசதி படைத்தவர்கள், மின்சாரக் கட்டணம் கட்டாத பொழுது அவர்களுடைய இதர சொத்துக்களை ஜப்தி செய்து உடனடியாக நடவடிக்கை எடுத்தும், அவர்களில் மின்சாரக் கட்டணம் கட்டாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உடனடியாக மின்சாரத்தைத் துண்டித்தும், வழக்கு மன்றத்திற்கு அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



செல்கின்ற போது தனியாக ஒரு சட்டம் இயற்றி, வழக்காடு மன்றம் செல்லாமல், மின்சாரக் கட்டணத்தைப் பாக்கி வைத்திருப்பவர்கள் உடனடியாகச் செலுத்துவதற்கு தனி ஒரு சட்டத்தை இயற்ற மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல் 1978 ஆம் ஆண்டு ரெக்கவரி ஆப் டியூஸ் ஆக்ட் என்று சொல்லப்படுகின்ற பாக்கித் தொகைகளை வசூலிக்கின்ற சட்டம் இருக்கிறது. பொதுவாக தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டிலே மின்சாரக் கட்டண பாக்கி இருந்தால், உடனடியாக நாம் நோட்டீஸ் கொடுத்து, கட்டவில்லை என்றால் நாம் மின் துண்டிப்பு செய்கிறோம். அதற்குமேலே, அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். எல்லோரும் வழக்கு மன்றத்திற்குப் போவதில்லை. பெரும்பாலும் கட்டிவிடுகின்றார்கள். பரந்த ஒரு நாட்டில், பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்ற நேரத்திலே, குறைந்த அளவிலான சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். அதற்காக இன்றைக்கு நடைமுறைச் சட்டங்களை வைத்து கொண்டு அந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இந்தச் சட்டங்களின் மூலம் அந்த பாக்கிகளை வசூலிக்க இயலவில்லை என்று மின்சார வாரியம் கருதுமேயானால், இன்றைக்கு நம்முடைய அரசோடு கலந்து, மின்சார வாரியம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும். மின் கட்டண பாக்கிகளை வசூலிப்பதிலே முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கே. பி. ராஜு.

<u>திரு. கே. பி. ராஜு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டணம் பெரிய பெரிய தொழிற்சாலைகளில் நிலுவையில் இருக்கிறது என்று கூறினார்கள். தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குவது மத்திய சர்க்கார். அந்த மத்திய சர்க்கார் தமிழக சர்க்காருக்கு, இதுபோல நிலுவையிலுள்ள பாக்கிகளை வசூல் செய்வதற்கு, தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கும்போதே ஏதாவது விதிமுறை விதித்து இருக்கிறதா அல்லது அப்படி மின் கட்டண பாக்கி உள்ள, நிலுவையில் உள்ள தவறாகப் பயன்படுத்தி, நீதிமன்றங்களுக்கு சென்று பாதுகாப்பைத் தேடிக் கொள்கின்ற தொழிற்சாலைகளுக்கு அனுமதியை ரத்து செய்ய மத்திய அரசுக்கு, நம்முடைய அரசு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுக்கின்ற நேரத்திலே பல்வேறு விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அந்த விதிமுறைகளைக் கடைப்பிடித்ததற்குப் பின்னாலே தான் அந்த லைசென்ஸ் முறையும் வழங்கப்படுகிறது; மின்னிணைப்பும் கொடுக்கப்படுகிறது. மின்னிணைப்பு கொடுக்கின்ற நேரத்திலே அவர்கள் பாக்கிகளை வைக்கின்ற நேரத்திலே அதை வசூலிப்பதற்கு நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் இருக்கின்ற சட்டங்கள் மூலமாகத்தான் அதை நாம் வசூலித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே மத்திய அரசுக்கு இதிலே, இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை, லைசென்ஸை ரத்து செய்வது சம்பந்தமான பிரச்சினைகளை வேண்டுமானால், நாம் பரிந்துரை செய்யலாம். ஆனால் அதை எந்த அளவிற்கு அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்பது பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த யோசனைகளை இந்த அரசு கவனமாகப் பரிசீலித்து இந்த மின் கட்டணப் பாக்கிகளை, வசூலிப்பதற்கு அவருடைய யோசனை எந்த அளவிற்குப் பயன்படும் என்பதையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி செ.சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், மேட்டூர் மால்கோ நிறுவனம் 25 கோடி மின் கட்டணப் பாக்கி கொடுக்க வேண்டுமென்று கூறினார்கள். இந்த நிறுவனம் இந்த மின் கட்டணப் பாக்கியை முன் வைத்தே கடந்த பத்து மாதங்களாக உற்பத்தியை நிறுத்தி வைத்ததால், அங்கு தொழில் புரிந்த 1,500 தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் புதிய தொழில் நிறுவனங்கள் தொடங்க வேண்டும் என்று இருக்கும் நிலையில் இந்த நிறுவனம் மூடிவிடப் படக்கூடிய அபாய நிலையில் உள்ளது. நமது அரசு ஏதாவது கண்டிப்புடன் அவர்களிடம் மின்கட்டணத்தை வசூல் செய்து மீண்டும் அந்த மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி தன்னுடைய உற்பத்தியைத் தொடங்க அரசு. ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மான்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மால்கோ நிறுவனத்திற்கும், மின்சார வாரியத்திற்கும் இருந்த பிரச்சினைகளை, உயர்நீதி மன்றத்திலே நடந்த வழக்குகளை, அதற்குப் பின்னாலே



எடுத்த முடிவுகளை, மத்திய அரசினுடைய சுரங்க நிறுவனம் தலையிட்டு அதற்குப் பின்னாலே ஏற்பட்ட முடிவுகளையெல்லாம் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். இதற்கு நம்முடைய அரசு, நம்முடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே தான் அவர்கள் கூட வந்து இங்கே நம்முடைய முதல்வரவர்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இன்றைக்கு ஒரு முனைப்பான நடவடிக்கை எடுத்து ஒரு புதிய திட்டத்தோடு அரசை அணுகியிருக்கிறார்கள் என்று சொன்னேன். ஆகவே, அவர்களுடைய புதிய திட்டத்தை நம்முடைய அரசு கவனமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்சினை முடிவுற்றதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்குப் பதில் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 389, திரு. வ. மு. சுப்பிரமணியம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

389—

கட்டுமான மேம்பாட்டுக் கழகங்கள் ஏற்படுத்துதல்.

* 1461. திரு. வ.மு. சுப்பிரமணியம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசு கட்டுமான கழகம் போன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் 'கட்டுமான மேம்பாட்டுக் கழகங்கள்' ஏற்படுத்தி, படித்த வேலையில்லாத கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கட்டுமான மேம்பாட்டுக் கழகங்கள் ஏற்படுத்த இயலாது.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வருஷத்திற்கு ஒரு கோடிக்கு மேல் ஊரகத் துறை மூலமாகவும், பொதுப் பணித் துறை மூலமாகவும், நெடுஞ்சாலைத் துறை மூலமாகவும் ரோடு, சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள் என்று கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை ஒப்பந்தக்காரர்களிடம் விடுவதைத் தவிர்த்து கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற முறையிலே இம்மாதிரி கட்டுமான மேம்பாட்டுக் கழகங்களை அமைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்து, அரசு இதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறுகிற பல்வேறு பணிகளில் ஊராட்சி ஒன்றியங் களில் இருக்கிற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற அடிப்படையில் பொறியியல் துறையிலே பட்டம் பெற்றிருக் கின்ற இளைஞர்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள், இந்த வேலைகளைச் செய்வதற்கு ஊராட்சி ஒன்றியங்களில் இருக் கின்ற கிராமப்புற பகுதி மக்களோடு இணைந்து செயல்படு வதற்கு முன்வருவார்களேயானால் அதைப்பற்றிப் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து முடிவெடுக் கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தக்காரர்களுக்கு இந்த வேலைகளைக் கொடுப்பதன் மூலம் உரிய காலத்தில் அந்த வேலைகள் முடிக்கப்படாமல் தவிர்க்கப்படுகின்றன. ஆகை யால் இந்தக் கட்டுமான மேம்பாட்டுக் கழகத்தை அமைப் பதன் மூலம் உரிய காலத்தில் இந்த வேலைகளெல்லாம் முடிவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; இது போன்ற கட்டுமான மேம்பாட்டுக் கழகங்களை அமைப்பதன் மூலமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நிர்வாகச் செலவு அதிகமாகச் செயல்படும் என்ற காரணத்தாலே, அந்தந்த கிராமப் பகுதி களிலே வாழ்கின்ற மக்கள் அவர்களே இணைந்து முன் வந்து அந்தத் திட்டங்களைத் தாங்களே நிறைவேற்றிக் கொள் கிறோம் என்று அவர்களாகவே ஒரு குழு அமைத்து இந்த அரசுக்குத் தெரிவிக்க அவர்கள் முன்வருவார்களேயானால் அவர் களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள்— தரமான திட்டங்களை விரைவாக முடிப்பதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 390. திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

390—

தென் பிராந்திய குறைந்தபட்ச ஊதிய போர்டு அமைத்தல்.

* 6238 திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) தென் பிராந்திய குறைந்த பட்ச ஊதிய போர்டு ஒன்று அமைக்கத் திட்டம் ஏதேனும் மத்திய அரசுக்கு பரிந் துரைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தென் பிராந்திய குறைந்தபட்ச ஊதிய போர்டு அமைக்கும் திட்டம் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தென் பிராந்திய மாநிலங்களான தமிழ்நாடு ஆந்திரா, கர்னாடகா, கேரளா போன்ற மாநிலத் தொழி லாளர்களுக்கு ஊதியக் குழு அமைக்கும் திட்டம் ஏதுமில்லை, என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், தொழி லாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிற சூழ்நிலையில் உள்ளார்கள் என்பது அரசுக்குத் தெரியும். எனவே, மீண்டும் பரிசீலனை செய்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாநிலங்களுக்கு என தென் மண்டல ஊதிய ஆலோசனைக் குழு எதுவும் அமைக்க, மத்திய அரசுக்குப் பரிசீலனை செய்யவேண்டிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊதிய போர்டு நியமிக்கப்பட்டு செயல்படும் போது, மாநில அரசு தன் பங்கிற்குரிய வகையில் அனைத்துத் தரப்பினர்களின் குறைகளை நீக்க எடுத்துரைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய அனைத்துத் தரப்புப் பிரதிநிதிகளையும் ஊதியக் குழு நிர்ண யிக்கிறபோது அங்கம் வகிக்கச் செய்து, அவர்களுடைய குறைகளை எடுத்துரைக்க மாநில அரசு உரிய வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பிராந்தியத்திலே இருக்கிற தொழிலாளர்களுக்கு, ஊதியக் குழுவின் மூலம் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கிற செயற்குறிப்பு இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாடு அரசு தற்போது ஆங்காங்கே ஊதியக்குழு சிபாரிசு செய்ததை அமல்படுத்தாத நிலையிலே இருக்கிற நிறுவனங்கள் மீது, நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் எந்தெந்த நிறுவனங்கள் குறைந்தபட்ச ஊதியக் குழுவின் சிபாரிசு அமல்படுத்தவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கிறபோது தொழிலாளர்கள் நிறைந்த பகுதியில், தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு, அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் அங்கம் வகிக்கிற வகையில் ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 391. திரு. கே. சிங்காரம். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர். 391—

மரவள்ளிக்கிழங்கிற்கு செஸ் வரி நீக்கல்.

*5162—திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தருமபுரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கிற்கு வசூலிக்கப்படுகின்ற பத்து சதவிகித செஸ் வரியை நீக்க அரசு முன்வருமா ?



1992 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு அறிக்கையிட்ட விளைபொருளாதலால் 1 சத விகிதம் விற்பனை கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகின்றது. இதை நீக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனி வெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கிணறுகளில் நீர் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும்போது. மற்ற எந்த விளைபொருட்களுக்கும் வரி விதிக்காத நிலையில் இந்தப் பொருளுக்கு மட்டும் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இதை நீக்கினால் விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள். ஆகவே. இனி வருங்காலத்திலாவது, இதை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அங்கு விளையக்கூடிய பொருள்களை அறிக்கையிட்ட பொருளாக வேளாண் விற்பனைக் குழு அறிவிக்கிறது. அந்த மாவட்டத்திலே அறிக்கையிட்ட பொருளுக்குக் கட்டணம் வசூல்க்கப்படுகிறது, இந்தக் கட்டணம், 100 ரூபாய்க்கு ஒரு ரூபாய்தான் வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சந்திரசேகர், கேள்வி, தர்மபுரியைப் பற்றியது.

திரு, வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருட்களுக்கு இப்படிப்பட்ட செஸ் வரியை விதிக்கிற காரணத்தினாலே. அதைப் பயன்படுத்தி வியாபாரிகள் விவசாயிகளின் விளைபொருட்களுக்குக் கொடுக்கிற விலையைக் குறைக்கிறார்கள். அதேபோல், மக்கள் வாங்குகிற அந்தப் பொருட்களின் விலையை ஏற்றி விற்கிறார்கள். மேலும், இப்படிப்பட்ட வரிகளை வசூலிக்கிறபோது முறைகேடுகள் நடக்கிற காரணத்தினாலே அரசாங்கத்திற்கு வருமானம் குறைகிறது. எனவே, இப்படிப்பட்ட விவசாயிகளினுடைய விளைபொருட்களுக்கு செஸ் வரி விதிக்கிற முறையை அரசு நீக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முறைகேடுகள் எங்கு நடக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே தனியாக எடுத்துச் சொல்வார்களேயானால். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, நா. சா. பழனிசாமி,

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது அறிக்கையிடப்பட்ட பொருள்களுக்கு 'செஸ்' வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். விவசாயப் பிரதிநிதிகள் அந்த வேளாண்மை அமைப்பிலே இல்லாத காரணத்தால் அதிகாரிகளே தங்களுடைய இஷ்டத்திற்கு சில அழுகும் பொருள்களைக் கூட, அறிக்கையிடப்பட்ட பட்டியலிலே சேர்த்து இருக்கிறார்கள். இந்த மரவள்ளிக்கிழங்கு, வெங்காயம், தேங்காய் போன்ற அழுகும் பொருள்களை அறிக்கையிடப்பட்ட பட்டியலிலே சேர்த்து இருக்கின்ற காரணத்தினால் அதிகாரிகள் லாரிகளை மடக்கிப் பிடித்து அவர்களிடம் அதற்கு செஸ் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி: எனவே, இப்படி அழுகும் பொருள்களைத் தடுத்து நிறுத்தும்போது, மற்ற பொருள்களை மார்க்கெட்டுக்குக் கொண்டுவருவதற்குக் காலதாமதம் ஆகி, அதனால் அந்த வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, இந்த அழுகும் பொருள்களை அறிக்கையிடப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கிவிடுகின்ற குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சில விளை பொருள்களை அறிக்கையிடப்பட்ட பட்டியலில் அரசு அறிவித்திருக்கிறது. இதிலே அழுகக்கூடிய பொருள்களையும் சேர்த்திருக்கிறார்கள். அப்படி அழுகக்கூடிய பொருள்கள் எது என்று அரசு பரிசீலித்து அதற்குத் தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 392 திரு. டி. எம். ரங்கராஜன், திரு. எம். கே. பாலன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.



392—

## குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளின் வாடகையைக் குறைத்தல்.

*804—திரு. டி. எம், ரங்கராஜன் : திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான குடியிருப்புகளுக்கு அதிகப்படுத்தியுள்ள வாடகையைக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புகளுக்கு தற்பொழுது வசூலிக்கப்பட்டு வரும் மாதத் தவணைத் தொகையை குறைக்கக் கோரி மனுக்கள் வந்துள்ளன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கான வாடகையைக் குறைப்பதோடு, அங்கே குடியிருப்பவர்களுக்கு அந்தக் குடியிருப்புக்களை 'ஹயர் பர்சேஸ்' ஸ்கீமிலே அவற்றைச் சொந்தமாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹயர் பர்சேஸ் என்ற முறையிலே ஏற்கனவே, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் ஆகஸ்டு 1989 வரை குடியிருந்து வந்த தகுதிவாய்ந்த ஒதுக்கீடு தாரர்கள் அல்லது அவர்களது வாரிசுதாரர்கள் தவணை முறையில் குடியிருப்புகளை ஒதுக்கிக் கொடுக்கத் தகுதியுடையவர்களாவார்கள். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் கட்டப்பட்ட குடியிருப்புகளைப் பொறுத்த வரையில் அவைகளில் தற்போது வசித்து வரும் யாவருமே அந்தத் திட்டத்தில் தகுதியுடையவர்களாக இருந்தார்கள். அந்த அடிப்படையிலே கடந்த 2½ ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தத் தொகை அதிகப்படுத்தப்பட்டது. 1971 ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட வீடுகளுக்கு மாதத் தவணையாக 50 ரூபாய் பத்து

ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டும் என்றும், அதே போல, 1980 ஏப்ரல் முதல் 1990 மார்ச் முடிய கட்டப் பட்ட வீடுகளுக்கு ரூ. 125, 15 ஆண்டுகளுக்குத் தவணைத் தொகையாகவும் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோல, 1-4-1990-க்குப் பிறகு கட்டப் பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகளைப் பொறுத்த வரையில் மாதத் தவணையாக ரூ. 150 வீதம் 20 ஆண்டு களுக்கு வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் ஏற்கெனவே வாரியத் தலைவரிடம் இந்தத் தொகை அதிகம் என்று மனு கொடுத்திருக்கின்றார்கள். அதேபோல, திரு ஜி. வெங்கடேசன் என்பவர் சென்னை மாநகராட்சி 100-வது வட்டத்தில் உள்ள திருவல்லிக்கேணி பகுதியில் கணேசபுரத் தில் வாரியக் குடியிருப்புகளில் குடியிருப்போர் வாடகை யாக ரூ. 22 செலுத்தி வந்தார். ஆனால் அதைத் தவணை முறைத் திட்டத்தின் கீழே ரூ. 150 ஆக செலுத்த வேண்டியது இல்லை என்று தெரிவித்து மனுவைக் கொடுத் திருக்கின்றார். அதேபோல, அரசிடமும் ஏகப்பட்ட புகார் கள் இந்தத் தொகை அதிகமாக இருக்கின்றது என்று வந்திருக்கின்றன. இவை சம்பந்தமாக போற்றுதற்குரிய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தற்போது இருக்கின்ற நிதிநிலைமையைக் கவனத்திற் கொண்டும், வாரியத்தினுடைய நிதிநிலைமையை அனு சரித்தும், பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியம் முதன் முதலில் வீடு கொடுக்கின்றபோது வாடகை 10 ரூபாய் என்று வசூலிக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அது 22 ரூபாயாக இருந்தது. அன்றைக்கு 70 சதவீதம் வசூலிக்கப்பட்டு வந்தது. ஆனால், இடையிலே வந்த தி. மு. க. அரசு எல்லா வீடுகளையும் ஹயர் பர்சேஸ் என்ற முறை யில் ஆக்கிவிட்ட காரணத்தினால் இன்றைக்குக் குறைந்தது சுமார் 3½ கோடி ரூபாய் வசூலிலே பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால், இன்றைக்கு 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற முத்திரையாக குடிசை மாற்று வாரியத்தின் சின்னமாக இருந்து கொண்டி ருக்கிற காரணத்தினால், இன்றைக்கு மாதம் 300 ரூபாய் வருமானம் உள்ளவர்கள்தான் குடிசைமாற்று வாரிய வீடு களிலே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். இடையிலே, தி. மு. க. அரசு இதுபோன்ற வீடுகளையெல்லாம் ஹயர் பர்சேஸ் திட்டத்திலே கொண்டு வந்த காரணத்தினால், வாடகையை வசூல் செய்ய முடியாமல் முன்னாடி இருந்த வசூலினைவிட இன்றைக்கு வசூல் குறைந்திருக்கிற நிலைமை உள்ளது. ஆக, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்



'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று சொல்லாமலேயே கொடுத்துக் கொண்டிருக்கிற அவர்களுடைய அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்து வாடகையைக் குறைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவணை முறை திட்டம் ஏற்கனவே அமல் படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அந்தத் தவணை முறைத் திட்டத்தில்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல 35,797 வாடகை முறை திட்டத் தில் உள்ள குடியிருப்புகளில் தவணை முறைத் திட்டத்திற் காக மாற்றப்பட்ட குடியிருப்புகள் மொத்தமே 4,604 என்பது குறிப்பிடந் தக்கது. அந்த அடிப்படையிலே யும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை யும் இன்று குடிசை மாற்று வாரியத்திலே கட்டுமானச் செலவினுடைய செலவினமும், அதைப் பராமரிக்கக் கூடிய செலவினமும் அதிகரிக்கின்ற காரணத்தினால் வாரியத்தி னுடைய நிதிநிலைமையை அனுசரித்து மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்னை நகரில் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக நலிந்த பிரிவினர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு களிலே வசித்து வருகிறார்கள். நமது முதல்வர் அவர்கள் குறிப்பாக பெண்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை இலவசமாக அறிவிக்கின்ற நேரத்தில் அந்தக் குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் வசிக்கின்ற ஏழைகளுக்கு, பாமரர்களுக்கு, நலிந்த பிரிவினருக்கு இலவசமாக அந்த வீடுகளை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வ தோடு, இலவசமாக வழங்குகின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினா, தனி வினா என்றபோதிலும், தற்போது இருக்கின்ற நிதிநிலையிலேயும் வாரியத்தினு டைய மோசமான நிதிநிலை பற்றாக்குறை காரணமாக வும் இலவசமாக வீடுகள் கொடுப்பதற்கு எந்தவிதமான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

மாண்புமிகு திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளை இதற்கு முன்னர் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பலர் அவர்கள் பெயரிலே எடுத்து வியாபாரம் செய்து இருக்கிறார்கள். பலருக்கு விற்றிருக்கிறார்கள். வாடகைக்குத் தந்திருக்கிறார்கள். இதுகுறித்து பல புகார்களும் வந்திருக்கின்றன. இவை குறித்து அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு இது சம்பந்தமான புகார்களைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 393: திரு. ஆர். தங்கராஜ் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

393—

சாலைக்கரைக் கிராமத்தில் பாலர் பள்ளி.

* 2929—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்குவிடையளிப்பாரா—

. திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில், சாலைக்கரைக் கிராமத்தில், தனியாக பாலர் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை,

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லிவிட்டார்கள். போற்றுதலுக்குரிய நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற மக்கள் மிகவும் வறுமையிலே வாடுகின்ற மக்கள்



அந்த வறட்சி மிகுந்த பகுதியிலே, இந்தப் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே, இந்த ஆண்டிலாவது அந்தப் பாலர் பள்ளி மையத்தை அமைத்துத்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின் படி புதிதாக குழந்தைகள் நல மையம் ஆரம்பிக்க வேண்டும் என்றால், 70 குழந்தைகள் இருக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற சாலைக்கரை கிராமத்தில் 40 குழந்தைகள் இருக்கிறார்கள் என்ற தகவல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகக் கிடைத்திருக்கிறது. 70 குழந்தைகள் தமிழகத்திலே எங்கேயிருந்தாலும் அங்கே புதிய மையங்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாக அமைத்துத்தரும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 235: திரு. ஜி. பழனிசாமி, உறுப்பினர் இருக்கையில் இல்லை.

வினா எண். 394. திருமதி க. பழனியம்மாள், டாக்டர் மு. சீனியம்மாள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

394—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா.

* 4212—திருமதி க. பழனியம்மாள், டாக்டர் மு, சீனியம்மாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டி கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் கிடைக்கா வண்ணம் நிலச் சொந்தக்காரர்கள் வாங்கியுள்ள தடை உத்தரவுகளை நீக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தும் போது நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்தில் தடையாணை பெறும் தருணத்தில் அத் தடை ஆணைகளை நீக்க அரசு தரப்பில் வழக்கறிஞர்கள் மூலம் உயர் நீதிமன்றத்தில் எதிர் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

திருமதி சு. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலச் சொந்தக்காரர்கள் தடையாணை பெற்றிருப்பதால் பல வருடங்களாகக்கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப் படாமல் இருக்கிறது. அதுமாதிரி நிறைய கேஸ்கள் இருப்பதால் இன்னும் பல மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கிடைக்கவில்லை. அதனால் தொகுப்பு வீடு கட்டுகின்ற திட்டத்திற்காகக் கூட சில இடங்களில் நிலம் கிடைக்காமல், திட்டம் செயல்படுத்தப்பட முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, இதுவரை இருக்கின்ற இந்தத் தடையாணை உத்தரவுகளையாவது ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் முடித்து, அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் திட்டம் சம்பந்தமாக நில எடுப்பு வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு தனியாக உயர் நீதிமன்றத்தின் பெஞ்ச் ஒன்றினை அமைப்பதுபற்றி அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் இதயத் துடிப்பாய் இயங்கிக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப் பேற்றதற்குப் பின்னாலே இத்தகைய தடையாணைகள் எவ்வளவு நீக்கப்பட்டிருக்கின்றன? குறுகிய காலத்தில் நீக்கப்பட்ட தடையாணைகள் எவ்வளவு? இப்படிப்பட்ட தடையாணைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் துரித நடவடிக்கைக்காக, சட்டத் துறையோடு விவாதித்து இவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டுமென்று சட்டம் கொண்டு வருவாரா? நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு காலத்திலேயே ஏழை மக்களுக்கு வீடு கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு காலத்தில்தான் இது



போன்ற தடையாணைகளை முடிக்க, விரைவாக முடிக்க வேண்டுமென்று கருதி, அதற்காக ஒரு பெஞ்ச், உயர்நீதி மன்றத்தில் உருவாக்க வேண்டுமென்று கருதி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டி கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் கிடைக்க அவைகளுக்கு நிலச் சொந்தக்காரர்கள் பெற்றுள்ள தடை உத்தரவுகளை நீக்க, தேங்குவதைத் தடுக்க, ஒரு புதிய விடிவெள்ளியாம் எங்கள் தங்கத் தலைவியின் ஆட்சியில் அரசு சட்டத் திருத்தம் கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலச் சொந்தக்காரர்களுடைய உரிமையைக் காக்கின்றவகையில் அரசியல் அமைப்பில் சட்டம் இருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு எதிராக நாம் சட்டம் போட இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதிக்காக நிலங்களைக் கையகப்படுத்தும்போது, வேளாண்மை நிலங்களைக் கையகப்படுத்தக் கூடாது என்கிற ஒரு கன்வென்சன் இருப்பதாகவும், எனவே சிலர் 4 தென்னை மரங்களை வைத்துவிட்டால்கூட அது வேளாண்மை நிலம் எனக் கருதி வேறு நிலத்திற்குப் போக வேண்டிய நிலைமை இருப்பதால் நாட்கள் தள்ளிப் போகின்றன. இப்படிப் பார்ப்போமேயானால் ஊருக்கு ஒதுக்குப் புறத்திலேதான், கரடு முரடான நிலம்தான், அவர்களுக்குக் கிடைக்கும். ஏற்கனவே ஒதுக்குப் புறத்திலே தள்ளப்பட்டிருக்கிற அவர்களை மேலும் நாம் ஒதுக்குப் புறத்திலே தள்ளாமல் இந்த மரபை அரசு கைவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது நஞ்சை நிலம் என்று கருதுகிறேன். அதுபோன்ற தருணத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி

விலக்கு தந்து, எடுக்கலாம் என்ற உத்தரவை எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையினால் இதுபோன்ற குறைகள் இருக்காது. ஆகவே, குறைகளைச் சுட்டிக்காட்டுவார்களேயானால் அது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 395: செல்வி கோ. மல்லிகா. மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

395—

## மீனவர்களுக்கு இலவச வீடுகள்.

*1223—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, குமாரப்பேட்டை, புதுக்குப்பம் ஆகிய ஊர்களில் உள்ள மீனவ சமுதாய மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : நம்மைக் காத்து வழி நடத்தும் தெய்வமாக இருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதற்கு இணங்க வேளிங்கராயன்பட்டி மற்றும் புதுக்குப்பம் கிராமங்களில் மீனவர்கள் துயர் துடைக்க 109 வீடுகள் கட்ட உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி. கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் மிகவும் பின்தங்கிய புவனகிரி தொகுதியைத் தொழில் வளம் மிக்க பகுதியாக ஆக்க பி. அண்டு சி. ஆலையின் புராசசிங் யூனிட்டை புவனகிரியில் அமைக்க ஆணை வழங்கிய என் அன்புத் தெய்வமே, நீங்கள் வாழ்க பல்லாண்டு, வளர்க உன் தொண்டு எனக் கூறி, என் அன்பு நன்றியினை அவரது பொற் பாதங்களில் காணிக்கையாக்கி, மீனவ மக்களின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, புதுக்குப்பம், குமாரப்பேட்டை மற்றும் வேளிங்கராயன்பேட்டை போன்ற பகுதிகளிலுள்ள மீனவர்கள் சிலருக்கு வீடுகள் ஒதுக்கியுள்ளதற்கும் நன்றியினைத் தெரிவித்து, வீடு கிடைக்காத மீனவர்களுக்கும் வீடுகள் வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன் தொகுதியில் உள்ள குமாரப்பேட்டையில் வீடுகள் ஒதுக்கக் கோரியுள்ளார்கள். அதற்குத் தேவையான தளத்தை அரசுக்கு அளிக்க முன்வரும் பட்சத்தில் அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

380—

## ஆசிரியர்கள் அமருவதற்கு இருக்கை வசதி,

*2486—டாக்டர் அ. செல்லக்குமார் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எம்.எம்.டி.ஏ. காலனியில் இருக்கும் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அமருவதற்கு இருக்கை வசதி இல்லாததால் இவ்வசதி வழங்குவதற்கு அரசு நிதி உதவி செய்ய திட்டம் ஏதாவது உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

384—

## கூட்டுறவு பனியன் தொழிற்சாலை.

*4320,—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதி தொழில்துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதால் கூட்டுறவு முறையில் பனியன் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாராபுரம் தொகுதியில் கூட்டுறவுத் துறையின்கீழ் பனியன் தொழிற்சாலை துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

235—

ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கல்.

*2142—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அபிசேகக்கட்டளை ஆதிதிராவிடர் ஆரம்பப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : , உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

I. கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்,

வினா எண் 302.—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எத்தனை ?

(ஆ) அத்திட்டங்கள் முழு அளவில் மக்களுக்கு பயன் பெற பெரியார் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா ?



விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வாரியத்தின் பராமரிப்பில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உள்ளன. ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் 38 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உள்ளன,

(ஆ) மேற்காணும் திட்டங்களுக்கு பெரியார் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எதுவும் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

2— நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல்.

வினா எண் 579—திரு, ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டையில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க பெரிய நீர்நிலைத்தொட்டி, அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

திட்டம் ஏதும் இல்லை, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் வீரியங்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த வீரியங்கோட்டை கிராமம் சுமார் 2,000 மக்கட்தொகையைக் கொண்டதாகும், இந்தக் குடியிருப்பு மறு ஆய்வின்படி பகுதியாக செயலாக்கப்பட்ட குடியிருப்பாகும். இக்குடியிருப்புக்கு 26 எல்.பி.சி,டி. தண்ணீர் வழங்கப் பட்டுள்ளது. இது தற்போதைய குடிநீர் வசதிக்குப் போதுமானதாக இல்லை, எதிர்வரும் நிதியாண்டில் இத்திட்டம் பற்றி கருத்தில் கொள்ளப்படும்,

3—

வினா எண் 652—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், பெரப்படி ஊராட்சியில் மேல்நிலைத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. பெரப்படி ஊராட்சி. திருவிடைமருதூர் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இக்கிராமத்தில் தற்போதைய மக்கட்தொகை 470. ஆதிதிராவிடர்கள் 375 ஆகும். தற்போதைய ஆய்வின்படி இக்கிராமம் பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்ட கிராமம் ஆகும்.

4—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண் 871—திரு. ஆர். சிங்காரம் : மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம். கோட்டைக்காடு வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

5—

வினா எண் 929—திரு. ஆர். சிங்காரம் : மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம்., கல்லூர்க்காடு வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

தொகுப்பு வீடுகள் கட்டுவது சம்பந்தப்பட்ட வரையில் எந்த கிராமத்தில் வீடுகள் கட்டவேண்டும் என்ற முடிவு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களால் முடிவு செய்யப் படுகிறது. எனவே, அரசிடம் இது பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.

6—

வினா எண் 931.—திரு. ஆர். சிங்காரம் : மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம். பேராவூரணி ஒன்றியம் திருப்பூர்ணிக்காடு வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கொடுக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?



விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவு மில்லை.

7—

வினா எண் 932—திரு. ஆர். சிங்காரம் : மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆத்தாளூர் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணி களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, எனவே. இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவு மில்லை.

8—

வினா எண் 936—திரு. ஆர். சிங்காரம் : மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, எனவே. இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

9—

வினா எண் 931—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரை வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிய காலனி வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

10—

அலிவலம் முடதாலி ஏரியிலுள்ள கருவேல மரங்களை ஊராட்சியிடம் ஒப்படைத்தல்.

வினா எண் 1162—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டம் அலிவலம் முடதாலி ஏரியிலுள்ள கருவேல மரங்களை ஊராட்சியிடம் ஒப்படைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் சமூகக் காடுகள் தோட்டத்தில் 1991-92-ல் இரண்டாம் கட்டமாக பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கும் பொருட்டு 17 தோட்டங்களைத் தேர்வு செய்து தஞ்சாவூர் ஊரக வளர்ச்சித்துறை திட்ட அலுவலருக்கு அனுப்பி அவரைத் தேர்வு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. இந்த 17 தோட்டங்களில் பட்டுக்கோட்டை வட்டம் அலிவலம் - குளக்கரையில் 1982-ல் எழுப்பப்பட்டுள்ள தோட்டமும் ஒன்றாகும். இத்தோட்டங்களை மாற்றுவதற்கு வனத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையினர் ஒப்புக்கொண்ட பின்னர் அலிவலம் தோட்டமும் பஞ்சாயத்தினரிடம் ஒப்படைக்கப்படும்.



11— குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 1589—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் கா. உஞ்சிவிடுதி குளத்துக்கரை ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு குழாய்க்கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஆம். கா. உஞ்சி விடுதி கிராமம், பத்திரன் கோட்டை வடக்கு பஞ்சாயத்து திருவோணம் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இதன் மக்கட் தொகை 920 (எஸ்.சி. 420 ஆகும். மறுஆய்வின்படி இக்கிராமம் பகுதியாக குடிநீர் வசதி செயலாக்கப்பட்ட கிராமமாகும். இதில், நடப்பு நிதியாண்டில் அதிவிரைவு (Crash Programme) திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர திட்டம் உள்ளது. இந்த குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் குளத்துக்கரை ஆதிதிராவிடர் காலனி மக்களுக்கு குடிநீர்வசதி செய்து தரப்படும்.

12— ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண் 1887—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (வ) ஊராட்சி கீழக்கொள்ளுக்காடு வீடு கிடைக்காத ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா:

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

13— வாய்க்கால் பராமரிப்பு.

வினா எண் 1933—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1992 மார்ச் 30

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப்புளி காட்டில் ஓடும் அலிவலம் 3–4 ம் நம்பர் வாய்க்காலைத் தூர் எடுத்து பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் 1990-91-ல் குடி மராமத்து திட்டத்தின் கீழ் அலிவலம் 3-ம் எண் வாய்க்காலில் 4.2. கி.மீ. தூரத்திற்கும் அலிவலம் 4-ம் எண் வாய்க்காலில் 3.3 கி.மீ. நீள தூரத்திற்கும் தூர் வாரப்பட்டுள்ளது.

14—

வானொலி மற்றும் தொலைக்காட்சிப்பெட்டி அளித்தல்.

வினா எண் 1969—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (தெ) ஊராட்சி ஆண்டாங்கொல்லைக்கு வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகள் அந்தந்த ஊராட்சியே வாங்கிக்கொள்ளலாம்.

15—

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண் 2008—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1992 மார்ச் 30]

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (வ) ஊராட்சி கா. உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர்கள் குடியிருப்பை விஸ்தரிப்பு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

16—

தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 2160—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மணக்காடு ஊராட்சி பாங்கரான்கொல்லை தெருவிளக்கு அமைத்துக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மணக்காடு ஊராட்சி பாங்கரான்கொல்லைக்கு 9( 1×40 வாட் குழல் விளக்குகள்) தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது. விளக்குகள் நல்ல நிலைமையில் இயங்கி வருகின்றன.

17—

மயானக்கொட்டகை அமைத்தல்.

வினா எண் 2348—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், பூவளூர் கிழக்கு ஆதிதிராவிடர்களுக்கு மயானத்தில் கொட்டகை போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) சாலையும் அமைக்க திட்டம் உள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

பூவனூர் கிழக்கு ஆதிதிராவிடர் மயானத்திற்கு கொட்டகை அமைக்கவும் மற்றும் சாலை அமைக்கவும் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

18—

கதம்பக்குடி—பட்டுக்கோட்டை பேருந்து வசதி.

வினா எண் 2379—திரு. ஆர். சிங்காரம் : மாண்மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாகொல்லைக்காடு வழியாக கதம்பக்குடியிலிருந்து பட்டுக்கோட்டை வரை ஒரு பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாகொல்லைக்காடு வழியாக கதம்பக்குடியிலிருந்து பட்டுக்கோட்டை வரையிலான பகுதியில் உப்புவிடுதியில் இருந்து வாகொல்லைக்காடு செல்லும் 2 கி.மீ. சாலை குறுகலாகவும் பழுதுபட்ட நிலையிலும் உள்ளது. இப்பகுதி பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்குவது தற்போது இயலாது.

19—

தொலைக்காட்சிப்பெட்டி அளித்தல்.

வினா எண் 2701—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சியில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

இதுவரையில் ஒரு தொலைக்காட்சிப்பெட்டி கூட வழங்கப்படாத ஊராட்சிகளில் ரூ. 10,000-க்கும் குறைவான ஆண்டு வருவாய் உள்ள ஊராட்சிகளுக்கு 1991-92



ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படும். அவ்வகையில் மாவடுகுறிச்சியின் ஆண்டு வருவாய் ரூ. 76,000 என்பதால், 1991-92 ஆம் ஆண்டில் இதற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

20—

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண் 2705—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் ஆதிதிராவிடர்கள் மீதி நபர்களுக்கு காலனி வீடு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

21—

வினா எண் 2723—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணம் பெரியநாயகிபுரம் ஆதிதிராவிடர்களுக்கு மீதி உள்ளவர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

22—

## தொடக்கப்பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 2754—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கார்காவயல் ஆதிதிராவிடர் தெருவில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

23—

## நகரிலுள்ள முக்கியமான சிலைகள் பராமரிப்பு.

வினா எண் 2827—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நகரிலுள்ள முக்கியமான சிலைகளின் மேல் பறவைகள் எச்சமிடுவதைத் தடுக்க அவைகளை வாரம் ஒருமுறையாவது சுத்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

நகரில் பொதுப்பணித்துறை பராமரிப்பிலுள்ள முக்கியமான சிலைகளின் மேல் பறவைகள் எச்சமிடுவதைத் தடுக்க அவ்வப்போது தண்ணீர் கொண்டு கழுவி சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தலைவர்களின் பிறந்த நாள், நினைவு நாட்களின்போதும், சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற அரசு விழாக்களின்போதும், எண்ணெய் பூசப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

24—

## L. P. B. வாய்க்கால் "விரிவாக்கும்" திட்டம்.

வினா எண் 2886—திருமதி மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி, மொஞ்சனூர் கிராமத்தோடு நிற்கும் L. P. B வாய்க்காலை





தென்னிலை பகுதி வழியாக க. பரமத்தி வரை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

கீழ்பவானி வாய்க்கால் மைல் 124.2.560-ல் கசிவுத் தன்மையுடைய மண் (POROUS) கொண்ட கடைமடைப் பகுதியான அஞ்சூர், மங்கலப்பட்டி ஆகிய கிராமங்கள் உள்ளன. ஒவ்வொரு முறையில் சுமார் 4,000 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்கு போதிய தண்ணீர் வழங்க மிகுந்த சிரமம் ஏற்படும். இப்போதைய சூழ்நிலையில் வாய்க்காலை தென்னிலை வழியாக கே. பரமத்தி வரைக்கும் விஸ்தரிப்பு செய்து கூடுதல் ஆயக்கட்டுகளைச் சேர்க்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி.

வினா எண் 2954—திரு. ஆர். தங்கராஜ் :- மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், செந்துறை ஒன்றியம், நம்மங்குளம் ஆதிதிராவிட மக்களுக்கு காலனி மனை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

நம்மங்குளம் மஜரா சொக்கநாதபுரம் கிராம் ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப்பட்டா கோரியதன் பேரில் 59 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க மேற்படி கிராமம் பட்டா புன்செய் நிலங்களான புல எண் 317/1 பி மற்றும் 317/3 ஆகியவைகளில் 1.72.5 ஹெக்டேர் விஸ்தீரணம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு அவார்டு முடிவு செய்து, நஷ்டஈடு வழங்கப் போகும் நிலையில் நிலச்சொந்தக்காரரான வீரமுத்து மகன் மருதமுத்து உடையார் மற்றும் மூன்று நபர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு எண். 1925/88 நடவடிக்கையில் உள்ளது. நஷ்ட ஈட்டுத் தொகையான ரூ. 30,850 முழுவதும் வருவாய் வைப்புத் தலைப்பில் 30—12—1987 அன்று அரியலூர் கிளைக் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி ரிட் மனு சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் இருப்பதால் வழக்கு முடிந்த பின்னர் மேற்படி கிராம ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

26—

வாய்க்கால் மராமத்து செய்தல்.

வினா எண் 3031—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டினம் கடற்கரை வாய்க்காலை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இது பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

அம்மணிச்சத்திரம் மீனவர்களை அடைக்கத்தேவன் கூட்டுறவு மீனவர் சங்கத்தில் சேர்த்தல்.

வினா எண் 3033—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அம்மணிச்சத்திரம் 50 மீனவர்களை அடைக்கத்தேவன் கூட்டுறவு மீனவர் சங்கத்தில் சேர்க்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

28—

ரெவின்யூ கிராமமாக்கல்.

வினா எண் 3046—திரு. ஆர். சிங்காரம் : மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் உடையநாட்டை ரெவின்யூ கிராமமாக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



29—

மின்விளக்கு வழங்கும் திட்டம்.

வினா எண் 3135—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போர் வீடுகளுக்கு ஒரு மின்விளக்கு வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

கன்னியாகுமரி மாவட்டத்தில் புறம்போக்கு நிலங் களில் உள்ள வீடுகளுக்கு மின்இணைப்பு வேண்டுபவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய தடையில்லா சான்றிதழுடனும் மின்வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஈட்டுறுதி பிணைமுறியுடனும் சேர்த்து விண்ணப்பிக்க வேண்டும். தற்போது புறம்போக்கு நிலங்களில் உள்ள குடிசைகளுக்கு மின்இணைப்பு வேண்டி மாவட்ட ஆட்சி யாளரின் தடையில்லா சான்றிதழோடு விண்ணப்பிக்கப் பட்ட எந்தவித மனுக்களும் கன்னியாகுமரி விநியோக மின்வட்டத்தில் நிலுவையில் இல்லை.

30—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை.

வினா எண் 3226—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்பு மிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும் தனி இயக்குநரகத்தின் கீழே கொண்டு வரப்படவுள்ளனவா :

(ஆ) அதன் விவரங்கள் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1992 மார்ச் 30

31—

## தமிழ்நாட்டில் பருத்தி சாகுபடி.

வினா எண் 3237—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பருத்தி சாகுபடி செய்யப்படும் இடங்கள் எவை ?

(ஆ) மொத்தமாக பருத்தி உற்பத்தி செய்யப்பட்ட அளவு எவ்வளவு ?

(இ) பருத்தி சாகுபடியில் உற்பத்தியின் அளவை உயர்த்த ஊக்கத்தொகை எதுவும் அளிக்கப்படுகிறதா?

விடை—

(அ) தமிழ்நாட்டில் பருத்தி பயிர் செய்யப்படும் இடங்கள் பின்வருமாறு :—

வரிசை எண் மற்றும் மாவட்டங்கள்.

1. செங்கை-எம்.ஜி.ஆர்.
2. தென்னாற்காடு.
3. வட ஆற்காடு-அம்பேத்கார்.
4. திருவண்ணாமலை-சம்புவராயர்.
5. சேலம்.
6. தர்மபுரி.
7. கோயம்புத்தூர்.
8. பெரியார்.
9. திருச்சி.
10. புதுக்கோட்டை.
11. தஞ்சாவூர்.
12. மதுரை.
13. திண்டுக்கல்-அண்ணா.



164972

...சை எண் மற்றும் மாவட்டங்கள்—தொடர்ச்சி

...ாமநாதபுரம்.

...ம்பொன்.

...ாசர்.

17. திருநெல்வேலி - கட்டபொம்மன்.

17. வ. உ. சிதம்பரனார்.

(ஆ) 1990-91 ஆம் ஆண்டில் இந்த இடங்களில் உற்பத்தியான மொத்த பருத்தியின் அளவு 3.927 இலட்ச பேல்கள்.

(இ) பருத்தி உற்பத்தியை அதிகரிக்க தீவிர பருத்தி சாகுபடித் திட்டத்தின்கீழ் காமராசர், மதுரை மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களில் பயிர் பாதுகாப்பு மருந்து, பயிர் பாதுகாப்புக் கருவிகள், மான்ய விலையில் வழங்கப்படுகின்றன. மேலும், இனக் கவர்ச்சி பொறி விளக்கு மாதிரி தளைகள் அமைத்தல் மற்றும் உயர் ரக விளைச்சலில் விதை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்குப் பயிர்ச்சி அளிக்கப்படுகிறது. வேளாண்மைப் பல்கலைக்கழகமும் அதிக விளைச்சல் தரும் TADH 8551 போன்ற புதியரக பருத்தி விதைகளை உருவாக்கியுள்ளார்கள்.

32—

## வளர்ச்சித் திட்டங்களுக்காக வனப்பகுதிகள் மாற்றல்

வினா எண் 3257—திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் வளர்ச்சித் திட்டங்களுக்காக மீதியான வனப்பகுதிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனவா?

(ஆ) மாவட்டவாரியாக கடந்த மூன்றாண்டுக் காலங்களில் உள்ள முழுவிவரங்களுடன்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) கடந்த மூன்றாண்டுகளில் மாவட்ட வாரியாக கீழ்க்கண்ட அளவு வன நிலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| வரிசை எண் மற்றும் மாவட்டம். | மாற்றம் செய்யப் பட்ட வனப்பகுதி (எக்டேரில்). |
|---|---|
| (1) | (2) |
| 1. காமராசர் .. .. .. .. | 1.00 |
| 2. பசும்பொன் முத்துராமலிங்கம் .. | 1.60 |
| 3. செங்கை—எம்.ஜி.ஆர். .. .. | 14.80 |
| 4. சேலம் .. .. .. .. | 0 31 |
| 5. திருச்சிராப்பள்ளி. .. .. | 0.45 |
| 6. பெரியார் .. .. .. .. | 1.30 |
| 7. வடஆற்காடு—அம்பேத்கார் .. .. | |
| 8. திருநெல்வேலி—கட்டபொம்மன் .. | 13.00 |
| 9. மதுரை .. .. .. | 1.77 |
| 10. நீலகிரி .. .. .. | 1.59 |
| 11. தென்னாற்காடு .. .. .. | 3.24 |
| 12. தர்மபுரி .. .. .. | 9.33 |
| மொத்தம் | 57.83 |



33—

குழல் விளக்குகள்

வினா எண் 3367— டாக்டர் எஸ்: சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் பரமக்குடி தொகுதியில் உள்ள Tube Lights இரவு 6 மணி முதல் 9 மணி வரை சரிவர எரிவதில்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) அம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

(அ) பரமக்குடி தொகுதியில் உள்ள குழல் விளக்குகள் யாவும் சரிவர எரிகின்றன. ஆயினும் ஊரகப் பகுதியில் மின் மாற்றியிலிருந்து வெகு தொலைவில் உள்ள இடங்களில் மலையில் குழல் விளக்குகள் எரிவதில்லை.

(ஆ) இப்பகுதியில் விநியோக நிலைமையைச் சீர் செய்ய 20 மின் மாற்றிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

34—

பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு

வினா எண் 3426— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஆதிதிராவிடர் நலத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் 1989-90 ஆம் கல்வியாண்டில் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களில் தேர்ச்சி பெற்றவர்கள் எவ்வளவு பேர்?

| விடை— | மேல்நிலை. | எஸ்.எஸ்.எல்.சி. |
|---|---|---|
| (அ) | 1,634 | 6,025 |
| (ஆ) | 733 | 2,013 |

[1992 மார்ச் 30

35—

## பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இரண்டு நடத்துனர்கள்

வினா எண் 3435—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை நகரில் ஓடும் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இரண்டு நடத்துனர்களை நியமிக்கும் செயற்குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது ?

விடை—

1980 ஆம் ஆண்டு பரீட்சார்த்தமாக பல்லவன் போக்குவரத்துக் கழகம் இரண்டு நடத்துனர்களை நியமித்தது. அதனால் அதிகமான வசூல் வரவில்லை என்பதாலும், கழகத்திற்கு அதிக செலவீனம் ஏற்பட்டதாலும் இந்தமுறை கைவிடப்பட்டது. பின்பு 1990 ஆம் ஆண்டும் பரீட்சார்த்தமாக அமல் படுத்தப்பட்டபோதும், கழகத்திற்கு அதிக செலவீனமும், அதற்கு ஈடுகட்டும் அளவிற்குக்கூட வசூல் வராததால் இந்த முறை மறுபடியும் கைவிடப்பட்டது.

36—

## சென்னை வணிகவரி அலுவலர் பயிற்சி நிலையத்தை மாற்றும் திட்டம்.

வினா எண் 343 திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வருவாய்த்துறைத் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) சென்னையில் உள்ள வணிகவரி அலுவலர் பயிற்சி நிலையத்தின் (Commercial Taxe Staff Training Institute வேறு ஊருக்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.



1992 மார்ச் 30

37—

## பாலம் கட்டுதல்

வினா எண் 3469—திரு. எம். தங்கவேல் ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

முசிறி ஒன்றியம். கோட்டாத்தூர் ஊராட்சி, புத்தனாம்பட்டி சாலையில் குறுக்கிடும் சடகால்வாரியில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

38—

## மயிலாடுதுறை பேருந்து நிலையம்

வினா எண். 3474—திரு. எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை நகரில் தற்போது செயல்படும் பேருந்து நிலையம் தொலைதூர பேருந்துகள் செல்வதற்கும், நகரப் பேருந்துகள், டாக்டர் வரதாச்சாரியார் பூங்காவில் உள்ள பழத்தோட்டத்தில் இருந்து செல்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப் படும்?

விடை

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை நகரில் தற்போது செயல்பட்டு வரும் பேருந்து நிலையம் தொலைதூரப் பேருந்துகள் செல்வதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. வரதாச்சாரியார் பூங்காவில் உள்ள பழத்தோட்டம் தமிழ்நாடு நகரமைப்புச் சட்டம்; 1920—ல் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டமங்கலம் மேற்கு பகுதி நகரமைப்புத் திட்டத்தில் பூங்கா மற்றும் திறந்தவெளி உபயோகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அங்கு நிலையப்பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

39— [1992 மார்ச் 30

சாலை பராமரிப்பு

வினா எண் 3627— திருமதி ரமணி நல்லத்தம்பி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ராதாபுரம் தோகுதி, திசையன்விளை — ராதாபுரம் வழி முடவன்குளம் ரோடு பழுதடைந்துள்ளதைச் சரிசெய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது சரிசெய்யப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ);

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பரும் சாலை நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிலுள்ள ராமநாதபுரம்—இடையன்குடி சாலையாகும். இந்த சாலை ஓர் அரசின் இதர மாவட்ட சாலையாகும். இந்த சாலையின் நீளம் 27.4 கி.மீ. ஆகும். இச்சாலையில் கி.மீ. 12/0–15/0 மற்றும் 18/0–19/0 வரையில் உள்ள 4 கி.மீ. நீளமுள்ள சாலைப்பகுதி கல்தளமாக உள்ளது. இப்பகுதி பழுது பட்டுள்ளது. மற்ற பகுதிகள் யாவும் தார் தளமாக உள்ளன. மேற்கூறிய கல்தளமாக உள்ள 4.00 கி.மீ. நீள சாலைப் பகுதியும் பராமரிப்பு நிதியைக் கொண்டு மேம்பாடு செய்வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்பணி தற்போது நடைபெற்று வருகின்றது. விரைவில் இப்பணி முடிவடைந்து சாலை சீர்படும்.

40—

வினா எண். 3628—திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் ராதாபுரம் தொகுதி திசையன்விளை – ராதாபுரம் மெயின் ரோடு பெட்டைகுளத்தில் 5 கி. மீ. தூரம் வெள்ள அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளதை பழுதுபார்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலை நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிலுள்ள ராதாபுரம்—இடையன்குடி சாலையாகும். இந்தச் சாலையின் நீளம்



1992 மார்ச் 30]

27.4 கி.மீ. ஆகும். இச்சாலையில் கி.மீ. 12/0–15/0 மற்றும் 18/0–19/0 வரையில் உள்ள 4 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதி கல்தளமாக உள்ளது. இப்பகுதி பழுது பட்டுள்ளது. மற்ற பகுதிகள் யாவும் தார் தளமாக உள்ளன. மேற்கூறிய கல்தளமாக 4.00 கி.மீ. நீள சாலைப் பகுதியையும் பராமரிப்பு நிதியைக் கொண்டு மேம்பாடு செய்வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்பணி தற்போது நடைபெற்று வருகின்றது, விரைவில் இப்பணி முடிவடைந்து சாலை சீர்படும்.

41—

விவசாய உதவி இயக்குநர் அலுவலகக் கட்டிடம்.

வினா எண் 3759— திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வானூர் தொகுதியில் வானூர் வட்டத்தில் விவசாய உதவி இயக்குநர் அலுவலகக் கட்டிடத்தை இவ்வாண்டே கட்டித்தர அரசு நடவழிக்கை எடுக்குமா ?

விடை ;—

உலக ..ங்கியின் நிதி உதவியுடன் ஐந்து ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டில் ஐம்பது வேளாண்மை உதவி உயக்குநர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டித் தரப்பட உள்ளது. 1992–93 ஆம் ஆண்டில் பத்து வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு கட்டிடம் கட்டப்பட உள்ளது. தற்சமயம் வானூர் வட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்திய பின் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

42—

கூட்டுறவு பயிற்சி நிறுவனங்களில் மாணவர் எண்ணிக்கை

வினா எண் 3766—டாக்டர் மு, சீனியம்மாள் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூட்டுறவு பயிற்சி பெறும் நிறுவனங்சளில் சேருகின்ற மாணவர் எண்ணிக்கை 600-லிருந்து 300 ஆகக் குறைக்கப் பட்டதை மதுரை, உசிலம்பட்டி, கோவை போன்ற இடங் களில் மீண்டும் 600 ஆக அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மதுரையில் உள்ள பாண்டியநாடு கூட்டுறவு பயிற்சி நிறுவனத்திற்கும் கோவையில் உள்ள இராமலிங்கம் கூட்டுறவு பயிற்சி நிறுவனத்திற்கும் 1991-92 ஆம் ஆண்டிற்கு பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 500 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

43—

## பாசனக் கால்வாய்கள் சீரமைத்தல்.

வினா எண் 3803—திரு ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) ஆனைக்குடம் நீர்தேக்கத்திலிருந்து வரும் பாசனக் கால்வாய்கள் தூர்ந்து போய் விட்டதால் அவை சீரமைக்கப்படுமா :

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கால்வாய் சீரமைக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வரப்படுகிறது.

44—

## நீர்வரத்துக் கால்வாய்கள் ஆக்கிரமிப்பு.

வினா எண் 3807— திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீர்ப்பாசனக் கண்மாய்களுக்கு வரும் நீர்வரத்துக் கால்வாய்கள் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது அகற்றப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) சிவகாசி சட்டமன்றத் தொகுதியில் பொதுப் பணித்துறை பராமரிப்பில் உள்ள நீர்ப்பாசன கண்மாய்களுக்கு வரும் நீர்வரத்து கால்வாய்கள் தனியாரால் **ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை. இருப்பினும்**



பொதுப் பணித்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்வரத்துக் கால்வாய்களில் எந்தக் கண்மாய் நீர்வரத்துக் கால்வாய்களில் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தால், ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற தக்க விரைவு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) எழவில்லை.

45

## சாலை பராமரிப்பு

வினா எண் 3842—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ராதாபுரம் தொகுதி முத்துநாடார் குடியிருப்பு ரோடு பழுதடைந்ததை சரி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையை 1991-92 ஆம் ஆண்டு சிறப்பு தன்னிறைவுத் திட்டம் பேருந்து சாலைகள் பட்டியலில் சேர்க்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இச்சாலை மேம்பாடு விரைவில் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மூலம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

46—

வினா எண் 3846 — திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ராதாபுரம் தொகுதி வள்ளியூர் - விஜயாபதி ரோட்டிலிருந்து திருமலாபுரம் பிரியும் சாலையை பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது கீழ்க்காணும் இரண்டு சாலைகளாக உள்ளன :—

1. வள்ளியூர் - விஜயாபதி சாலையிலிருந்து அழகப்பாபுரம் சாலை கி. மீ. 0/0-2/0 (அரசு இதர மாவட்ட சாலை) தற்போது இச்சாலை போக்குவரத்திற்கு ஏற்றவகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

2. வள்ளியூர் இட்டமொழி சாலையிலிருந்து வள்ளியம்மாள்புரம் சாலை (வழி) திருமால்புரம் சாலை கி.மீ. 0/0-4/4 (அரசு இதர மாவட்ட சாலை) இச்சாலையில் தார் தளம் முழுவதும் புதுப்பிக்க சுமார் ரூ. 3.00 இலட்சம் தேவைப்படுகிறது. வருடாந்திர பராமரிப்பு நிதியைப் பயன்படுத்தி இப்பணி வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப எடுத்துச் செய்யப்படவுள்ளது.

47—

பழங்குடியினருக்கென தனி அதிகாரி நியமித்தல்

வினா எண் 3991— திரு. செ. பெருமாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாவட்ட அளவில் அதிகாரி நியமிக்கப்பட்டது போல் பழங்குடியினருக்கு என தனியாக அதிகாரியை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

48—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 4291—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பைத்தூர் - வானாபுரம் சாலையை அகலப்படுத்தவும் கீழ் தொம்பை - மேல்தொம்பை-கீரிப்பட்டி தார்ச்சாலை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

விடை —

குறிப்பிடப்பட்டுள்ள பைத்தூர் - வானாபுரம் சாலை மற்றும் கீழ்தொம்பை—மேல் தொம்பை—கீரிப்பட்டி சாலை, ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலையாகும். இந்தச் சாலைகள் சேலம் மாவட்டத்தில் பழங்குடி மக்கள் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏற்காடு மலை, அருநூத்து மலை மற்றும் கல்ராயன மலை பகுதிகளில் அமையாததால் இச்சாலைப் பணிகளைப் பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய இயலாது.



49—

கப்பிச் சாலை அமைத்தல்

வினா எண் 4292—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பெரிய கல்ராயன் மலையில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் துலாங்குருச்சியிலிருந்து கிழக்காம்பாடி வரை செம்பரக்கை, கோவில்புதூர் ஆன்ரிப்பட்டி, தால்வள்ளம், மேலூர் வழியாக கப்பிச் சாலை அமைக்கப்படுமா—

விடை—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கல்ராயன் மலையில் கார்கோயில் - துலாங்குறிச்சி சாலை கி.மீ. 1.0 முதல் கிழக்கம்பாடிக்கு ஓடிவன்காடு, செம்பரக்கை, கோயில்புதூர், தால்வள்ளம், மேலூர் வழியாக சுமார் 11.00 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைத்து மேம்பாடு செய்ய ரூ. 100 இலட்சங்கள் அரசு ஆணை எண். 272, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 5–12–1991-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மேற்படி வேலைக்கான விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் சாலைப் பணி மேற்கொள்ளப் படும்.

50—

ஆயக்குடி அரசு மருத்துவமனைக்கு தொலைபேசி வசதி

வினா எண் 6086— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பழநி வட்டம், பழைய ஆயக்குடியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு தொலைபேசி வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா—

விடை—

பழநி வட்டம் ஆயக்குடியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு புதிய தொலைபேசி இணைப்பு அமைப்பதற்காக அரசாணை வாலாயம் எண் 1828, பொது (தொலைபேசி) துறை, நாள் 13–11–1989-ல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. தொலைபேசி இணைப்பு பெற திண்டுக்கல் அண்ணா மாவட்ட சுகாதாரப் பணி இணை இயக்குநர் தொலைபேசித் துறையுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

முற்பகல் 10–35

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. சிறப்புக் குறிப்பு.

**தர்மபுரி மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் சக்திவாய்ந்த கருவிகளை வைத்துக்கொண்டு நடமாடிவருவது குறித்தும் முதலமைச்சர் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அவசியம் குறித்தும்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தர்மபுரி மாவட்டத்திலும், தமிழகத்தின் வேறு சில பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருப்பதாகவும் சக்திவாய்ந்த சில ஒயர்லஸ் கருவிகளை அவர்கள் வைத்திருப்பதாகவும் வந்திருக்கிற தகவல்கள் குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பெ. பொன்னுசாமி, திரு. கா. பூ. முனுசாமி, திரு. கே. முனிவெங்கடப்பன், டாக்டர் வெ. புருஷோத்தமன், திரு. கே. சிங்காரம், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். அதைப்போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பாதுகாப்பு பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் மற்றும் திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோர் ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக அவையில் எழுப்ப அனுமதி அளித்திருக்கிறேன். திரு. பெ. பொன்னுசாமி.

*திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே விடுதலைப் புலிகளினுடைய தற்கொலைப் படை இன்றைக்கு ஊடுருவி இருக்கின்றது. அதைப்போல தமிழகத்திலே மற்ற பகுதிகளிலும் இந்தத் தற்கொலைப் படை ஊடுருவல் செய்திருக்கிறது என்பதை அவர்கள் இயக்கிக் கொண்டிருக்கிற ஒயர்லஸ் மூலம் செய்திகள் வாயிலாகவும், செய்திப் பத்திரிகைகள் வாயிலாகவும் தெரிந்து கொண்டிருக்கிறோம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களையும். எங்களுடைய அருமைத் தலைவர் வாழப்பாடியார் அவர்களையும், அவர்களுடைய தொகுதியிலே அவர்கள் சுற்றுப்பயணம்



செய்யும் வேளையிலே, தற்கொலைப் படையினர் அவர்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடும் என்ற செய்தி இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறது. அதைப்போல இதை ஊர்ஜிதம் செய்கின்ற வகையிலே இன்றைக்கு மாண்புமிகு முதல்வரவர்கள் வீட்டுக்கு அருகிலும், அதைப்போல குற்றாலத்திலும் ஒயர்லஸ் கருவிகளை இன்றைக்கு அரசு கைப்பற்றி இருக்கிறது. இந்த மாதிரி சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. எங்களுடைய தர்மபுரி மாவட்டம் கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களின் எல்லையோரம் இருக்கின்ற காரணத்தாலும், அங்கே காடுகள் நிறைந்திருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், அங்கே தற்கொலைப் படையினர் ஊடுருவுவதற்கு சௌகரியமாக அமைந்திருக்கிறது. அதைப்போல எங்கள் மாவட்டத்திலே கிட்டத்தட்ட 4000- லிருந்து 5000 வரை இலங்கை அகதிகள் பல்வேறு பகுதிகளிலே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்க வருகின்ற சந்தர்ப்பமாகக்கூட இன்றைக்கு விடுதலைப் புலிகள் அங்கே பயன்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இவற்றை எல்லாம் இந்த அரசு உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து இன்றைக்கு தமிழக அரசும் சரி காங்கிரஸ் கட்சியும் சரி, மத்திய அரசை வலியுறுத்தி இருக்கிறோம். எல்.டி.டி.ஈ. இயக்கத்தையே தடை செய்ய வேண்டுமென்று. இன்றைக்கு மத்திய அரசுக்கு கூட அதைத் தடை செய்கின்ற உத்தேசம் இருப்பதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இந்த அடிப்படையிலே இந்த அரசு இதனைக் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மேலும் இன்றைக்கு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகளையும், அதைப்போல அவர்களுக்கு ஆதரவாக இருக்கிற இன்டிவிஜுவல்—தனிப்பட்டவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல இன்றைக்கு முன்னாள் உள்துறை செயலாளர் திரு. நாகராஜன் அவர்கள் வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஓரிருவரை மட்டும் கைது செய்திருக்கிறார்கள். ஆனால் பலபேர் இன்றைக்கு வெளியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த முன்னாள் உள்துறைச் செயலாளருடைய ஸ்டேட்மெண்டின் அடிப் படையிலே பார்த்தால் கூட இன்றைக்கு திராவிட

முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்** அவர்கள் தடா சட்டத்தில் கைது செய்யப்பட வேண்டும். அந்த அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முன்னாள் உள்துறைச் செயலாளருடைய வாக்குமூலம் இருக்கிறது. அது மட்டுமல்ல, இன்றைக்கு அந்தக் கட்சியில் பலபேர் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் தடா சட்டத்திலே கைது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.**

திரு. இளம்வழுதி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட பெயர்கள் வேண்டாம். (குறுக்கீடு) அவர் பேசுகிறார். நான் தனிப்பட்ட பெயர்களை நீக்கியிருக்கிறேன். நீங்கள் வேண்டுமென்று கேட்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அவர் பேசட்டும். அவர் ஒரு ஸ்பெஷல் மென்ஷன் கொடுத்திருக்கிறார். அதற்கு அனுமதி அளித்திருக்கிறேன். அதில் நீங்கள் குறுக்கே பேச ஒன்றும் இல்லையே. உட்காருங்கள். திரு. இளம்வழுதி பேசியது நீக்கப்படுகிறது (குறுக்கீடு) அதாவது இதில் சம்பந்தம் இல்லாத பிரச்சினையில் இளம்வழுதி குறுக்கீடு செய்து பேசியது நீக்கப்படுகிறது. திரு. பெ. பொன்னுசாமி பேசிமுடியுங்கள். திரு. இளம்வழுதி, நீங்கள் ஏற்கெனவே பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். உட்கார வேண்டும். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி உட்கார வேண்டும். திரு. இளம்வழுதி அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கக் கூடாது. அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களிடம் அனுமதியைப் பெற்று சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்து ஏறத்தாழ 5 நாட்கள் காத்திருந்து, பொறுத்திருந்து, இன்று என்னிடம் பதிலைப் பெறவிருக்கிறார்கள். எனவே, அவர்கள் பேசுகின்றபோது அதுவும் தங்களுடைய அனுமதியைப் பெற்றுப் பேசுகின்றபோது, ஒரு உறுப்பினர் இப்படிக் குறுக்கிடுவது முறையல்ல. உறுப்பினர் பரிதி இளம்வழுதி விரும்பினால் தங்களிடம் இதைப்போலவே சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்து அதற்கான அனுமதியைப்பெற்று அவரும் பேசலாம். யாரும் தடை செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

---

(**) மாண்புமிகு பேரவைத் தலைவரின் **ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி, நீங்கள் என்னிடம் எதுவும் கேட்காமல் இப்படி அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்துக்கொண்டிருந்தால் நடவடிக்கை எடுக்க நேரிடும். (குறுக்கீடு) உட்காரவும். உட்காரவும் (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். திரு. இளம்வழுதி, நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். நடவடிக்கை எடுக்க வேணடிவரும் (குறுக்கீடு) திரு. இளம்வழுதி பேசியது, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. இளம்வழுதி அவையைவிட்டு வெளியேற உத்தரவிடுகிறேன். வெளியேற வேண்டும். வெளியேற உத்தரவிடுகிறேன். மார்ஷல், திரு. இளம்வழுதியை வெளியேற்றக் கேட்டுக் கொள்கிறேன். மார்ஷல் மற்றும் காவலர்கள் இளம்வழுதியை வெளியேற்றுவார்கள். இளம்வழுதியை வேறுயாரும் நெருங்கவேண்டாம். அவைக் காவலர்கள், அவரை வெளியேற்றுவார்கள். இளம்வழுதி பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது.

(உறுப்பினர் திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

திரு. பெ. பொன்னுசாமி : இன்றைய ராஜ்யசபை உறுப்பினர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு நம்முடைய அரசியல் சாசன விதிகளையும் மீறி அங்கே சென்று ஒரு மாதம் இருந்தார்கள். அவருடைய செய்திகளை — அவர் அங்கேயிருந்து அனுப்புகிற செய்திகளை—இங்கே அன்றைக்கு தி. மு. க. அமைச்சராக இருந்த ஒருவருடைய வீட்டிலேயே சக்திவாய்ந்த வயர்லஸ் கருவியைப் பொருத்தி, அவர் எங்கே போகிறார், எங்கே வருகிறார். எப்போது வருவார் என்ற விபரங்களையெல்லாம் ஒரு முன்னாள் அமைச்சர் வீட்டிலே பொருத்தப்பட்ட வயர்லஸ் கருவிகள் மூலமாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர் மீதும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற பல பேர், எங்கள் மாவட்டத்திலே இருக்கிற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், என்னை கைது செய்து பார்க்கட்டும், நான் என்ன செய்கிறேன் பார் என்று சவால் விடுக்கிறார். ஆனால் இதே கலைஞர் கருணாநிதி அவர்கள் நம்முடைய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, என்னை கைது செய்யுங்கள், இந்த நாடே இரத்தக்களறி ஆகும் என்றெல்லாம் அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் நாற்பது,

ஐம்பது நாட்கள் அவர் சிறையிலே அடைக்கப்பட்டார். அப்படியிருந்தும் ஒன்றுமே நடைபெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே இந்த அரசு எதற்கும் பயப்படத் தேவையில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற எல்லா மட்டத் தலைவர்களையும் விட்டு வைக்கக்கூடாது என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஒரு நல்ல அமைப்புள்ள கட்சி, அந்தக் கட்சியை நீங்கள் நல்லமுறையிலே, எப்படியெல்லாம் அந்தக் கட்சி செய்கின்றதோ அதையெல்லாம் பார்த்து நீங்கள் அந்தக் கட்சியை கவனித்து கண்காணித்து கொள்ள வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதே போல......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினைக்கு வாருங்கள்.

திரு. பெ. பொன்னுசாமி : அதைப்போல நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியை சார்ந்த தலைவர்கள் கூட சொல்லுகிறார்கள். கைது செய்யட்டும் பார்க்கலாம் என்ன நடக்கும் என்று சொல்லுகிறார்கள். அவர் கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்; ஒன்றுமே நடக்கவில்லை. அதனாலே அதைப்பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டியதில்லை. திராவிட முன்னேற்றக் கழகம்தான் முக்கியமான கட்சி. அதிலே இருக்கிற தலைவர்களை தயவு செய்து இந்த தடா சட்டத்திலே கைது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களுக்கும் பாதுகாப்புத் தேவை. இரண்டு மூன்று நாட்கள் எங்களுடைய தலைவர் வாழப்பாடியார் அவர்கள் வடஆற்காடு மாவட்டத்திலேயும், தர்மபுரியிலேயும் சுற்றுப்பயணம் செய்தார்கள். அவருக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாகவும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு ஏதாவது ஒன்று என்றால் நிச்சயமாக இந்தத் தமிழகம் தாங்காது. (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல் மத்திய அரசு அதிலே தக்க கவனம் செலுத்தி அவருக்கு, பிரதமருக்கு அல்லது மற்ற யாருக்கும் இல்லாத அளவு



இந்திய நாட்டிலே இருக்கின்ற முதல் குடிமகனுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற பாதுகாப்பைவிட அதிகமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு கொடுக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கேட்டுக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை தயவு செய்து தடா சட்டத்திலே கைது செய்வதுதான் இந்த அரசு செய்ய வேண்டிய முதல் நடவடிக்கை என்பதையும் சொல்லி எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன். ஒரே நிமிடத்தில் பேசுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய சென்னை மாநகரத்திலே நம்முடைய முதல்வர் வீட்டு அருகில் ஒயர்லஸ் கருவிகளை வைத்துக்கொண்டு பல பேர் சுற்றி திரிவதாகவும், சில நாட்களுக்கு முன்னாலே இருவர் கைது செய்யப்பட்டதாகவும் கூட செய்திகள் வந்து, கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சக்திவாய்ந்த ஒயர்லஸ் கருவிகளையெல்லாம் வைத்துக்கொண்டு இன்று நாட்டிலே ஊடுருவிக் கொண்டிருக்கிற விடுதலைப் புலிகளை வேரறுக்க என்றைக்கோ நடவடிக்கையை எடுத்துவிட்டார்கள். இருந்தாலும் மிச்ச சொச்சங்கள் இங்கே இருந்து கொண்டிருக்கின்றன. இங்கே இருக்கக்கூடிய சில உறுப்பினர்களுக்கு வேண்டியவர்கள் எல்லாம் வெளியே சென்று, இன்று விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் ஆதரவாக இருக்கிறோம், ஆதரவாக இருக்கிறோம் என்று ஆயிரம்முறை சொல்லுகிறேன் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இயக்கத்தையும் உடனடியாக தடை செய்வதற்கு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இன்று முதலமைச்சருக்குப் பாதுகாப்பு வேண்டும் என்ற தீர்மானத்தை இந்த அவையிலே நாம் இயற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

முற்பகல் 10–50

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உணர்வுகளை இங்கே தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன், கடந்த 15 நாட்களுக்கு முன்பாக — தர்மபுரி மாவட்டத்தில், அரூர் பகுதியில்

கோட்டப்பட்டி என்ற கிராமம் இருக்கிறது, அந்தப் பகுதியிலே விடுதலைப் புலிகள் அதிசக்தி வாய்ந்த கருவிகளைப் பயன்படுத்தி, தங்களுடைய சங்கேத பாஷை மூலமாக தங்களுடைய தலைவருக்கு பேசிக்கொண்டு இருந்ததை நமது காவல் துறை கண்காணித்து, அந்த இடத்திலே இருக்கிறதா என்பதை ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. இங்கே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த விடுதலைப் புலிகளுக்கு உறுதுணையாக எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து கொண்டு இருக்கிறதோ, அதேபோல் தர்மபுரி மாவட்டத்திலே ஆர்.ஐ.எல். இயக்கமும், நக்சலைட் இயக்கமும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்து கொண்டு இருக்கிறது. இரண்டு, மூன்று மாதகாலமாக அமைதியாக இருந்த தர்மபுரி மாவட்டம், தற்சமயம் இந்த நக்சலைட்டுகள் மூலமாக விடுதலைப் புலிகள் உள்ளே நுழைந்து, அங்கே நடந்த ஒருசில கொலைகளுக்கும் விடுதலைப் புலிகள் காரண கர்த்தர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள்,

இங்கே கலைஞர் கருணாநிதியை தடா சட்டத்திலே கைது செய்ய வேண்டுமென்று சொன்னபோது அந்த இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுந்து கூக்குரல் இட்டார்கள். ஆனால் இன்று 5½ கோடி தமிழ் மக்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் உயிருக்கே ஆபத்து என்ற நிலையில் இருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில் அவர்களைக் கைது செய்ய வேண்டுமென்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்ற நிலையிலே அவர் இங்கே கூக்குரலிடுகிறார். தயவு செய்து இந்த மாமன்றத்தின் வாயிலாக அவர்களுக்கு ஒன்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்; இதய தெய்வம் 'புரட்சித் தலைவி அவர்கள் இல்லை என்று சொன்னால், நாங்கள் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி). நாங்கள் இல்லை என்று சொன்னால், இந்த தமிழக மக்கள் எதிர்கால வாழ்வு— 40 ஆண்டுக் காலத்தில் ஏற்படாத புரட்சி இந்த 9 மாத காலத்திற்குள்ளாக குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்படி ஒரு தொழிற் புரட்சியையும், சமூக மேம்பாட்டுப் புரட்சியையும் கொண்டு வந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒரு ஆபத்து என்று வருகின்ற பட்சத்தில் இந்தத் தமிழகம் தாங்காது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே நேரத்தில், அரசியல் வாழ்வு இழந்தவர்கள். அரசியல் அபலைகள் எங்கு சென்றாலும் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், மக்களாலும் நல்ல உள்ளம் படைத்த



அரசியல்வாதிகளாலும் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள். சாதிகளை முன் நிறுத்திக்கொண்டு சாதியின் போர்வையிலே இருந்துகொண்டு, இது போன்ற மக்கள் தலைவியைக் கொல்வதற்குத் தயாராக இருந்துகொண்டு இருக்கின்ற இயக்கத்தில் எல்லாம் அவர்கள் பாதுகாப்பைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள், எப்படியாவது ஒரு இயக்கத்தினுடைய பின்னாலே இருந்துகொண்டு வாழ்வு வராதா என்று ஆர்ப்பரித்துக்கொண்டு இருப்பவர்கள் எல்லாம் அவர்கள் மீது- இந்த மாமன்றத்தின் வாயிலாக தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன் — நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொது மேடையிலே பேசுகின்றபோது நாங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை. இந்த இயக்கத்தை ஆதரிக்கிறோம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த இயக்கம் இந்த இந்தியத் துணைக்கண்டத்திலே தலைமை அமைச்சராக இருந்தவரும், இப்போது உயிருடன் இருந்திருந்தால் மீண்டும் தலைமை அமைச்சராக ஆகிஇருக்க வேண்டியவருமான அன்புத் தலைவர் ராஜீவ்காந்தி அவர்களைக் கொலை செய்துவிட்டதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறவர்கள் — இந்த தமிழகம் எங்கேயும் ஆயுதக் கலாச்சாரத்துக்கு சென்று விடக்கூடாது என்று, தன் உயிரையும் மதிக்காமல், பொறுப்பேற்ற 4 மாதகாலத்திற்குள்ளாக அவர்கலளக் களைந்து எறிந்து வெளியேற்றிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு அடுத்த குறி வைத்து இருக்கிறார்கள். இப்படி 5½ கோடி மக்களின் தன்னிகரற்ற தலைவியை கொனல செய்வதற்கு ஒரு இயக்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிற காலக் கட்டத்தில் அந்த இயக்கத்திற்கு அரசியல் அபலைகள் உறுதுணையாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கலள நிறம் கண்டு உடனடியாக தடா சட்டம் என்று கூட அல்லாமல், அதிகப்படியான ஒரு சட்டம் இருக்கும் என்று சொன்னால்—ஏன் அதைக் கூறுகிறேன் என்று சொன்னால், அரசியல் ஆதாயத்தை அனுபவித்துவிட்டு, மக்கள் மத்தியிலே ஒரு இயக்கத்திலே ஒருதலைவன் பின்னால் இருந்து, அந்தத் தலைவனுடைய பின்னால் இருந்து, அந்தத் தலைவனுடைய கொள்கைக்குப் பின்பு அந்தக் கொள்கையை ஏற்று இதய தெய்வம் புரட்சித் தலைவிக்குப் பின்னாலே இருந்து, அங்கே தங்களுடைய சுயரூபம் எடுபடாமல் போன காரணத்தினால் வெளியேறி (மேசையைத் தட்டும் ஒலி) இன்று யாரால். உருவாக்கி, யாரால் வாழ்க்கை அடைந்து, யாரால் இந்த தமிழகத்தில் தமிழ் மக்களுக்கு அருமையான அந்த இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கின்ற

கயவர்களை இந்த தடா சட்டத்தைக் கொண்டுவந்து உடனடியாக அவர்களைக் கைது செய்ய வேண்டும். இந்த உணர்வுகளை நாங்கள் வெளிப்படுத்துவதற்குக் காரணம், நாங்கள் இன்று வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு எங்களுக்கு ஒரு சமூக அந்தஸ்து கிடைத்து இருக்கிறது; இன்று மக்கள் மத்தியிலே ஒரு மரியாதை கிடைத்து இருக்கிறது என்று சொன்னால், இந்தத் தமிழகம் அமைதியாக இருக்கிறது என்று சொன்னால், இன்று அமைதியாக அமர்ந்து இருக்கிற எங்களுடைய இதய தெய்வத்தினுடைய கருணைப் பார்வையால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே நேரத்தில் இப்படி தமிழகத்தையே காத்துக் கொண்டு இருக்கிற, எங்களை வாழ வைத்துக்கொண்டிருக்கிற தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், முன்பு அந்த மாவட்டத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டிருந்த அமைச்சர்களானாலும்கூட, அவர்கள் தர்மபுரி மாவட்டத்தைக் கண்டு கொள்ளவே இல்லை. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு கருணை உள்ளத்தோடு அந்த மாவட்டத்தை தத்து எடுத்துக்கொண்டு, அனைத்து துறைகளிலும் மற்ற மாவட்டங்களுக்கு இணையாகக் கொண்டு செல்கிற நிலையில், எங்களுடைய இதய தெய்வத்தை எங்களுடைய மாவட்டத்தில் இருந்து கொண்டே கருவிகளை இயக்கி கொலை செய்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த கயவர்களை கைது செய்வதோடு மட்டுமல்லாமல் தர்மபுரி மாவட்டத்தில் இதற்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களையும், அங்கேயிருக்கிற நக்சலைட்டுகளையும் உடனடியாக நட்வடிக்கையெடுத்து கைது செய்ய வேண்டுமென்று எங்களுடைய தர்மபுரி மாவட்ட மக்கள் சார்பாக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் உணர்வுகளைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

முற்பகல் 10–55

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி ஜீனத் சர்புதீன்.

<u>திருமதி ஜீனத் சர்புதீன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பற்ற தலைவியாக விளங்கும் நமது தமிழகத்தின் ஜான்சி இராணி தான் நம் தமிழகத்தின் **தாய். (மேசையைத் தட்டும் ஒலி).**



அந்தத் தாயை இழக்க ஒரு நாளும் முடியாது. ஏனென்றால் 'தாயற்றபோது சீரற்றுப் போகும்'. அதைப் போல அவர்கள் இல்லாவிட்டால் தமிழகம் இந்த முழுநிலவை இழந்து விடும். தமிழ்நாடே இருட்டாகி விடும். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் இரத்தத்தைச் சிந்தியாவது அவர்களை நிச்சயமாகக் காப்பாற்றுவோம் என்பது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி). அது மட்டுமல்ல நம்முடைய தமிழகத்தின் தாய் அவர்கள், எந்த முதலமைச்சரும் செய்யாத ஒன்றை செய்துகொண்டு வருகிறார்கள். அதாவது ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் 4.00 மணியிலிருந்து மக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்கள் தரும் பெட்டிஷன்களை வாங்குகிறார்கள். அவர்கள் தைரியமாக வாங்குகிறார்கள். எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது. ஏனென்றால் 4.00 மணியிலிருந்து 6.00 மணி மட்டும் வாங்கினாலும் பரவாயில்லை. அம்மையார் அவர்கள் இருட்டிய பிறகும் வாங்குவதைத் தவிர்க்க வேண்டுமென்று தாழ்மையாக அவர்கள் அடிபணிந்து கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் எந்த ரூபத்தில் எது வரும் என்று சொல்ல முடியாது. அதற்கு மேல் பெட்டிஷன் இருந்தால் அந்தந்த தொகுதியிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது தொகுதிச் செயலாளர்களோ வாங்கி தங்களிடம் தருவார்கள் என்று நான் உறுதி கூறுகிறேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய அசெம்பிளிக்கு நேராக இருக்கும் கடற்கரை பகுதியில் நேவல் படையை ரோந்து போகச் சொல்லுமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் அன்று வெள்ளிக்கிழமை 12.55 மணிக்கு திரும்ப உள்ளே வரும் போது பின்கேட்டில் இரண்டு வெள்ளையர்கள் படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். நான் உடனே போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்குச் சென்று அவரிடம் முறையிட்டேன். போலீஸ்காரகள் அப்போது இல்லையா என்று கேட்டார்கள். இருந்தார்கள். ஆனால் அவர்கள் கண்ணுக்கு தெரியாது. ஏனென்றால் அப்படி ஸ்லோப்பாக அந்த இடம் வருகிறது. அவர்கள் அந்த பள்ளத்தில் இருந்தார்கள். இப்படி வருகிறபோது கேட் பக்கத்தில் நான் கவனித்தேன். நிச்சயமாக 'மோட்' என்று சொல்வார்கள் இல்லையா—அகழி அதை படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஏன் எடுக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை ஆகவே, உடனடியாகச் சென்று திரு. ராஜகோபாலன், கமிஷனர் அவர்களிடம் முறையிட்டு விட்டு வந்தேன். ஆகவே, நம்முடைய தலைவி அவர்களுடைய உயிரைப் பாதுகாப்பதற்கு நாம் தமிழகத்தில் இருக்கிற ஒவ்வொரு

வரும் கங்கணம் கட்டிக் கொண்டு, நம்முடைய உயிரையாவது (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று உறுதி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம். ஜெய்ஹிந்த்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. கே. சிங்காரம், திரு. முனிவெங்கடப்பன், டாக்டர் புருஷோத்தமன், திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு பெ. பொன்னுசாமி, திரு. கே. பி. முனுசாமி, திரு. சி. ஞானசேகரன், திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியவர்கள் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் குறித்தும் அவர்களால் எனது உயிருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது குறித்தும் விவாதிக்க வேண்டுமென்று பத்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் என் மீது கொண்டுள்ள அக்கறைக்கும் என்னிடம் அவர்கள் வைத்திருக்கும் அன்பிற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைக் கொலை செய்ய விடுதலைப் புலிகளில் தற்கொலைப் படை உலவி வருவது குறித்தும், அரூர் மற்றும் குற்றாலம் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தால் மக்கள் பீதி அடைந்திருப்பது குறித்தும், சக்தி வாய்ந்த ட்ரான்ஸ்மிட்டர்கள் சில இடங்களில் செயல் படுத்தப்படுவது குறித்தும், எனது பாதுகாப்பைக் கருதி நான் பொது மக்களைச் சந்தித்து, குறைகளைக் கேட்டு மனுக்கள் பெறுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்து உள்ளனர். தேச விரோத தீய சக்திகளால் எனது உயிருக்கு எப்போதும் ஆபத்து சூழ்ந்துள்ளது என்கிற உண்மை இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், இந்திய மக்களுக்கும் ஏற்கெனவே தெரிந்த செய்திதான். எனது உயிர் எனக்கு வெல்லம் அல்ல என்பதை நேற்றைக்கு அல்ல, இன்றைக்கு அல்ல என்றைக்கும் கூற நான் தயங்கியது இல்லை. இதுவும் நாடறிந்த உண்மை. மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் கூட தனது செயலாளர் மூலமாக எனது செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், நான் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் வாங்கும்போது, கிடைக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தி, எனது உயிரையே பறிக்க ஒரு பயங்கரக் கும்பல் சதித்



திட்டம் வகுத்துள்ளதாகவும், எனவே பொதுமக்களை நேரில் சந்தித்து, அவர்களிடமிருந்து மனுக்களைப் பெறுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

முற்பகல் 11-00

மேதகு ஆளுநர் அவர்களுக்கு, அவரது நெருங்கிய நண்பர் இந்தி மொழியில் எழுதிய கடிதத்தின் நகலையும் அதன் ஆங்கில மொழி பெயர்ப்பையும் எனக்கு அனுப்பியுள்ளார்கள். அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள செய்தியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்

"During your reign popular leader Rajiv Gandhi was assassrinated. The so-called friends of the assassinsg are watching yours especially Tamil Nadu Chief Minister Jayalalitha's, activities keenly. The Chief Minister is engaging herself in meeting the public every Monday from 4.00 p.m. onwards. This certainly will have its repurcussions. You please advise the Chief Minister to discontinue the above practice from 16th March 1992. If she continues the above practice, it will have its repurcussions and you will be held responsible if anything untoward takes place."

என் நலத்தின் மீது மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கறைக்கும், அன்பிற்கும், எனது மனமார்ந்த நன்றியினை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

அனைத்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானங்களும், இலங்கைப் போராளிகளான விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் நடமாட்டத்தால் எழுந்துள்ள சட்டம் ஒழுங்குப் பிரச்சினை குறித்து எழுப்பப் பட்டுள்ளதால், எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமாக எனது பதிலை அளிக்க விரும்புகிறேன்.

தருமபுரி மாவட்டம் அரூரின் பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகமாக இருப்பதாகவும், அவர்கள் சக்தி வாய்ந்த டிரான்ஸ்மீட்டர்களை இயக்குவதாகவும் வந்த புகார்கள் மீது காவல்துறையினர் குறிப்பிட்ட பகுதிகளில் தீவிர சோதனைகளைச் செய்து வருகிறார்கள். ஏற்கெனவே ஏற்காட்டில் அமைந்துள்ள காவல்துறையினரின் 'ரேடியோ ரிப்பீட்டரில்' ஒலி அலை குறுக்கீடுகள் ஏற்பட்டதையும், அது குறித்து காவல்துறையினர் கண்காணிப்புடன் புலன் ஆய்வு மேற்கொண்டு வருவதையும், இந்த அவையில் நான் தெரிவித்தேன். இந்தப் பணி இன்னும் தொடர்கிறது. இதுவரை எந்த

ஒரு சக்தி வாய்ந்த டிரான்ஸ்மிட்டரும் சேலம் பகுதியில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பகுதியிலுள்ள வனத்துறை அலுவலர்கள். கிராம நிர்வாக அலுவலர்கள், முக்கியப் பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் கவனமாக, கண்காணிப்புடன் இருந்து அறிமுகம் இல்லாத அன்னியர்களின் நடமாட்டம் தென்பட்டால், உடன், அந்த விவரத்தைக் காவல்துறைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்றே, குற்றாலம் மலைப் பகுதியில் சில நாட்களாக ஆயுதம் தாங்கிய வன்முறைக் கும்பலின் நடமாட்டம் அதிகம் இருப்பதாகவும், அவர்கள் இலங்கைப் போராளிகளான விடுதலைப் புலிகளாக இருப்பார்களோ என்ற ஐயப்பாட்டை இங்கே எழுப்பினார்கள். குற்றாலம் மலைப் பகுதிகளில், நவீன ஆயுதங்களுடன் செயல்படும் கும்பல் விடுதலைப் புலிகளாக இருக்கும் என்று கருதுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. இப்பகுதியில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆயுதம் ஏந்திய சில சமூக விரோதிகளின் நடமாட்டம் முன்பு இருந்தது. இவர்கள், சந்தனக் கட்டைத் திருட்டிலும் செண்பகாதேவி அம்மன் ஆலயத் திருட்டிலும் சம்பந்தப்பட்டவர்கள் என கருதப்படுகிறது. இவர்களைக் கண்டுபிடித்து கைது செய்ய, கேரள மாநிலக் காவல்துறையினரின் ஒத்துழைப்பு கோரப்பட்டு, காவல்துறையின் தனிப்படை அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

குற்றாலத்தில் உள்ள ஐந்தருவி பகுதியில், மாலை 4 மணிக்குப் பிறகு மக்கள் நடமாட அஞ்சுவதாகச் சொல்லப்படுவது உண்மை அல்ல. இந்தத் திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட சமூக விரோதிகளைக் கண்டுபிடித்து, தண்டிக்க காவல்துறையினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையைச் சேர்ந்த ரவீந்தரன் என்ற போராளி வயர்லஸ் கருவியோடு எனது இல்லத்தருகே அலைந்த போது, காவல்துறையினரால், கைது செய்யப்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து 13 வயர்லஸ் கருவிகள் அம்பத்தூர், பாடி பகுதிகளில் தங்கியுள்ளவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது குறித்தும் விவாதிக்கக் கேட்டுள்ளனர். எனது இல்லத்தருகே, வயர்லஸ் கருவியோடு கைது செய்யப்பட்ட நபரின் பெயர் ரவீந்தரன் அல்ல, ரவிச்சந்திரன். இவர் விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்தவர் அல்ல, டி. எச். எல். என்ற International Courier Agency-யில் பணிபுரிபவர். இந்த நிறுவனம் செய்திகளை



அனுப்புவதற்காக இவருக்கும், இவரைப் போன்ற மற்ற 17 பணியாளர்களுக்கும், இதுபோன்ற சக்தி வாய்ந்த வயர்லஸ் கருவிகளை, கிண்டி, எக்மோர், பாடி, பாரிஸ் போன்ற இடங்களில் அலுவலகப் பணி சம்பந்தமாக பயன்படுத்தக் கொடுத்துள்ளனர். வயர்லெஸ் கருவிகள் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள 'மெல்ட்ரான் கம்பெனியால்' தயாரிக்கப்பட்டவை. அந்த வயர்லெஸ் கருவிகளை இயக்குவதற்குத் தேவையான உரிமம் இல்லாத காரணத்தால் அவை பறிமுதல் செய்யப்பட்டு தக்க மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், விடுதலைப் புலிகளுக்கும் இவர்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையென்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த தமிழ்நாடு ஆயுதக் கலாச்சாரத்தின் கோரப் பிடியில் சிக்கித் தவித்த சூழ்நிலையில் மக்கள் எங்களை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினார்கள். பெருவாரியான தமிழக மக்களின் ஆதரவுடனும் பெரு நம்பிக்கையுடனும் நான் தமிழகத்தில் முதல் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றேன்.

முற்பகல் 11-05

பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் பல்வேறு இன்னல்களுக்கு இடையிலே பணியாற்றி வருவதை நாட்டு மக்கள் நன்கு அறிவர். யாருமே முதல்வரைச் சந்திக்க முடியவில்லை, அவருடன் பேச முடியவில்லை, முதல்வரைப் பார்க்கக் கூட முடியவில்லை என்று நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நாள் முதல் கடந்த 8 மாத காலமாக எங்கு நோக்கினும் இதே பேச்சாக இருந்தது. நான் எனது பாதுகாப்பு என்ற பார்வையில் பொது மக்களைச் சந்திக்காமல் தவிர்ப்பதாகவும், அருகிலேயே அவர்கள் வர முடியாமல் ஒதுக்கி விடுவதாகவும், காவல் துறையினர் மேற்கொண்ட தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை, அரசியல் கண்ணோட்டத்தோடும், காழ்ப்புணர்ச்சியோடும், வஞ்சக நெஞ்சத்தோடும் சிலர் குறை கூறி வந்தார்கள். தற்போது நான் பொது மக்களை நேரில் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் தலைமைச் செயலகத்தில் பொது மக்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்று வருகிறேன். அதனை இப்போது கூடாது என்று சொல்லுகிறார்கள். என் மீது உண்மையிலேயே அன்பு கொண்டவர்களும், அன்பு இல்லாதவர்களும் இப்போது இதையே சொல்லுகிறார்கள் என்பதுதான் எனக்கு வியப்பளிப்பதாக இருக்கிறது. யாருமே என்னைப் பார்க்க முடியவில்லை என்ற குற்றச்சாட்டினை முதலில் கூறியவர்கள் மக்கள் என்னைச் சந்திக்க வாய்ப்பு வேண்டுமென்று கூறினார்கள்

உயிருக்கு ஆபத்து இருந்தும், வேண்டாம் என்று சொன்ன காவல் துறை அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் அனைவரது ஆலோசனையையும் ஒதுக்கி விட்டு என் கடமையைச் செய்ய, என் உயிரையே பணயம் வைத்து மக்களை நான் நேரில் சந்திக்க ஒரு ஏற்பாட்டினைச் செய்தால் அதிலும் குற்றம் குறை கூறுவது முறையாகுமா? இதனைப் பார்க்கும்போது நாட்டில் பல்வேறு உயர்ந்த பதவிகளில் இருக்கிற சில பெரியவர்களுக்கும் இங்குள்ள சிலருக்கும் நான் மக்களைச் சந்திப்பது பிடிக்கவில்லையோ என்றும் எப்படியாவது நான் மக்களைச் சந்திப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று செயல்படுகிறார்களோ என்றும் சந்தேகம் ஏற்படுகிறது. இப்படி நான் சொல்வதற்குக் காரணம் இதுவரை நான் மக்களைச் சந்திக்கவில்லை என்பதையே குறையாகச் சொன்னவர்கள், மக்களை நான் சந்திக்கிறேன் என்று அறிவித்த நாள் முதலே இந்தச் சந்திப்பைப் பற்றிப் பலவாறாக விமர்சித்து வருகிறார்கள். முதல்நாள் அன்று கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம் கூடிவிட்டது. 4 மணி நேரத்திற்கு மேலாக நான் இடைவிடாது தொடர்ந்து மனுக்களைப் பெற்றுக் கொண்ட போதிலும் அனைவரையும் சந்திக்க இயலவில்லை. வேறுவழியின்றி பல்லாயிரக்கணக்கானவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுவர அமைச்சர்களை அனுப்ப வேண்டியதாயிற்று. அடுத்த வாரம் அதைவிட அதிகமான அளவில் கட்டுப்படுத்த முடியாத பெரும் கூட்டம் கூடியது. அன்றும் அதே நிலைதான், 4 மணி நேரத்திற்கு மேல், நான் தொடர்ந்து மனுக்களைப் பெற்றுக் கொண்ட போதிலும் வந்திருந்த அனைவரையும் சந்திக்க முடியவில்லை. இறுதியில் எஞ்சியவர்களிடமிருந்து அமைச்சர்கள் அனுப்பி மனுக்களைப் பெற்று வரச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்குள் சில பத்திரிக்கைகளும் மற்றவர்களும் தங்களது விமர்சனங்களைத் தொடங்கி விட்டார்கள். தொலை தூரத்திலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் எதிர் பார்ப்புகளுடன் மனு கொடுக்க வந்திருந்த போது முதல்வர் அனைவரையும் சந்திக்காமல் பலரை ஏமாற்றத்துடன் திரும்பச் செய்தது முறைதானா என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள்.

அதில் ஒரு வாரப் பத்திரிக்கை நான் மாலை 4 மணி முதல் 8 மணி வரை 4 மணி நேரம் கோட்டையில் மனுக்களைப் பெற்றுக் கொண்டதையே மறைத்து மாலை 6-15 மணிக்கே முதல்வர் புறப்பட்டுப் போய் விட்டார். அதற்குப் பிறகு அமைச்சர்கள்தான் மனுக்களைப் பெற்றுக் கொண்டனர் என்று வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டனர். பல்லாயிரக்கணக்கான



வர்கள் என்னைச் சந்திக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டதைக் கருத்தில் கொண்டு அதற்காக உண்மையாகவே வருந்தி ஒரு மாற்று ஏற்பாட்டினைச் செய்தேன், அதன்படி சுழல் முறையில் ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட மாவட்டங்களிலிருந்து மட்டும் மக்கள் வந்து மனுக்களைக் கொடுக்கலாம் என்று அறிவித்தோம். இப்படிச் செய்தாலாவது ஏமாற்றத்துடன் பலபேர் திரும்பிச் செல்ல வேண்டியதைத் தவிர்க்கலாம் என்ற எண்ணத்தில் தான் இதைச் செய்தார்கள். உடனே அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் ஒரு குறையைக் கண்டுபிடித்து அதற்காக ஒரு சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானமும் கொடுத்திருக்கிறார். குறிப்பிட்ட மாவட்டங்களை அறிவித்ததால் அந்த மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் லாரிகளிலும் வேன்களிலும் வரக்கூடும். மீண்டும் அவர்களில் பலர் ஏமாற்றம் அடைய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே முதல்வர் ஒரு மாற்று ஏற்பாட்டினைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கோரியுள்ளார். வேறு எத்தகைய மாற்று ஏற்பாட்டினைச் செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களே ஆலோசனை வழங்கினால் நன்றாக இருக்கும். இன்று நான் பார்க்கிறேன், உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்த அவையில் இல்லை. என்ன காரணத்தினாலோ தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அடிக்கடி சில பிரச்சினைகளை இங்கே எழுப்புகிறார். சில கேள்விகளைக் கேட்கிறார். ஆனால் நான் அவற்றிற்குப் பதில் கூறுகின்ற போது அவர் இந்த அவையில் இருப்பது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11·10

குறிப்பிட்ட மாவட்டங்களை அறிவித்ததால் அந்த மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் லாரிகளிலும், வேன்களிலும் வரக்கூடும். மீண்டும் அவர்களில் பலர் ஏமாற்றம் அடைய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். என்வே முதல்வர் ஒரு மாற்று ஏற்பாட்டினைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்று கோரியுள்ளார். ஒரு தலைவரிடம் மக்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கையும் அதிகமான எதிர் பார்ப்புகளும் இருக்கின்ற போது அந்தத் தலைவரைச் சந்தித்து, தங்கள் குறைகளைச் சொல்ல பெரும்பாலும் கூட்டம் கூட்டமாக மக்கள் வரத்தான் செய்வார்கள். கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதற்காக மக்களையே வரவேண்டாம் என்று நான் சொல்ல முடியுமா? அதற்காக மக்களைச் சந்திக்காமல் நான் இருக்க

முடியுமா? என் உயிருக்காகப் பயந்து மக்களைச் சந்திக்கின்ற திட்டத்தையே அறவே கைவிட்டுவிடுவது என்பது எனது கனவில் கூட கற்பனை செய்து பார்க்க முடியாத செயலாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

பல்லாயிரக்கணக்கில் மனுக்களைக் கொடுக்க வருகின்ற தாய்மார்களும், பெரியோர்களுமே என் உயிருக்குப் பாதுகாப்பாகவும் அரணாகவும் விளங்குவார்கள் என்ற திடமான நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி). சொல்லப்போனால் என்னைச் சந்திக்க வருகின்றவர்களின் கூட்டத்திலே யாரேனும் கயவர்களோ, புல்லுருவிகளோ ஊடுருவினால் அவர்களை இனங்கண்டு பொதுமக்களே காவல் துறையினரிடம் ஒப்படைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழக மக்கள்தான் என்னுடைய பாதுகாப்பு அரண். அந்த அரணை எந்தச் சக்தியாலும் தகர்க்க முடியாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வீரனுக்கு மரணம் ஒரு முறை தான். ஆனால் கோழைகள் நாள்தோறும் பல்லாயிரம் முறை செத்து, செத்துப் பிழைக்கின்றார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் என்மீது வைத்திருக்கும் அளவிட முடியாத அன்பிற்கும் அசைக்க முடியாத நம்பிக்கைக்கும், பொது மக்கள் என்மீது கொண்டிருக்கும் அளவிட முடியாத பாசத்திற்கும், அவர்கள் அளித்து வரும் பேராதரவிற்கும் நான் நன்றி சொல்வதோடு, நான் அவர்களுக்காக பணிபுரிய என்றென்றும் கடமைப் பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே திங்கட்கிழமை தோறும் பொது மக்களிடம் இருந்து மனுக்களை மாவட்ட வாரியாகப் பெற்று அவர்களின் குறை கேட்கின்ற திட்டத்தை மேலும் தொடரவுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இப்படி மக்களுக்காக பணியாற்றி வருகின்ற எனக்கு மகிழ்ச்சி அளிக்காத சில சங்கடங்களும், நான் எதிர்பார்க்காத பல்வேறு முனைகளிலிருந்து விளைவிக்கப்படுகின்றன. இந்தச் சங்கடங்களை இந்த அவையின் மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அதன்மூலம் நாட்டு மக்களுக்கும் தெரிவிப்பதை நான் எனது கடமையாகக் கருதுகிறேன்.



ஒருசில வாரப் பத்திரிகைகளில் தொடர் கட்டுரைகள் எழுதி என்னைப்பற்றி ஒருசிலர் கடுமையாக விமர்சித்து வருகின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். அதில் ஒருவர், தான் ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஆகி, இந்த மாமன்றத்திற்கு வரமுடியாத நிலையில் சில வாரப் பத்திரிகைகளில் தனது கற்பனைத் திறனை வெளிப்படுத்தி வருகின்றார். யார் வேண்டுமானாலும் விமர்சனம் செய்யலாம். அதற்கு உரிமை உண்டு. ஆனால் கூறுவதில் உண்மை வேண்டும். ஆக்கப்பூர்வமான விமர்சனம் வரவேற்கத்தக்கது. மாறாக என்னை ஹிட்லர் உருவில் சித்தரித்து 'பெண் ஹிட்லர்' என்று பட்டம் கொடுத்து கடுமையாக விமர்சித்து வருகின்றார் என்பதைவிட ஒரு மாபெரும் தாக்குதல் போரையே நடத்துகிறார் என்று தான் சொல்ல வேண்டும். பாவம், தொடர்ந்து முயற்சி செய்யட்டும். அம்முயற்சிகளின் பரிசை மக்கள் அவருக்குக் கொடுப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தத் தாக்குதலின் கடுமையினையும் தரத்தினையும் பார்க்கின்றபோது எதிர்க் கட்சிகளாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும்கூட தோற்றுப் போய்விடும் என்று கூறத் தோன்றுகிறது. இதில் ஆச்சரியமான உண்மை என்னவென்றால் அந்த நபர் இன்றும் கூட தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் பொறுப்பில் இருக்கிறார். ஆனால் காங்கிரஸ் எங்களது தோழமைக் கட்சி. இருந்தாலும் கூட ஏறத்தாழ கடந்த இரண்டு மாத காலமாக ஒவ்வொரு வாரமும் இந்தத் தொடர் தவறாமல் வெளிவந்து கொண்டிருக்கிறது. இவரைத் தட்டிக் கேட்க காங்கிரஸ் பேரியக்கத்திலேயே யாரும் இதுவரை முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை.

முற்பகல் 11-15

காங்கிரஸ் கட்சி நண்பர்கள் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். நம்முடைய நட்பு பலப்படவேண்டுமென உங்களுக்குள்ள அதே உணர்வுகள்தான் எங்கள் கட்சியில் உள்ளவர்களுக்கும் இருக்கின்றது. அப்படி இருக்கும்போது இதே பாணியில் எங்கள் இயக்கத்தில் முக்கியப் பொறுப்பில் இருக்கும் ஒருவர் வாரம் தவறாமல் ஒரு வாரப் பத்திரிக்கையில் உங்கள் கட்சி ஆட்சியிலுள்ள மத்திய அரசையும். உங்கள் கட்சியின் அகில இந்தியத் தலைவர் பாரதப் பிரதமர் அவர்களையும் தொடர்ந்து தரக்குறைவான முறையில் தாக்கியும், விமர்சித்தும் தொடர் கட்டுரைகள் எழுதி வந்தால் எப்படி இருக்கும் ? (மேசையைத் தட்டும் ஒலி). அதே சமயத்தில் நாங்கள் உங்களது தோழமைக் கட்சி என்று சொல்லிக்கொண்டால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்களா? விரும்புவீர்களா? அல்லது பொறுமையாக, பொறுத்துக் கொண்டும் சகித்துக்கொண்டும்

தான் இருப்பீர்களா? ஏற்கெனவே நான் குறிப்பிட்டுச் சொன்ன அந்த நபர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் போலவே அல்லது அவரை விட இன்னும் (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன், அப்புறம் நீங்கள் உங்களுடைய விளக்கங்களைச் சொல்லலாம். அல்லது அவரைவிட (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு உங்களுடைய கிளாரிபிகேஷனைச் சொல்லலாம். அந்த நபரைப் போலவே அல்லது அவரை விட இன்னும் திறமையாகவும், வேகமாகவும், கடுமையாகவும் எழுதுவதற்கு எங்கள் இயக்கத்தில் பல ஆட்கள் இல்லை என்று நினைக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி).

இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே என் பாதுகாப்பு குறித்த பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது குறித்து விவாதிக்கவும் செய்தார்கள். அதற்கான பதிலையும் பெறுகிறார்கள். இத்தகைய வாய்ப்பு தினமும் கிடைத்துக் கொண்டுதான் இருக்கிறது. இப்படி இருக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் தான் இந்த அவையில் கேட்கத் துணியாத பிரச்சினைகளைப் பற்றி தன்னுடைய எதிர்பார்ப்புகளாக வாரப் பத்திரிகையில் தொடர் கட்டுரை வடிவில் வெளியிட்டு வருவது விந்தையாக இருக்கிறது. எங்கள் கட்சியிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இவரை விடக் கடுமையாக, காரமாக விமர்சித்து வாரப் பத்திரிகைகளில் (மேசையைத் தட்டும் ஒலி) தொடர் கட்டுரைகள் எழுத முடியும். ஆனால் கட்டுப்பாட்டின் காரணமாக இதுவரை அதைச் செய்ய (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் முற்படவில்லை. கட்டுப்பாட்டின் காரணமாக இதுவரை அதைச் செய்ய அவர்கள் முற்படவில்லை என்று குறிப்பிட்டேன். இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் தோழமைக் கட்சிகள் என்ற உறவோடு இரு கட்சிகள் இருக்கின்றபோது பிரச்சினைகள் இருப்பின் நேருக்கு நேராகவே பேசி அவற்றைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர இப்படி பத்திரிகைகள் மூலமாக வெளிப்படையாகத் தாக்குவது நட்பிற்கு அழகல்ல. இது தோழமைக் கட்சி என்ற உறவையே மாசுபடுத்துவதாகவும், முறியடிக்கக் கூடியதாகவும் அமையும்.

மாண்புமிகு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்களைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர் தனக்கே உரித்தான பொறுப்புணர்ச்சியுடன் தனது கட்சியிலுள்ள சிறு சிறு வேறுபாடுகளை நன்முறையில் சமாளித்து எப்



போதுமே நடுநிலை வகித்து அரசுக்கு ஆக்கப்பூர்வமான யோசனைகளையும், அறிவுரைகளையும் அவ்வப்போது வழங்கி பொறுப்புடன் செயல்படுவதை மற்ற உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று எனது விருப்பத்தை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்வதில் (மேசையைத் தட்டும் ஒலி) தவறு இல்லை என்று கருதுகிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினர்களை மாவட்டங்களுக்கு அனுப்பி மனுக்களைப் பெறலாம் என்றும் அல்லது பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்களைத் தபால் மூலம் பெற்று மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்ற கருத்தையும் இங்கே தெரிவித்துள்ளார்கள். சட்டப் பேரவை உறுப்பினர்கள் தத்தம் தொகுதியிலுள்ள மக்கள் குறைகளைக் கேட்டறிந்து அவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதற்குத் தனியாக ஆணைகள் எதுவும் பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. உண்மையிலேயே சொல்லப்போனால் ஒவ்வொரு சட்டமன்றப் பேரவை உறுப்பினரின் தலையாய கடமை இது. சில செய்தித் தாட்களில் கூட தொலை தூரத்திலிருந்து பொதுமக்களை ஏன் வரவைக்கவேண்டும் என்றும் தபால் மூலம் மனுக்களைப் பெற்று நடவடிக்கையினை எடுக்கலாமே என்றும் அங்கலாய்த்து உள்ளார்கள். தொலை தூரத்திலிருந்து பொதுமக்களை வரவழைக்கவேண்டும் என்ற விருப்பமோ அல்லது நேரில் வந்து முறையிட்டு மனுக்களைக் கொடுத்தால்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலைமையோ இந்த அரசிடம் இல்லை. ஒவ்வொரு நாளும் தபாலில் ஆயிரக்கணக்கான மனுக்கள் எனது அலுவலகத்திற்கு வந்து குவிந்த வண்ணம் தான் இருக்கின்றன. இதற்கென்று ஏற்படுத்தப்பட்ட தனிப் பிரிவும் எனது அலுவலகமும் அவைகள் மீது உடனுக்குடன் உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமென்றால் 50 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 30—9–1941 அன்று பணியில் இருக்கும்போது மரணம் அடைந்த கும்பகோணம் காவல் துறை ஆய்வாளர் திரு. டி. ஆர். விஜயராகவாச்சாரி அவர்களின் மனைவி திருமதி கல்யாணி அவர்கள் தபால் மூலம் எனக்கு அனுப்பிய மனுவின் மீது தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவருக்கு கடந்த 50 ஆண்டு காலமாக கிடைக்காத குடும்ப ஓய்வு ஊதியம் 25—7—1991 அன்று வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 11-20

இதைப்போல இன்னும் எத்தனையோ உதாரணங்களை என்னால் எடுத்துக் கூற முடியும். எனவே, நேரில் வந்து மனு கொடுத்தால்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற

நிலைமை எங்கள் அரசில் இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். பல மாவட்டங்களிலிருந்தும் நேரில் வர விரும்புகிறவர்கள், தொலை தூரத்திலிருந்து வந்து பிறகு என்னைச் சந்திக்க முடியாத நிலை ஏற்படலாம் என்றும், இப்போதைய முறைக்கு மாற்று ஏற்பாடு செய்யலாம் என்றும் எனது பாதுகாப்பு கருதி, இதனைத் தவிர்க்கலாம் என்றும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்து உள்ளனர். அதிகக் கூட்டம் வந்து என்னால் அவர்களையெல்லாம் சந்திக்க முடியாத நிலை ஏற்படும் என்பதால் அவர்களைச் சந்திப்பதையே தவிர்க்கவேண்டும் என்ற கருத்துக்களை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? மக்களுக்கு வானளாவிய எதிர்பார்ப்புக்கள் இருக்கின்றன. மக்களைச் சந்தித்து நான் மனுக்களைப் பெறுகின்றேன் என்று அறிவிப்பு கொடுத்தவுடனேயே முதல் வாரத்திலிருந்து கட்டுக்கடங்காத கூட்டம் கூடுகின்றது. இதனை முறைப்படுத்தத்தான் சுழல் முறையை அறிமுகப்படுத்தியுள்ளேன். பொது மக்களில் பலர் ஆர்வத்துடன் என்னை நேரில் சந்திக்கவேண்டும், தங்கள் குறைகளை எடுத்துக் கூறவேண்டும், தங்களின் கோரிக்கை மனுவைக் கொடுக்கவேண்டும் என்று விரும்பி வருபவர்களை நாம் எவ்வாறு தடுக்க முடியும்? அவர்களை வர வேண்டாம் என்று தடுப்பது நியாயமாகுமா? கூட்டம் அதிகமாக வருவதால் மக்களைச் சந்திக்க முடியவில்லை என்று பின்வாங்குவது சரியாகுமா? எனவேதான் என் உயிருக்கு ஆபத்து என்கிற நிலையையும் பெரிதெனக் கருதாமல் பொது மக்களைச் சந்தித்து அவர்கள் குறைகளைக் கேட்கும் இந்த திட்டத்தை இனியும் தொடருகிறேன் என்பதை இம் மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள் பேசுகின்றபோது எல்.டி.டி.இ. விடுதலைப் புலிகளைத் தடை செய்யவேண்டும்; அதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள் பேசுகின்றபோது ஆர்.ஒய்.எல். Radical Youth League என்ற இயக்கத்தையும் தடை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். எல்.டி.டி.இ.-ஐ மட்டுமல்ல, அதனுடைய சார்பு நிறுவனங்களாக உள்ள Radical Youth League போன்ற நிறுவனங்களையும் தடை செய்யவேண்டுமென்றுதான் மத்திய அரசுக்கு ஏற்கனவே கோரிக்கை அனுப்பியுள்ளோம்; கடிதம் அனுப்பியுள்ளோம். அவர்கள் கேட்டுள்ள ஆவணங்கள் – டாக்குமென்ட்ஸ், ரிப்போர்ட்ஸ்— போலீஸ் ரிப்போர்ட்ஸ் எல்லாமே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே இந்த விஷயத்தில் மத்திய அரசாங்கம்தான் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசாங்கத்து நடவடிக்கைக்காக நாங்கள்



காத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்றபடி முன்னாள் உள்துறைச் செயலாளர் திரு. நாகராஜன் அவர்கள் கொடுத்த சில ஸ்டேட்மென்டுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டு அவற்றின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கூறினார். அந்த ஸ்டேட்மென்டுகளையெல்லாம் விசாரிக்கத்தான் 'TANSIT' என்ற ஒரு அமைப்பை—Tamil Nadu Special Investigation Team-தமிழ்நாடு அரசு ஏற்கனவே நியமித்து இருக்கிறது. எனவே, விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அந்த விசாரணை அறிக்கையைப் பெற்ற பின்பு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக சில கருத்துக்களைச் சொன்னார்கள். எங்கள் கட்சியின் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிதான் எங்களைக் கட்டுப்படுத்துகின்றது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய பிரதிநிதியாக, தலைவராக வீற்றிருப்பது எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள். அவர்கள் அளிக்கின்ற தீர்ப்புத்தான், முடிவுதான் எங்களைக் கட்டுப்படுத்துகின்றது. அவர்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அவர்கள் எந்த அளவுக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான், நாங்கள் செய்கின்ற நடவடிக்கைகளே தவிர, வேறு ஒரு சிலர் கொடுக்கின்ற கருத்துக்களெல்லாம் அவர்களுடைய தனிப்பட்ட கருத்துக்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய கருத்தை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களது கட்சியில் இருக்கின்ற ஒருவருக்கு தனிப்பட்ட கருத்தைச் சொல்லுகின்ற உரிமை இருக்கின்றது என்றால் எங்கள் கட்சியில் உள்ளவர்களுக்கு மட்டும் அந்த உரிமை இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களும் சொன்னால் தோழமைக் கட்சி என்ற உறவு என்ன ஆவது? இதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இரு கட்சிகளின் உறவுகள் என்பது திடீரென்று ஏற்பட்ட உறவுகள் அல்ல. இந்த நாட்டினுடைய நலன் கருதி ஏற்பட்ட உறவு இந்த உறவு. அன்னை இந்திரா காந்தியின் காலத்தில், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்தில் ஏற்பட்ட உறவு இந்த உறவு. இந்த உறவுக்கு பங்கம் வருகின்ற எந்தச் செய்கையையும் நிச்சயமாக எங்கள் கட்சி ஆதரிக்காது; ஏற்றுக்கொள்ளாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் உறுதியாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலே என்றாலும்கூட, இன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய பாதுகாப்பைப்பற்றி இங்கே பேசினார்கள். நானும் பலமுறை இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுதுகூட நீங்கள் பொதுமக்களைச் சந்திப்பதை வேண்டாம் என்று நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன். அதிலே எனக்குக் கருத்து வேறுபாடு நிறைய உண்டு. என்றாலும், காவல்துறையினர் சொல்வதிலேயும் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். ஆக, அதனாலே பொது மக்களைச் சந்திக்காதீர்கள் என்று நான் சொல்வேன் என்று நிச்சயமாக யாரும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை, கண்டிப்பாக பொதுமக்களைச் சந்திக்க வேண்டும்.

முற்பகல் 11-25

ஆனால், சந்திப்பது எப்படி, எங்கே சந்திப்பது என்பதைப் பொறுத்தவரை. காவல் துறையினர் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தி, அவர்களுடைய எண்ணங்களை, கருத்துக்களை முதல்வரவர்களிடத்திலே தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். நானும் சிலயிடங்களிலே பேசியிருக்கிறேன். அவர்கள் இங்கே சந்திப்பதைக் காட்டிலும் வேறு ஒரு இடத்திலே சந்திப்பது அதிகம் பாதுகாப்பு உள்ளதாக இருக்குமென்று தகவல் சொல்கிறார்கள்.

தற்கொலைப்படை தமிழகத்திலே உலவிக் கொண்டு இருக்கிறது என்பதிலே சந்தேகம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். எந்த வடிவிலே எந்த ஊரிலே, எங்கே இருக்கிறார்கள் என்பது வேறு விஷயம். ஆனால். தற்கொலைப்படை ஊடுருவி இருப்பது உண்மையே என்றுதான் பலரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தற்கொலைப்படை எப்படி வேண்டுமானாலும் தாக்குதல் நடத்தலாம். சிலபேர் உயிர் போனாலும் பராவாயில்லை, நாம் யார் மீது குறி வைத்திருக்கிறேமோ அவர்களுடைய உயிரைக் கொண்டுவர வேண்டுமென்பதுதான் அவர்களுடைய எண்ணமாக இருந்து வந்திருக்கிறது.



இராஜீவ் காந்தியினுடைய உயிர் பறிபோயிற்று என்று சொன்னால், இங்கே இருக்கிற உளவு இலாக்கா போதிய முனைப்புடன் செயல்படவில்லை என்பதுதான் இன்னும் நான் கொண்டிருக்கிற கருத்து. அதிலே எனக்கு மாறுபாடு கிடையாது. உளவு இலாக்கா போதிய முனைப்போடு செயல்பட்டு, அது மட்டும் முன்பே கண்டு பிடித்திருக்குமேயானால் இந்தவித பெரிய கொடூரமான சம்பவம் நடைபெற்றிருக்காது. அந்தத் தற்கொலைப்படை தமிழகத்திலே உலவிக் கொண்டிருந்திருக்றது. அந்தத் தற்கொலைப்படையினர் இன்றையதினம் மாண்புமிகு முதல்வரவர்களுடைய கூட்டத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள். எந்த அளவிற்கு நம்மால் உள்ளே போக முடியும் என்பதைப் பார்ப்பதற்காக முன்னோட்டமாக அந்தக் கூட்டத்திலே அவர்கள் கலந்து கொண்டதற்கான சாட்சியங்கள், தடயங்கள் இன்றையதினம் வெளியே வந்திருக்கின்றன.

அதைப்போல முன்னாள் பிரதம மந்திரி வி. பி. சிங் கலந்து கொண்ட கூட்டத்திலேயும் அவர்கள் சென்றிருக்கிறார்கள். அந்தநேரத்திலே எடுத்த வீடியோ படங்களெல்லாம் இன்றையதினம் இருந்திருக்கின்றன. எதற்கு? ஒரு முன்னோட்டம். எந்த அளவிற்கு முன்னாள் பிரதமர் மந்திரிகள் அல்லது பாதுகாப்பிலே இஸட் கேட்டகிரியிலே இருப்பவர்கள் கலந்து கொள்ளுகின்ற கூட்டங்களிலேகூட இந்தத் தற்கொலைப்படை எந்த அளவிற்கு உள்ளே செல்ல முடியும் என்பதைப் பார்க்கவேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதே நபர்கள் மீண்டும் ஸ்ரீபெரும்புதூர் வரும்போழுது ஏன் இந்த அளவு இலாக்காவினர் கண்களிலே அவர்கள் படவில்லை என்பதுதான். இன்றும் நமக்குத் கேள்விக்குறியாக இருக்கிறது. ஆக, உளவு இலாக்கா போதிய முனைப்போடு செயல்பட வேண்டும். அதுமட்டுமல்ல, அவர்கள் இஸட் கேட்டகிரியிலே இருக்கிறார்கள். அவரைச் சுற்றி ரிங் ரவுண்ட் இருந்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஐந்து அதிகாரிகள் அவரைச் சுற்றி இருந்திருக்க வேண்டும். ஒரு இன்ஸ்பெக்டரும், நான்கு சப் இன்ஸ்பெக்டர்களும் அவரைச் சுற்றியிருந்திருக்க வேண்டும். எஞ்சியவர்கள், இன்று வருகின்ற தகவல்களிலே அவர்கள் அங்கே சுற்றியிருந்ததாக நமக்குத் தகவல் கிடையாது. ஆனால் அந்த அளவிற்குப் பாதுகாப்பு குறை ஏற்பட்டு இருந்தது என்பதுதான் நம்முடைய குற்றபாடு. உளவு இலாக்கா இந்தத் தவறை எந்தக் காரணத்தைக் கொண்டும் மீண்டும் செய்து விடக்கூடாது என்ற பயம் இருக்கிறது.

ஆகவே, கோட்டையிலே சந்திப்பது பாதுகாப்பானதாக இல்லை என்றால், எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன், இராஜாஜி மண்டபம் இதைவிடக் கொஞ்சம் அதி

கமான பாதுகாப்பு உள்ள இடமாக இருக்கும் என்று பலரும் கருதுகிறார்கள். ஏனென்றால் திடீரென்று பெரிய தாக்குதலாக அவர்கள் நடத்திவிட முடியாது. அவர்கள் செய்வதெல்லாம், இரண்டுபேர், மூன்றுபேர் 4 பேரை அனுப்பி, தற்கொலைப்படையாக அனுப்பி, அவர்களிடத்திலேயே குண்டுகளைக் கொண்டு அல்லது வெடி மருந்தைக் கொண்டுவந்து அவர்கள் தங்களை மாய்த்துக் கொண்டு பிறரை மாய்ப்பதுதான் அவர்களுடைய யுக்தி. அந்த யுக்தியிலே அங்கே வெற்றி காண முடியாது. பலயிடங்களிலே சோதனைப் போட்டு உள்ளே வருகின்ற நேரத்திலே அதிலே வெற்றி காண முடியாது. இங்கே வெற்றி காண்பது அதைவிடக் கொஞ்சம் சுலபம் என்று பாதுகாப்புத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அதிகாரிகளிடத்திலே நான் பேசிக்கொண்டிருந்த நேரத்திலே என்னிடத்திலே கருத்து தெரிவித்தார்கள். அந்த கருத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் சந்திப்பதிலே நிச்சயமாக நாங்கள் தடையாக இருக்க மாட்டோம், தடையாக இருக்கக் கூடாது, நீங்கள் சந்திக்கவேண்டும்.

ஏனென்றால், நானே இதே அவையிலேயே பேசியிருக்கிறேன். எம்.எல்.ஏ-ககளைச் சந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எம். எல். ஏ-க்களைச் சந்திக்கிறீர்கள். கட்சிக்காரர்களை சந்திக்கிறீர்கள்; பொதுமக்களைச் சந்திக்கிறீர்கள்; ம்ற்ற எத். எல். ஏக்களைச் சந்திக்க இருக்கிறீர்கள் என்பதிலே எனக்கு உள்ளபடியே ம்கிழ்ச்சி. சந்திக்க வேண்டும்.

ஆனால், சந்திக்கும்பொழுது பாதுகாப்புக்கு எந்தவிதமான பங்கமும் வந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை உங்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2,3 நாட்களாக நடந்து வருகின்ற சம்பவங்களைப் பார்க்கின்றபொழுது உள்ளபடியே நாம் இன்னும் கொஞ்சம் அதிக அக்கறையோடு இருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒரு காவல் துறையைச் சேர்ந்தவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் கும்மிடிப்பூண்டியிலே இருந்த அகதிகள் முகாமைக் கண்காணித்து வந்தவர். அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பது உள்பட உளவு சொல்ல வேண்டிய கடமையிலே இருந்தவர். கடமை தவறாத அதிகாரி அவர் என்று சொல்கிறார்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேற்கொண்டு விவாதம் வேண்டாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அவ்வளவுதான். இந்த ஒரேயொரு விஷயம்தான். இது சம்பந்தமாகத்தான். வேறே ஒன்றும் புதிதாக எதுவும் இல்லை.

எனவே, அவர் இன்றையதினம் கொல்லப்பட்டிருக்கிறார். அதேபோல இரண்டு நாட்களுக்கு முன்னாலே செங்கல்பட்டிலே பலத்த வதந்தி நிலவியிருக்கிறது. சிறைக்கூடம் தகர்க்கப்பட இருப்பதாகவும், வதந்தி நிலவி, சுற்றிலும் இருந்த பள்ளிக்கூடங்களெல்லாம் விடுமுறை விடப்பட்டன. இந்த அளவிற்கு தமிழகத்திலே தொடர்ந்து வதந்திகள்—வதந்திகளாக அவை இருந்துவிட்டால் நாம் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் அவைகள் வெறும் வதந்திகளாக இல்லாமல் அவர்கள் வேறு எதையும் செய்து விடக் கூடாது.

இராஜீவ் காந்தி கொலை வழக்கிலே என்ன நடைபெறப் போகிறது? The Killars will be killed ஆனால் நம்முடைய தலைவர், நம்முடைய ஒப்பற்ற தலைவர், நம்முடைய பாசமிகு தலைவர் இன்றைக்கு நம்மிடத்திலே இல்லை.

அதேபோன்ற தவறு இங்கே நேர்ந்து விடக்கூடாது என்பதுதான் எங்களுக்கு இருக்கின்ற அக்கறை. எனவே, போதிய பாதுகாப்புகள் நிச்சயமாகத் தர வேண்டும்.

அதேபோல, இந்த அளவிற்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற அந்தத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதிலே இன்னும் காலதாமதம் இருக்கக் கூடாது. உடனடியாகத் தடை செய்ய வேண்டுமென்று உங்களோடு சேர்ந்து மத்திய சர்க்காருக்கு. மத்திய அரசுக்கு நாங்களும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இன்றையதினம் காலையிலே வந்திருக்கிற செய்தி, நல்லச் செய்தியாக வந்திருக்கிறது. விரைவிலே முடிவெடுப்பார்கள் என்று திடமாக நம்புகிறேன். மற்றபடி நம்முடைய உறவுக்கு எந்தவிதமான பங்கமும் வராது; வரக்கூடாது என்பதிலே நாங்கள் உறுதியாக இருப்போம். இந்தத் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும், நிச்சயமாக இந்த உறவுகள் பயனுள்ளதாக இருக்கும்; இதிலே எந்தவிதமான பங்கமும் வரக்கூடாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போற்றுதற்குரிய நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மிகத் தெளிவாக துல்லியமாக, தனக்கு இருக்கிற அறைகூவலாக இருக்கிற L. T. T. E. Menace பற்றியும், அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் பற்றியும் மிகப் பொறுப்புணர்ச்சியோடு இங்கே விளக்கினார்கள். அதோடு இனி ஒரு மிக மிக முக்கியமான பிரச்சினை, தோழமைக் கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற ஒரு பொறுப்பிலே இருக்கிற சாதாரண உறுப்பினர் அல்ல; உங்களுடைய மாநிலப் பொறுப்பிலே இருக்கிற ஒருவர், ஒரு இரண்டு மாத காலமாக Scurrilous writing என்ற வகையிலே, எழுதிக் கொண்டிருப்பதை, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், மிகத் தெளிவாக, திட்டவட்டமாக அவருடைய நிலையை இங்கே விளக்க வேண்டும். ஏனென்றால், இது ஏதோ ஒரு தனி நபர் பிரச்சினை அல்ல. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், காங்கிரஸுக்கும் இருக்கிற ஒரு உயிர்ப் பிரச்சினையாகும். அதுமட்டுமல்ல: இரண்டு மாத காலமாக அந்தப் பத்திரிகையிலே வெளியிட்டு வருகிற அந்தப் பத்திரிகைச் செய்திகளை, எப்படி மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்கள் பொறுத்துக்கொண்டார்கள் என்பதுதான் எங்களைப் போன்றவர்களுக்கு இருக்கிற ஆதங்கம். தயவுசெய்து நீங்கள் அவருடைய பாதுகாப்பு பற்றி, பேசுவதை விட, அவருடைய நல்லப் பெயருக்கு களங்கத்தை உங்கள் இயக்கத்திலே இருக்கிற புல்லுருவிகள் செய்கிறார்களே, அதற்கு என்ன பதில் என்பதனை மாண்புமிகு, கண்ணியத்திற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிகாரப்பூர்வமாக இங்கே விளக்கவேண்டும். ஏனென்றால், கண்ணாடி வீட்டிற்குள் இருந்து நீங்கள் கல்லை எறியாதீர்கள்; திரும்பி எறிந்தால் அந்தக் கண்ணாடி வீடு தாங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் கேட்டிருக்கிறார். அவர் சொல்லட்டும். அடுத்து உங்களுக்கு வரும். எதிர்க் கட்சித் தலைவர்.



திரு. எஸ். ஆர் பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக என்னிடத்திலே கேட்டிருக்கலாம். நேரடியாகவே நான் சொல்கிறேன். நிச்சயமாக அதுபோன்ற செயல்களுக்கு எங்களுடைய ஆதரவு இருக்காது. இதை என்னுடைய கவனத்திற்கும் என்னுடைய நண்பர்கள், கடந்த 3, 4 தினங்களுக்கு முன்னால் கொண்டு வந்தார்கள். நீங்கள் யாரைப்பற்றி குறிப்பிடுகிறீர்களோ, அவரிடத்தில் நான் பேசியிருக்கிறேன். தனிப்பட்ட முறையிலே, நான் அவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தையும் படிக்கவில்லை என்றாலும், என்னுடைய மிக நெருங்கிய நண்பர்கள், காங்கிரஸ் ஸ்தாபனத்தில் முக்கியமான இடத்திலே இருப்பவர்கள் எல்லாம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, நான் அவரிடத்திலே பேச வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது, நான் அவரிடத்திலே பேசினேன். இதுபோன்று தொடர்ந்து எழுதுவது, தொடர்ந்து பேசுவது அவ்வளவு நல்லதல்ல; உடனடியாக நிறுத்துங்கள்; நமக்கும் அவர்களுக்கும் இருக்கிற உறவு ஊரறிந்த உறவு; காங்கிரஸுக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருக்கிற உறவு தொடர்ந்து நீடிக்க வேண்டிய உறவு; தனிப்பட்ட முறையில் யார் மீதும் காழ்ப்பைக் கொட்டுவது, யாருக்கும் நன்மை பயக்காது. எனவே இதுபோன்று எழுதுவதையும், இதுபோன்று மேடைகளிலே பேசுவதையும் நீங்கள் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் அவரிடத்திலே பேசியிருக்கிறேன். நேற்றைய முன்தினம் அவரை நான் சந்திக்க நேர்ந்தாலும், அவரிடத்திலே அதிகமாகப் பேசவில்லை; நான் கலந்துகொண்ட கூட்டத்திலே சில நிமிடங்கள் அவரும் பேசினார். ஆனால் அங்கே எந்தவிதமான வகையிலும் தவறுதலாக அவர் பேசவில்லை. இனிமேல், அதுபோன்று பேசாமல் இருப்பதற்கு என்னால் இயன்ற நடவடிக்கைகளை நிச்சயமாக நான் மேற்கொள்வேன் என்று உறுதியளிக்கிறேன்.

திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை; இந்தப் பிரச்சினையில் வேண்டாம். இந்தப் பிரச்சினையில் எதிர்க் கட்சி தலைவர் பேசிவிட்டார்.

திரு. பெ. பொன்னுசாமி : ஒரே ஒரு பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தர்மபுரி பிரச்சினை இருந்தால் சொல்லுங்கள்.

திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னுசாமி எழுப்பிய பிரச்சனை; உறுப்பினர் பேசட்டும்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அப்படி எழுதுகிறவர் ஏதோ பாரம்பரியம் மிக்க காங்கிரஸ்காரர் அல்ல **ஏன் அப்புறப் படுத்தக்கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. எங்களுடைய கட்சியில் நாங்கள் தவறு செய்தால், இங்கே மந்திரியாக இருக்கிற மதுசூதனன் இந்தத் தவறு செய்வாரேயானால் போகிற வழியிலே கொடியும் இருக்காது; வண்டியும் இருக்காது; கட்சியிலே பொறுப்பும் இருக்காது. அப்படிக் கண்டிக்கிற, கண்டிப்புள்ள, 'ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்ற தத்துவத் தலைவிதான் எங்களுடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி. ** நீங்கள் ஏன் நடவடிக்கை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **என்ற சொற்றொடர்கஸ் எல்லாம் நீக்கப்படுகின்றன. அவை வேண்டாம்.

முற்பகல் 11-35

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே இருக்கிற சூழ்நிலைகளை மிகத் தெளிவாகவும், திட்பமாகவும்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





ஏற்பட்டு இருக்கின்ற மன உணர்ச்சியின் அடிப்படையிலே பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அதற்கேற்ற முறையில் பொறுப்புவாய்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூறிய கருத்துக்களையெல்லாம் ஏற்று, அவற்றை நியாயம் என்று உணர்ந்து, அவற்றிற்கான தக்க நடவடிக்கைகளை தாம் எடுத்துக்கொண்டு வருவதாகச் சொல்லி, காங்கிரஸூக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருக்கிற உறவு நீடிக்க வேண்டுமென்ற தன்மையையும் எடுத்துச் சொல்லியுள்ளார். பொறுப்பு வாய்ந்த முதல்வர் அவர்கள் சொல்லியதற்குப் பிறகும், பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் அதற்குரிய பதிலைச் சொல்லி முடித்து விட்டதன் காரணமாகவும், இந்தப் பிரச்சினையை இத்தோடு நிறுத்திவிடுவதுதான் நல்லதே தவிர, ஆளுக்காள், ஒவ்வொருவருடைய உணர்ச்சியும் இங்கே வருமானால், இது எங்கெங்கோ கொண்டுபோய்விடும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லாம் அரசியல் கட்சிப் பிரச்சினை. இதிலே விவாதம் வளர்த்துக் கொண்டிருப்பது நல்லதல்ல. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னது போல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள் (குறுக்கீடு). மேற்கொண்டு இதிலே விவாதம் வேண்டாம். திரு. பெ. பொன்னுசாமி, நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மட்டும் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். இந்தப் பிரச்சினைக்குள்ளே புகவேண்டாம். திரு. பெ. பொன்னுசாமி.

*திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட நபர் யார் என்று எங்களுக்குத் தெரியும். அவர் சென்னையிலே பை-எலக்ஷனிலே தோற்றபிறகு, எங்களுடைய தமிழக காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்கு வருவதே இல்லை. அவர் பொறுப்பிலும் இல்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய பொதுச் செயலாளர் என்ற முறையிலே நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் எங்களிடம் இருக்கின்றவரை அவருக்கு ஒரு பொறுப்பு கொடுத்து வைத்திருந்தோம். இப்போது அவர் பொறுப்பில் இல்லை. இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவருடைய ஆதரவிலே இருந்து கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி இங்கே தெரிவித்ததுபோல அந்த நபர் கட்சியின் பொறுப்பில் இல்லையென்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அவர் கட்சியிலே இருக்கிறார் அல்லவா? இன்றும் கட்சியிலே இருக்கிறார் அல்லவா? இப்படி தோழமைக் கட்சி உறவுக்கே மாசு உண்டு பண்ணிய ஒருவர் மீது உங்கள் கட்சி என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதுதான் எங்கள் கேள்வி. ஏனென்றால், எங்கள் கட்சியில் உள்ள யாரேனும், உங்கள் கட்சி ஆட்சியில் இருக்கின்ற மத்திய அரசையோ, அல்லது உங்கள் கட்சியின் அகில இந்தியத் தலைவராகிய பாரதப் பிரதமர் அவர்களைப் பற்றியோ இப்படி ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தால், தரக் குறைவாகத் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தால், இத்தனை வாரங்கள் அது நடைபெறும்வரை நான் விட்டிருக்க மாட்டேன் (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக இந்நேரம் அந்த நபர் என் கட்சியிலேயே இருந்திருக்க மாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எங்களுடைய கட்டுப்பாட்டினை, சகிப்புத் தன்மையை, பெருந்தன்மையை எங்கள் பலவீனம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதைத்தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடு) இதிலே வேண்டாம். அவர் எங்கள் கட்சிப் பொறுப்பிலே இல்லை என்று சொல்லிவிட்டார். அதற்குப் பிறகு விவாதம் வேண்டாம். எதிர்க்கட்சித் தலைவர் பதில் சொல்லி விட்டார். (குறுக்கீடு) மேற்கொண்டு இதிலே விவாதம் வேண்டாம். உட்காருங்கள்.

## 3. உறுப்பினர். பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலையில் ஏற்பட்ட ஒரு பிரச்சினை பற்றிய தீர்ப்பைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்று காலையில் திரு. இளம்வழுதி நடந்துகொண்ட விதத்தை அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நேரிலே கண்டீர்கள். பேரவை விதி 92 மிகத் தெளிவாக ஒரு குறிப்பை உணர்த்துகிறது. "A member, while speaking, must not use his right of speech for the purpose of abstructing the business of the Assembly" என்று மிகத் தெளிவாக இருக்கிறது. பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற வகையில், பேரவை நடவடிக்கைகளைத் தடுக்கிற வகையில் எந்த ஒரு உறுப்பினரும் தன்னுடைய பேச்சு உரிமையைப் பயன்படுத்திடலாகாது என்பது மிகவும் தெளிவாகத் திட்டவட்டமாக இருக்கிறது.



ஏற்கனவே ஒரு முறை அவர் இந்த அவையிலே இருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார். பேரவை விதி 120 The Spech may direct any member whose conduct is, in his opinion, grossly disorderly to withdraw immediately from the House, and any member so ordered to with draw shall do so forthwith .......... அவ்வாறு பேரவைத் தலைவர் 'டிஸ் ஆர்டர்லி' உறுப்பினரை உடனடியாக வெளியேறச் சொல்கிறபோது, வெளியேறி விடவேண்டும் என்று மிகத் தெளிவாக இருக்கிறது.

" If any member is ordered to withdraw a second time in the same Session, the Speaker may direct the Member to absent himself from the meetings of the Assembly for any period not longer than the remainder of the Session, and the member so, directed shall absent himself accordingly " என்று மிகத் தெளிவாக இருக்கிறது.

முற்பகல் 11–40

இதே உறுப்பினர் ஏற்கனவே இந்தர் கூட்டத் தொடரிலேயே, கடந்த 25-ஆம் தேதியும் இதேபோல வெளியேற்றப்பட்டார் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இப்படி இரண்டாவது முறையும் வெளியேற்றப்படுகிற உறுப்பினரை அந்தப் பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் பேரவைக்கு வரவிடாமல் அவரை வெளியேற்றுகிற உரிமை இந்த 120 ஆவது விதிப்படி பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. 120-வது விதியின்படி இன்றைக்கு இரண்டாவது முறையும் வெளியேற்றப்பட்டிருக்கிற இளம் வழுதி மீண்டும் இந்தப் பேரவைக்கு இந்தக் கூட்டத் தொடர் முடியும் வரை வரலாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதே உறுப்பினரை, ஏதோ வேண்டுமென்று செய்கிறார்கள். எங்களை வெளியேற்றுகிறார்கள் என்று வெளியிலே ஒரு தலைவர் நாளைக்கே எழுதக்கூடும். இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு பெருந்தன்மையாக நடந்துகொண்டிருக்கிறார் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியைப் பேரவைக்கு நான் சுட்டிக்காட்ட வேண்டும். இதே உறுப்பினர் சென்ற ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது இரண்டுமுறை இதேபோல தொடர்ந்து முறைகேடாக நடந்துகொண்ட காரணத்திற்காக வெளியேற்றப்பட்டார். இரண்டுமுறை அவர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டதற்காக, இதே பேரவை விதி 120-ன் கீழ் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் வரலாகாது என்று நான் உத்தரவிட்டிருந்தேன். அது ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானம் நடைபெற்ற அந்தத் தொடர் முடிந்து இந்தத் தொடர் ஆரம்பிக்கிற வரையிலும் இந்தக்

கூட்டத் தொடர் என்பது ஏற்கனவே பேரவைத் தலைவரால் ஒத்தி வைக்கப்பட்டதே தவிர, மேதகு ஆளுநரால் முடித்து வைக்கப்படவில்லை. எனவே இந்தக் கூட்டத் தொடரும் அப்போது நடைபெற்ற தொடருடைய தொடர்ச்சிதான். விதிகளின்படி பார்த்தால் அந்த உறுப்பினர் இந்தக் கூட்டத் தொடருக்கும் வரலாகாது என்பதுதான் நடைமுறை. ஆனால் இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடத்திலே கூப்பிட்டு கருத்துக் கேட்கிறபோது ஒன்றை மிகத் தெளிவாகச் சொன்னார்கள்:

''விதி அப்படியே இருந்தாலும்கூட பெருந்தன்மையாக ஆளுங்கட்சியினர் நாங்கள் நடந்துகொள்ள விரும்புகிறோம். எனவே, உங்களுடைய சிறப்புரிமையைப் பயன்படுத்தி இந்தக் கூட்டத் தொடருக்கு அவர் வரவேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்று அவர்கள்'' என்னிடத்திலே தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு நான் எழுத்துமூலமாக உத்தரவு போட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்த வேண்டுகோளை ஏற்று 'அவர் இந்தக் கூட்டத் தொடருக்கு வரலாம்' என்று நான் அனுமதி அளித்தேன். அவர் வரக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, பேரவைத் தலைவரோ நினைத்திருந்தால், இயற்கையாகவே இந்தக் கூட்டத் தொடருக்கு அவர் வந்திருக்க முடியாது. முதல் நாளிலேயே பட்ஜெட் உரையின்போதே அவர் வந்திருக்கமுடியாது. இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெருந்தன்மை காரணமாக இந்தக் கூட்டத் தொடரில் அவரைக் கலந்துகொள்ள அனுமதித்தோம். அந்தப் பெருந்தன்மைக்கு உரியவர் அவர் இல்லை என்பதை நடைமுறையிலே இன்றைக்குக் காட்டியதால், வெளியேற்றப்பட்டிருக்கிறார். எனவே எஞ்சிய கூட்டத் தொடருக்கும் அவர் வரலாகாது. இந்தப் பேரவை வளாகத்திற்குள்ளும் நுழையலாகாது என்பதை என்னுடைய உத்தரவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள்.

திரு. கே. சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். உறுப்பினர் திரு. கே. சிங்காரம் இருக்கையில் இல்லை.





### உதகமண்டலத்திலுள்ள இயங்கும் மண் ஆய்வுக் கூடத்தை வேறு மாவட்டத்திற்கு மாற்றுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. எச். எம். ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''உதகமண்டலத்திலுள்ள இயங்கும் மண் ஆய்வுக் கூடத்தை வேறு மாவட்டத்திற்கு மாற்றுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை.

மத்திய அரசு 10—2—1986 ஆம் நாளிட்டு, மாநில அரசுக்கு எழுதிய கடிதத்தில் மண் ஆய்வு வசதிகள் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும், வழங்கப்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கியிருந்தது. மேலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டங்களிலும் மண் ஆய்வுக் கூடங்கள் உடனே ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து 15—10—1986 அன்று வேளாண்மைத் துறை ஆணையர் மற்றும் செயலர், உதகமண்டலத்திலுள்ள தோட்டக்கலை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் பணியிடங்களை குறித்து ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள். அதில் எடுக்கப்பட்ட பல முடிவுகளில் ஒன்றில் உதகமண்டலத்தில் இயங்கும் மண் ஆய்வுக் கூடத்தை அதற்குரிய பணியிடங்களோடு வேறு மாவட்டத்திற்கு வேளாண் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்றி விடலாமென முடிவெடுக்கப்பட்டது. அம்முடிவின்படி வேளாண்மை இயக்குநர் தனது 28—4—1987 நாளிட்ட கடிதத்தில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் இது போன்ற மண் ஆய்வுக் கூடம் எதுவும் இல்லாத காரணத்தினாலும், அம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் பயிர் சாகுபடியை கருத்திற்கொண்டும், அதன் தேவை அதிகமாக இருப்பதாகக் கருதியதால் உதகமண்டலத்தில் இயங்கும் நடமாடும் மண் ஆய்வுக் கூடத்தை அதன் பணியிடங்களோடு, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள பாளையங்

கோட்டைக்கு மாற்றிவிடுமாறு செயற்குறிப்பு அனுப்பியிருந்தார். இதற்கு தோட்டக்கலை இயக்குநர் தனது 17—8—1989 நாளிட்ட கடிதத்தில் இணக்கம் தெரிவித்திருந்தார். இதைப்பற்றி குறிப்பிடும்போது வேளாண்மை இயக்குநர், திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் தற்போது மண் ஆய்வுக் கூடங்கள் எதுவும் இல்லை என்றும், இம்மாவட்டத்தின் தேவைகளை வ. உ. சிதம்பரனார் மாவட்டத்தில் கோவில்பட்டியில் அமைந்திருக்கும் மண் ஆய்வுக் கூடமே ஈடு செய்து வருகிறது எனவும், கோவில்பட்டி நெல்லையிலிருந்து சுமார் 62 கி. மீ. தூரத்திற்கு அப்பால் அமைந்திருப்பதாலும், நெல்லை மாவட்டத்தில், நெல், தாமிரபரணி பாசனத்தில் வருடத்திற்கு இருமுறை சாகுபடி செய்யப்படுவதாலும், அம்மாவட்டத்தில் அமைந்துள்ள பாளையங்கோட்டை, நாங்குனேரி, ராதாபுரம், அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி, தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டங்களில் வாழை, மிளகாய், நிலக்கடலை, பருத்தி, கேழ்வரகு சோளம், சூரியகாந்தி, கரும்பு போன்ற பயிர்கள் அதிகமாகப் பயிரானதாலும், இம்மாவட்டத்திற்கென்று செம்மண் மற்றும் கரிசல் மண் இவற்றின் தன்மைகளை ஆராய்ந்து கொடுக்க ஒரு மண் ஆய்வுக்கூடம் தேவையென்று கூறியிருந்தார். இதற்கிடையில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. கே. ஆர். ராஜூ அவர்கள், உதகமண்டலத்தில் அமைந்துள்ள நடமாடும் மண் ஆய்வுக் கூடத்தை வேறு எந்த மாவட்டத்திற்கும் மாற்றும் செயற்குறிப்பினை கைவிடுமாறு தனது 1—11—1991 நாளிட்ட கடிதத்தில் மாண்புமிகு முதல் அமைச்சரைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க, 2—12—1991 நாளிட்ட அரசுக் கடிதத்தில் வேளாண்மை இயக்குநர் மண் ஆய்வுக் கூடங்களை ஒரு மாவட்டத்திலிருந்து வேறொரு மாவட்டத்திற்கு மாற்றுதலுக்குப் பதிலாக எந்தெந்த மாவட்டங்களில் அவை இல்லையோ அவற்றில் புதிய மண் ஆய்வுக் கூடங்களைத் திறப்பதற்கு பகுதி II திட்டத்தின் கீழ் செயற் குறிப்பினை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். இச் செயற்குறிப்பினை 1993-94 பகுதி II திட்டத்தின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில், உதகமண்டலத்திலுள்ள நடமாடும் மண் ஆய்வுக் கூடத்தை வேறு எந்த மாவட்டத்திற்கும் மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எச்.எம். ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. ஆர் அவர்கள் ஆட்சியிலேதான் நமது நீலகிரி மாவட்டத்தில் 'இயங்கும் மண் ஆய்வுக் கூடம்' ஒன்று ஏற்படுத்தப்பட்டு எல்லா கிராமங்களுக்கும் சிறந்த வகையில் சேவை செய்யும்



இந்த மொபைல் சாயில் டெஸ்டிங் லெபாரட்டரியை வேறு மாவட்டத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் இனிய செய்திக்கு எங்கள் மாவட்ட மக்கள் சார்பாக எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நமது நீலகிரி மாவட்டத்தில் தற்போது விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உருளைக்கிழங்குக்குப் பதிலாக தேயிலை நாற்று நட்டுக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் மேற்படி இயங்கும் மண் ஆய்வுக் கூடத்திற்கு மேலும் தரமான நவீன உபகரணங்கள் கொடுத்து, இன்னும் சிறப்பானவகையில் ஆய்வு செய்வதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பதை நமது மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கைத்தறி— துணி நூல் துறை அமைச்சர் வேளாண்மைத்துறை அமைச்சருக்கு இடையூறு செய்யலாகாது.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜூ அவர்களுடைய கோரிக்கையை தமிழகத்தின் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண். 13 நீதி நிருவாகம்.

### (ஆ) கோரிக்கை எண். 14 சிறைச் சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 13 நீதி நிருவாகம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 13ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 40,81,84,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 1053-திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதி செந்துறையில் ஒருநீதிமன்றம் அமைப்பதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 40,81,84,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1049-டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 40,81,84,000-ல் 100 குறைக்க வேண்டும் ''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்க எண் 14—சிறைச்சாலைகள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 21,77,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 1108- திரு எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,77,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 1109- டாக்டர் தே. குமாரதாஸ்.



டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''சிறைச் சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 21,77,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கை மற்றும் சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழ் விளக்கக் குறிப்புகளை நான் இந்த மாமன்றத்தில் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் ஏற்றிக் கொள்ள வேண்டுகிறேன். @ மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லும் ஆலோசனைகளின் அடிப்படையில் என்னுடைய பதில் உரையை இறுதியில் இந்த அவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் 11.49 ஆகி இருக்கிறது. நேரத்தின் அருமை கருதி முதலில் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ் தன்னுடைய உரையை 10 நிமிடத்திலும், ஏனைய உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் முடித்துக்கொள்ள முயற்சிக்க 7 நிமிடங்களிலும் கேட்டுக்கொள்கிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். இந்த மானியக் கோரிக்கைகளைப் பொதுவாக நான் வரவேற்றாலும் முதன் முதலாக ஒரு குறையை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். That is in the Policy Note under the heading 'charged' — — அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது, HighCourt Judges and Registrar, establishment consisting of the Original and Appellate Sides, Translation and Printing Department, the Law Reporters and Establishments th Assistant Registrars, Pondicherry and Establishment relating to extension of Jurisdiction to Pondicherry the Sheriff of Madras and Staff. The Official Assignee and his Establishment.

---

@375—453 ஆம் பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

53-53—14

முற்பகல் 11-50

ஆனால் நம்முடைய Constitution of India-ல் சொல்லப்படுகிறது. i. e. Article 202, (3) (d) & (e) " ....202 (3) (d): expenditure in respect of the salaties and allowances of Jnoges of any High Court; (e) uny sums request to satisfy any Judgement, decree or award of any Court or arbitral tribunal" இவ்வளவுதான் 'சார்ஜ்டு' என்று கூறப்படுகிறது. எனவே இந்தப் பாலிசி நோட்டில் உள்ளது சரியானதல்ல. அதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமன்று உங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அமைச்சரவர்களின் பதிலுரையில் அதை எதிர்பார்க்கிறேன். அதைப்போன்று ஆர்ட்டிகிள் 211 என்ன சொல்கிறதென்றால், " 211, No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties...." இவை தவிர, அவர்களைப் பற்றிப் பேசக்கூடாது என்று சொல்லவில்லை. என்ன சொல்கிறேன் என்றால், எத்தனையோ கேஸ்கள், ஆயிரக்கணக்கான கேஸ்கள் ஹைகோர்ட்டிலே தேங்கிக் கிடக்கின்றன. ஆனால் ஒரு முதலமைச்சர் 8 நாட்கள் கையெழுத்து போடவில்லை என்று கேவலமாகச் சொல்கிற நீதிபதிகள் பற்றி சொல்லக் கூடாதா? தனிப்பட்ட வாழ்க்கையில் நீதிபதிகள் பிராசிகியூஷன் செய்யப்பட்டதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னாள் நீதிபதி ஒருவரை 1948-லே 304 ஏ-ன் கீழ் பிராசிகியூஷன் செய்திருக்கிறார்கள். அந்தக் கேசிலே பின்னால் அக்குவிட் ஆகியிருக்கிறது. அந்த அளவுக்கு அதிகாரம் இருக்கிறது. அவர்களுடைய 'டிஸ்சார்ஜ் ஆஃப் டியூடிஸ்' பற்றிக் கேட்க அதிகாரமில்லை. அவர்களுடைய சம்பளம் போன்றவற்றை சட்டமன்றம் வழியாகக் கொடுக்கும்போது எல்லாவற்றையும் பற்றிப் பேச உரிமையுண்டு. நம்முடைய நீதிமன்றத்திலே இருக்கிற ஒரு டிஸ்டிரிக்ட் முன்சீப்பைக் கூட லா செக்கரட்டரியோ, அமைச்சரோ மாற்றுவதற்கு அதிகாரமில்லை. எல்லா அதிகாரத்தையும் ஹைக்கோர்ட்டிலே வைத்திருக்கிறார்கள். நாம் 'ஒன்லி ரெக்கமன்டிங் அத்தாரிட்டி'. இங்கே மானியங்களை விவாதித்து, நிதியை வழங்குவோம். அது தவிர ஒரு ஜட்ஜையோ ஒரு முன்சீப்பையோ, ஒரு சப்-ஜட்ஜையோ மாற்ற நமக்கு அதிகாரம் கிடையாது. அந்த அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்குத்தான் உண்டு. ஆனால் முதலமைச்சர் அவர்கள் கையெழுத்துப் போடவில்லை என்று கிரிட்டிசைஸ் பண்ணி, விட்டுவிடுகிறார்கள். அதற்கு ஸ்பெஷல் லீவ் பெட்டிஷனுக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்களைப் பற்றி விவாதிக்கிற அதிகாரம் நமக்கு உண்டு



அது இருக்கிறது. இல்லாமல் இல்லை. ஆனால் விவாதிக்கப்படுவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று 'சார்ஜ்டு' என்பது புட்-நோட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே வெட்டுத் தீர்மானம் கொடுக்க முடியாது. 'சார்ஜ்டு' என்று சொல்லுகிற ஐட்டத்திற்கு There is no Cut Motion. You canot give any cut Motion. அதைத் தெளிவாக டிமான்டில் சொல்லவில்லை. 60, 62-லே புட்-நோட்டிலே இருக்கிறது. 'No Cut Motions against the Charge! items' உயர்நீதி மன்றத்தின் நீதிபதியின் சம்பளத்தைக் குறைக்க, கூட்ட கட் மோஷன் கொடுக்கக் கூடாது என்று இருக்கிறது. அடுத்து வரும் ஆண்டுகளில் அப்படித் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஸ்பீடி டிஸ்பொசல் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு ஆயிரக்கணக்கான கேஸ்கள் தேங்கிக் கிடக்கின்றன. குழித்துறையில் ஆயிரக்கணக்கான கேஸ்கள் இன்னும் நிலுவையில் இருக்கின்றது. கேரள ஹைக்கோர்ட்டிலே ஒரு பெஞ்சு கிளார்க்குக்கு பயித்தியம் பிடித்து, எல்லாவற்றையும் கிழித்து எறிந்துவிட்டார். அதைப் பற்றி ஒரு வக்கீல் சொல்லும்போது, This is also a sort of disposal my Lord என்று சொன்னாராம். எனவே 'டிஸ்பொசல்' என்று சொல்லுகிறார்களே தவிர நியாயம் வழங்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

அடுத்து இன்னொரு பகுதி இருக்கிறது. அதையும் மாற்ற வேண்டும். Second appeal is not allowed in High Court. In concurrent finding செக்ன்ட் அப்பீலை எடுக்க மாட்டோம் என்கிறார்கள். செகன்ட் அப்பீல் Must be heared patiently in the High Court ஹைக்கோர்ட் நீதிபதிகள் கேட்கவேண்டும். கீழேயிருந்து வந்தவைகளை ஸ்பீடி டிஸ்போஸல் பண்ணிவிட்டேன் என்று சொன்னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படி நியாயம் கிடைக்கும்? ஆகவே செகன்ட் அப்பீல் என்று சொன்னாலே ஹைக்கோர்ட்டில் ஒரு யார்டுஸ்டிக் வைத்திருக்கிறார்கள். செகன்ட் அப்பீல் என்று சொன்னால் அது எடுக்கப்படாது என்ற ஒரு கருத்து நிலவிக் கொண்டிருக்கிறது. அது மாற்றப்படவேண்டும். அதற்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று ஆயிரக்கணக்கான கேஸ்களை நீதிபதிகள் நியாயமான முறையில் முடித்தாக வேண்டும். அதேபோல் நீதிவிசாரணை என்று சொல்லும்போது, எந்த நீதிவிசாரணை

போட்டாலும் ஓய்வு பெற்ற ஹைக்கோர்ட் ஜட்ஜை வைத்தே போடுகிறார்கள். அது மேனியாக ஆகிவிட்டது. ஏன் இப்போது பணியில் இருக்கிற நீதிபதியைப் போட்டால் என்ன என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஹைக் கோர்ட்டில் ரிட்டையர் ஆனவர்கள் ஜட்ஜாக இருந்தவர்கள் அந்தக் கோர்ட்டுக்கே போகக் கூடாது என்று சட்டமே இருக்கிறது. ஏதாவது நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடும் என்பதால் அப்படியிருக்கிறது. ஆனால் நம்முடைய எல்லா நீதி விசாரணையையும் பார்த்தால் அப்படி இல்லை. ஆகவே இப்போது பதவியில் இருக்கிற நீதிபதிகளைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதற்கெடுத்தாலும் ரிட்டையர்டு ஹைகோர்ட் ஜட்ஜைப் போடுவது என்பதை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

பல இடங்களில் பப்ளிக் பிராசிக்கியூட்டர் மற்றும் கவர்ன்மெண்ட் பிளிடர்களை நியமிக்கவில்லை. இப்படிப் பல இடங்கள் இருக்கின்றன. அவர்களை விரைவில் நியமிக்க வேண்டும். தற்போது பப்ளிக் பிராசிக்கியூட்டர்களின் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களின் தரங்களை உயர்த்த வேண்டும். அரசியலில் இருப்பவர்களைப் போடக்கூடாது என்று சொல்ல வரவில்லை. முன் காலங்களில் எல்லாம் நான் பிராக்டீஸ் செய்துகொண்டிருந்த காலத்தில் எங்கள் ஜில்லாவில் சொல்வார்கள், அரசியலுக்கு அப்பாற்பட்ட ஆட்களைத்தான் இந்தமாதிரிப் பதவிகளுக்கு கேரளாவில் அப்போது இருந்த அரசாங்கம் போட்டது என்று. என்னுடைய போற்றுதலுக்குரிய சீனியர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தக் காலத்திலே எம். எல். ஏ. வாக இருந்த காலத்திலே, அங்கேயிருந்து யார் திறமையான வழக்கறிஞர் என்று கேட்பார்களாம். அப்போது நாகர் கோவிலில் வெங்கடேச ஐயர் இருந்தார். அவர்தான் திறமையான வழக்கறிஞர் என்று சொன்னார்களாம், உடனே லா டிபார்ட்மென்டிலே இருந்த அதிகாரி ஒருவரை அந்த செயலாளர் அனுப்பி. வெங்கடேச ஐயரை அழைத்து வரச் செய்து நீங்கள் ஜி. பி. பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்களாம். எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கிறது, ஆகவே, முடியாது என்றாராம், கட்டாயம் நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லி, அந்த வெங்கடேச ஐயரை ஜி. பி. யாக இருக்கவேண்டுமென்று போட்டார்கள். அந்த அளவுக்கு இப்போதும் இருந்தால் வழக்கறிஞர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும், அவர்கள் தவறாகச் சொல்லமாட்டார்கள். வெங்கடேச ஐயரை ஜட்ஜே ஆலோசனைக் கேட்பார். அவர்களே ஏதாவது பாயின்டுகளை மறந்துவிட்டால்கூட, இதுதான் பாயின்ட்



என்று சொல்லக்கூடியவர்களாக விளங்கினார்கள். இப்போது என்னுடைய பல நண்பர்கள் ஜி. பி. மற்றும் பப்ளிக் பிராசிக்கியூட்டர்களாக எல்லாம் இருக்கிறார்கள். ஆனால் தரம் மிகவும் குறைந்துபோய்விட்டது. ஆளும் கட்சிக்காரர்களாக இருப்பவர்களைப் போட வேண்டாம் என்று சொல்லவில்லை. திறமையானவர்களைப் போடுங்கள். தரம் இல்லாதவர்களைப் போடுவதால் ஏராளமான கேஸ்கள் தேங்கியிருக்கின்றன. முன்பு அரசாங்க வக்கீல்களாக இருந்தவர்கள் எந்தவித ரிக்கார்டையும் பார்க்காமல் எந்த ஒப்பினியனும் கொடுக்கமாட்டார்கள். இப்போது ஆளை அனுப்புகிறேன் என்றாலும் கூட, ஆளே வேண்டாம், ஒப்பினியன் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த நிலைமைகளை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா ரிக்கார்டுகளையும் கோப்புகளையும் பார்த்துத்தான் ஒப்பினியன் கொடுக்கவேண்டும் என்ற அளவில் அரசாங்க வக்கீல்களின் தரத்தை உயர்த்தி நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நன்றாக அமையும். எனக்குத் தெரியும். ஜி.பி. மற்றும் பி. பி. ஆபிசுகளுக்கு முன்பெல்லாம் எஸ். ஐ. யே கூட போகமுடியாது. இப்போது கான்ஸ்டபிளை அனுப்பி கேசை நடத்துகிறார்கள். அவர்களிடம் கேசைக் கொடுத்து அனுப்புகிறார்கள். மர்டர் கேஸ் போன்றவைகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களை யார் அழைத்துக்கொண்டு வருகிறார்கள் என்றால் கான்ஸ்டபிள்கள்தான். ஒரு காலத்தில் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குக் கீழே உள்ளவர்கள் அரசாங்க வக்கீலைப் பார்க்க முடியாது. இப்போது கான்ஸ்டபிளை வைத்து கேஸ் கட்டை அனுப்பும் பழக்கம் இருக்கிறது. இவைகளை எல்லாம் மாற்றி, தரமான ஆட்களை பப்ளிக் பிராசிகியூட்டர்களாகப் போடவேண்டும். அப்படிப் போடும்போதுகூட நல்லவர்களைப் பார்த்துப் போட வேண்டும்.

இலவச சட்ட உதவிக்காக வருடத்திற்கு 72,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் அலவன்ஸ், கோர்ட் செலவு எல்லாம் பார்த்துக் கொள்ளவேண்டும், நிச்சயமாக அந்தப் பணத்தை உயர்த்த வேண்டும். இன்னொரு மிக முக்கியமான பிரச்சினை. இப்போது டெல்லியில் நடக்கும் வர்மா கமிஷன் விசாரணைக்கு இங்கேயிருந்து அட்வகேட் ஜெனரல் போகிறார். அவருக்கு ஒரு நாளைக்கு ஆஜராவதற்கு அரசாங்கம் ரூ. 30,000 கொடுக்கிறது என்றால் 30 நாளைக்கு சிட்டிங் இருக்கிறது என்றால் மக்கள் வரிப்பணத்திலிருந்து ஏறத்தாழ 1 கோடி ரூபாய் பீஸ் கொடுக்க வேண்டி வருகிறது. இது நியாயமாக இருக்காது. அதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதை எதிர்த்துக் கூட ஒருவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். அதற்குக் கூட என்ன பதில்

வந்திருக்கிறது என்று சொன்னால் 'Government is a celint They are Paying' உங்களுக்கு என்ன என்று வந்திருக்கிறது, ஒரு அட்வகேட் ஜெனரலுக்கு ஸ்டேட் கவர்மென்ட் கிளையன்டாக இருக்கிறார்கள், அவர்கள் பணம் கொடுக்கிறார்கள், உங்களுக்கு என்ன என்று கேட்கிற அளவிற்கு வந்திருக்கிறது. ஆகவே முப்பது ஆயிரம் ரூபாய் ஒரு அட்வகேட் ஜெனரலுக்கு ஒரு நாள் சிட்டிங்குக்கு டில்லியிலே கொடுப்பது என்றால் சரியாக இருக்காது. நிச்சயமாக அதைக் குறைக்க வேண்டும். முப்பதாயிரம் ரூபாய் ஒரு நாளைக்கு என்றால்—24 மணி நேரத்திற்கு முப்பதாயிரம் ரூபாய் என்று சொல்லுவது நம்முடைய நாட்டுக்கு ஏற்றதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக முப்பதாயிரம் ரூபாய் கொடுப்பது தவறு. அதைக் குறைத்துக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் வெளி மாநிலத்தில் கூட பெரிய அட்வகேட்டுகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அளவிற்கு முப்பதாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிச்சயமாக அதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12—00

லா கமிஷனை நியமிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். வரவேற்கக் கூடிய காரியம்தான். ஆனால் நல்ல ஜூரிஸ்ட்டை போட்டு நடத்த வேண்டும். அதிலும் ரிட்டையர்ட் ஐகோர்ட் ஜட்ஜைப் போட நினைக்காதீர்கள். எதற்கெடுத்தாலும் நீங்கள் ரிட்டையர்ட் ஜட்ஜைப் போடுகிறீர்கள். எவ்வளவோ படித்த 55 வயதுக்குள்ளவர்கள் இருக்கிறார்கள். ரிட்டையர் ஆனவர்களைப் போடாதீர்கள். இப்போது எவ்வளவோ திறமையான வழக்கறிஞர்கள் நாட்டிலே இருக்கிறார்கள் வேலை இல்லாமல். அவர்களைப் போடலாம். தவிர எதற்கெடுத்தாலும் ரிட்டையர்ட் ஐகோர்ட் ஜட்ஜ் என்றால், 62 வயதுக்குப் பிறகும் அவர்களை வீட்டிலே உட்கார விடமாட்டேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்? 62 வயதிற்குள்ளே வழக்கறிஞர்கள் இல்லையா? ஆயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் நல்ல முறையில், சிறப்பாக வேலையைச் செய்வார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல ஜட்ஜஸ் கோட் ஆஃப் கான்டக்ட் என்று இருக்கிறது. ஐகோர்ட் ஜட்.ஜஸ், டிஸ்டிரிக்ட் கோர்ட் ஜட்ஜஸ் எல்லாம் எங்கேயெல்லாம் செல்ல வேண்டும் என்று இருக்கிறது. இதையெல்லாம் பார்க்க வேண்டும். ஐகோர்ட் ஜட்ஜஸ், டிஸ்ட்ரிக்ட் கோர்ட் ஜட்ஜஸ் என்று பெரிய பதவிகளை வகிப்பவர்கள் மக்களோடு தொடர்பு வைக்கக்கூடாது.



அரசியல்வாதிகளைப் போல் அல்ல. தொடர்பு வைத்துக் கொள்ளாதவர்கள்தான் நல்ல ஜட்ஜஸ் என்று சொல்வார்கள். ஆனால் அவர்கள் நமக்கு முன்னாலே நிற்கிறார்கள். ** நிச்சயமாகத் திறக்க வேண்டும். அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அதாவது கோட் ஆஃப் காண்டக்ட் அதன்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்வது வரைக்கும் சரி. அதற்குப் பிறகு அவர்கள் ** என்று சொல்லுகிறீர்கள். எனவே அப்படி வருவது சரியல்ல.

<u>திரு. மா. சுந்தரதாஸ்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனாலேதான் முதலிலேயே நான் கான்ஸ்டிடியூஷனைப் படித்துக் காட்டினேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இப்போது நீங்கள் சொல்லியது ** அப்படிப் போகிறார்களா, இல்லையா என்பது வேறு. அப்படிப் போகக்கூடாது என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.

<u>திரு. மா. சுந்தரதாஸ்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையும் அழைக்கிறார்கள். நாங்களும் போகிறோம். அவர்களையும் வைத்துக்கொண்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் போக வேண்டாம் என்று சொல்லவில்லை. அதனாலேதான் நான் ஏற்கனவே சொன்னேன், கான்ஸ்டிடியூஷனில் கிளியராக இருக்கிறது. அவர்களை கொஸ்டியன் செய்வது என்றால் the Constitution clearly states that, i. e. with regard to their discharge of duties alone. அதைத்தான் நான் சொன்னேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீங்கள் ** என்று சொல்லுகிறபோது, அவர்களுடைய செயல்களைப் பற்றி விமர்சனம் செய்வதாக ஆகிறது. அப்படிப் போகக் கூடாது என்று வேண்டுமானால் நீங்கள் சொல்லுங்கள், ** என்று சொல்லுவது ஒரு குற்றச் சாட்டு போல வரும்,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே,

Article 211—Restriction of discussion in the Legislature :

"No discussion shall take place in the Legislature of State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நான் சொல்லுகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : 'in the discharge of duties', That is the point, 'Their discharge of duties alone' and not all the matters ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கான்டக்ட் ஆஃப் ஜட்ஜஸ் என்று வருகிறபோது ** என்பது குற்றச் சாட்டு போல வரும்.

திரு. மா. சுந்தரதாஸ் : Discharges of their duties alone.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Dischurge of duties என்று சொல்லும்போது அவர்களுடைய கடமையை மீறிச் செல்லுகிறார்கள் என்பது போல குற்றச்சாட்டு இருக்கக்கூடாது. போகக் கூடாது என்று வேண்டுமானால் அவைக் குறிப்பிலே வைத்துக்கொள்வோம்.

திரு. மா. சுந்தரதாஸ் : நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். In 'Veerasamy Case,' C.B.I. enquiry உச்சநீதிமன்றம் சொன்னது— 'The C.B.I. can prosecute him'. The Supreme Court said that he can be prosecuted by C.B.I. Officers, தவறுதலாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டாகச் சொல்லாமல் அறிவுரையாகக் கூறலாம்.

திரு. மா, சுந்தரதாஸ் : குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. There is a clear finding by the Supreme Court. In Veerasamy case, the Supreme Court upheld that the C.B.I. can prosecute him, நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அளவிலே இருக்கலாம். சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது என்ற அளவிலே இருக்கலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. மா. சுந்தரதாஸ் : லோயர் கோர்ட்ஸ் நடப்பதைப் பார்த்தால், நான் வழக்கறிஞராகப் பணியாற்றுகிறவன். கேஸ் கட்டு எடுத்துக் கொண்டு செல்பவன், எம். எல். ஜே., ஆல் இந்தியா லேபர் லா ஜர்னல் ஆகியவற்றை வாங்கி வைத்தாலும் அவர்கள் படிப்பதில்லை. நான்கூடக் கேட்டேன். ஏன் அப்படி அடுக்கி வைத்திருக்கிறீர்கள், நான் இவ்வளவு சிரமப்பட்டு வந்தாலும் 2 மணிக்குப் பிறகும் படிக்கிறேனே. நீங்கள் ஏன் படிப்பதில்லை என்று கேட்டால், எங்களுக்கு அதெல்லாம் தேவையில்லை. 'The present practice is different from that of your practice' They say. நான் பிராக்டிஸ் முடிக்கவில்லை. நான் பிராக்டிஸ் செய்துகொண்டுதான் இருக்கிறேன். இதெல்லாம் படிக்கத் தேவையில்லை. இந்த ரூலிங்ஸ் எல்லாம் படித்து டிசிஷன் வாங்குவதில்லை. எல்லாம் வேஸ்ட் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவிற்கு The quality of judges comes down. குவாலிட்டியை கூட்டும் அளவிற்கு அருகதையை வளர்க்க வேண்டும். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால் அதை விசாரிக்க நமக்கு அதிகாரம் இல்லை. நம்முடைய சட்டமன்றத்திற்கு அதற்கு அதிகாரம் இல்லை என்ற ஒரு பாங்கினை வைத்து இருக்கிறார்கள். அதனால்தான் அந்த அளவிலே சென்று கொண்டிருக்கிறது. இப்போது நீதிமன்றங்கள் எல்லாம் மிகமிகத் தரம் குறைந்து இருக்கிறது. எந்த அளவிலே பிராசிக்யூஷனிலே தரம் குறைந்து இருக்கிறதோ அந்த அளவிலே நீதிபதிகளினுடைய தரம் குறைந்து இருக்கிறது. அதைக் கூட்ட வேண்டும். நீதிமன்றம் சரியாக இருந்தால்தான் நாடு நன்றாக இருக்கும். எவர் தவறு செய்தாலும் அங்கே சென்று நாம் நியாயம் கேட்கும் இடம் நீதிமன்றம். ஆனால் எனக்குத் தெரியும் 'Is this sufficient' என்று ஒரு நீதிபதி பிரதம வக்கீலிடம் கேட்டார். 'Is this judgment sufficient. இந்தத் தீர்ப்பு போதுமா என்று கேட்கின்ற அளவிலே நீதிபதிகள் வரக்கூடாது; அந்த அரசாங்க வழக்கறிஞர்களும் வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

பிற்பகல் 12.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ், இப்போது நாம் எடுத்துக் கொண்டிருக்கிற மானியக் கோரிக்கையே Administration of the Courts தான். நீங்கள் அதற்குள்ளே போய் பேசுகிறீர்கள். நாம் எடுத்துக் கொண்டிருக்கிற மானியக் கோரிக்கையே Administration of Courts, அந்த அளவிலேதான் நம்முடைய விவாதம் இருக்கவேண்டும். பேசுங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : அதுபோல் வழக்கறிஞர்களுக்கு நிதி உதவி கொடுப்பதற்காக 10 ரூபாய் மூன்று வருடத்திற்கு கட்டச் சொல்கிறார்கள். ஆனால் பல பேர் அந்தப் பணத்தைக் கட்டுவது இல்லை. எனவே, முழுமையாக அந்தத் தொகையை, லம்ப்சம் ஆக 500

ரூபாயோ 1,000 ரூபாயோ வாங்கிவிட்டு, அந்த உதவியை அவர்களுக்குக் கொடுப்பது நன்றாக இருக்குமே தவிர, அவர்கள் அந்த 10 ரூபாயை அடிக்கடி கொடுப்பதற்கு முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே மொத்த மாக அந்தப் பணத்தைக் கட்டுவதற்கு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல நீதிமன்றங்களுக்கு பில்டிங் இல்லாத நிலைமை இருக்கின்றது. பார் கவுன்சிலுக்கும் பில்டிங் இல்லாத நிலை இருக்கிறது. குழித்துறையிலே பார் கவுன்சிலுக்கு பில்டிங் இல்லை. நாங்களாக ரூ. 30 ஆயிரம் முன்பு கொடுத்து இருக்கிறோம். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது இன்னும் ஒரு 50 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் —இப்போது நாங்களே அங்கே 2 இலட்சம் ரூபாயை முடக்கி இருக்கிறோம். கடந்த அரசு, என்னுடைய சப்ளிமெண்டரி கேள்விக்கு இணங்க ரூ. 50 ஆயிரம் கொடுத்தார்கள். இன்றைக்கு குழித்துறை நீதிமன்றத்திலே இருக்கின்ற பார் கவுன்சிலுக்கு பில்டிங் கட்டுவதற்கு இன்னும் ரூ. 50 ஆயிரம், கூடக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் நீதிபதிகள் தங்குவதற்கு வீடு இல்லாமல் தனியார் வீடுகளில் தங்குகிறார்கள். அங்கேயும் பல பிரச்சினைகள் வருகின்றன. ஆகையினால் அதிக நிதி ஒதுக்கி நீதிபதிகளுக்கு வீடுகள் மற்றும் நீதிமன்றக் கட்ட டங்கள் உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் குறிப்பாக என்னுடைய தொகுதி குழித்துறையிலே இருக்கின்ற அடிஷனல் மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலே—அது பெர்மனென்ட் ஆகவில்லை. அதை நிரந்தரப்படுத்துவதற்கு நீதிபதியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தங்கு வதற்கு நல்ல கட்டடங்களைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களிலே இருக்கின்ற பென்ச்—டெஸ்க்குகள் போடப்பட்டு 50 வருடங்கள் கழிந்துவிட்டது. அங்கே உட்காரக்கூட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் எல்லா டிபார்ட்மெண்டுகளுக்கும் பணம் ஒதுக்கிக் கொடுத்து அங்குள்ள பர்னிச்சர்களை ரீபிளெய்ஸ் பண்ணு கிறீர்கள். ஆனால், இந்த நீதிமன்றங்களில் உள்ள பர்னிச்சர்கள்தான்—அவை 50, 60 வருடங்களுக்கு மேற் பட்டவை, மாற்றப்படவில்லை. அங்கே நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் நிற்பதற்கோ, உட்காருவதற்கோ முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகையினால் அந்த பழைய பர்னிச்சர்களை மாற்றி புதிய பர்னிச்சர்களை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, எங்களுடைய மாவட்டத்திலே ஊடூர்விளை இருக்கிறது. ஊடூர்விளை என்றால் கேரளா சட்டத்திலே இருக்கிற ஒரு ரெகுலேஷன். அதனால் 'ஊடூர்' என்றால் அங்கே 10 பேருக்கு 'அபார்ஷன்' என்று சொல்வார்கள். இப்போது ஹைகோர்ட்டிலே நிறைய கேஸ்கள் தேங்கி இருக்கின்றன. That Oodoor Regulation 1,122 has to be repealed அந்த 1,122 ஆக்ட் கேரளா ஆக்ட். நாம் இங்கே கேரளா ஆக்ட்டை எடுத்துக்கொள்கி றோம். அதை ரெப்பீல் பண்ணி, அதற்கு ஒரு புதிய முறையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில் அவை இப்போது ரிஃபார்மேட்டிவ் ஆக இல்லை. சிறைக்குச் சென்று இருக்கின்றவன், அங்கிருந்து விடுப்பிலே வந்தால் கூட அவனுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. நானும் ஜெயிலுக்கு போய் இருக்கிறேன். பொலிடிக்கல் பிரசினராக போய் இருக் கிறேன். அப்போதுகூட அங்கே இருக்கின்றவர்களை பார்த்துக் கேட்டால் (மணி அடிக்கப்பெற்றது) அவர் களைத் திருத்துகின்ற வகையிலே புரடக்ஷன் கொடுத்து அவர்களுடைய மனநிலையைத் திருத்துகின்ற நிலை இல்லை. ஏனென்று சொன்னால் அவனோ டென்ஷனில், 90 சவரன் திருட்டு—மர்டர் கேசில் போன அக்கியூஸ்டு ஏதோ ஒரு தடவை தவறு செய்து இருக்கிறான். அவனைத் திருத்துகின்ற வகையில் டிரெயினிங் கொடுக்கின்ற வகை யில் ஜெயிலில் ஏற்பாடு இல்லை. அங்கே போலீஸ் காரர்களைப் போல்தான் நடந்துகொள்கிறார்கள். அந்த அதிகாரியை, ஐ.ஜி-யைக் கூடச் சொல்லவில்லை. அங்கே கைதிகளினுடைய மன நிலையைத் திருத்துகின்ற வகையில் டிரெயினிங் கொடுத்து அவர்களை நல்ல முறையிலே திருத்த வேண்டும். அதற்கென அங்கே ஒரு கிளாஸ் கிடையாது.

அங்கே சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் மோச மாக இருக்கிறது. பாளையங்கோட்டை சிறையைப் பொறுத்தவரையில் நான் இரண்டு தடவை தி.மு.க. ஆட்சியிலே போய் இருந்தேன். கேஸ் கூட உண்ணா விரதம் இருந்ததற்காக என்னைப் பிடித்துப் போட்டார்கள். அந்த கேஸ் கூட இன்னும் முடிக்கப்படவில்லை. அது ஒரு பக்கத்தில் இருந்தாலும், அங்கே கொடுக்கின்ற ரேஷன் கூட சரியான முறையில் கொடுக்கப்படவில்லை. கன் டேஜியஸ் டிசீஸ் இருக்கின்ற கைதிகளை எல்லாம் தனியான முறையிலே ஒதுக்கி வைக்க வேண்டுமே தவிர, அவர்களையும் சாதாரண கைதிகளோடு அடைத்துப்

போடக்கூடாது. Contagious diseased accused must be Separted from the remaining accused என்ற வகையிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய குழித்துறையிலே இருக்கின்ற சப் ஜெயிலிலே முன்பு கைதி அறையில் உள்ள கம்பிகளை அறுத்துவிட்டு வெளியே வந்தார்கள். அந்த அறையை திருப்பிக் கட்ட வேண்டும். அதற்காக குழித்துறை சப் ஜெயிலுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அந்த ஜெயிலை செப்பனிட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கா. ப. பட்டாபிராமன்.

பிற்பகல் 12-10.

* திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை இந்தப் பேரவையில் அளிப்பதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்தை அடிக்கடி நாட்டு மக்கள் அத்தனைபேரும் பயன்படுத்துகிற ஒரு கருத்தை இந்த மாமன்றத்தில் சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டத்தைப் பற்றி, நீதி நிர்வாகத்தைப் பற்றி பேசுகிறபோது சொன்னார்கள். சட்டம் என்பது ஒரு இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் என்பது ஒரு விளக்கு ; அந்த விளக்கின் ஒளி நாட்டில் இருக்கிற ஏழையெளிய மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது ஒரு நாட்டில் உள்ள குடிமகனுக்கு எந்தவொரு செய்தியும் தெரியாமல் இருக்கலாம். கட்டடக் கலைப் பற்றியோ, மருத்துவத்தைப் பற்றியோ, பொருளாதாரத்தைப் பற்றியோ, அரசியல் பற்றியோ வேண்டுமானால் நாட்டு மக்களுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஒரு நாட்டினுடைய சட்டங்கள் என்ன என்பதைப் பற்றி அந்த நாட்டு மக்கள் அறிந்திருக்க வேண்டும். அதைத் தான் ஆங்கிலத்தில் சொல்வார்கள் Ignorance of Law is no excuse எனக்குச் சட்டம் தெரியவில்லை; ஆகவே, நான் செய்த செயல் தவறு என்று சொல்ல முடியாது என்று யாரும் இந்த நாட்டில் வாதாட முடியாது. அந்த அடிப்படையில் பார்க்கிறபோது சட்டம் என்பது இந்த நாட்டில் இருக்கிற தனி மனிதனுக்கு தெரிந்திருக்க வேண்டிய ஒன்று என்ற அடிப்படையில் உள்ளது. ஜனநாயகம் என்பது 'எக்சிகியூட்டிவ்' 'லெஜிஸ்லேச்சர்' 'ஜூடிஷியரி' என்ற மூன்று கால்களுக்கு மேல் பரப்பப்பட்டிருக்கிற



தளம். அதுதான் ஜனநாயகம் என்ற மாபெரும் தளமாக இருக்கிறது. அதிலே ஒரு கால் தான் நீதி நிர்வாகம் என்ற கால். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது தமிழகத்தில் இன்றையதினம் நீதித் துறையில் எத்தனை எத்தனையோ சீரிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் இன்றைக்கு நீதிபதிகளுக்கும், நீதிமன்றங்களில் வழக்காடுகிற வழக்கறிஞர்களுக்கும் எத்தனை எத்தனையோ குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய சூழ்நிலையில் அரசும் இருக்கிறது. என்பதை எண்ணிப்பார்த்து அந்தக் குறைகளை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

சார்பு நீதிபதிகள், மாவட்ட முன்சீப்புகள் மற்றும் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜஸ், சப்-ஜட்ஜஸ், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் அல்லது மாஜிஸ்ட்ரேட்— இவர்களுடைய ஓய்வுபெறுகிற வயது 58 ஆக இருக்கிறது. ஆனால் உச்சநீதிமன்றத்தில் இந்திய நீதிபதிகள் சங்கம் தொடர்ந்த வழக்கில்—ரிட் எண். 1022/89—உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறது. அந்தத் தீர்ப்பின்படி 58 ஆக இருக்கிற சபார்டினேட் ஜூடிஷியரிக்கு ஓய்வுக்காலம் 60 வயதாக மாற்றப்பட வேண்டுமென்கிற தீர்ப்பை நல்கி இருக்கிறது. இந்தத் தீர்ப்பு நடைமுறைக்கு வர வேண்டுமென்றால் அந்தந்த மாநிலங்கள் நோட்டிபிகேஷனை—அதாவது அரசாணையை வெளியிட்டு அதன் மூலமாக 58 வயதாக இருக்கிற நீதிபதிகளுடைய — சபார்டினேட் ஜூடிஷியரி— கீழமை நீதிபதிகளுடைய ஓய்வுக்கால வயதை 60 ஆக மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது 31—12—1992 வரையில் அந்த நாள் இருந்தாலும், அந்த நாட்களை அதிகமாக நீட்டிக்காமல் உடனடியாக 58 ஆக இருக்கிற ஓய்வுக்காலத்தை 60 வயதாக மாற்ற முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று இந்த அவையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளியாசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், இவர்களுக்கு எல்லாம் ஆண்டாண்டு 15 நாட்கள், 20 நாட்கள், கோடை விடுமுறை தரப்படுகிறது. அந்த பள்ளியாசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் அந்த 15 நாட்கள் விடுமுறை இருந்தாலும் கூட Earned Leeve என்று சொல்கிறார்களே, ஈட்டிய விடுப்பும் அவர்களுக்கு தரப்படுகிறது. ஆனால் அதே விடுமுறைகள் நீதிபதிகளுக்கு இருந்தாலும் நாளெல்லாம் வழக்குகளை விசாரித்து விட்டு, இரவில் தீர்ப்புகளை எழுதுகிற அந்த நீதிபதிகளுக்கு ஈட்டிய விடுப்பு கொடுக்கப்படுவதில்லை. அதையும் இந்த அரசு கவனித்து பள்ளியாசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் பெறுகிற அந்த ஈட்டிய விடுப்பை நீதிபதிகளுக்கு அளிக்க வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்றைய தினம் காவல் துறையில் இருப்பவர்கள், அதுபோன்ற மற்ற துறைகளில் இருப்பவர்கள், சீருடை அணிபவர்களுக்கு இந்த அரசு சீருடைப் படி அதாவது யூனிபார்ம் அலவன்ஸ், சீருடை பராமரிப்புத் தொகை கொடுக்கிறது.

பிற்பகல் 12-15

நீதிபதிகள் நீதிமன்றங்களிலே அமர்ந்திருக்கிறபோது, அவர்கள் ஒரு குறிப்பிட்ட உடையை அணிந்து நீதிமன்றத்திலே தங்களுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்கிற அவசியத்தில் இருக்கிற காரணத்தாலே, காவலர்களுக்கு இருப்பதைப் போல அவர்களுக்கும் இந்தச் சீருடை யூனிபார்ம் அலவன்ஸ் தர இந்த அரசு முன்வரவேண்டும் என்பதையும் இங்கே நான் கட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நீதித் துறையில், குற்றவியல், நீதிபதிகளிலேயிருந்து, அதாவது இதுவரையிலே, நீதித்துறையிலே First Class Magistrates, Second Class Magistrates என்று இரண்டு பிரிவுகள் இருந்து, அந்த இரண்டு பிரிவுகளையும் மாற்றி, இப்போது செகண்டு கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் என்று இந்தத் துறையை மாற்றிவிட்டு, பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் என்கிற ஒரே ஒரு துறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்பு செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகள் கொடுக்கின்ற தீர்ப்பாணைகளின் மீது அப்பீல் போகவேண்டும் என்றால், மேல் முறையீடு செய்ய வேண்டும். என்றால் அது சீப் ஜூடிசியல் மாஜிஸ்ட்ரேட்டிடம் போகும். பர்ஸ்ட் கிளாஸ், மாஜிஸ்ட்ரேட் கொடுக்கின்ற தீர்ப்பாணைகள் மீது மேல் முறையீடு செய்ய வேண்டும் என்றால் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்- மாவட்ட நீதிபதிகள் முன் போகும், இப்போது செகண்டு கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டை மாற்றிவிட்டு, ஒரே நீதிபதியாக அதாவது பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டைக் கொண்டு வந்த காரணத்தாலே, மாவட்ட நீதிபதியிடம், அவர் ஏற்கெனவே சிவில் வழக்கு அப்பீல்களைப் பார்க்கிறார், அதனுடன் இந்த கிரிமினல் வழக்கு அப்பீல்களும் அங்கே செல்கின்ற காரணத்தாலே அவர்களுக்கு வேலைப்பளு அதிகமாவது மட்டுமல்ல, அங்கே வழக்குகள் அதிகமாக தேங்கி நிற்கிற காரணத்தாலே இதுவரையிலும் சீப் ஜூடிசியல் மாஜிஸ்ட்ரேட் என்கிற அந்த நிலையை மாவட்ட நீதிபதி, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜினுடைய கேடருக்கு உயர்த்தி, இங்கே இருக்கிற கிரிமினல் மேல் முறையீடுகளை அவரிடம் வைப்பது நல்லது என்பதை நான் இந்த மாமன்றத்தின் மூலமாக அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



164972

அதுமட்டுமல்ல, உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்கின்றபோது, இந்த நீதித் துறையிலே பணியாற்றுகிற நீதிபதிகளுடைய எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல், உயர் நீதிமன்றத்திலே ஏற்கெனவே அலுவலிலே இருக்கிற, நீதித் துறையிலே இருக்கின்ற நீதிபதிகளுடைய எண்ணிக்கையை கவனத்திலே கொண்டு உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில், தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வேலைவாய்ப்பு தேர்வு ஆணையம் இருக்கிறதே தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன், அதிலே நீதித் துறையிலே இருக்கிற டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் போன்றவர்களை உறுப்பினர்களாக ஆக்க வேண்டும். இதுவரையிலே அப்படி இருந்ததாக நான் கேள்விப்படுகிறேன். அதையும் இந்த அரசு கவனிக்க வேண்டும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, காஞ்சிபுரத்தைப் பொறுத்த வரையில் காஞ்சிபுரத்திலே ஏறத்தாழ எல்லாத் துறையிலும் இருக்கின்ற மாவட்ட அலுவலகங்கள் அத்தனையும் காஞ்சிபுரத்திலே இருக்கின்றபோது மாவட்ட நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் செங்கற்பட்டிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது பல ஆண்டு காலமாக சொல்லப்பட்டு வந்தாலும் கூட இன்றைய தினம் காஞ்சிபுரத்திலே இருக்கின்ற எல்லா அலுவலகங்களையும் பார்க்கின்றபோது, காஞ்சிபுரத்திலே மாவட்ட கலெக்டர் அலுவலகம் இருக்கிறது, மாவட்ட போலீஸ் எஸ்.பி, அலுவலகம் அங்கே இருக்கிறது, மாவட்ட வணிகவரி அலுவலகம், மாவட்ட இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலகம், மாவட்ட கோட்ட வளர்ச்சி அலுவலகம், மாவட்ட செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை அலுவலகம், காஞ்சிபுரம் கோட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட கோட்ட தீயணைப்புத் துறை அலுவலகம், மாவட்ட கனிமவள அலுவலகம், மாவட்ட வன அலுவலகம், மாவட்ட ஊரக அலுவலகம். மாவட்ட சமூகநலத் துறை அலுவலகம், மாவட்ட பதிவுத் துறை அலுவலகம், மாவட்ட தொழிலாளர் துறை அலுவலகம் ஆக இப்படி இன்னும் எத்தனையோ மாவட்ட அலுவலகங்கள் — இன்னும் சொல்லப் போனால், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், மாவட்ட சிவில் சப்ளைஸ் அலுவலகம், மாவட்ட மீன் வளர்ச்சி அலுவலகம், தமிழ்நாடு பட்டு இணைய அலுவலகம், காஞ்சிபுரம் பட்டு அதிகாரி மாவட்ட அலுவலகம்,

D
V 2ll,31'N92

மாவட்ட உணவு வழங்கல் அதிகாரி அலுவலகம், மாவட்ட கருவூல அதிகாரி அலுவலகம், மாவட்ட செய்தி மக்கள் துறை அலுவலகம், மாவட்ட ஊட்டச் சத்து அலுவலகம், என்று இப்படி எல்லா மாவட்ட அலுவலகங்களும் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலே இருக்கின்ற, காஞ்சிபுரத்திலே, தலைமை நகரிலே இருக்கின்றபோது மாவட்ட நீதிமன்றம் மட்டும் செங்கற்பட்டிலே இருப்பது எல்லாத் துறையினருக்கும் மட்டுமல்ல பொதுமக்களுக்கும் இது மிகுந்த வசதியின்மையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, வெண்டுமென்றால், செங்கற்பட்டிலே ஒரு அடிசனல் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டை உருவாக்கி, டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டைப் பொறுத்தவரையில், காஞ்சிபுரத்திற்கு மாற்ற வேண்டும் என்ற செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தினுடைய நீண்டகால விருப்பத்தை இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உளுந்தூர்பேட்டையில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை வட்டாரத்திலிருக்கும் கட்சிக்காரர்கள், அதாவது கிளையன்ட்ஸ் என்னிடம் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உளுந்தூர்பேட்டைக்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் கூட நான் ஒரு பிராக்டிசிங் அட்வகேட் என்ற முறையிலே, நான் இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன்னாலே, நீதிமன்றத்திலே வழக்கறிஞனாக பணியாற்றியவன் என்ற முறையிலே கட்சிக்காரர்கள் பல பேர்கள் என்னிடம் சொன்ன இந்தக் கருத்தை இந்த மாமன்றத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்று காலையிலேகூட இங்கே பெரிய விவாதம் ஏற்பட்டது. எல்.டி.டி.ஈ. அவர்களை தடை செய்யவேண்டும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த மாமன்றத்திலே பேரவைத் தலைவர் மூலமாக சட்ட அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு செய்தியினைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். சில நாட்களுக்கு முன்னாலே எல்.டி.டி.ஈ.-ஐ தமிழகத்திலே தடை செய்ய முடியாது என்று இங்கே இருக்கிற பெரிய பெரிய மனிதர்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். ஒரு இயக்கத்தை தடை செய்வது என்பது அந்த அரசினுடைய நிலையை பொறுத்திருக்கிறது. இந்திய பெருநாட்டினுடைய இறையாண்மையையே குற்றுயிரும் குலையுயிருமாக தகர்க்கின்ற அளவிலே இருக்கிறபோது, அந்த எல்.டி.டி.ஈ.



இயக்கத்தை தடை செய்ய இந்த அரசுக்கு எல்லா விதமான உரிமையும் இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லி, அந்த நிலையையெல்லாம் சட்ட அமைச்சர் அவர்கள் இந்த அரசுக்கு எடுத்துச்சொல்லி, இந்த அரசின் மூலமாக மத்திய அரசுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி காலத்தின் அருமையைக் கருதி இந்த அளவோடு விடை பெறுகிறேன், வணக்கம்.

பிற்பகல் 12-20.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> செல்வி பி. நிர்மலா.

<u>செல்வி பி. நிர்மலா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மத்தின் வாழ்வு தனை சூது கவ்வும் இறுதியில் தர்மமே வெல்லும் என்பதை நிரூபித்துக்காட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருப்பாதங்களுக்கு எனது ஆயிரம் கோடி நமஸ்காரங்களை சமர்ப்பித்து அந்த நீதித் தேவதையின் நல்லாட்சியில், நீதித்துறையைப் பற்றி பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை சமர்ப்பித்து எனது உரையை ஆரம்பிக்கிறேன். பொதுவாகவே கோர்ட்டுகளில் அதிகமான வழக்குகள் முடிவு பெறாமல் காலதாமதம் ஆகிக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறு வழக்குகள் முடியாத சில காலதாமதத்தினால், சில தவறுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பொதுவாக சார்ஜ் ஷீட்—அதாவது குற்றப்பத்திரிகை கோர்ட்டில் தாக்கல் செய்வதற்கு கால தாமதம் ஆவதால் ரிமாண்டு பிரிசினர்ஸ் அதிகமான நிலையிலே இருக்கிறார்கள். பாரம் 95, எப்,ஐ,ஆர், போன்றவை கோர்ட்டில் காலதாமதமாக சமர்ப்பிககப்படுவதால் தீர்ப்பு வழங்க காலதாமதம் ஆவதோடு சில சமயங்களில் குற்றவாளிகளும் தப்பித்துக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகையினால் அதை தவிர்ப்பதற்கு டேபிள் வொர்க் செய்வதற்கு என்று தனியாக ஒரு லேடி போலீஸ் அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறே .

அதேபோல் சிவில் லைனிலே எடுத்துக் கொண்டாலும் அலகாபாத் ஹைகோர்ட்டிலே 3 லட்சம் வழக்குகளுக்கு அதிகமாகவும் சென்னை ஹைகோர்ட்டிலே சுமார் 2 லட்சம் வழக்குகளுக்கு அதிகமாகவும் வழக்குகள் இன்னும் முடிவு பெற முடியாத நிலையில் இருக்கின்றன. இவற்றிற்கு முக்கியமான காரணம் என்னவென்றால் அதிகப்படியான அளவில் கோர்ட் விடுமுறை நாட்கள் விடுவதுதான் என்று நான் கருது கிறேன். அதாவது வருடத்திற்கு 365 நாட்களில் சுமார் 1..

நாட்கள் கோர்ட் விடுமுறை அளிக்கப்படுகிறது. கோடை விடுமுறை நாள் 50 நாட்கள், தசரா விடுமுறை நாள் 10 நாட்கள். மாதம் சனி, ஞாயிறு என்று வருவது 40 நாட்கள், அரசு விடுமுறை நாள் என்று 25 நாட்கள், ஜட்ஜ் சி.எல்., ஜட்ஜ் ஈ.எல்., என்று 12—20 நாட்கள் ஆக 155 நாட்கள் விடுமுறையிலேயே காலம் கடந்து விடுகிறது. இந்த கோடை விடுமுறை என்று 50 நாட்கள் இருப்பதை தள்ளுபடி செய்து—அதாவது வழக்குகளை துரிதமாக செயல்படுத்துவதற்காக அவற்றைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று முதலமைச்சரிடம் என்னுடைய கோரிக்கையை வைக்கிறேன். சில சமயங்களில் இது வழக்கறிஞர்களுக்கு வருத்தமாகவும் இருக்கலாம்.

இதேபோல வழக்கறிஞர்களுக்காக அட்வகேட் வெல்பேர் பண்ட்-இல் இருந்து அவர்கள் இறந்து விட்டால் 5,000 ரூபாய் அவர்களுக்கு உதவி நிதியாக வழங்கப்படுகிறது. அதற்காக அவர்கள் 3 வருடங்களுக்கு ஒருமுறை 60 ரூபாய் பணம் கட்டுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதை அவர்கள் கட்டித் தருவதற்கும் தயாராக இருக்கிறார்கள். அந்த 5 ஆயிரம் ரூபாய் என்பதை 50 ஆயிரமாக தங்களுக்கு தரத் வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள் என்பதை அவர்களின் சார்பாக முதலமைச்சருக்கு சமர்ப்பிக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்ததாக, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மாதிரி மாவட்ட வழக்குகளை கண்காணிக்க வேண்டும் என்பதற்காக சட்டத் துறையிலேயும் ஆல் இந்தியா ஜுடிஷியல் சர்விஸ் என்று ஒரு அமைப்பாக ஐ.ஜெ.எஸ். என்று அமைக்க நமது மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஹைகோர்ட்டின் பெயர் மாற்றப்பட வேண்டும். அதாவது சென்னை உயர் நீதிமன்றம் என்று இருக்கிறது அல்லவா, அதை தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என்று மாற்றி அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என் விண்ணப்பத்தை வைக்கிறேன்.

சிவில் சைடில் உள்ள விட்னஸை விசாரிப்பதற்காக ஜட்ஜுகள் எழுதுவதற்கு பதிலாக முன்சிப் கோர்ட்டில் டேப் முறையைக் கொண்டு வந்தால் தீர்ப்புகள் துரிதமாக நல்ல முறையிலும், வழங்குவதற்கு அது ஏதுவாக இருக்கும் என்ற எனது சிறிய கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோல உச்ச நீதிமன்றத்தின் ஒரு பிரிவை சென்னையில் அமைத்துத்தர வேண்டும்—தென் மாநில மக்களின் நலனுக்காக என்றும் கேட்டுக் கொள்கிறேன். டிஸ்டிரிக்ட் முன்சிப் ஒரு தவறான தீர்ப்பை வழங்கினாலும் கேட்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமை வேண்டும். அதாவது ஃபாரின் கன்டிரியில் இருப்பதைப் போல ஜுடி



ஷியல் ஓம்பட்ஸ்மேன் என்ற முறை இங்கே கொண்டு வருவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வாடகைதாரர் சட்டம். அதிலே வாரத்திற்கு ஒவ்வொரு விதமாக தீர்ப்புகள் வருகின்றன. இந்த வாடகைதாரர் சட்டத்தில் 'ஃபேமிலி' என்ற ஒரு டெபனிஷன் கொண்டு வந்து வாடகைதாரர் சட்டத்திலே ஒரு அமென்ட்மெண்ட் கொண்டுவர வேண்டும். அதில் பெண்களும் பயன் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல டிரான்ஸ்பர் ஆஃப் ப்ராபர்ட்டி ஆக்ட், இதிலே ஈடு என்றால் 12 வருடம், ஒத்தி என்றால் 30 வருஷம் என்று ரிடம்ஷனுக்கு ஒரு காலவரையறை இருக்கிறது. இதிலே என்ன செய்கிறார்கள் என்றால் 5 வருடத்திற்கு ஈடு வைத்த ஒருவர் தனது ப்ராபர்ட்டியைத் திருப்பமுடியாத நிலையில், ஈடு வாங்கியவர் கோர்ட்டுக்குப் போய் டிகிரியாகி ஏலத்திற்கு விடப்பட்ட பின், அந்த ப்ராபர்ட்டி சுமார் 2, 3 பேர்கை மாறிய பிறகு அந்த ஈடு வைத்தவர், கால அவகாசம் அதிகமாக உள்ளதால் அதாவது ப்ராபர்ட்டி வாங்கியவர் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஸ் பார் ரிடம்ஷன் 30 வருடம் என்பதை சிறிது குறைத்துக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது கோரிக்கையை வைக்கிறேன்.

பிற்பகல் 12-25

அதேபோல குத்தகைதாரர் சட்டம். இதிலே விசாரிப்பதற்கு தாசில்தார்கள், டெப்டி கலெக்டர்கள் போன்ற வருவாய்த் துறை அதிகாரிகளை நியமிப்பதற்குப் பதிலாக அந்த உரிமையை நீதித்துறைச் சேர்ந்த நீதிபதிகள், ஜுடிஷியல் ஆபீசர்ஸ் அதாவது டெனன்ஸி டிரிபியூனல் என்று போட வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் லீகல் ஆபீஸ் ஒன்றை அமைக்க வேண்டும். அதாவது லீகல் செல் போல் ஜி.பி. அவர்களுக்கும், கலெக்டர் அவர்களுக்கும் இடையிலே இருந்து வழக்குகளைத் துரிதமாக அதாவது கோப்புகளைத் துரிதமாக மூவ் பண்ணுவதற்கும், அரசாங்க வழக்குகள் துரிதமாகவும் நல்ல முறையிலும் முடிவதற்கும் உதவியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ரிட் போட்டால் 6 மாதம் என்றால், ஸ்டேட் டிரிபியூனல் என்றால் அதற்கு ஒரு வருடம் என்றும் கால அவகாசம் அறிவுறுத்தப்பட வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க அரசாங்கம் ஒரு நிலம் ஆர்ஜிதம் செய்தால், அதிலே நிலத்தின் உரிமையாளர்கள் கோர்ட்டுக்குப் போய் ரிட் தாக்கல் செய்து அது முடிவதற்கு 8 வருடங்கள் கூட இழுத்துவிடுகிறது. ஆகையினால் அரசாங்கத்

தின் திட்டங்கள் காலாவதி ஆவதோடு சில சமயங்களில் அந்த பண்டு கூட வீணாகி திரும்பிச் சென்று விடுகிறது. அதற்காக ரிட் என்றால் 6 மாதம் என்றும், ஸ்டேட் டிரிபியூனல் என்றால் ஒரு வருஷம் என்றும் கால அவகாசம் வலியுறுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல மோட்டார் வாகன விபத்துச் சட்டம். அதிலே இறந்தவர்கள் கைநாட்டுக்காரர்கள் என்றால் அவர்களுடைய பணத்தை அப்படியே பாங்கில் டெபாசிட் செய்து விடுகிறார்கஸ். அது தவிர்க்கப்பட்டு அந்த அமௌண்டில் 1-3 ஆஃப் தி அமௌண்ட்டை அவர்களுக்குக் கையிலே வழங்க வேண்டும். கோர்ட் செலவு, வக்கீல் செலவு, ட்ரீட்மெண்ட் செலவு போன்றவற்றிற்கு அவசர காலத்தில் அவர்களுக்கு அது உதவும். இதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

திண்டுக்கல் மேற்குப் பகுதியில் நிலம் குறைந்த விலையில் கிடைக்கிறது. இந்த இடத்தை அரசு வாங்கி, இந்த இடத்தில் ஒரு சென்ட்ரல் ஜெயில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் சி.ஜே.எம். கோர்ட் கொண்டுவர வேண்டுமென்றும் புரட்சித் தலைவி அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திற்கு 40 அறைகள் கொண்ட அட்வகேட் சேம்பர் —ஒன்றை அமைக்க திட்டமிட்டிருந்தார்கள் என்று அறிகிறேன். அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல நுகர்வோர் கோர்ட்டில் ஒரு அட்வகேட், ஒரு லேடி, ஒரு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் என்று இருக்கிறார்கள். அதிலே டி.எம்.கே. ஆட்சிக் காலத்தில் நியமித்த சிலர் இன்னும் மாற்றப் படாமல் இருக்கிறார்கள். அதை மாற்ற முடியும் என்றால் மாற்றியமைத்துத் தர வேண்டும் என்ற என் தாழ்மையான விண்ணப்பத்தை புரட்சித் தலைவி அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

அடுத்து எனது தொகுதிப் பிரச்சினைக்கு வருகிறேன். எனது திண்டுக்கல் தொகுதியிலே கொசு பிரச்சினை அதிகம் என்று அனைவரும் அறிந்த உண்மை. அதிலே பள்ளிவாசல் நிலம் அதாவது அரண்மனைக் குளம் என்ற ஒன்று இருக்கிறது. அதிலே பள்ளிவாசலுக்குச் சொந்தமான நிலம் 7 ஏக்கர். அதில் பாசனத்திற்கு 13 ஏக்கர் குளமும் உள்ளது. அதில் ஒவ்வொரு முறையும் படர் தாமரை படர்ந்து கொண்டு கொசுத் தொல்லை அதிகமாகிறது. அரசாங்கம் அதற்கென்று தனியாக ஃபண்டை ஒதுக்கி இந்த ஃபண்டு அநேகமாக வீண் செலவாகத்தான் ஆகிறது என்று நினைக்கிறேன். அந்த வழக்குகூட கோர்ட்டிலே இருக்கிறது. அரசாங்கம் அந்த நிலத்தை ஆர்ஜிதப்படுத்தி, அந்தக் குளத்தில் வருகின்ற கழிவுநீரை வெளியே விட்டு, அதை தரை மட்டமாக்கி



அதிலே ஒரு அரசாங்க மருத்துவமனை அல்லது ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் என்று ஏதாவது ஒன்றைக் கொண்டு வந்து கொசுத் தொல்லையை நீக்கி நிரந்தரமாக மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல்லிலே பெண்களுக்கு என்று அரசினர் கலைக் கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரி விடுதியில் காம்பவுண்டு சுவர் கிடையாது. பெண்களுக்கு அது ஒதுக்குப்புறமாக அமைந்திருக்கிறது. பாதுகாப்பும் சரியில்லாத நிலையிலே இருக்கிறது. அதற்கு காம்பவுண்டு சுவர் விரைவில் கட்ட புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திண்டுககல்லிலே ஒரு மெடிக்கல் காலேஜ், இண்டியன் மெடிசன் சம்பந்தப்பட்ட காலேஜ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சிறுமலை, ஆடலூர், பன்றிமலை போன்றவைகளிலே மூலிகைகள் கிடைப்பதால் அந்த ஏற்பாட்டைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர வேண்டும். ஒட்டஞ்சத்திரத்தில் தக்காளி அதிகமாக விளைவதால், ஜுஸ் பாக்டரியைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசு மருத்துவமனையை விஸ்தரிப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை எனக்கு பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் அன்பு தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் சமர்ப்பித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> டாக்டர் தே. குமாரதாஸ்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் மற்றும் நீதி நிர்வாகத்தின் சார்பில் இங்கே கொண்டு வந்திருக்கின்ற மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்ததற்கு முதலாவது எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் கீழ் 40 கோடியே 81 லட்சத்து 84 ஆயிரம் ரூபாயும், சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கையின் கீழ் 21 கோடியே 77 லட்சத்து 84 ஆயிரம் ரூபாயும் இங்கே இந்த ஆண்டு செலவிடப்படுவதாக கூறப்பட்டிருக்கிறது. நான் அதன்மீது சில கோரிக்கைகளை வைப்பதற்கு முன்பாக சில வேண்டுகோள்களை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1992 மார்ச் 30

சிறைத் துறையில் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல நல்ல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். சிறையில் இருக்கின்ற கைதிகள், அவர்கள் சிறையில் இருப்பது போன்ற உணர்வு வராத அளவுக்கு அவர்களைப் பராமரிக்க வேண்டும் என்ற விதத்தில் பல நல்ல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் ஒரு கொடிய நிகழ்ச்சியை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

சுமார் 1 வாரம் அல்லது 10 தினங்கள் என்று கருதுகிறேன். மதுரை கோர்ட்டிலிருந்து சிறைக்குக் கொண்டு செல்லும் ஒரு கைதி கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கோர்ட்டில் இருந்து செல்லுகின்ற கைதிக்கு ஒரு பாதுகாப்பு கொடுப்பதற்குக் கூட முடியாத அளவிலே நாம் பின்தங்கிவிட்டோமோ என்ற ஐயம் மக்கள் முன்னால் எழுகிறது. இந்த அரசு பாதுகாப்பு கொடுத்து பாதுகாக்க வேண்டிய ஒரு நபர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று சொன்னால் அந்த பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு நிவாரணம் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் சிறையிலிருந்து கைதிகள் தப்பி ஓடுகின்ற நிகழ்ச்சிகள் பரவலாக, தொடர்ச்சியாக நடந்து வருகின்றன, அதற்கான காரண காரியங்கள் ஏன் என்று கேட்கின்றபோது அங்கே பணியாற்றுகின்ற வார்டர்களுக்கு 24 மணி நேரமும் வேலை என்ற ஒரு குறைபாட்டைச் சொல்லுகிறார்கள், எனவே அவர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்து சிறையில் இருக்கின்ற கைதிகளை காவல் காக்கவேண்டுமென்ற காரணத்தால் அவர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கீடு செய்து 8 மணி நேரம் அல்லது 10 மணி நேரம் என்று நீங்கள் ஒதுக்கீடு செய்வீர்கள் என்று சொன்னால் அவர்கள் அந்த சிறையை நல்ல முறையில் கண்காணிக்க முடியும் என்ற ஒரு வேண்டுகோளை, கோரிக்கையை இன்றைக்கு என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், எனவே அரசு அதில் மிகவும் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பெண் வார்டர்களைப் பொறுத்தவரைக்கும் சென்னை மாநகரில் மட்டும் பெண் வார்டர்கள் கிட்டத்தட்ட 150-க்கு பக்கத்தில் இருக்கிறார்களாம், இவர்கள் கிட்டத்தட்ட 20 ஆண்டு, 25 ஆண்டு ஆன பிறகும் கூட பணியில் நிரந்தரம் செய்யப்படவில்லை என்ற ஒரு குறைபாடு இருப்பது மட்டும் அல்லாமல் சென்னை மாநகரைப் பொறுத்தவரைக்கும் பெண் காவலர்களைப் போலத்தான் முழு நேரமும் பெண் வார்டர்கள் பணியாற்றி வருகிறார்கள், அவர்களுடைய ஊதியத்தில் மிக வித்தியாசம் இருக்கிறது, எனவே, பெண் காவலர்களுக்கு உரிய ஊதியத்தையே பெண் வார்டர்களுக்கு வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள், எனவே அரசு அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் மிக பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1992 மார்ச் 30] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அதைப்போலவே இன்றைக்கு சிறைத்துறையை எடுத்துக் கொள்வோம் என்று சொன்னால் நான் பாளையங்கோட்டைக்கு அடிக்கடி சென்று வந்திருக்கிறேன். பாளையங்கோட்டை சிறையைப் பொறுத்தவரைக்கும் நான் சென்று வந்த சிறையைப் பற்றி தான் சொல்ல முடியும். ஆக அந்த சிறையில் குடிநீர் பிரச்சினை மிக மிக அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இது போன்று மற்ற சிறைகளிலும் இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே. எனக்கு அங்கு எல்லாம் போய் வந்த அனுபவம் இல்லாத காரணத்தால் சரியாக தெரியவில்லை, பாளையங்கோட்டை சிறையைப் பொறுத்தவரைக்கும் குடிநீர் மிக பிரச்சினையாக இருக்கிறது. அதை நீங்கள் நிவர்த்திச் செய்து தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரைக்கும் எனக்கு முன்னால் பேசிய. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தொடர்ச்சியாக கூறிய குறைப்பாட்டை தான் நான் இங்கே கூற கடமைப்பட்டிருக்கிறேன், பொதுவாக நீதி நிர்வாகத்தில் போதுமான நீதிபதிகள் இல்லை என்ற குறை இருந்து வருகிறது. அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே எதற்கு எடுத்தாலும் கோர்ட்டில் போய் ஸ்டே வாங்கிவிடலாம் என்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிற காரணத்தால், தவறு செய்பவர்கள் தான் அதிகமாக கோர்ட்டுக்குப் போய் பயனடைந்து கொண்டிருக்கிற சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, நீங்கள் தனியாக ஒரு குழுவைப் போட்டு ஒரு முழுமையான ஸ்டே-வை ஒரு வாரம் அல்லது 10 தினங்கள் என்று பெற்று விடுகிறார்கள் என்று சொன்னால், அதனால் பல கோடி ரூபாய், ஸ்டே வாங்குபவர்கள் லாபம் அடைந்து விடக்கூடிய ஒரு சூழ்நிலை வருகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏன், எதற்காக நீங்கள் ஸ்டே கொடுத்தீர்கள் என்று தனியாக ஒரு குழுவைப் போட்டு இவர்களைப் பரிசீலிக்க வேண்டும். கண்காணிப்புக் குழு மாதிரி நீங்கள் போடுவீர்கள் என்று சொன்னால், இப்படிப்பட்ட தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்காது. எனவே, அது முடியும் என்று சொன்னால் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கக்கூடிய கோர்ட் வளாகம் முழுமையும் திருவாங்கூர் மகாராஜா ஆட்சியின்போது கட்டப்பட்டது, அதற்குப் பிறகு பல ஆண்டுகள் மாறிய பிறகும் புதிய ஒரு கோர்ட் அங்கே அமைக்கப்படவில்லை என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதைப்போலவே என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட கருங்கல் பகுதியைச் சுற்றி

6 பேரூராட்சிகள் இருக்கின்றன, அந்த போலீஸ் ஸ்டேசனைச் சுற்றி 6 பேரூராட்சிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 60 ஆயிரம் மக்கள் அந்தப் பகுதியைச் சுற்றி. அந்த போலீஸ் ஸ்டேசனுக்கு உட்பட்ட பகுதிக்குள் வருகிறார்கள். அவர்கள் அங்கேயிருந்து கோர்ட்டுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், ஒன்று இரணியல் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும். மற்ற பகுதிகளை கம்பேர் செய்து பார்க்கின்றபோது தூரம் குறைவாகத்தான் இருக்கும். அங்கேயிருந்து இரணியல் பகுதிக்குப் போக வேண்டுமென்றால் 15 கிலோ மீட்டர், அல்லது குழித்துறை போக வேண்டுமென்றால் 20 கிலோ மீட்டர் தூரம் போகவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த மையப் பகுதியில், அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப ஒரு கோர்ட்டை அமைத்துத் தருமாறு அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

இறுதியாக, ஒரு வேண்டுகோளை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் புரபஷனல் கோர்ஸ் கல்லூரி ஒன்றுகூட இல்லை. இன்றிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கைக்கு கல்வித் துறையிலிருந்து சட்டக் கல்லூரி கைமாறுகிறது என்கிற நல்ல செய்தியை நான் அறிந்து இருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்ட கல்லூரியினுடைய பொறுப்பை ஏற்கின்ற காலகட்டத்தில் முதல் கோரிக்கையாக, புரபஷனல் கோர்ஸ் கல்லூரியே இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரியைத் தந்து அருளவேண்டுமென்று மெத்த பணிவன்போடு ஒரு வேண்டுகோளை வைத்து, பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. கோ. ஜானகிராமன்.

<u>திரு. கோ. ஜானகிராமன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் மற்றும் சிறைச்சாலை மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீதி நிர்வாகம், சிறைச்சாலை ஆகிய மானியக் கோரிக்கைகளுக்காக 63 கோடி ரூபாய் இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது வரவேற்கத்தக்க ஒன்றுதான் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நீதி நிர்வாகத்தைப் பொறுத்த அளவிலே தமிழ்நாடு முழுவதும், சிவில், கிரிமினல் வழக்குகள் கிட்டத்தட்ட 9 லட்சத்து 11 ஆயிரத்து4 73வழக்குகள் தேங்கிக் கிடப்பதாக இங்கே கொள்கைக்



குறிப்பிலே காணுகின்றோம். இதற்கெல்லாம் காரணம், நீதிபதிகள் நியமனம் செய்வதிலே காலதாமதம் ஏற்படுவதனால் இன்றைக்கு வழக்குகளெல்லாம் துரிதமாக விசாரிக்கப் படாமல் தேங்கிக் கிடக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை உயர்நீதிமன்றத்திலேகூட தலைமை நீதிபதி இதுவரையிலும் நியமனம் செய்யாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதே உயர்நீதிமன்றத்திலே 6 உயர்நீதிமன்ற நீதிபதிகள் இடங்கள் காலியாக இருக்கின்றன. மாவட்ட அளவிலும் இதேபோன்ற நிலைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, சென்னை சிட்டி சிவில் கோர்ட்டிலே 6 நீதிபதிகள் இதுவரையில் நியமிக்கப்பட வேண்டிய இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் சாதாரண மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்த அரசு உணர வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்டி, விரைவிலே அவர்களை நியமனம் செய்வதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று மாவட்ட அளவிலே அரசு வழக்கறிஞர்கள், ஜி.பி., பி.பி., இருக்கிறார்களே அவர்கள் இதுவரையில் எங்கள் மாவட்டத்தில் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அதனால் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படாத காரணத்தால் அரசாங்கத்தின் சார்பிலே ஆஜராகி வழக்குகளை நடத்த வேண்டிய அந்த வழக்குகளெல்லாம் இன்றைக்கு எக்ஸ்பார்ட்டியாக தீர்ப்பாகி அரசுக்கு பெருத்த நஷ்டத்தை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு வழக்கறிஞர்களை நியமனம் செய்யும்போது அவர்களுடைய திறமைகளை சற்று கவனித்து, அவர்கள் அனுபவத்தையும் கணக்கில் கொண்டு நல்ல வழக்கறிஞர்களை நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் அரசாங்க வழக்குகளெல்லாம் வெற்றிபெற முடியும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாவட்டந்தோறும் பேமிலி கோர்ட்டுகளை கண்டிப்பாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நீதிமன்றங்களில் பெண்களை நீதிபதிகளாக நியமனம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் வழக்குகளினுடைய தன்மை அறிந்து விரைவிலே நீதி கிடைக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வழக்குகளையெல்லாம் ஒரு காலவரையறைக்குள் முடிக்க வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் வழக்குகளை விசாரிக்கும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாதத்திற்கு ஒரு ஜட்ஜ் சிட்டிங் வரவேண்டும்.

[திரு. கோ. ஜானகிராமன்] [1992 மார்ச் 30

அப்பொழுதுதான் விரைவிலே அந்த வழக்குகளெல்லாம் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு உடனடியாக நீதி கிடைக்கும். பல குடும்பங்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்ட நிலையிலே இருப்பதையெல்லாம் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, எம்.ஏ.சி.டி., ஓ.பி., வழக்குகளையெல்லாம் ஒரு காலவரையறைக்குள்ளே விசாரித்தால்தான் அதனால் பலன் அடையக்கூடிய மனுதாரர்கள் பலன் அடைய முடியும். இல்லாவிட்டால் அவர்களுடைய வாரிசுகளுக்குக்கூட அதனால் பயனற்ற நிலைதான் ஏற்பட்டுவிடும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாவட்ட அளவிலே பணிபுரிகின்ற அத்துணை நீதிபதிகளுக்கும் அரசாங்கமே வீடுகளைக் கட்டித்தர வேண்டும். இல்லையென்றால் அவர்கள் தனியார் வீடுகளிலே வாடகைக்கு இருக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இதனால் மற்றவர்கள் நீதிமன்றங்களிலே தலையிடுவதை தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கையை எடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் பல கோர்ட்டுகளிலே இன்றைய தினம் போதிய பர்னிச்சர், அதாவது நாற்காலி, மேஜை போன்ற சாதனங்கள் இல்லாமல் இருக்கின்றன. மின்சார விசிறிகள்கூட ஓடாத நிலையிலே இருக்கின்றன.

பிற்பகல் 12-40

இந்தக் கொள்கைக் குறிப்பிலே 27.19 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டதைக் கண்டு உண்மையிலேயே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோர்ட்டுகளிலே வழக்கறிஞர்களுக்காகப் பயன்படுத்தக் கூடிய அந்த கோர்ட் ஃபி ஸ்டாம்ப் 2 ரூபாய், 5 ரூபாய், 10 ரூபாய் ஸ்டாம்புகள் கிடைப்பதில்லை. இதனால் அதிகப் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதிக அளவிலே ஸ்டாம்ப் வாங்கும்பொழுது சில சிரமங்கள் இருக்கின்றன என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். சென்ட்ரல் அட்மினிஸ்டிரேட்டிவ் டிரிப்யூனல்-இல் வைக்கப்பட்டதைப்போல அங்கே கோர்ட் ஃபீ ஒட்டும்பொழுது, செலான் மூலமாகப் பணத்தைச் செலுத்தி இரசீதை அந்த மனுவோடு தாக்கல் செய்தால் போதும் என்ற ஒரு முறை இருக்கிறது. இந்த முறையைப் பின்பற்றுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.



1992 மார்ச் 30] [திரு. கோ. ஜானகிராமன்]

புதிதாக பிரிக்கப்பட்டிருக்கின்ற எங்களுடைய மாவட்டத்திற்கு—விழுப்புரம்— வள்ளலார் மாவட்டத்திற்கு ஒருங்கிணைந்த நீதிமன்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், அதை விற்பவர்கள் அவர்களை 4 (1) (ஏ) தமிழ்நாடு புரொஹிபிஷன் ஆக்ட்டின் கீழ் பெயிலபிள் அபென்ஸில் வழக்குகள் போட வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். அந்த உத்தரவை மாற்றி நான்-பெயிலபிள் அஃபென்ஸ்ஸிலே அந்த வழக்குகளைப் போட வேண்டும். முடிந்தால் அப்படிக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை குண்டாஸ் சட்டத்திலே போட வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வழக்கறிஞர்களுக்கு ஊதிய விதி 1973-இல் கிட்டத்தட்ட 19 ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டது. அதனால் வழக்கறிஞர்கள் இன்றைக்கு வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவற்றை மாற்றியமைத்து இன்றைக்கு அவர்களுக்குப் பயன் தருகின்ற வகையிலே ஊதிய விதியை இயற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கறிஞர் வெல்பேர் பண்ட்—ஒரு வழக்கறிஞர் ஓய்வு பெற்றாலோ அல்லது பணிக் காலங்களிலே இறந்துவிட்டாலோ அவருடைய குடும்பத்திற்கு இப்பொழுது அதிகபட்சமாக 30,000 என்று இருப்பதை மாற்றி ஒரு இலட்சமாக மாற்றியமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

போலீசார் குற்றவாளிகளைக் கோர்ட்டுக்குக் கொண்டுவரும்பொழுது நீதிமன்ற நடுவர் குற்றவாளிகளைப் போலீசார் துன்புறுத்தினார்களா, இல்-ட்ரீட் செய்தார்களா என்று கேட்க வேண்டும். ஆனால் அவ்வாறு இப்பொழுது கேட்பதில்லை. அவர்களாகவே முன்வந்து போலீசார் எங்களைத் துன்புறுத்தினார்கள் என்று சொன்னால்கூட அதைப் பதிவு செய்துகொள்ள முடியாத நிலை இன்று இருக்கிறது. இவற்றையெல்லாம் செக்ஷன் 200 சி.ஆர்.பி.சி. விளக்கமாகச் சொல்கிறது. அந்தச் சட்டப்படி நடக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

கைதிகளை, குற்றவாளிகளைக் கைது செய்கிறபொழுது, 24 மணி நேரத்திற்குள் கோர்ட்டுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சட்டம் இருந்தபோதிலும் கூட, அதனை போலீசார் 2 நாட்கள், 3 நாட்கள் அவர்களே வைத்துக்கொண்டு, துன்புறுத்தி வருகிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று. டெனன்ஸி கோர்ட் தாசில்தாருடைய அதிகாரத்திலே இன்றைய தினம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு டெனன்ட்ஸ் ஆக்டைப்பற்றி சரிவரப் புரியவில்லை. இதனால் ஒரு நபர் சென்னை உயர்நீதிமன்றம் வரை வர வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலை இருக்கிறது. இவற்றை மாற்றி உரிமை இயல் நீதிமன்றத்திற்கு இந்த அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில், செஞ்சி தாலுக்காவைச் சேர்ந்த அனந்தபுரம் காவல் நிலைய வழக்குகளெல்லாம் விழுப்புரத்திற்கு வர வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் மாற்றி செஞ்சி கோர்ட்டிலேயே விசாரிக்க உத்தரவிடுமாறு இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜெயிலைப் பொறுத்தவரையில் அரசியல் கைதிகளைச் சிறைச் சாலையிலே மரியாதையாக நடத்த வேண்டுமென்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒரு சம்பவத்தை நான் சொல்லிக்கொள் கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் உண்ணாவிரதம், இரயில் மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டு கடலூர் ஜெயிலிலே இருந்தோம், அப்பொழுது சாப்பாடு உரிய நேரத்திலே போட வேண்டுமென்றும், ரேஷன் ஒழுங்காகக் கொடுக்க வேண்டுமென்றும் சிறை அதிகாரிகளிடம் கேட்டோம், அப்பொழுது அதிகாரிகளுக்கும் எங்களுக்கும் வாக்குவாதம் வந்துவிட்டது. சிறை அதிகாரி உடனே அபாயச் சங்கை ஒலித்து கைதிகளைக் கொண்டு எங்களைத் தாக்க முன் வந்தார்கள். இவைகளெல்லாம் எந்த ஜெயில் மேன்யூவல் ஆக்டில் இருக்கிறது என்று எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவற்றையெல்லாம் களைவதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் கைதிகளை ஓப்பன் ஏர் ஜெயிலில் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஜெயில்லே தண்ணீர் வசதி இல்லை; டாய்லெட் வசதி, மருத்துவ வசதி போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சிறைச்சாலைக் கட்டிடங்கள் சரியாகப் பழுது பார்க்கப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். செங்கல்பட்டு, காட்பாடி., சென்னை போன்ற இடங்களிலே கைதிகள் சிறையிலிருந்து தப்பியோடுகின்ற நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.



இவற்றையெல்லாம் கவனிப்பதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமனம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-45*

மதுரையிலே, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய 'பெஞ்ச்' ஒன்றை அமைக்க, ஜஸ்வந்த்சிங் கமிட்டி சிபாரிசு செய்திருந்தபோதிலும், இதுநாள் வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மற்றபடி, சென்னை உயர்நீதி மன்றத்தை, தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என பெயர் மாற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. கு. சு. துரைமுருகன்.

<u>திரு. கு. சு. துரைமுருகன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மானியக் கோரிக்கையின் மீது இந்த மாமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த, பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய நடமாடும் மனித தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் மனுநீதி சோழனுடைய மறுபதிப்பாக இருந்து, தமிழகத்திலே நல்ல ஆட்சியை, செங்கோல் ஆட்சியை வழங்கி வருகிறார்கள். புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில், தவறு செய்பவர்களை மன்னித்து விடுவார்கள். ஆனால், குற்றம் என்று தெரிந்தே குற்றம் செய்பவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், அவர்கள் ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் எந்த ஒரு தயவு தாட்சண்யமுமின்றி, பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு மனுநீதிச் சோழனாக இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டிலே ஆட்சி செய்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி— புரட்சித் தலைவி அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், பகுத்தறிவுப் பகலவன் தந்தை

பெரியார் அவர்களிடத்திலே இருந்த மனோ திடத்தை, நாம் இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்களிடத்திலே காண்கிறோம், வங்கக் கடலில் துயில் கொள்ளும் தங்கத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அறிவுத் திறனையும், செயல்திறனையும், நாம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களிடத்திலே காண்கிறோம். தமிழகத்திலே 10 ஆண்டுக் காலம் பொற்கால ஆட்சியைத் தந்த, மறைந்தும் மறையாமல் இருக்கிற நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய மாபெரும் மக்கள் சக்தியையும், தாயுள்ளத்தையும், இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்களிடத்திலே காண்கிறோம். இப்படியெல்லாம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோருடைய கொள்கைகளையும், கோட்பாடுகளையும், இலட்சியங்களையும், செயலாற்றல்களையும் கொண்ட ஒட்டுமொத்த உருவமாக காட்சியளிப்பவர்தான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய கோவை மாவட்டத்திலே, பல்லடம் தொகுதியைப் பொறுத்தவரையில், ஒரு வேண்டுகோளை சட்டத் துறை அமைச்சருக்கு நான் வைக்க விரும்புகிறேன். பல்லடம் தாலுகா, திருப்பூரிலிருந்து கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தனித் தாலுகாவாக பிரிக்கப்பட்டது. அந்தப் பல்லடம் தாலுகாவிலே ஏற்கனவே, ஜுடிசியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்று இயங்கி வருகிறது. நம்முடைய அரசின் செயற்குறிப்பின்படி, ஒவ்வொரு தாலுகாவிலும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆகவே, நான் சட்டத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே என்னுடைய பணிவான வேண்டுகோளாக, புதிதாக உருவாக்கப்பட்ட பல்லடம் தாலுகாவிலே, புதிதாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்படி, தனியாக ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், (District Munsif Court) உருவாக்க இயலாத சூழ்நிலையிலே. ஏற்கனவே அங்கே இயங்கி வருகிற Judicial Magistrate Court என்று சொல்லப்படுகிற கிரிமினல் கோர்ட்டையே, சிவில் கேஸ்களும் பார்க்கக்கூடிய வகையிலே, Judicial Magistrate-*cum*-Munsif Court-ஆக மாற்றிக் கொடுப்பதற்கு உரிய உத்தரவுகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே, சட்டத் துறை அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கோவை மாநகரிலே மட்டும் நீதி



மன்றங்கள் ஐந்தாறு இடங்களிலே பரவிக் கிடக்கின்றன. இதன் காரணமாக, இந்த மன்றங்களில் வழக்குகள் வருகிற நேரத்திலே, வக்கீல்களும், வழக்குக்கு சம்பந்தப்பட்டவர்களும் அந்த நேரத்திலே ஓடி, அந்த வழக்குகளிலே ஆஜராக வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. நான் இந்த அரசுக்கு என் பணிவான ஒரு ஆலோசனையாக கூற விரும்புவதெல்லாம், இனி வருகிற காலங்களில், நாம் புதிதாக நீதிமன்றங்கள் அமைக்கிறபோது, சட்ட வளாகம் என்ற வகையிலே (Court Complex) என்ற வகையிலே, எல்லா நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்திற்குள் கொண்டுவருகிற வகையில், புதிய நீதிமன்றங்களை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் உருவாக்கினால், அங்கே வழக்குகளினுடைய தேக்கமும் குறையும்; அதேபோல், வழக்கறிஞர்கள் ஒரு கோர்ட்டிலேயிருந்து இன்னொரு கோர்ட்டுக்கு ஓடவேண்டிய அவலநிலையும் குறையும். அதேபோல், வழக்குகளிலே சம்பந்தப்பட்டவர்களுக்கு அதனால் இன்னல்களும், இடையூறுகளும், துன்பங்களும், துயரங்களும் குறையுமென்று என் பணிவானக் கருத்தை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எனது கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குதிரை வண்டிக் கோர்ட் என்ற ஒரு கோர்ட் இருக்கிறது. அங்கே 5 நீதிமன்றங்கள், அந்த குதிரை வண்டி கோர்ட்டிலே இருக்கின்றன. குதிரை வண்டி கோர்ட் என்ற பெயருக்குத் தகுந்தமாதிரி, அந்த இடத்திலே இருக்கிற நீதிமன்றங்களினுடைய கட்டிடங்கள் இடிந்து விழக்கூடிய ஒரு மோசமான சூழ்நிலையில் இருக்கிறது. நமது தமிழக அரசினுடைய சட்டம் Public Building Safety Act என்ற சட்டதிட்டங்களுக்குக்கூட அதுமுற்றிலும் மாறுபட்ட ஒரு சூழ்நிலையில் இருக்கிறது.

ஆகவே, எனது பணிவான வேண்டுகோளாகச் சொல்கின்றேன். அந்த நீதிமன்றக் கட்டிடங்களை எல்லாம் புதுப்பித்துக் கொடுக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால், புதிதாக நீதிமன்றக் கட்டிடங்களை ''மெயின் கேம்பஸிலே'' கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

இன்று நமது தமிழக அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை A Bench of High Court af Madurai என்கிற நிலையிலே, உயர்நீதிமன்றத்தினுடைய ஆயம் ஒன்றை மதுரையிலே அமைக்கின்ற கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது. எங்களுடைய கோவை மாவட்டம் மற்றும் நீலகிரி, பெரியார், சேலம்,

**தர்மபுரி** ஆகிய ஐந்து மாவட்டங்களிலே, கிரிமினல் கேஸ்கள், சிவில் கேஸ்கள், லேபர் கேஸ்கள், ரிட் கேஸ்கள், அதுமட்டுமின்றி, சென்சேஷனல் கேஸ்களும் அதிகமாக உள்ளன. ஆகவே, அந்த மாவட்டங்களிலே, குறிப்பாகச் சொல்லப்போனால், நீலகிரி மாவட்டத்திலே, கூடலூரில் இருப்பவர்கள் எல்லாம் கோவைக்கு வருவதற்கு 5 மணி நேரம் பிடிக்கும். அவர்கள் அங்கிருந்து 500 கி.மீ. பயணம் செய்துதான் சென்னைக்கு வரவேண்டிய சூழ் நிலை இருக்கிறது. மதுரைக்கு உயர்நீதிமன்றத்தினுடைய ஆயத்தை அமைப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அதே நேரத்திலே அதிகமான எண்ணிக்கையிலே வழக்குகள் தேங்கிக் கிடக்கின்ற கோவைப் பகுதியை மையமாகக் கொண்டு அங்கேயும் உயர்நீதி மன்றத்தினுடைய ஆயம் ஒன்றினை அரசு அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்படி அமைக்க முடியாத ஒரு சூழ்நிலையிலே குறைந்தபட்சம் கோவையை மையமாகக் கொண்டு '' சர்க்யூட் கோர்ட் '' என்கிற வகையிலே, ஹைகோர்ட்டினுடைய முகாம் நீதிமன்றத்தையாவது உருவாக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி திரு. ஜஸ்வந்த்சிங் தலைமையில் ஒரு குழு அமைத்து, அந்தக் குழு, தமிழ்நாட்டிலே பல்வேறு இடங்களிலே சென்று சீனியர் வக்கீல்கள் மற்றும் தொழில் அதிபர்கள், வழக்காடும் மக்கள், அரசு அதிகாரிகளுடைய கருத்துக்களையெல்லாம் கேட்டறிந்து இருக்கின்றன. அந்தக் குழு, கோவை, உதகை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கொடைக்கானல், திருநெல்வேலி, சென்னை ஆகிய இவ்வளவு இடங்களுக்கும் 1984-லே சென்று கருத்துக்களையெல்லாம் கேட்டு அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறது. நான் இந்த நேரத்திலே சொல்லி கொள்வதெல்லாம், அவர்களுடைய கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்தால், கோவையிலேயும், நீதிமன்றம் அமைக்கக்கூடிய வாய்ப்பு - உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு ஆயம் அமைக்கின்ற வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நம்முடைய அரசுக்கு நான் பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழகத்திலே ஏறத்தாழ 5,000 வக்கீல்கள் இருந்தனர். அன்றைக்கு மக்கள்தொகை 2 கோடி. அன்றைய படிப்பறிவு மக்கள் தொகையிலே 5 சதவீதம். இன்றைக்கு நம்முடைய நாட்டின் மக்கள்தொகை 5½ கோடி. இன்றைக்குப் படிப்பறிவு 60 சதவீதம். இன்றைக்கு தமிழ்நாட்டில் 30,000 வக்கீல்கள் இருக்கின்றனர். ஆகவே, மக்கள் படிப்பறிவு காரணமாக மக்கள் ஜனத்தொகை காரணமாக, தங்களுடைய உரிமைகளை இன்றைக்குத்



தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதனால், அதிகமான வழக்குகள் இன்றைக்கு நீதிமன்றங்களிலே தேங்கி இருக்கின்றன. நீதிமன்றங்களினுடைய எண்ணிக்கையும், நீதிபதிகளின் எண்ணிக்கையும் இன்று வளர்ந்து கொண்டிருக்கின்றன. மக்கள் தொகையின் அடிப்படையிலும், படிப்பறிவின் அடிப்படையிலும், அதேபோல வக்கீல்களுடைய அளவு இன்றைக்கு மிக அதிக அளவில் இருக்கின்ற நிலையை கருத்திற்கொண்டு, அதிகமான நீதிமன்றங்களையும், நீதிபதிகளையும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, காவல் நிலையங்களில் எல்லாம் நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியிலிருந்த நேரத்திலே ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு சட்ட வல்லுநரை நியமிக்கிற ஒரு கருத்துரு இருந்தது. ஏனென்றால், கிரிமினல் கேஸ்கள் போடுகின்ற நேரத்திலே அங்கே பணியாற்றுகின்ற போலீஸ் அதிகாரிகளுக்கு, சட்ட நுணுக்கங்கள், சட்ட வல்லுநருக்குத் தெரிந்த அளவுக்கு தெரியாத காரணத்தால் உண்மையான குற்றவாளிகள்கூட சட்டத்தினுடைய பிடியிலிருந்து தப்பித்துக் கொள்கிற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு சட்ட ஆலோசகரை நியமிக்கிற கருத்துரு இருந்தது. அந்தக் கருத்துருவை மீண்டும் பரிசீலனை செய்து, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு சட்ட ஆலோசகரை நியமிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதன் மூலம் உண்மையான குற்றவாளிகள் தப்பிக்காமல் தடுக்கலாம். அதே நேரத்தில் வேலையற்ற வக்கீல்களுக்கும் வேலை வாய்ப்பை கொடுக்கின்ற அமைப்பாகச் செயல்படும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு நம்முடைய தென் இந்தியாவின் தலைமை நகரமாக சென்னை விளங்குகிறது. சென்னையிலே உள்ள உயர்நீதிமன்றம் மிகவும் பழமையானது. மிகவும் பெருமை வாய்ந்தது. உலகப் புகழ் பெற்றது. புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே சென்னை சட்டக் கல்லூரியிலே, உச்ச நீதிமன்றத்தினுடைய பிரிவை, சென்னையிலே அமைப்பதற்காக அன்றைய குழு சட்டக் கல்லூரியைப் பார்வையிட்டது. நம்முடைய புரட்சித் தலைவர் கூட சட்டக் கல்லூரியை எடுத்துக் கொள்ளுங்கள், நீதிபதிகளுக்குத் தேவையான அளவுக்கு வீடுகளையும், மற்ற வசதிகளையும் நாங்கள் செய்து கொடுக்கிறோம் என்று தெரிவித்ததாக நாங்கள் அறிகிறோம். இன்றைக்கு நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்கின்ற

போது சுப்ரீம் கோர்ட்டின் பிரிவை இங்கே அமைக்க உச்ச நீதிமன்றம் இசைவு அளிக்கவில்லை என்று வருத்தமான செய்தியைப் பார்த்தேன். இது மிகவும் வருத்தப்படக்கூடிய செய்தி. ஆகவே, மாநில அரசு நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே எப்படியும், மீண்டும் உச்ச நீதி மன்றத்தினுடைய ஆயம் ஒன்றை சென்னையிலே அமைப்பதற்கு தென்னிந்தியாவின் தலைமை நகரமாக இருக்கக்கூடிய சென்னையிலே அமைப்பதற்கு மீண்டும் மத்திய அரசையும், சுப்ரீம் கோர்ட்டையும் பரிசீலனை செய்வதற்குரிய நடவடிக்கைகளை நம்முடைய மாநில அரசு எடுக்க வேண்டுமென்று என்னுடைய பணிவான வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). நீண்ட நாட்களுக்குப் பிறகு பேசுகிறேன். ஆகவே 5 நிமிடமாவது அதிகம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.55

அதைப்போல் "கன்ஸ்யூமர்ஸ் புரொடக்ஷன் ஆக்ட் 1986"—நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ல் இது ஒரு மத்திய சட்டம். இதன்படி கன்ஸ்யூமர்ஸ் கோர்ட்டுகளுக்கு, 3 நீதிபதிகள் ஒரு கோர்ட்டுக்கு இருக்கிறார்கள். அதில் ஒருவர் மட்டும் ஜுடிஷியல் மெம்பர். மற்ற இருவர் "நான்-அபிஷியல் மெம்பர்ஸ்" nominees of political parties. கடந்த தி.மு.க. ஆட்சியின்போது நியமிக்கப்பட்டவர்கள் 5 ஆண்டுகளுக்கு பதவி நீக்கம் செய்ய முடியாத அளவுக்கு சட்டம் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அவர்கள் எல்லாம் பொலிட்டிக்கலாகச் செயல்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பொலிட்டிக்கல் வென்டேட்டாவாக இருக்க முடியாது என்று சொல்ல முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் உரிய சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்து அந்த நீதி மன்றங்களிலே ஜுடிஷியல் மெம்பர் ஒருவர் மட்டும் போதும்; மீதி இருக்கிற இரண்டு பேர்களையும்—மெம்பர்ஸ் ஆஃப் தி பொலிட்டிக்கல் பார்ட்டீஸ்—நீக்க வேண்டுமென்று நம்முடைய அரசை மிகப் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இந்த நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலே வழக்கறிஞர் பணியும் மருத்துவப் பணியும், legal services and medical services are brought within the ambit of this Act. அப்படிச்செய்தால் if the services of the lawyers and the services of the doctors are brought under this Act it will be stoutly opposed என்ற



கருத்தை நான் இந்த நேரத்திலே சொல்கிறேன். ஏனென்றால் வழக்கறிஞர் தவறு செய்தால் அவர்களைத் தண்டிக்க சட்டம் இருக்கிறது. அட்வகேட்ஸ் ஆக்ட் மற்றும் பார் கவுன்சில் ஆஃப் இந்தியா இருக்கிறது. அந்தக் கவுன்சில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

அதைப்போல மெடிக்கல் கவுன்சில் ஆஃப் இந்தியா, டாக்டர்கள் தவறு செய்கிறபோது உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது; அதற்கு வழிவகை இருக்கிறது. இந்தச் சூழ்நிலைகளிலே அவர்களை இந்த நுகர்வோர் பாதுகாப்பு எல்லைக்குள் கொண்டுவந்தால் அவர்கள் பயமின்றி ஆபத்தான கேஸ்களை எடுத்து வைத்தியம் செய்ய முடியாது. அதேமாதிரி தோற்றுப்போகிற வழக்குகளை வக்கீல்கள் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகிவிடும். இந்தச் சூழ்நிலை மேல் நாடுகளிலும் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். எனவே மருத்துவப் பணியையும் வழக்கறிஞர் பணியையும் இந்த நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் குட் பெயித், things done in good faith should not be questioned in such forums என்று சொல்வார்கள். ஆகவே, அந்தவகையிலே இன்றைக்கு கோவை வழக்கறிஞர் சங்கம் இதைக் கடுமையாகக் கண்டித்து, அவர்கள் ஒரு தீர்மானத்தைக்கூட நிறைவேற்றி இருக்கிறார்கள். அதனால் எதிர் காலத்திலே நன்மை பயக்கும் வகையிலே இந்தச் சட்டத்திற்கு உட்பட்டு மருத்துவப் பணியும் வழக்கறிஞர் பணியும் இல்லாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல "கிரிமினல் புரொசீஜர் கோடு 1973" அதன்படி செக்ஷன் 438-ன்படி முன்ஜாமீன்—ஆன்டிசிபேட்டரி பெயில்—கொடுக்கின்ற அதிகாரம் மாவட்ட செசன்ஸ் நீதிபதிகளுக்கு இருக்கிறது. ஆனால் தற்சமயம் அதனுடைய அமென்ட்மென்ட் ஆக்டாக, செக்ஷன் 49-Amendment made by Amending Bill No 56/88 which is a Central Bill இது மத்திய அரசினுடைய சட்டம். மத்திய அரசு நாடாளுமன்றத்திலே இன்றைக்கு சட்டத் திருத்தம் கொண்டு வந்து மாவட்ட செசன்ஸ் நீதிபதிகளுக்கு முன்ஜாமீன் கொடுக்கின்ற அதிகாரத்தை எடுக்கின்ற வகையிலே மசோதா தாக்கல் செய்திருக்கிறது. அப்படி தாக்கல் செய்து, அது வெற்றிபெறுமானால் முன்ஜாமீன் பெற வேண்டியவர்கள் எல்லாம் சென்னையில் இருக்கிறவர்களானாலும் சரி, மதுரையில் இருக்கிறவர்களானாலும் சரி அல்லது

கன்னியாகுமரியிலே இருக்கிறவர்களானாலும் சரி, அத்தனை பேரும் சென்னைக்கு வந்து உயர்நீதிமன்றத்திலேதான் முன்ஜாமீன் பெறவேண்டுமென்ற துர்பாக்கியமான நிலை ஏற்படும். ஆகவே, இப்போது இருக்கிற வகையிலே தொடர்ந்து மாவட்ட செசன்ஸ் நீதிபதிகளுக்கு முன்ஜாமீன் கொடுக்கிற அதிகாரம் அவர்களிடமே இருக்க வேண்டும். அதற்கு மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு தமிழ்நாட்டிலே கால்நடைகளுக்கு தனியாக ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறது. தமிழுக்கு என்று தஞ்சையிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அதைப்போல மனையியலுக்கு கோவையிலே ஸ்ரீ அவிநாசிலிங்கம் பல்கலைக் கழகம் இருக்கிறது. அதைப்போலவே மருத்துவத்திற்கு தமிழ்நாடு மெடிக்கல் யூனிவர்சிட்டி இருக்கிறது. அதைப்போல விவசாயத்திற்கு கோவையில் தமிழ்நாடு அக்ரிகல்சர் யூனிவர்சிட்டி இருக்கிறது. அதைப்போல தொழில் நுட்பத்திற்கு சென்னையிலே அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அந்தவகையிலே அதையொட்டி நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே தமிழ்நாட்டிலே சட்டப் பல்கலைக் கழகம் (லா யூனிவர்சிட்டி) ஒன்றை உருவாக்குவதற்கும் நம்து அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே சட்டப் பல்கலைக் கழகம் வந்து, கோவையிலும், திருச்சியிலும், மதுரையிலும், சென்னையிலும் இருக்கக்கூடிய சட்டக் கல்லூரிகளை எல்லாம் அதனுடைய எல்லைக்குள் கொண்டுவந்து, தமிழ் நாட்டிலே சட்டத்தினுடைய வளர்ச்சி அபரிமிதமாக வருகிற வகையிலே நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

*திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாக மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் தங்களுக்கும் என்னுடைய



மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். Justice at the door steps என்பதனை கருத்திலேகொண்டு, மிகுந்த நிதி நெருக்கடியிலேயும் 40.8 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு அட்வகேட் என்கின்ற முறையிலே என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் கோரிக்கையாக நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில் பத்திரிகைக்காரர்களுக்காக ஒன்றை நான் இவ்விடத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், ஹைகோர்ட்டைப் பொறுத்தவரையிலே பத்திரிகையாளர்களுக்கு அங்கே ஒரு தனி சேம்பர் கிடையாது. அவர்களுக்கு ஒரு தனி அறை அமைத்துக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Parliament, Executive and Judiciary are the three wings of the Indian Constitution. The laws made by us are executed by the Executive and protected by the Judiciary என்பது மரபு ஆகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல், மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள் இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள்தான், நீதித் துறையிலே இருக்கின்ற நீதிபதிகளையோ, நிர்வாகத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளையோ மக்கள் சந்தித்து தங்கள் குறைகளை எடுத்துக் கூறமுடியாது. அவ்வாறு இருக்கின்றபோதும், நீதி நிர்வாகத் துறை சம்பந்தப்பட்ட மக்கள் குறைகளை முக்கியமாக நீதித் துறை சம்பந்தப்பட்ட மக்கள் குறைகளை இங்கே சொல்ல கடமைப்பட்டு உள்ளேன். டெல்லி உயர் நீதிமன்றம், அதாவது ஏ.ஐ.ஆர், 1985, டெல்லி. 266 ஹெட் நோட் - பி.

'The Court should not have an attitude that they alone are the protectors of fundamental rights of the citizens and democratically elected Governments have no such feeling or inclination' மேலும் 'The people elect their representatives in a democratic form of Government and it is the duty of the elected representatives to safeguard the interest of the citizens they represent and satisfy the democratic values of the people they represens என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேல் நாடுகளில் நீதி விரைவிலே

வழங்கப்படுகிறது. உதாரணத்திற்கு நாம் குத்துச்சண்டை வீரர் டைசன் கேஸ்-ஐ எடுத்துக் கொள்ளலாம், ஆனால் நம் நீதிமன்றங்களுடைய நிலைமை என்ன? இங்கே அவ்வாறு இல்லை. "ஜஸ்டிஸ் டிலேய்ட் இஸ் ஜஸ்டிஸ் டினைட்" என்பதாகும். நம் நீதிமன்றங்களிலே பல வழக்குகளிலே ஜட்ஜ்மென்ட் ரிசர்வ்ட் ஆகி பல நாட்கள் ஆகியும், சில வழக்குகளிலே 2, 3 ஆண்டுகள் ஆகியும் தீர்ப்புகள் வழங்கப்படவில்லை. இது ஏன் என்றே எனக்குத் தெரியவில்லை. தீர்ப்பு கூறி பல மாதங்கள் ஆகியும் ஆர்டர் காபீஸ் கிடைப்பது இல்லை. Then how can the litigart enjoy the fruits of the Decrees in his favour;

இதைத்தான் ஜஸ்டிஸ் கிருஷ்ணய்யர் அவர்களே "ஜஸ்டிஸ் அட் தி கிராஸ்ரோட்ஸ்" என்ற புத்தகத்திலே, 275-வது பக்கத்திலே சொல்லியிருக்கிறார், 'Justice and Chief Justices have practised the dubious art of non-delivery of judgements even years after arguments are closed. Some of them have pretifed without pronouncing judgements. அதுமட்டுமல்ல 'some judges in the High Courts resort to the sneaky practice of pronouncing judgements and promptly taking them backhome, with the result that nobady can see these hidden pronouncements. Copies obviously are not available for months. என்று ஜஸ்டிஸ் கிருஷ்ணய்யர் அவர்கள் இதைப்பற்றி சொல்லியிருக்கிறார் இன்றைக்கு நீதிமன்றங்களிலே பல வழக்குகள் சிவில் கிரிமினல், லேபர் டிஸ்பியூட்ஸ், டேக்சஸ் கேஸ் போல பல கேஸ்கள் 10 வருடங்கள் ஆகியும் கூட முடிவடையாத நிலையிலே இன்றைக்கு இருக்கிறது, இதன் பின் அப்பீல் சுப்ரீம் கோர்ட்டு என்று போகின்றபோதும், ஒரு லிட்டிகண்ட் இப்போது தன் வாழ்நாளிலே பெரும்பகுதியை கோர்ட்டிலேயே கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, கிரிமினல் கேசஸ் தாமதம் ஆகும்போது the accused are put to a lot of mental agony and it furher affects their fundamental rights i. e. their personal liberty guaranteed under Article 21 of the Constitution. அவர் நிலை என்ன? நம்முடைய அரசில் ஏதோ ஒரு கோப்பை 8 நாள் தாமதம் என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டி இருக்கிறது, ஆனால் அதே நேரத்திலே பல வழக்குகள் இன்றைக்குத் தேங்கிக் கிடக்கின்றன, பல வருடங்கள் ஆகியும் அப்படியே இருக்கின்றன. அவைகள் நிலை என்ன? அதனால் பாதிக்கப்பட்டவர்கள், லிட்டிகன்ட்ஸ் நிலை என்ன? அவர்களுடைய உரிமைகள் எல்லாம் பாதிக்கப்படவில்லையா என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், அதே போன்று லேபர் கேஸ்களில் எல்லாம் டிஸ்மிசல் ஆர்டர் பாசாகி வழக்கிலே வெற்றிபெறும் தொழிலாளிக்கு அந்த தீர்ப்பு அவர் ரிட்டையர்மெண்ட் ஏஜுக்கு பின்னர் வருகிறபோது, அவருடைய நிலை என்ன? நம் ஹைக்கோர்ட்டிலே லேபர் கேஸ்களை உடன் விசாரிக்க



தனி பெஞ்ச் ஒன்று அப்போது இருந்தது, இப்போது இல்லை, அதேபோன்று டேக்ஸ் பெஞ்சும்: ஹைக்கோர்டை எடுத்துக்கொண்டால் வருடத்திற்கு 20 ஆயிரம் ரிட் பெட்டிஷன்களுக்கு மேல் பைல் ஆகின்றன; அதில் 5 ஆயிரம் ரிட் பெட்டிஷன்கள் சென்ட்ரல் கவர்ன்மென்ட் மேலும், ஆயிரம் அட்மிஷன் ஸ்டேஜிலும் டிஸ்மிஸ் ஆகின்றன; 14 ஆயிரம் கேஸ்கள் அட்மிட் ஆகின்றன. அதில் 90 பர்சன்ட் கேஸ்களில் ஸ்டே கொடுக்கப்படுகிறது, சுப்ரீம் கோர்ட் இதைப்பற்றி சொல்லும்பொழுது blaket stay and ex-parte injunction. கொடுக்கக் கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருந்தும், அதை ஏனோ நம்முடைய நீதிமன்றங்கள் பின்பற்றுவதில்லை.

பிற்பகல் 1-05

லாங்ட் அக்யூசிசன் கேஸ்கள் ஸ்டே, இன்ஜெங்சன் கொடுக்கப்பட்ட நிலையிலே பல்லாண்டுகளாக இருப்பதால் அதனால் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியிருப்பது நம்முடைய அரசும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும்தான். தடையாணையினால் பாதிக்கப்பட்ட ஸ்கீம்களை அமுல்படுத்த இன்றைக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு பல மடங்கு அதிகமாக செலவு பிடிப்பதால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதோடு டாக்ஸ் பேயர்ஸ், பப்ளிக், பணமும் வீண் ஆகிறது,

அதைப்போல பல நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் நம்பர் போடுவதில் டிலே ஆகிறது.

அடுத்தபடியாக எக்சிகியூசன் பெட்டிசன். கோர்ட் ஆணைகளை நிறைவேற்ற, பொசசன் எடுத்துக் கொடுக்கவோ அல்லது attach செய்வதோ Bailiff-தான். Bailiff-ஐ நன்றாகக் கவனிக்காவிட்டால் அந்த டெலிவரி ஆர்டர் டெக்னிக்கலாக return ஆகிவிடும். அதேபோன்று சம்மனை சர்வ் செய்யும்போதும் பணம் பெறுபவர் பணம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

ஆர்ட்டிகள் 226 மற்றும் 227-ல் ஹைக்கோர்ட்டினுடைய Power-ஐ பொறுத்தவரையில் சூப்பர்வைசரி Power தான், Applate Power கிடையாது.

ஆர்ட்டிகள் 226 Discretionery remedy என்பதால் கோர்ட்டில் மிகவும் காசியஸ் ஆக உபயோகிக்க வேண்டும். இதைப்பற்றி ஒரு உயர்நீதிமன்றத் தீர்ப்பிலே கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

In a changed society, the Courts and the procedure adopted by the Courts cannot remain state Though the Courts have the power to give directions to Executive the Court however is ill equipped to run the administration என்பதை மனதிலே நாம் கொள்ள வேண்டும்.

அதேபோன்று ஆர்ட்டிகள் 227-லே ஹைக்கோர்ட்டினுடைய பவர், எல்லா கோர்ட்டுகளையும் பொறுத்தவரை சூப்பர்வைசரிதானே ஒழிய அப்பலேட் கிடையாது. ஆர்ட்டிகள் 227 சூப்பர்வைசரி பவரைக் கொண்டு செக்யூரிட்டி ஆக்டில் கைது செய்யப்பட்டிருக்கிற ஒருவரை பெயிலில் விட முடியாது. ஏனென்று சொன்னால்,

The decision on whether the requirements of national security outweigh the duty of fairness in any particular case is for the Government to make and not for the Courts. The Government alone has access to the necessary information and in any event the judicial process is unsuitable for making decision on National security என்று ஒரு உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பிலே கூறியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு, பல வழக்குகள் பல நிலைகளின் காலதாமதம் ஆகின்றன. நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்த அவையின் முன்னால் வைத்திருக்கிற ரிப்போர்ட்டை report of the Comptroller and Auditor General of India Report dated 31st March 1989 நன்றாகப் படித்திருப்பார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதிலே litigations, Government litigations பற்றிய ஒரு சாப்டரிலே அரசு வழக்குகளிலே ஏற்படுகின்ற தாமதத்தைப் பற்றி விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தவறுகள் எல்லாம் களையப்பட வேண்டுமென்று நான் சொல்லுகின்ற அதேநேரத்தில் கன்ஸ்யூமர் புரட்டக்சன் கவுன்சில் பற்றி நான் இங்கே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த கன்ஸ்யூமர் புரட்டக்சன் ஆக்ட் 1988-லே வந்தபோது நம்முடைய அன்றைய கவர்னர் ஆட்சியிலே ஜஸ்டிஸ் சண்முகம் அவர்களையும், பழனியப்பன் அவர்களையும், திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களையும் கொண்ட ஒரு ஸ்டேட் கமிஷன் அமைக்கப்பட்டது. அதேபோன்று டிஸ்ட்ரிக்ட் ஃபோரம்ஸ் அமைக்கப்பட்டன. இதனுடைய உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 5 ஆண்டுகளாக இருந்தாலும் அவர்களைப் பதவி நீக்கம் செய்தது முந்தைய அரசு. அதற்கு சட்டத்திலே இடமில்லை. ஆனால் அவர்கள் அதற்கு புறம்பாக ஜஸ்டிஸ் காதர் அவர்களையும் ஊ. ஜி. மாணிக்கத்தையும் ஸ்டேட் கமிஷனிலும், டிஸ்ட்ரிக்ட் ஃபோரம்ஸில் தன் கட்சிக்காரர்களையும் போட்டது மட்டுமல்லாமல் மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர்.



அவர்களுக்கு எதிராக சாட்சி சொன்ன மாணிக்கத்தை அந்த ஸ்டேட் கமிஷனிலே கொண்டுவரும் பொருட்டு வயது வரம்பை 70-ல் இருந்து 75 ஆக கருணாநிதி மாற்றினார். இன்று இந்த இயக்கம் அரசுக்கு எதிராக பல வழக்குகளிலே காழ்ப்புணர்ச்சியோடு தீர்ப்பை வழங்குகின்றது. இது உடனடியாக களையப்பட வேண்டுமென்று சொல்லி, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> செல்வி எல். சுலோசனா.

பிற்பகல் 1–10

<u>செல்வி எல். சுலோசனா :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டின் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகளின் மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து, எனது கருத்துக்களைக் கூற விழைகிறேன், நீதித் துறை, சிறைச்சாலைகள் துறைக்கு பல நல்ல அம்சங்களுக்காக இம்மானியத்திலே நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை ஆதரிக்கிறேன்,

சட்டத்தின் ஆட்சி நடைபெறுகின்ற நமது நாட்டில் சட்டப்படி கிடைக்க வேண்டிய நீதியின் பயனை சிலர் பெறுவதில்லை, காரணம் அறியாமைதான், உதாரணமாக வாகனங்களினால் விபத்துக்கள் ஏற்பட்டு. பாதிக்கப்படுகிறவர்கள் அதற்கு இழப்பீடு கேட்டு வழக்கு தொடரலாம் என்பதையே பலர் அறியாமல் உள்ளனர், ஒருவேளை அவர்கள் தெரிந்து வழக்குத் தொடர அவர்கள் வரும்பொழுது, வழக்குத் தொடருவதற்குரிய காலவரையறை முடிந்து இருக்கும். இதனால் சட்டப்படி, நியாயப்படி கிடைக்க வேண்டிய பயன்களை அவர்கள் பெற முடியாமல் போய்விடுகிறது, எனவே தற்பொழுது சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ''புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம்'' போன்று ஒரு திட்டத்தை ''இலவச சட்ட உதவி மையம்'' மூலம் வழக்கறிஞர் குழு ஒன்றைக் கொண்டு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு அவர்கள் பாதிக்கப்படும் பொழுது, அவர்கள் உரிமைகள் பாதிக்கப்படும்பொழுது. அவர்கள் மேற்கொள்ள வேண்டிய சட்டப்படியான நடவடிக்கைகள் பற்றியும், அவர்களுக்கு உரிய சட்டப்படியான உரிமைகள் பற்றியும் அறிந்துகொள்ள முகாம்கள் நடத்தி அறிவுரைகள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்பொழுது வாகனங்களினால் ஏற்படும் விபத்துக்களில் ஒரு நபர் இறந்து விட்டால் ஐ. பி. சி. 304-ஏ பிரிவின் கீழ் வழக்கிடப்படுகிறது. இதற்கு அபராதம் அல்லது சிறைத் தண்டனை என்று தண்டனை உள்ளது. பெரும்பாலாக அபராதத் தொகையைச் செலுத்திவிடுகின்றனர். குற்றவாளிக்கு அச்ச உணர்வு ஏற்படுவதில்லை. சட்டப் பிரிவைக் கடுமையாக்கினால் அவர்களுக்கு அச்ச உணர்வு ஏற்படும். விபத்துக்கள் குறைய வாய்ப்புண்டு. எனவே சட்டப் பிரிவை கடுமையாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுதல், விற்றல் ஆகிய குற்றங்கள் 'பெயிலபிள் அபென்ஸ்' ஆக உள்ளதை தக்க முறையில் சட்டத்திருத்தம் செய்து நான்-பெயலபிள் அபென்சாக மாற்றி கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டால் மேற்படி குற்றங்கள் குறையும். பல ஆண்டுகளாக உயர்நீதி மன்றத்தில் உள்ள பட்டா சம்பந்தமான மேல்முறையீடு வழக்குகள் விரைவில் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நுகர்வோர் நீதி மன்றத்திற்கு கடந்த தி. மு. க. ஆட்சியில் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் 2 பேர் தி. மு. க. வைச் சேர்ந்தவர்களே இன்னும் அங்கம் வகிக்கின்றனர். அரசுக்கெதிரான வழக்குகளில் நியாயமான தீர்ப்பு கிடைக்காமல் போகலாம். எனவே தி.மு.க. வைச் சேர்ந்தவர்களை நீக்கி விட்டு வேறு புதிய உறுப்பினர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேட்டுப்பாளையம் நகரத்தில் முன்சீப் கோர்ட் அமைக்கப்பட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையாகும். மேட்டுப்பாளையம் நகரத்தைச் சுற்றி நிறைய கிராமங்கள் உள்ளன. தற்சமயம் சிவில் வழக்குகளுக்காக கோவையிலுள்ள கோர்ட்டுக்குத் தான் செல்ல வேண்டும், இதற்காக சுமார் 120 கிலோ மீட்டர் கோவைக்குப் பயனம் செய்பவர்களும் உண்டு. இப்பகுதியிலிருந்து நிறைய சிவில் வழக்குகள் பைலிங் ஆகிறது, அரசால் ஆய்வு செய்து, உயர்நீதி மன்றத்தால் கடந்த 2 வருடங்களுக்கு முன்பே நோட்டிபிகேஷன் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே எங்கள் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே மேட்டுப்பாளையத்திற்கு ஒரு முன்சீப் கோர்ட் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.



மேலும் தற்சமயம் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குள்ள பிராபர்டி ரூம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. பயன்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. அதற்குப் புதிய அறைகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்ட நீதி மன்றத்திலே நான் வழக்கறிஞராகத் தொழில் புரிந்த காரணத்தாலே, கோவை நீதி மன்றங்கள் குறித்து சில கோரிக்கைகளை அரசின் முன் வைப்பது எனது கடமையாகும். கோவை நகரத்தில் உள்ள அனைத்து குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்திற்குள், அதாவது மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்குள் அமைக்கவேண்டும். இதனால் பொது மக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் ஏற்படும் சங்கடங்கள் தவிர்க்கப்படும். மேலும் அந்த வளாகத்திற்குள்ளேயே 'அட்வகேட் சேம்பர்ஸ்' கட்டிக் கொடுக்கப்பட வேண்டும், அடுத்து வழக்கறிஞர் தொழிலுக்கு புதியதாக வரும் இளம் வழக்கறிஞர்கள் சார்பாக இந்த அவையின் முன்னே ஒரு முக்கியமான கோரிக்கையை வைக்கின்றேன். இளம் வழக்கறிஞர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு. உதவித் தொகையை அரசு வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு கருணை உள்ளத்தோடு ஆய்வு செய்து கோரிக்கையை ஏற்று ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நீதி நிர்வாகம் பற்றிய மானியமாக இருந்தாலும், எனது தொகுதி பற்றிய பிரச்சினைகள் சிலவற்றை இங்கே அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது எனது கடமையாகும்.

எனது தொகுதியில் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திலுள்ள கோவனூர் அண்ணன் தம்பி பள்ளத்தில் குட்டை அமைக்க, இரண்டாவது திட்டப் பட்டியலில் திட்ட அறிக்கைத் தயாரிக்கப்பட்டு அரசு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் கோவனூர் விவசாயிகள் அதிகம் நிறைந்த பகுதி. அவர்களுடைய 18 ஆண்டுக்கால கோரிக்கையை ஏற்று குட்டை அமைக்கப்பட்டால் அங்குள்ள விவசாயிகள் பலனடைவார்கள். அரசு விரைவில் அண்ணன் தம்பி பள்ளத்தில் குட்டை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு நிதி உதவியுடன், தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பல பணிகள் எனது தொகுதியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல்

உள்ளது. அதில் ஒன்று நெல்லித்துறை என்ற ஒரு தீவுப் பகுதிக்கு பவானி ஆற்றில் பாலம் அமைத்தல். அங்குள்ள மக்கள் ஆற்றைக் கடக்க மிகவும் சிரமப்படுகின்றனர். அப்பகுதி மக்கள் ஒரு முறை தேர்தலையே புறக்கணித்தார்கள். அப்படிப் பட்டவர்கள் இம்முறை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட வேட்பாளராக இருந்த என்னை எதிர்கொண்டு வரவேற்று, ''இம்முறை உங்கள் தலைவிதான் ஆட்சிக்கு வருவார், அவருடைய ஆட்சிக்காலத்திலாவது எங்களுக்கு விடிவு காலம் பிறக்க வேண்டும், இந்த ஊரின் மொத்த ஆதரவும் உங்கள் தலைவிக்கே'' என்று கூறி, அதன்படியே அனைவரும் இரட்டை இலைக்கே வாக்களித்தார்கள்.

பிற்பகல் 1-15

இந்தப் பாலம் ரூ. 1 கோடி திட்டத்தில் பார்ட்-2 ஸ்கீமில் கடந்த நான்கு வருடங்களாக அரசுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. அம்மக்கள் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கும் அந்தப் பாலத்தின் பணியை இந்த வருடத்திலாவது மேற் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்தப் பாலம் அமைக்கப்பட்டால் பில்லூர், ஊட்டி ஆகிய இடங்களுக்குப் பிரயாணம் செய்யும் தூரத்தை விட சுமார் முறையே 40 கிலோ மீட்டர், 18 கிலோ மீட்டர் குறைவாக அமையும். இதனால் காலவிரயம் தவிர்க்கப்படும். மேலும், எரிபொருள் சிக்கனம் ஏற்படும். இந்தப் பாலம் அமைவதால் இதுபோன்ற பலவித பயன்கள் ஏற்பட வாய்ப் புள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் அரசுக் கல்லூரியோ, அரசு தொழில் நுட்பக் கல்லூரியோ அல்லது தொழில் பயிற்சிப் பள்ளியோ கிடையாது. ஏழை எளிய மக்களும், ஆதிவாசி மக்கள், மலைவாழ் மக்கள் அதிகமாக உள்ளனர். அவர்கள் பயன் பெற அரசு தொழில் பயிற்சிப் பள்ளியையாவது நிறுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் பல பகுதிகளில் ஆதிவாசிகள் வசித்து வருகின்றனர். இவர் களுக்கு அரசு வீடு கட்டித்தர வேண்டும். மின் விளக்கு, குடி நீர் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். அங்குள்ள காடுகளில் கிடைக்கக்கூடிய பொருட்களை, கூட்டுறவுத் துறை மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்து தரவேண்டும். தனியார் கள் மிகவும் குறைவாக அப்பொருட்களை வாங்கிச் செல் வதால், அம்மக்களுக்கு பொருட்களுக்கு உரிய விலை கிடைப்ப தில்லை. ஊட்டி செல்லும் வழியில் உள்ள அரசு பழப் பண்ணை அமைந்துள்ள கல்லாறு பகுதியை சுற்றுலா மையமாக்கவேண்டும். இதனால் அரசுக்கு வருமானம் பெருகும். அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு மாய்க் கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி. மானியக் கோரிக்கையை ஆதரித்து அமைகிறேன், நன்றி. வணக்கம்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 13 மற்றும் 14-ன் கீழ் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கையின்கீழ், எனது கருத்தினைக் கூற வாய்ப் புக் கொடுத்தமைக்காக எனது நன்றியினை எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

1992-93 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் புதிய நீதிமன்றங்களை அமைக்கவும், நீதி மன்றங்களுக்கு இடவசதியளிக்கவும், புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கும், நீதி மன்ற வளாகத்தில் வசதிகள் செய்து தருவதற்கும் பல கோரிக்கைகள் குவிந்துள்ளபோதிலும் நமது அரசின் நிதி நிலை பற்றாக்குறையிலும் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி பொதுமக்கள் நீண்ட நாள் கோரிக்கை யினை ஏற்று, அம்பாசமுத்திரத்தில் துணை நீதிமன்றத்தை ஏற்படுத்த ரூ. 10.65 லட்சத்தை ஒதுக்கியிருப்பதற்கு மாண்பு மிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரத்தில் 150 வருடங்களுக்கு மேலாக முன்சீப் கோர்ட் இயங்கி வருகிறது. பிரிக்கப்படாத திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மிகப் பழைமையான கோர்ட் அம்பா சமுத்திரம் கோர்ட் ஆகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தி லேயே தூய தமிழில் 100 ஆண்டுகளுக்கு முன் ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்ற அந்தப் பெருமை தமிழ்நாட்டில் உள்ள வேறு எந்தக் கோர்ட்டுக்கும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1941 ஆம் வருடம் முதல் 50 வருடங்களாக பிரிக்கப்படாத நாங்குநேரி வட்டத்தில் உள்ள பழவூர், வள்ளியூர், களக்காடு, சிங்கிகுளம் ஆகிய நான்கு பிர்க்காக்களும் அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட்டோடு சேர்ந்திருந்தன. ஆனால் அவைகள் புதி தாக சேருவதாக நினைத்து இப்போது ஆட்சேபணைகள் எழுப்பப்பட்டு, அந்த ஆட்சேபணைகள் சம்பந்தமாக மாவட்ட நீதிமன்றமும், உயர்நீதி மன்றமும் அதை விரிவாக ஆராய்ந்து அவை நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அம்பாசமுத்திரத்தில் சப்-கோர்ட் அமைப்பது சம்பந்தமாக வள்ளியூர், திருநெல்வேலி தென்காசி, ஆகிய கோர்ட்டுகளில் உள்ள வழக்குகளின் தன் மையையும், நிலுவையையும் கணக்கிட்டு, அவர்களுடைய ஆட் சேபங்களையும் தீர ஆராய்ந்து அம்பாசமுத்திரத்திற்கு சப்- கோர்ட் மிக மிக அவசியம் என்றும், வள்ளியூர், திருநெல்வேலி

மற்றும் தென்காசி வழக்கறிஞர்களுடைய ஆட்சேபணைகள் நியாயமற்றவை என்றும் மாவட்ட நீதிபதி அவர்கள் உயர் நீதிமன்றத்திற்கு விரிவான அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். உயர்நீதிமன்றமும் மாவட்ட நீதிபதியின் அறிக்கையை தீர்க்கமாகப் பரிசீலித்து மாவட்ட நீதிபதியின் அறிக்கையில் சொன்னவை உண்மை என்றும் அம்பாசமுத்திரத்திற்கு சப்-கோர்ட் தேவை என்பதையும் அதற்கு அம்பாசமுத்திரம் தாலூகா, நான் மேலே சொன்ன நான்கு பிர்க்காக்களும் ஆள்வரை ஆகியிருக்கும் என ஒப்புக்கொண்டு அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. களக்காடு, சிங்கிகுளம் பிர்க்காக்கள் அம்பாசமுத்திரத்திற்கு மிக அருகாமையில் உள்ளவைகள். பிரிக்கப்படாத நாங்குநேரி வட்டத்தில் உள்ள இராதாபுரம், திசையன்விளை, நாங்குநேரி, மூலக்கரைப்பட்டி ஆகிய நான்கு பிர்க்காக்கள் தொடர்ந்து திருநெல்வேலி சப்-கோர்ட்டுடன் தான் அன்றும் இன்றும் இணைந்திருக்கின்றன. அவைகள் அம்பாசமுத்திரம் சப்-கோர்ட்டோடு இணைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசினுடைய கொள்கை, நீதி மக்களுடைய வீட்டு வாசலுக்கு எளிதில் எடுத்துச் செல்லப்படவேண்டும் என்பது. அதை அனுசரித்துத்தான் அம்பாசமுத்திரத்திற்கு சப்-கோர்ட் மிக மிக அவசியம் என்பதை உயர்நீதி மன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. அதை அரசும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, விரைவிலே அம்பாசமுத்திரம் சப்-கோர்ட் தொடங்க விரைவில் ஆணை பிறப்பிக்க மாண்புமிகு முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிடவேண்டுமென்று வேண்டுகிறேன்.

பிற்பகல் **1.20**

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ல் அதாவது 26—12—1986-ல் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டது. இதன்படி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி தலைவராகவும், திறமை வாய்ந்த பட்டதாரி, வணிகர், சமூக சேவகி ஆகியோர் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேற்கண்டவர்கள் ஐந்தாண்டுகள் உறுப்பினராக இருக்கிறார்கள். ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் நியமனம் செய்யப்பட்டவர்கள் அனைவரும், அந்த தலைவர் தவிர, மற்றவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் எல்லாம் இரவிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் கூட்டத்திலே பேசுகிறார்கள். மறுநாள் காலையில் அங்கே போய் நுகர்வோர் கோர்ட்டில் இருந்து உறுப்பினராக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



அவர்கள் பொதுக் கூட்டத்திலே பேசும்போது, எங்கள் இடத்திலே இருக்கிற பதவிகளை உங்களால் ஒன்றும் பறிக்க முடியாது, எந்த ஆட்சியாலும் ஐந்தாண்டுக் காலத்திற்கு, என அவர்கள் பொதுக் கூட்டதிலே பேசுவதை நான் காதாலே கேட்டேன். எனவே எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், இவர்களை அப்புறப்படுத்த வேண்டிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து அந்த திராவிடமுன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த சமூகசேவகி பட்டதாரிகள் என்ற பெயரால் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று மாவட்ட நீதிமன்றங்கள் என்ற பெயரால் தற்போதுள்ள இன்றியமையா பொருள்கள் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க மாவட்ட செஷன்ஸ் நீதிபதி பதவித் தரத்தில் தலைமை அதிகாரிகளைக் கொண்டு ஆறேழு நீதிமன்றங்கள் உள்ளன. இது போன்ற சமுதாய கொடுமைகளை, பொருளாதார குற்றங்களை விசாரிக்க சென்னையில் இரண்டும், மதுரையில் ஒன்றுமாக ஆக மொத்தம் 3 நீதிமன்றங்கள் உள்ளன. எனது மாவட்டம் கேரள மாநிலத்தை ஒட்டியுள்ளதால் அரிசி போன்ற மக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் கடத்தப்பட்டு வந்துள்ளன. இப்படி கடத்தியவர்கள் மீது வழக்குகள் பதிந்து விசாரிக்க நெல்லை மாவட்டத்தில் தனியாக ஒரு நீதிமன்றம் அமைக்க அன்போடு வேண்டுகிறேன்.

மேலும் இந்த சந்தர்ப்பத்திலே என்னுடைய தொகுதியினுடைய ஒரே வேண்டுகோளை மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவியின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் பகுதியில் தொழிலாளர்களுக்கென்று ஒரே ஒரு தொழிற்சாலை மதுரா கோட்ஸ் என்ற நூற்பாலை ஒன்று உள்ளது. எங்கள் பகுதியில் அதிகமான நஞ்சை நிலங்கள் உள்ளன. அதே நேரத்தில் அந்தப் பகுதியிலே கரும்பை அதிகமாக பயிரிடுவதற்கு ஆவலாக விவசாயிகள் உள்ளார்கள். எனவே எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டிலே எங்கள் பகுதியில் கரும்புத் தொழிற்சாலையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சஞ்சய் ராமசாமி. குறுக்கீடு) திரு. நடேசன் பால்ராஜ் அவர்கள். திரு. சஞ்சய் ராமசாமி உட்காரவேண்டும்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சப்-கோர்ட் விஷயமாக, அம்பாசமுத்திரத்திலே அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். நாங்குனேரி தொகுதி, இராதாபுரம் தொகுதி மக்கள் பெரிய வேதனையும் துன்பமும் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அம்பாசமுத்திரத்திற்கு எங்கள் பகுதியில் இருந்து பஸ்கள் கிடையாது. இங்கே திருநெல்வேலியில் ஐந்து நிமிடத்திற்கு ஒரு பஸ் வசதி இருக்கிற காரணத்தாலே அங்கே கோர்ட்டில் இருக்கிற வக்கீல்கள் ஸ்டிரைக் செய்கிறார்கள். நான் ஒரு முறை சட்டமன்ற உறுப்பினர், பொறுப்பானவர் என்கிற முறையில் மக்கள் என்னிடத்திலே முறையிடுகிறார்கள். நான் அம்மாவிடம் சொல்லிவிட்டேன். அதனால் நடக்காது என்று சொல்லி விட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை. . . .

பிற்பகல் 1.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பேரும் அவரவர் தொகுதிக்காக வாதாடுகிறார்கள். நல்லது. திரு. சஞ்சய் ராமசாமி (குறுக்கீடு). இல்லை வேண்டாம். போதும். திரு. சஞ்சய் ராமசாமி பேசுங்கள்.

THIRU SANJAY RAMASAMY: Honourable Speaker, May I at the outset, thank the Honourable Chief Minister and the Honourable Law Minister for having opened the High Court Annexe Building. Our Chief Minister's interest in developing the infrastructure of the judiciary and her keenness in adequately meeting the requirements of the judiciary has been exemplified by her visit to the High Court of Madras which is the first such visit by any Chief Minister in Tamil Nadu. The needs of the lawyers are growing everyday, as the number of cases are increasing: as people are increasingly becoming aware of their power to litigate. Simultaneously, the number of cases pending in the Courts in Tamil Nadu is increasing rapidly. According to the Policy Note, 2,25,604 cases both Civil and Criminal, are pending at the end of 1991. This, imposes a heavy burden on the Hon. Judges of the High Court. Perhaps the number of cases pending can be reduced in the Courts, if the vacancies of the High Court Benches are filled up.

Apart from this, the Madras High Court has an Acting Chief Justice only. The powers of an Acting Chief Justice are regulated in many ways and, given the problems currently faced by the High Court, I request the Hon. Chief Minister and the Hon. Law Minister to ensure that the Chief Justice is appointed.





A quick look at the Courts, be it in the High court of madras or the Magistrates' Courts, would show you the dilapidated condition that they are in. Many Courts do not even have proper library facilities and, in many Courts, there is hardly any space for even the lawyers to sit. These facilities have to be given to such Courts.

When I spoke on the Policy Note on the Administration of Justice last year, I requested the Hon. Law Minister to air-condition the High Court. I reiterate this appeal and also request the Hon. Finance Minister to kindly consider this, although I fully understand the financial crunch the Government is facing.

A long-felt need of the people of Tamil Nadu has been the setting up of a Bench of the High Court at Madurai and a Bench of the Supreme Court at Madras. The Government is leaving no stone unturned and, on behalf of the legal community, I extend our gratitude to the Hon. Chief Minister and the Hon. Law Minister. At the same time, I request the Hon. Law Minister to move a Resolution for the setting up of a Bench of the Supreme Court at Madras and I request that this Resolution, when it is passed by this Hon. House, be delivered to the Supreme Court.

There has been a lot of criticism, in recent times, about the Terrorist and Disruptive Activities (Prevention) Act. My point is that, had this Act been used earlier by the previous Government, our late leader Shri Rajiv Gandhi would not have been assassinated. It is easy for people to criticise. But, today, the situation in Tamil Nadu is far better than what it was, thanks to the efforts by the Hon. Chief Minister (Thumping of desks) and also the effective use of this particular Act.

The Hon. Chief Minister has stated, during the course of this Session, that there are a number of magazines which have been writing unnecessarily, untrue stories about, not only her, but about the Memebers of the House. I think that every Member—in fact, I am ashamed to say that one of the members of my own Party has, in fact written against another member of our Party—should make sure that no Member maligns another Member, as it only puts the House into disrepute. The Press has an important duty. But, they should not take it as a tool to slander and defame people. That is absolutely wrong. Secondly, in order to prevent such malicious slander and defamation, I would appeal to the Hon. Chief Minister to kindly strengthen the defamation laws and also to set up a Defamation Court where the people who are affected by such defamation and slander can appeal and have their cases disposed off quickly.

பிற்பகல் 1-30,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை அலுவல் நேரம் பேரவையின் முன்னனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

THIRU SANJAY RAMASAMY : My colleague Mr. Sundaradoss stated that only retired judges are appointed in enquiries. There is nothing that prevents a sitting judge from being appointed. But in the current circumstances when there are so many cases pending, it would be most ridiculous to ask for a sitting judge to handle an enquiry commission. In conclusion, when I started the speech—and I was named to speak—the Hon. Law Miniater was seen wincing 'Oh not not again. He is going to talk about Virudhanagar Court'. The Hon. Member Mr. Pattabiraman when he spoke requested the Hon. Law Minister to change the existing district Court from Chengalpattu to Kancheepuram and keep an additional district Court at Chengalpattu. I would not like to hinder with the existing policy of the Government in keeping with the District Caurt at Srivilliputhur but I would request the Hon. Law Minister to kindly give us an additional District Court at Virudh..nagar atleast. With this, I thank you for giving me the opportunity to speak on the policy on Administration of Justice, Thank you.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன். அவருடைய நேரத்தைத் தான் உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன், ஆகவே. எஞ்சியிருக்கிற நேரத்தில் பேசி முடிக்க வேண்டும்,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிநிர்வாகம், சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கைகள் விவாதத்தில் என் கருத்துருக்களை எடுத்து வைக்க. வாய்ப்பளித்த தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன். நீதி தான் உயிர் மூச்சு என்று நீதிக்காக போராடி. உயர்நீதிமன்றக் கூடுதல் வளாகத்தைச் சிறப்பாகக் கட்டி முடித்து திறந்து வைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சரின் பொற்கரங்களுக்கு நன்றி, நன்றியென என் நன்றியினை காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நிதிக்கும், நீதிக்கும் இடையே நம் நாட்டில் எல்லா அத்தியாயங்களிலும் கடும்போர் நடந்து முடிந்து, கடைசியில் நிதியே வென்றது' நீதி தோற்றது என்ற அவலக்குரல் இன்னும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. நீதியை



வைத்து நியாயத்தைப் பெறலாம் என்ற சகாப்தம் மலையேறிப் போய் நிதியை வைத்துத்தான் நீதியை பெறவேண்டும். அதுதான் தலைவிதி என்ற சகாப்தம் தலையெடுத்துள்ளது.

தன் கன்றை இழந்த திருவாரூர் பசு மனுநீதிச் சோழன் ஆராய்ச்சி மணியை அடித்து நீதி பெற்றதும் ஒரு காலம். காரணம் அவன் பெயரில் நீதி அன்று இருந்தது. ஆனால் இன்றைக்கு திருவாரூர் ராஜராஜ சோழன் என்ற பெயரினை சூட்டிக்கொண்டிருப்பவரின் பெயரில் நிதி இருக்கிற காரணத்தால், நிதியிருந்தால் தான் நீதி பெறலாம் என்ற காலம் உருவாகி, சமுதாயம், இன்று புழுத்து புரையோடி கிடக்கிறது. எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் வழக்கறிஞர் சுப்பிரமணியம் அவர்களை அடித்துக் கொன்ற அந்த குற்றவாளிக்கு—முன்னாள் முதல்வரின் மகனுக்கு—ஆயுள் தண்டனை—நான் கட்டையால் அவரை அடிக்கவேண்டும் என்று சொல்லவில்லை. ஆயுள் தண்டனையாவது கொடுத்தால் அல்லவா நீதி இங்கே நிலை நாட்டப்படும்? நீதிபதி பதவிக்கு வருகிறபோதே லஞ்சத்தை லட்சக்கணக்கில் அள்ளிக் கொடுத்து பதவியை எட்டிப்பிடித்தவர்கள் கொடுத்த பணத்தை எடுப்பதில் குறியாய் இருப்பதால் தான் நீதி அவர்களின் நிதி முன்னால் மண்டியிட்டு மங்கிக் கிடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதி, நீதி இன்று, என்று சொல்லிக்கொண்டே வருகிறீர்கள். இன்று ஏதோ ராஜராஜசோழன் கையில் நீதி இருக்கிறது என்று சொல்கிறீர்கள். இன்று நிதி இருப்பது நெடுஞ்செழியன் பாண்டியனிடம். (சிரிப்பு) அதை நேற்று என்று வேண்டுமானால் சொல்லுங்கள். உங்கள் பேச்சில் நடுவில் இன்று, இன்று என்று வருகிறீர்கள்.

திரு. சி. ஞானசேகரன் : அன்று என்று மாற்றிக் கொள்கிறேன், பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதியைச் சரியாகப் பயன்படுத்தினால் எல்லாம் சரியாக இருக்கும். (சிரிப்பு).

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி பதவிகளுக்கு லஞ்சத்தை வைத்து எட்டிப்பிடிக்கும் அத்தியாயத்தை ஒழிக்கும் வல்லமை. திறமை, வீரம் எல்லாம் வீரமிகு புரட்சித் தலைவி அவர்கள் தவிர வேறு யாருக்கும் இல்லையென்பதை இந்த நேரத்தில் நான் இங்கே சுட்டிக்காட்டியாக வேண்டும்.

பிற்பகல் 1.35

1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி, கறுப்பு நாளை உருவாக்கக் காரணமாக இருந்த கயவர்களை, கறுப்புக் கண்ணாடிக்குச் சொந்தக்காரர்களை, எங்கள் இதய தெய்வம் ராஜீவ் காந்தியோடு இணைந்து நின்று தமிழகத்திலே கூண்டோடு, பூண்டோடு ஒழித்த முதல்வர், அமைதிப் பூங்காவாக இருந்த எங்கள் தமிழகத்தில் தீவிர வாதத்தையும் ஆயுதக் கலாச்சாரத்தையும் கட்டவிழ்த்துவிட்டு எங்கள் தங்கத் தலைவன் ராஜீவ் காந்தியைக் கொன்ற மிருகங்களாம் விடுதலைப் புலிகளை வேரறுத்த முதல்வர், தமிழகத்திலே எல்லாத் துறைகளிலும் குறிப்பாக நீதித்துறையிலே கோர தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிற இந்த லஞ்சப் பேயை, லஞ்சப் பிடாரியை ஒழித்தே தீருவார்கள் என்ற நம்பிக்கை எங்கள் உள்ளங்களிலே பெரிதும் நிறைந்து கிடக்கிறது. ஆம். நிதிக்கஞ்சி ஒளிந்து கிடக்கும் அந்த நீதி உண்மையிலே கருணை உள்ள மாண்புமிகு முதல்வர் காலத்திலே செங்கோல் ஓச்சும். நிதி வைத்து நீதி பெறும் சதிகாரக் கும்பல் இனி மறையட்டும், லஞ்சப் பேயை விரட்டும் பணி போர்க்கால அடிப்படையிலே முதல்வரின் நேரடிப் பார்வையிலே தொடரட்டும். ஏழை எளிய மக்களுக்கு எளிதில், விரைவில், குறைந்த செலவில் நீதி கிடைக்கச் செய்யவேண்டும், என்ற நம் நீதி நிர்வாகத்தின் அடிப்படைக் கொள்கைகள் தமிழகத்திலே மலரட்டும்.

உணவு, உடை, உறையுள் மனிதனுக்கு மிகவும் முக்கியம் என்ற மனித நேயத்தோடு, சத்துணவு, இலவச வேட்டி, சேலை, குடும்பத்தினருக்கு ஒரு வீடு என்று கொடுத்துக் கொடுத்து சிவந்த கரத்திற்குச் சொந்தக்காரனாம், புரட்சித் தலைவரின் ஒரே வாரிசாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற, சாதித்துக் கொண்டிருக்கும், மாண்புமிகு முதல்வர், வஞ்சமிலா நீதி, எவருக்கும் கிடைக்க கொள்கை வகுக்க வேண்டும். கண்டும் காணாமல் இலைமறைவாய், காய் மறைவாய், லஞ்சம் வாங்கும் நிலை போய், அதிகாரத்தோடு உரிமையோடு லஞ்சம் கேட்கும் அதிகார வர்க்கம் தலை தூக்கிவிட்டது. சில நேரங்களில் லஞ்சம் லீகலைஸ் செய்யப்பட்டுவிட்டதா, சட்டமாக்கப்பட்டுவிட்டதா என்று கூடத் தோன்றுகிறது. நிதி நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், அரசு லஞ்சங்களை எல்லாம் பறிமுதல் செய்தாலே சர்ப்ளஸ் பட்ஜெட்டை மாண்புமிகு நாவலர் அவர்கள் போட்டுவிடலாம். லஞ்சமிலா சமுதாயத்தை உருவாக்கத்தான் ஓட்டு மொத்தமான வாக்குகளைத் தமிழகத்து மக்கள் உங்கள் பால் நம்பிக்கை வைத்து, நம் கூட்டணிக்கு அளித்து,



முதல்வராக்கி இருக்கிறார்கள். 'நம்பினார் கெடுவதில்லை, இது நான்குமறை தீர்ப்பு'. லஞ்சத்தை விரைந்து முதல்வர் ஒழிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்து கொண் டிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உண்மையான நீதி கிடைக்க வேண்டுமென்றால், தமிழகத்து கோடானு கோடி மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் வில்லன்கள் எல்லாம் வழக்கிலே குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட வேண்டும். கள்ளத் தோணியிலே சென்றவர்கள், விடுதலைப் புலி களுக்கு முதல்வராக இருந்து, கலைஞராக இருந்து, சதித் திட்டம் தீட்டித் தந்தவர்கள், ராஜீவ் காந்தி கொலை யிலே சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பது நாடறிந்த உண்மை. மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் முதல்வர், மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யவேண்டியது மிக மிக அவசியம். சம்பந்தப்பட்ட வர்களைப் பாரபட்சமின்றி வழக்கில் எதிரிகளாகச் சேர்க்க ஆவன செய்யவேண்டும்.

நிதி நெருக்கடி அரசுக்கு இருக்கிற இந்த நேரத்தில், என்னை ராஜீவ் காந்தி கொலை வழக்கில், ஸ்பெசல் பிராசிகியூட்டராக நியமியுங்கள், எங்கள் தங்கத் தலைவருக்கு, வழக்கறிஞன் என்ற முறையிலே நன்றிக் கடன் செலுத்த நான் காத்திருக்கிறேன். வாய்ப்பைத் தாருங்கள். (சிரிப்பு). நீதிபதிகள், வழக்கறிஞர்கள் ....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அந்த வழக்கு வேறு ஏதாவது வகையிலே போய்விடக்கூடாது என்று எல்லோரும் சிரிக்கிறார்கள், (சிரிப்பு).

<u>திரு. சி. ஞானசேகரன் :</u> சரியான விதத்திலே, நிச்சயமாக நடத்துவேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள், அரசு வழக்கறிஞர் கள் ஆகியோர்களின் சம்பளங்கள், ஆசிரியர்கள் சம்பளங் களைவிட, குறைவாக இருப்பது வேதனையான ஒன்று. ஒருவேளை சம்பளக் குறைவேகூட, லஞ்சத்திற்குக் காரணமாக இருக்குமோ என்று பலர் எண்ணுகின்றனர். உடனே அரசு வழக்கறிஞர்கள், நீதிபதிகள் சம்பளத்தை உயர்த்துங்கள். வாகன வசதியை அவர்களுக்குச் செய்து தாருங்கள். மாஜிஸ்ட்ரேட்டுகள், டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பு கள், சப்-ஜட்ஜுகள், அடிசனல் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகள் போன்றவர்கள் வாகன வசதியின்றி நீதிமன்றத்திற்கு வரும் காட்சி பரிதாபமாக உள்ளது.

ஸ்டேட் ஃபிரி, அமிகஸ் கியூரி போன்ற வழக்குகளை நடத்தும் வழக்கறிஞர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் தொகை மிகவும் குறைவு. ஒரு கொலை வழக்கை நடத்தினால், 35 ரூபாய், 50 ரூபாய் என்று குறைவாக இன்று கட்டணம் தரப்படுவதினாலே, நல்ல வழக்கறிஞர்கள் இதைப் போன்ற வழக்குகளை நடத்த முன்வருவதில்லை. பப்ளிக் பிராசிக்கியூட்டர்களுக்குக் கொடுக்கப்படும் தொகை மிகமிகக் குறைவு. அதை உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அசிஸ்டண்ட் பப்ளிக் பிராசிக்கியூட்டர்களுக்கு மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு இணையாக சம்பளத்தைத் தரவேண்டும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே 'டைரக்டர் ஆப் பிராசிக்கியூசன்' என்ற ஒரு துறையை ஏற்படுத்த, அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அலுவலகம் அமைக்கப்போகும் நிலையில், முந்தைய தி.மு.க. அரசு தடுத்து நிறுத்திவிட்டது. எனவே, மீண்டும் டைரக்டர் ஆப் பிராசிக்கியூசன் என்ற துறையை ஏற்படுத்த அரசு ஆவன செய்து, உடனே அந்த அலுவலகத்தைத் திறக்க வேண்டும்.

எல்லாத் துறைகளிலும், முனிசிபல் அலுவலகங்களிலே, நீதிமன்றங்களிலே முந்தைய ஆட்சிக் காலத்திலே, கட்சி அடிப்படையிலே நியமனம் செய்யப்பட்ட சட்ட ஆலோசகர்கள், பப்ளிக் பிராசிக்கியூட்டர்கள், கவர்ன்மெண்ட் பிளீடர்களை எடுத்துவிட்டு, திறமையான, நல்ல சட்ட ஆலோசகர்களை, நல்ல வழக்கறிஞர்களை நீங்கள் அந்த இடத்திலே நியமிக்க வேண்டும். சென்னை உயர் நீதிமன்றத்திலே பத்திரிகையாளர்களுக்கு நல்ல வசதியோடுகூடிய அறை கிடையாது. லெட்ரின் பக்கத்திலே நாற்றம் அடிக்கும் இடத்திலே நின்று அவர்கள் செய்திகளை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பேஃன், போன் வசதியுடன் ஒரு நல்ல அறையை ஏற்படுத்திக் கொடுத்து நீண்ட நெடிய தீர்ப்புகளை அவர்கள் வேண்டியவாறு எழுதுவதற்கு நீங்கள் வழிவகை செய்து தாருங்கள். உயர் நீதிமன்றங்களிலே ரிட் மனுக்கள் எல்லாம் ஏராளமாக தேங்கிக். கிடக்கின்றன இன்று. ஒரு ரிட் மனு விசாரணை முடிய 10 ஆண்டுகள் கூட ஆகிறது. இந் நிலையைத் தவிர்ப்பதற்கு எல்லா மாவட்ட நீதிபதிகளுக்கும் ரிட் ஜுரிஸ்டிக்ஷனை வழங்குவதற்காக நமது அரசு மைய அரசை வற்புறுத்தி சட்டத் திருத்தம் கொண்டு வர ஆவன செய்ய வேண்டும். காலியாக உள்ள சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பதவிகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டும். உச்ச நீதிமன்றத்தின் கிளையைச் சென்னையிலே அமைக்கவும், கோவையிலே உயர் நீதிமன்றத்தினுடைய கிளையை ஏற்படுத்தவும் மைய



அரசை உடனே நம்முடைய மாநில அரசு வற்புறுத்த வேண்டும். நீதித் துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் இடையே மிகப் பெரிய கம்யூனிகேஷன் கேப் என்ற ஒன்று இன்னும் நிலவிக் கொண்டிருக்கிறது. நீதித் துறை நீதிபதிகள் சட்ட அமைச்சரை, சட்டமன்ற உறுப்பினர்களைத் தீண்டத் தகாதவர்களாகக் கருதுகிறார்களோ என்று கூட எனக்கு ஐயம் உண்டு. சில மாதங்களுக்கு முன்னாலே ராணிப்பேட்டையிலே சப்-கோர்ட் திறக்கப்பட்ட போது சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் அங்கே வந்திருந்தார்கள். நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். ஆற்காடு சட்டமன்ற உறுப்பினராக அன்று இருந்த இன்று மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருக்கக்கூடியவருமான அமைச்சரும் வந்திருந்தார்கள். ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினராக மாண்புமிகு என். ஜி. வேணுகோபால் மற்றும் நான் எல்லாம் அந்த நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டோம். அவர்கள் அமைச்சரின் பெயரைக்கூட அந்தக்கல்வெட்டிலே இல்லாமல் நீதிபதியின் பெயரை மட்டும் போட்டு, அமைச்சர் பெயரை விட்டுவிட்டு விழா எடுத்தார்கள். அந்த அழைப்பிதழிலேயே ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் பெயர் போடப்படவில்லை. அரசு விழாக்களிலே எம்.எல்.ஏ.க்கள் பெயர்கள் அழைப்பிதழிலே பொறிக்கப்படவேண்டும், அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என்று விதியிருந்தும்கூட நீதித் துறை சட்டமன்ற உறுப்பினர்களை ஒதுக்குவது வேதனையான ஒன்று. எனவே, இதற்கு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்வு காணவேண்டும்.

வேலூரிலே தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்க 2 ஆண்டுகளுக்கு முன்னால் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. திருச்சி, சேலம் முதலிய இடங்களிலும் தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்க சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை அந்த 3 தொழிலாளர் நல நீதிமன்றங்களும், வேலூர், சேலம், திருச்சியிலே தொடங்கப்படவில்லை. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்றம் இன்னும் நீதிபதிகளை நியமிக்கவில்லை. அதனால்தான் காலதாமதம் என்று சில நாட்களுக்கு முன்னாலே இந்த மாமன்றத்திலே தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்ட அரசு ஆணைகளை ஏன் நீதித் துறை கிடப்பிலே போடுகிறதோ தெரியவில்லை. சீப் ஜுடிசியல் மேஜிஸ்ட்ரேட்டுகளை பிரமோஷன் செய்து

காலி இடங்களை ஹைகோர்ட் நிரப்பலாம் அல்லது புதியதாக வழக்கறிஞர்களை நீதிபதிகளாக நியமிக்கலாம். ஊறுகாய் பானையிலே நம் அரசு ஆணைகளை நீதிமன்றம் ஊற வைப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 11 ஆண்டுகளுக்கு முன்னாலே 10 ஏக்கர் 22 செண்ட் நிலத்தை வேலூர் சத்துவாச்சேரியிலே புதிய மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வாங்கிப் போட்டார்கள். நான் பலமுறை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அங்கே புதிய நீதிமன்ற வளாகம் கட்டவேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறேன். ஸ்டேண்டர்ட் டைப் டிசைனை ஹைகோர்ட் அப்ரூவ் செய்து அனுப்புவதில்தான் காலதாமதம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒரே நாளில் அதைப் பார்த்து ஹைக்கோர்ட் அதை அப்ரூவ் செய்யலாம். ஆனால் அதை அவர்கள் செய்யாமல் ஏன் காலதாமதம் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. நீதித்துறை இப்படிவாளா இருப்பதை உடனடியாக அரசு தலையிட்டு உடனடியாக, எப்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று உயர் நீதிமன்றத்திற்கு வருகைதந்து நீதிமன்றக் கட்டிடத்தை இன்று திறந்துவைத்தார்களோ அதைப்போல எங்களுடைய வேலை மாநகருக்கு தன்னுடைய வருகையைத் தந்து தன்னுடைய பொற்கரங்களால் அடிக்கல் நாட்டி—சில இடங்களிலே அடிக்கல் நாட்டுவதோடு சகாப்தம் முடிந்து விடுகிறது — ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் கை வைத்தால் நிச்சயமாக அது கொழிக்கும் என்பது தெரியும் (மேசையைத் தட்டும் ஒலி)., ஆகையால் உடனடியாக இரண்டாண்டுகளுக்கு உள்ளாகவாவது அங்கு எங்களுக்கு ஒரு புதிய நீதிமன்ற வளாகத்தை ஏற்படுத்தித் தரவேண்டும். காரணம் புரட்சித் தலைவர் அவர்கள் 11 ஆண்டுகளுக்கு முன்னாலேயே வாங்கிப்போட்ட இடம் அது. இன்னும் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அவரின் ஒரே வாரிசாக இருக்கக்கூடிய நீங்கள்தான் அதைச் செய்தாக வேண்டும் என்று தான் அது கிடப்பிலேயே கிடப்பதாக எண்ணுகிறேன். ஆகவே நீங்கள் எப்படியாவது உங்களுடைய வருகையை அந்த இடத்திலே தந்து உடனடியாக அங்கே கோர்ட் கொண்டு வந்து உடனடியாக என்னுடைய மானத்தைக் காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு) காரணம், வழக்கறிஞர் என்ற முறையிலே வழக்கறிஞர்களின் தலைவனாக இருக்கிற காரணத்தால் வேலூர் வழக்கறிஞர்கள் எல்லாம் இதுகூட உன்னால் செய்ய முடியவில்லையா என்று என்னைக் கேள்விக் கணைகளால் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.



குடியாத்தம் நீதித்துறையில் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நீதிபதியினுடைய போக்கைக் கண்டித்து குடியாத்தம் வழக்கறிஞர்கள் 7 மாதங்களாக நீதிமன்றம் செல்லாமல் புறக்கணிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இம் மாமன்றத்திலும் இது பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்த மாஜிஸ்ட்ரேட்டை மாற்றாமல் உயர்நீதிமன்றம் 7 மாதமாக சும்மா இருக்கிறது. ஜாமீன் எடுக்கவும், வழக்கு நடத்தவும் முடியாமல் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் 7 மாதமாக வருமானம் இன்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சென்னை தலைமை நீதிபதி அவர்களைச் சந்தித்து மனு கொடுத்து நடவடிக்கை எடுக்கச் சொல்லி இருக்கிறேன். அரசின் கவனத்திற்கும் குடியாத்தம் வழக்கறிஞர்களின் ஸ்டிரைக் பற்றி ஏற்கெனவே கொண்டு வரப்பட்டும் இருக்கிறது. ஒரு மாஜிஸ்ட்டிரேட்டை உடனே மாற்றி நீதி வழங்க ஹைகோர்ட் காலம் கடத்துவது வேதனையான ஒன்று........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நேரம் என்ன ஆகிறது பாருங்கள். ஏதாவது ஒரு கோரிக்கையோடு முடியுங்கள்.

பிற்பகல் 1.45.

<u>திரு. சி. ஞானசேகரன்</u> : ஹைகோர்ட் காலம் கடத்துவது வேதனையான ஒன்று. அரசுக்கும் நீதித்துறைக்கும் இடையே இருக்கும் இந்தப் பெரிய இடைவெளியை உடனே நீக்கி அரசு இயந்திரம் சீராகச் செயல்பட நீதிபதிகள் ஒத்துழைக்க வேண்டும். தீர்ப்பிலே அரசாங்கம் தலையிடவில்லை. வழக்கறிஞர்கள் 7 மாதமாக கோர்ட்டுக்குப் போகாமல் போராடியும் ஒரு மாஜிஸ்ட்ரேட்டைக்கூட மாற்றாமல் உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுக்காமல் என்ன செய்துகொண்டிருக்கிறதோ தெரியவில்லை. நீதிபதிகளே நீதிக்குத் தடையாக இருக்கலாமா. அரசு புயல் வேகத்திலே இந்தப் பிரச்சினையை நீக்க முன்வர வேண்டும். வேலை இல்லாமல் மேஜிஸ்ட்ரேட் அங்கு மாதம் பிறந்தால் தவறாமல் சம்பளம் வாங்குகிறார். ஆனால் வழக்கறிஞர்கள் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும். இந்த அட்வகேட்ஸ் வெல்பேர் பண்டு ஆக்டை உடனடியாக சட்டத் திருத்தம் கொண்டு வந்து வழக்கறிஞர் இறந்தால் ஒரு இலட்சம் என்ற ஒன்றை உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டத்தைக் கொண்டு வந்து வழக்கறிஞர்களுடைய குறையை தயவு செய்து நிவர்த்தி செய்ய வேண்டும். வேலூரிலே கோ-ஆப்பரேட்டிவ் டிரிபியூனல் ஒன்றையும்

மோட்டார் ஆக்சிடெண்ட் கிளெய்ம் டிரிபியூனல் ஒன்றையும் உடனடியாக நிறுவுவதற்கு ஆவன செய்ய வேண்டும். வேலூரிலே ஒரு சட்டக் கல்லூரித் துவங்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது) ஒரே ஒரு பாயிண்ட். சிறைக்கு வந்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவ பல முறை கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: சிறைக்கு வந்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சிறைக்குப் போகலாம். ஆனால் நாங்கள் இங்கே பதிலுரைக்குப் போக வேண்டும். போதும். நீங்கள் சிறைக்குப் போவதிலே எல்லோருக்கும் மகிழ்ச்சி. அனுப்புங்கள் என்று சொல்கிறார்கள். (சிரிப்பு) முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: சிறைக் கைதிகள் தப்பி ஓடுவது அன்றாட நிகழ்ச்சிகளாக இப்போது நடந்து வருகின்றன. ஆட்டோ சங்கர் வழிகாட்ட வேலூர் சிறையிலே 8 ஆயுட் கைதிகள் தப்பி ஓடினார்கள். நேற்று. கூட கோவையிலே ஒரு சந்தனக் கடத்தல் மன்னர் ஒருவர் தப்பியிருக்கிறார். இதையெல்லாம் தவிர்ப்பதற்காக இன்று சிறைகளிலே இதுவரை யாரும் செய்யாத ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அலாரம் வைப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றிதனைச் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம். சிறையிலே கூட........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் அதோடு தொடர்புடைய சிறைத்துறை நிர்வாகம் ஆக இரு பெரும் மானியக் கோரிக்கை மீதான விவாதங்களில் போற்றுதற்குரிய 11 மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பங்கேற்று, மேலான சிறந்த நல்ல ஆக்கமான கருத்துக்களை நல்கி இருக்கிறார்கள். அதுபோல வெட்டுத் தீர்மானங்கள் என்ற வகையில் நீதி நிர்வாகத்தைப் பற்றி 62 வெட்டுத் தீர்மானங்களும், சிறைத்துறை நிர்வாகத்தைப் பற்றி 49 வெட்டுத் தீர்மானங்களும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் நல்கியிருக்கிறார்கள். நான் பேசுகின்றபோது என்னுடைய பேச்சினூடே அந்த வெட்டுத்



தீர்மானங்களுக்கான விவரங்களையும் முடிந்த அளவிற்கு உங்களுக்கு விளக்க இருக்கிறேன். அதுபோல உங்கள் 11 சட்டப்பேரவை உறுப்பினர்கள் பேசிய பேச்சினுடைய கருத்துக்களுக்கும் முடிந்த அளவிற்கு இந்த பேச்சினூடே என்னுடைய விவரத்தை விளக்க இருக்கிறேன். நீதி நிர்வாகம் பற்றி வெட்டுத் தீர்மானம் எழுப்பிய உறுப்பினர்கள் கொள்கை பற்றி, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் காலியிடங்களைப் பற்றி, நீதித்துறை சார்பு அலுவலர்கள் காலி இடங்களைப் பற்றி, நீதிமன்றங்கள் நிறுவுதல் பற்றி, மதுரையில் உயர்நீதிமன்றங்கள் நிறுவுதல் பற்றி, நீதிமன்றக் கட்டிடங்கள், அடிப்படை வசதி அமைத்தல் பற்றி, வழக்குகள் நிலுவை பற்றி, அரியர்ஸ், பென்டன்சி, சட்ட அலுவலர்கள் பற்றி—லா ஆபீசர்ஸ் அப்பாயின்ட்மெண்ட்ஸ் ஏழை வழக்கறிஞர்களுக்கு அரசு உதவித் தொகை அளிப்பது பற்றி, இலவச சட்ட ஆலோசனை பற்றி, ஃபிரி லீகல் ப்ற்றி என இப்படி பல விவரங்களை எல்லாம் அந்த வெட்டுத் தீர்மானத்திலே மிகக் கோர்வையாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் சிறைத்துறை பற்றி எழுப்பிய வெட்டுத் தீர்மானங்களில் கொள்கை பற்றியும் சிறைச்சாலையில் உள்ள அடிப்படை வசதிக் குறைவுகள் பற்றியும், கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்பது பற்றியும் புதிதாக சிறைச்சாலைகள் நிறுவப்பட வேண்டும் என்பது பற்றியும், சிறையிலிருந்து கைதிகள் தப்பி ஓடுவது பற்றியும், குண்டர்கள் தடா கைதிகளுக்கு தனிச் சிறை வேண்டும் என்பது பற்றியும், சிறைச்சாலைகளில் வழங்கப்படும் உணவு முறைகள் மாற்றப்பட வெண்டும், உயர்த்தப்பட வேண்டும் என்றும், வேலை செய்யும் கைதிகளுக்கு கூலி உயர்த்தப்பட வேண்டும் என்பது பற்றியும். கைதிகளை நல்வழிப்படுத்த முயல்வது பற்றியும், அங்கு வேலை செய்யும் பணியாளர் நலம் பேணப்பட வேண்டும் என்பது பற்றியும் விவாதிக்க போற்றுதற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானத்தின் மூலமாக வலியுறுத்தி இருக்கிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், முக்கியக் கூறுகளை ஆய்ந்து விவாதிக்கக் கேட்டுள்ளனர். நீங்கள் பேசிய விவாத உரையையும். எழுப்பியிருக்கிற வெட்டுத் தீர்மானங்களையும் வைத்தே இந்த இரண்டு துறைகளின் குறைகளையும் நிறைகளையும் நன்கு உணர்ந்து கொள்ள, அறிந்து கொள்ள முடிகிறது, பிரச்சினைகளை நன்கு உணர்ந்து இருக்கிறீர்கள் என உங்கள் பேச்சின் வாயிலாக கண்ணியத்திற்குரிய இந்தச் சபையிலே வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் இந்த அரசினால் போற்றுதலுக்குரிய நம்முடைய

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு ஆக்கமான சில அறிவிப்புகள் இன்றைக்கு இந்த மாமன்றத்திலே இந்த மானியத்தின் மூலமாக வெளியிட ஆணையிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1—50.

வளரும் சமுதாயத்தில் தேவையும், அதிக எதிர்பார்ப்பும் அதிகம். இருக்கும் வருவாயை வைத்துக்கொண்டு எந்த அளவுக்கு ஒரு திறமையான நிர்வாகத்தைத் தருவது, அதன் மூலம் அதன் பலாபலன்கள் எவ்வளவு விரைவில் மக்களைச் சென்று அடைய வைக்க முடியும் என்பதே இன்றைய தினம் போற்றுதற்குரிய நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசின் கொள்கையும், குறிக்கோளும் ஆகும். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் இந்த இரண்டு துறைகள் பற்றி போதுமான விவரங்களை விளக்கங்களை அரசு அளித்துள்ளது.

முதலில் சிறைத்துறைக்குப் பதில் அளித்த பின் நீதி நிருவாகத்திற்குப் போகலாம் என்று நான் கருதுகிறேன். தமிழகத்தில் சிறைச்சாலைகளுக்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு, நம்மை போன்ற அரசியல்வாதிகளுக்கு அடிக்கடி அழைப்பு விடுக்கும் விருந்தினர் வீடு சிறைச்சாலைதான், நம்மில் பலர் அந்த சிறைச்சாலையில் அடைக்கப்பட்டக் காலத்தை இந்த நேரத்தில் நான் எண்ணிப்பார்க்கிறேன், எங்களைப் போன்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 1991 ஆம் ஆண்டு சனவரி மாதம் 2 இலட்சம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் சிறைக்கு நாங்கள் சென்று இருக்கிறோம். எனவே சிறைக்குச் சென்ற காரணத்தாலே என்னைப் போன்றவர்களுக்கும் அந்த அனுபவம் உண்டு. இங்கே இருக்கிற அமைச்சர் பெருமக்களுக்கும் அனுபவம் உண்டு; பல உறுப்பினர்களுக்கும் அனுபவம் இருக்கிற காரணத்தாலே நீங்கள் சொன்ன அந்த குறைபாடுகள் இருக்கிற சிரமங்கள், அங்கே இருக்கிற விவரங்கள் எல்லாம் எங்களால் உளப்பூர்வமாக உணரமுடிகின்ற காரணத்தாலே அதற்கு நிச்சயமாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் துணையோடு தீர்வு காண முடியும் என்று உங்களுக்கு முதற்கண் நான் உறுதி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்,



சிறைச்சாலைகள் குற்றம் சாட்டப்பட்ட கைதிகளையும், தண்டனை கைதிகளையும் அடைத்து வைக்கும் கொட்டில் என்பதை விட அவர்களை பண்படுத்தி. பழக்கப்படுத்தி, பயனுள்ளவர்களாக ஆக்கி சமுதாயத்தோடு உறவாட தகுதியுள்ளவர்கள்-Humanise ஆக்கி-மறுவாழ்வு அளித்து மலர வைக்கும் மையம் என்பதே நம்முடைய போற்றுதலுக்குரிய புரட்சித்தலைவி அவர்களின் சித்தாந்தம் ஆகும், (மேசையைத் தட்டும் ஒலி),

சிறைக் கைதிகளுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் உறைய இடமும், கொடுத்து அன்றாட தேவைகள் அனைத்தும் பேணி காக்கப்படுகின்றன, உடல் நலம் காக்கப்படுகிறது, கடிதங்கள் எழுதவும், காண வருவோருடன், கலந்துரையாடவும்; செய்தித்தாள்கள் படிக்கவும், பொழுதுபோக்கவும், ஆடிப்பாடி விளையாடவும், தியானம் யோகாசனம் செய்யவும் சிறைச்சாலைகளில் வாய்ப்பு எற்படுத்தப்பட்டுள்ளது. புகார் பெட்டியும் உண்டு, அதுமட்டுமல்லாமல் இவர்களின் எதிர்கால வாழ்வை எண்ணி கல்வி கற்றுத்தரப்படுகிறது. பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு, பணி அமர்த்தப்பட்டு, ஊதியமும் வழங்கப்படுகிறது. அவ்வாறு சேர்ந்த ஊதியம் அவர்கள் விடுதலை ஆகும்போது மொத்தமாக வழங்கப்படுகிறது. சம்பாதித்து இடையிலே யாருக்காவது அனுப்பவேண்டும் என்றாலும்கூட அனுப்பலாம்.

இந்த மாமன்ற உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு ஒரு வித்தியாசமான செய்தியை கொண்டுவர விரும்புகிறேன். கைதிகள் என்றால் அங்கே படிக்காதவர்கள் அல்லது விவரம் தெரியாதவர்கள் என்று பலபேர் கருதிகொண்டிருக்கிறார்கள். பிறக்கிறபோதே ஒருவன் குற்றம் செய்கிற உணர்வு பெற்றவன் அல்ல. சந்தர்ப்பத்தால் அவன் குற்றவாளியாக ஆக்கப்படுகிறான். ஆக உள்ளே செல்பவர் அனைவருமே குற்றவாளிகள் அல்ல, அல்லது சிறைக்கு வெளியே இருப்பவர் எல்லாம் நிரபராதி என்றும் சொல்லிவிட முடியாது. எனவேதான் போற்றுதலுக்குரிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உள்ளே இருப்பவர்களுக்கு நல்ல பட்டக் கல்விகளைக் கொடுக்க வேண்டும் என்று இன்றைக்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். கைதிகள் சிறையில் இருந்து கொண்டே எம். ஏ. பட்டம் பெறுவதும், பி. எல். பட்டம் பெறுவதும், பி. எச். டி. டாக்டர் பட்டம் பெறுவதும் என்ற நிலையை தமிழக சிறையில் இன்றைக்கு போற்றுதலுகுரிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையை தட்டும் ஒலி) அண்மையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினத்தன்று நான் மதுரை சிறைக்குச் சென்றிருந்தேன், ஏனென்றால் ஜனவரியிலே அந்தச் சிறைச்சாலையிலே இருந்த காரணத்தினாலே அதைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது சோமு என்ற ஆயுள் கைதி, நான் சென்னையிலே

ஒரு கொலை குற்றத்திலே உணர்ச்சிவயப்பட்டு ஈடுபட்டேன்; நான் இங்கே வரும்போது பத்தாவது படித்து இருந்தேன். இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சி காலத்திலே எனக்கு லா காலேஜில் இடம் கிடைத்து இருக்கிறது. ஆனால் ஹோம் மினிஸ்ட்ரியிலேயிருந்து எனக்கு இன்னும் தகவல் வரவில்லை என்று சொன்னவுடனே இங்கே வந்து அதிகாரிகளிடத்திலே சொல்லி, போற்றுதலுக்குரிய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்த நண்பர் இன்றைக்கு சட்டக் கல்லூரியிலே படித்து, இன்றைக்கு போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த நாளின்போது 12 ஆண்டுகளையும் முடித்து, விடுதலைப் பெற்று மதுரை சட்டக் கல்லூரியில் படித்துக்கொண்டுள்ளார். இப்படி உள்ளே செல்பவன் வழக்கறிஞனாக எம். ஏ., படித்தவனாக டாக்டர் பட்டம் பெற்றவனாக வருகின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு தமிழகத்தினுடைய சிறைச்சாலையிலே இருக்கிறது.

பிற்பகல் 1-55

இன்னும் சொல்லப்போனால் தடா சட்டத்திலே கைது செய்யப்பட்டவர்களெல்லாம் கொடுமை செய்யப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள் என்றெல்லாம் தி.மு.க.—வினுடைய தலைவர் கருணநிதி அவர்கள் ஜனவரி மாதம் பேசிக் கொண்டிருந்தார். ஆனால் மார்ச் மாதம், கடந்த 15 நாட்களுக்கு முன்பு அவர் மதுரை சிறைச்சாலைக்கு சென்று தடா கைதி திருமதி சுப்புலட்சுமியைப் பார்த்துவிட்டு, அவர் சொன்னார், சுப்புலட்சுமி அங்கே மகிழ்ச்சியாக இருக்கிறார். இன்றைக்கு தடா கைதியாக இருக்கின்ற திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி சொல்கின்ற அளவிற்கு சிறையில் இன்றைக்கு கைதிகள் மனித நேயத்தோடு, அவர்கள் கடும் குற்றவாளிகள் என்றாலும்கூட, அவர்கள் தேசத்துரோக குற்றத்திலே ஈடுபட்டிருந்தாலும்கூட அந்த சிறை இன்றைக்கு மனித நேயத்தோடு நடத்துகிறது என்பதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதியினுடைய வாக்குமூலமே இன்றைக்குச் சான்று என நான் மனதாரக் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல மாண்புமிகு தமிழக முதல்வர் போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவினுடைய பிறந்த நாளையொட்டியும், நம்முடைய போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சியை, இழந்த ஆட்சியை புதியதாக மீண்டும் பெற்றுத் தந்ததற்காகவும், அவர்கள் தமிழ்நாட்டு சிறைகளிலே இருக்கிற 209 ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவித்தார்கள். 700-க்கும் மேற்பட்ட ஏனைய கைதிகளுக்கும் தண்டனைக்காலம் குறைக்கப்பட்டது. இதிலே கூட ஒரு பத்திரிகை, கல்கி பத்திரிகை போற்றுதலுக்குரிய முதல்வர் அவர்கள் சகட்டுமேனியாக, இந்தக் கைதிகளையெல்லாம் தன்னுடைய பிறந்த நாளுக்காக விட்டுவிட்டார் என்ற ஒரு தவறானச் செய்தியை வெளியிட்டிருந்தது.



உடனடியாக நான் அவர்களுக்கு பதில் எழுதி அனுப்பினேன். நேற்று வியாழக்கிழமை அந்த விளக்கம் வந்திருக்கிறது. அந்த முடிவை எடுப்பதற்கு முன்பு சட்டத்திலே என்னென்ன நிலை இருக்கிறதோ இன்னும் சொல்லப் போனால் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் 209 லைப் கான்விக்ட்ஸை வெளியே விட்டு இருக்கிறார்கள் என்றால் அனைத்து ஆயுள் கைதிகளும் வெளியே வந்துவிட்டார்கள் என்று பொருள் அல்ல. பலபேர் இன்னும் அங்கே இருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட்டினுடைய டெசிஷன் ஒன்று இருக்கிறது. அதன்படி, டெத் சென்டன்ஸ் கொடுத்து லைப்பாக மாற்றியவர்களை வெளியே விடக்கூடாது; அதே போன்று வேறு குற்றங்களுக்காக, டெத் சென்டன்ஸ் கொடுத்து லைப்பாக மாற்றியிருந்தால் அவர்களையும் விடக் கூடாது. அதுபோல, யாரையாவது வெளியேவிட்டால் சமுதாயத்திற்கு ஆபத்து என்றால் அவர்களையும் விடக் கூடாது என்று ஆய்ந்து பார்த்து அதன்படி 209 ஆயுள் தண்டனைக் கைதிகள், பெண்கள் என்றால் 10 ஆண்டுகள் போதும் என்று கருதி, பல பெண் ஆயுள் கைதிகளையும் வெளியே விட்டு இருக்கிறார்கள். அதனையும் நான் கல்கிக்கு எழுதி இருந்தேன்; அவர்களும் பெருந்தன்மையோடு, மிகத் தெளிவாக ஒரு பக்கத்திலே வெளியிட்டு இருக்கிறார்கள்.

சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; அந்த விளக்கின் வெளிச்சம் ஏழைகளுக்கு எட்டுவதில்லை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியதை இந்தச் சிறைச்சாலைத் துறை நன்கு உணர்ந்த காரணத்தினால் சிறைவாசிகளுக்கு இலவசமாக சட்ட உதவி ஆலோசனைகள் தரப்படுகின்றன. இதற்கென தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு, ஃபிரி லீகல் எய்ட் போர்ட்-இன் மூலமாக வழக்குரைஞர்களை அனுப்பி வசதியற்ற ஏழைவாசிகளுக்கு சட்ட உதவி அளித்து வருகிறது. நீதி மன்றங்களுக்கு கைதிகள் கொண்டுவரப்படுகிறபோதும், சிறைச் சாலைகளுக்குச் சென்றும் அக்குழு, வழக்குறைஞர் உதவி வேண்டுபவர்களை கண்டறிந்து உதவுகிறார்கள். அவர்களுக்கென்று வாதிட்டு உதவுகிறார்கள். இக் குழுவிற்கு அரசு ஆண்டுதோறும் கணிசமான தொகையை மானியமாக வழங்கி வருகிறது. சென்ற ஆண்டு மட்டும் 2,335 சிறைக் கைதிகளுக்கு இவர்களினால் சட்ட உதவி கிடைத்திருக்கிறது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நேற்றைய தினம் சட்டத் துறையைச் சார்ந்த எங்களையெல்லாம் இரண்டு முறை அழைத்தார்கள். 15 நாட்களுக்கு முன்பு ரெவின்யு செய்தார்கள். சில சங்டங்களையெல்லாம் சொன்னார்கள், 15 நாட்களுக்குப் பிறகு, நேற்றைக்கு முன் தினமே எங்களை அழைத்து, உங்களுக்கு என்னென்ன தேவை என்று சொன்ன பாங்கு எங்களைப் போன்றவர்களுடைய உள்ளத்தை புல்லரிக்கச் செய்தது,

பிற்பகல் 2–00

சிறைச்சாலையைப் பொறுத்தவரையிலே எட்டு சலுகை களை நேற்றைக்கு முன் தினம்—இன்னும் சொல்லப்போனால் இதிலே உள்ள ஒரு வேடிக்கை, நானும் உள்துறைச் செயலாளரும். சிறையினுடைய தலைவராக ஐ. ஜி. ஆப் பிரிசனாக இருக்கிறாரே அவர்களும் ஒரு பிரச்சினையைப்பற்றி ஒரு மணி நேரம் விவாதம் செய்து கொண்டிருந்தோம், இன்றைக்குச் சிறைச்சாலையிலே கைதிகள் இருக்கிறார்கள் ; கோவை போன்ற இடங்களிலே டெக்ஸ்டைல் மில் இருக்கிறது, அங்கே காம்போசிட் யூனிட் இருக்கிறது; வீவிங்கும் இருக்கிறது; ஸ்பின்னிங்கும் இருக்கிறது, ஆக, ஒரு நல்ல மில்லையே நடத்து துகிறார்கள் , சிங்காநல்லூரிலே எப்படி ஒரு தொழிலாளர் வேலை செய்கிறானோ அப்படிச் சிறைச்சாலைக்கு உள்ளேயே இருப்பவனும் திறமையாக டெக்ஸ்டைல் பணியிலே ஈடு பட்டு இருக்கிறார்கள், ஆனால் வெளியே இருப்பவனுடைய சம்பளம் உள்ளே இருப்பவனுக்கு இல்லை. அதுபோல, சேலத்திலே, மதுரையிலே, சிறைக்கு என. சென்னையிலே சில தொழில்கள் இருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் இது வரையில் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதையும், புரட்சித் தலைவி அவர்களிடத்திலே எப்படிக் கேட்பது என்றும் நாங்கள் ஒரு மணி நேரம் விவாதம் செய்து கொண்டிருந் தோம். இன்றைக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்றால் சிறையில் ஸ்கில்ட் ஓர்க்கராக இருப்பவனுக்கு 2 ரூபாய் கொடுச்கப்படுகிறது; செமி ஸ்கில்ட்டாக இருப்பவனுக்கு 1 ரூபாய் கொடுக்கப்படுகிறது, அன்-ஸ்கில்டாக இருப்ப வனுக்கு 50 பைசா, நாளும் கொடுக்கப்படுகிறது, இதை எப்படியாவது உயர்த்திப் பெற வேண்டுமென்பதற்காக நாங்கள் மூவரும் பேசிப் பேசி, சரி ஒரு இரண்டு ரூபாய் கேட்போம்; இரண்டு ரூபாய்க்கு 4 ரூபாய் கேட்போம்; ஒரு ரூபாய்க்கு 2 ரூபாய் கேட்போம்; 50 பைசாவுக்கு 1 ரூபாய் கேட்போம் என்று சென்ற நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கேட்டார்கள். இந்த 2, 1, 0,50 பைசா ஸ்கில்ட் ஓர்க்கர்ஸ் அன்-ஸ்கில்ட் ஓர்க்கர்ஸ், செமி ஸ்கில்ட் ஓர்க்கர்ஸ் என்று சொல்லுகிறீர்களே, இது எப்படிப் போதும் என்று சொல்லி, அவர்களாகச் சொன்னார்கள் பத்து ரூபாய் கொடுத்தால் என்ன என்று, எங்களுக்கு அதிர்ச்சி, ஏனென்றால். ஏற்கனவே நிதியினுடைய பற்றாக்குறை எங்க ளுக்குத் தெரியும் ; சங்கடம் தெரியும், ஆனால் நாங்கள் அவர் களிடத்திலே வற்புறுத்தி, அவர்கள் சொன்னார்கள். 10 ரூபாய் இல்லை என்றால் கீழே வந்துகொண்டே இருந்தார்கள். நாங்களும் அவர்களிடத்திலே வற்புறுத்திய பிறகு அவர்கள் இந்த ஆண்டு முதல் இதுவரையில் 2 ரூபாய் பெற்றுக் கொண்டிருந்தவன் 6 ரூபாய் பெறுவான்; அதைப்போல 1 ரூபாய் பெற்றுக் கொண்டிருந்தவன் 4 ரூபாய் பெறுவான்; 50 பைசா



பெற்றுக் கொண்டிருந்தவன் 2 ரூபாய் என இன்றைக்கு உயர்த்திக் கொடுத்து- ஏனென்றால் நல்ல மனத்தோடு செய் தார்கள். இன்றைக்கு ஏறத்தாழ இருபதாயிரம் பேர் சிறைச் சாலையிலே இருக்கிறார்கள், அதிலே ஐயாயிரம் பேர் அன்டர் டிரையல் பிரிசனர்ஸ்; இதிலே ஒரு ஐயாயிரம் பேர் இன்றைக்கு லைப் கான்விக்டஸ் போல. ஹேபிச்சுவல் அஃபென் டர்ஸ் பத்து வருஷம், ஏழு வருஷம். மற்றவர்களெல்லாம், பத்தாயிரம் பேர் இந்தத் திட்டத்தினாலே சிறைச்சாலையிலே இருப்பவன் அவன் திரும்புகிறபொழுது 500 ரூபாய், 600 ரூபாய், 1.000 ரூபாய் என்று எடுத்துச் செல்லுகின்ற அளவிற்கு போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் வேஜ் இன்கிரீஸ் செய்திருக்கிறார்கள், வெளியே மட்டுமல்ல; சிறை கைதி களுக்கு இன்றைக்கு கூலி உயர்வைக் கொடுத்து ஒரு புதிய சரித்திரத்தை உருவாக்கியிருக்கிறார்கள்,

அடுத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் எல்லாத் துறை களையும் போல இத்துறையும் புத்துயிர் பெற்றது முன் பெல்லாம் சில இலட்சங்கள்தான் இத்துறையின் வளர்ச் சிக்கு ஒதுக்கப்பட்டது. சிறைச்சாலையில் குடிநீர் வசதி இல்லை, பாளையங்கோட்டையிலே என்று சொன்னார்கள், வேலூர் சிறைச்சாலையிலே இல்லை என்று சொன்னார்கள், ஆனால் அப்படிப்பட்ட வசதிகளையெல்லாம், மேம்பாடு செய்ய, வடிகால் வசதி, துப்புரவு வசதி இதுபோன்ற அடிப் படை வசதிகளைப் பெருக்குவதற்கு இந்த ஆண்டு முப்பது இலட்சம் ரூபாயை ஒதுக்கி 16 திட்டப் பணிகளை எடுத்துச் செயல்படுத்த எங்களுக்கு ஆணையிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, சிறைச்சாலைகளையும் அதன் நிர்வாகத்தையும் நவீனப்படுத்தி—இன்றைக்குச் சொன்னீர்கள், செக்யூரிட்டி பிரிசனர்ஸ்- இன்றைக்கும் கோயம்புத்தூருக்குச் சென்றால் அங்கே ஜே. கே.- ஜம்மு காஷ்மீரிலிருந்து டெரரிஸ்ட் பல பேர் இருக்கிறார்கள், அவர்களைப் பாதுகாப்பது ஒரு கடுமையான பணி, எப்படி செங்கல்பட்டிலே இராஜீவ் காந்தியினுடைய வழக்கிலேயும், பத்மனாபா வழக்கிலேயும் இருப்பவன் இருந்து கொண்டு பாதுகாப்பாக செக்யூரிட்டி பிரிசனர்ஸ்- மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப் பேற்ற பிறகு இதுவரையிலே குற்றவாளிகள். ஹேபிச்சுவல் அஃபன்டர்ஸ் செல்வார்கள் - ஆனால் இந்த ஆண்டு செக் யூரிட்டி பிரிசனர்ஸ், டெரரிஸ்ட் - அவர்களை பாதுகாப்பது என்பது மிக மிகக் கடினமான பணி, செலவும் அதிகம்,

இன்றைக்குக் கோயம்புத்தூரிலே பல பேர் ஜே. கே. டெரரிஸ்ட் - ஜம்மு காஷ்மீரிலேயிருந்து மத்திய அரசாங்கம் கோயம்புத்தூரிலே ஏன் வைத்திருக்கிறது என்றால் தமிழ்நாடு

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1992 மார்ச் 3(

தான் நல்ல விசுவாசத்தோடு அந்தக் கைதிகளைப் பாது காக்கும் - திஹார் சிறைச்சாலை, டெல்லி சிறைச்சாலை, நீங்கள் பத்திரிக்கையிலே பார்த்திருப்பீர்கள். கைதிகள் டன்னலே செய்துவிட்டான் வெளியே வருவதற்கு,

பிற்பகல் 2—05

அந்தக் கண்டுபிடித்தவன் கூட, ஒரு தமிழ் காவலாளி என்று போற்றுதற்குரிய புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள். ஆக, தமிழன் எங்கேயிருந்தாலும் விசுவாசத்தோடு இருப்பான். நம்பிக்கையுடையவனாக இருப்பான், 'செக்யூரிட்டி'யைப் பற்றி இங்கே சொன்னார்கள், அது நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், ஆட்சியிலே மிகக் கடினமாக இருந்த அந்தப் போக்குவதற்கு சுமார் ரூ, 2 கோடியே 36 லட்சம் அளவில் 20—க்குக் குறையாத திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

இதற்கான நிதி ஒதுக்கியிருப்பதால். இத்திட்டங்கள் விரைந்து நிறைவேறும், அதற்கான பணமும் இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள், இந்த 2 கோடியே 36 லட்சம் ரூபாயில் 20 Schemes to Strengthen the Security of the Pisoners. Becouse Secrrity Priscners அதிகமாக இருக்கிற காரணத்தினால்,

அடுத்து, சிறைக் கைதிகள் அடிக்கடி சிறைச் சாலையிலேயிருந்து தப்பி ஓடுகிறார்கள் என்று சொன்னார்கள். Escapes. ஆனால், உங்களுக்குச் சொல்லிக் கொள்வேன். நீங்கள் சொன்னது போல அது பூதாகரமாக அல்ல. ஒரு 50, 55 கைதிகள்-மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகு, வேலூரில்தான் 8 கைதிகள் தப்பித்தார்கள்; அவர்களையும் பிடித்தாகி விட்டது. ஆனால் மற்றவன் எல்லாம் அங்கே தப்பித்தார்கள் என்றால், சிறைச்சாலையிலிருந்து நீதி மன்றத்திற்கு செல்கிறபோது. அது சிறைச் சாலையினுடைய பொறுப்பு அல்ல; போலீசினுடைய பொறுப்பு. 'எஸ்கார்ட்ஸ்' செய்வது போலீஸ். அங்கே இருந்து தப்பித்துக் கொள்கிறான். நீங்கள் மதுரையினுடைய சிறைச்சாலைக்கு முன்னாலேகூட, ஒரு வாரத்திற்கு முன்பு படுகொலை நடைபெற்றது என்று சொன்னீர்கள். நான் சிறைச்சாலைக்குச் சென்ற நேரத்திலே அதை விசாரித்தேன். திருச்சி சிறைச்சாலையிலே இருந்து மதுரை சிறைச்சாலைக்கு போலீஸ் கொண்டு வந்த நேரத்தில், அங்கே சிறு கவனக் குறைவாக அந்த போலீஸ் அதிகாரிகள் இருந்த காரணத்தினால், சிறைச் சாலைக்கு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



1992 மார்ச் 30]

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே நடைபெற்ற சம்பவம் போலீஸாரின் கவனக் குறைவால் நடைபெறவில்லை. அப்போது இரண்டு போலீஸ் கான்ஸ்டபிள்கள், சம்பந்தப்பட்ட கைதியை பஸ்சில் கொண்டு வந்து இறக்கி, கோர்ட்டுக்கு அருகே சென்று கொண்டிருந்தபோது, அந்தக் கைதியை ஏற்கனவே சம்பந்தப்பட்ட கூட்டத்தினர் ஒரு 'கிரிமினல் கேங்' இவர்களைக் காட்டி கொடுத்துவிடுவாரோ என்ற சந்தேகத்தினால், ஆயுதங்களுடன் வந்து அங்கேயே தாக்கி, அந்தக் கைதியைக் கொன்று விட்டார்கள். விசாரித்தபோது, எஸ்கார்ட்டாகச் சென்ற போலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவரிடமும் எந்தவித ஆயுதமும் இல்லை என்பது தெரிய வந்தது. அதிலிருந்து இந்த முறையையே மாற்றியமைக்க வேண்டும்; மறு பரிசீலனை செய்ய வேண்டும். இனிமேல் அத்தகைய கைதிகளை காவலர்கள் கோர்ட்டுக்கோ அல்லது வேறு சிறைச்சாலைக்கோ அழைத்துச் செல்கிறபோது, ஒவ்வொரு கைதிக்கும் குறைந்தபட்சம் 4 காவலர்கள் துணையாக அனுப்பப்படுவார்கள். அத்தகைய காவலர்களுக்கு அவசியம் ரிவால்வராவது—அதுபோன்ற ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்காலத் திட்டத்தைத் தீட்ட வேண்டுமென்று ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னதைப் போல, அவை சீரமைக்கப்பட்டது மட்டுமல்ல, சிறைச்சாலையிலே இருந்து தப்பிக்காமல் இருக்க, இதுவரையில் இந்தியாவிலே எந்தச் சிறைச்சாலையிலேயும் இல்லாத அளவுக்கு எலக்ட்ரானிக் அலாரம்---மதில் சுவர்களில் ஒலி மின்னணு சாதனத்தை அமைக்கிற உத்தரவையும் இந்தியாவிலேயே வேறு எந்தச் சிறைச்சாலையிலும் இல்லை; இங்குதான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைக்கு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலே கூட, மிகத் தெளிவாக அதனுடைய விளக்கத்தை ஒரு பக்கத்திலே வெளியிட்டிருக்கிறார்கள். ஆக பாதுகாப்பு சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக, மிக மிக அக்கறை எடுத்து, எலக்ட்ரிக் அலாரம் என்ற அந்தப் புதிய—நவீன சாதனத்தைப் பெற்றுத் தந்த பெருமை போற்றுதற்குரிய நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைத்தான் சாரும்.

சிறைச்சாலையிலே இருந்து விடுதலை பெறும் கைதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக, சிறைத்துறையில் இதுவரை ஒரு சிறு தொகைதான் அதாவது ரூ. 8,000 தான் வழங்கப்பட்டது. சிறைச்சாலையிலிருந்து வந்து ஒருவன் தொழில்

செய்ய வேண்டும்; அல்லது வேறு வேலையிலே அமர வேண்டுமென்றால், அவனுக்கு 8,000 ரூபாய்தான் இதுவரையிலே இருந்த ஆட்சி செய்து வந்தது. ஆனால், புரட்சித் தலைவி அவர்கள், அதனை இந்த ஆண்டிலே இருந்து ஒரு லட்சமாக உயர்த்திக் கொடுக்கிறோம் என அறிவித்து இருக்கிறார்கள்.

அடுத்து, மாவட்ட ரீதியில்— இங்கே சொன்னார்கள், சிறைச்சாலையிலே நடக்கிற குறைகளையெல்லாம் அரசாங்கத்திற்கு சொல்வதற்கு ஒரு 'அட்வைசரி போர்டு' வேண்டுமென்றும், 'ஜெயில் விசிட்டர்கள்' வேண்டுமென்றும் இங்கே சொன்னார்கள். இதுவரையில் 10 ஆண்டுகளாக அந்த முறை இல்லாமல் இருந்தது. போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டிலே இருந்து ஜெயில் விசிட்டர்களை நியமிக்கவும் ஆணையிட்டிருக்கிறார்கள் என்றும், அதேபோல் மாவட்ட ரீதியில் உள்ள ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்க அலுவலர்கள் அல்லாத 'நான்-அபிசியல்ஸ்'-ஐ அங்கே இருக்கிற கைதிகளினுடைய நிலையினைப் பார்ப்பதற்காக 'அட்வைசரி போர்டையும்' இந்த ஆண்டிலிருந்து உருவாக்க ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2-10

சிறைத் துறையில் பணியாற்றுவோரின் நலன் பேணி அவர்களை உற்சாகப்படுத்த, ஊக்கப்படுத்த இந்த அரசு முனைப்பாக இருக்கிறது. இவர்களுக்கு வீட்டு வசதி இல்லாதது ஒரு பெரும் குறைபாடாக உள்ளது. சிறைச்சாலை பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் வீடுகள் கட்டவும், தற்போதுள்ள வீடுகளைப் பழுதுபார்த்து பராமரிக்கவும், இந்த அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை விரைவிலே வகுக்க போற்றுவதற்குரிய புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனைப் போல தொடக்கத்திலே நான் சொன்னதைப் போல 'செக்யூரிட்டி பிரசினர்ஸ்'களை காப்பதற்காக, இங்கே இருக்கின்ற காவலர்களுக்கு வாக்கி-டாக்கி ஸ்பெஷல் கன் போன்ற நவீன ஆயுதங்களை எல்லாம் அளித்து இன்றைக்கு அதனை சீரமைத்து கட்டுப்படுத்தி, செக்யூரிட்டி பிரசினர்ஸ் எந்த முறையிலும் தப்பிக்காத அளவுக்கு அவர்கள் கட்டுக்கோப்பை சிறைத் துறையிலே உருவாக்கியிருக்கிறார்கள் என்ற கருத்தைச்சொல்லி, வெட்டுத் தீர்மானங்களில் நீங்கள் சொன்ன கருத்துக்களையும், பேசியபோது சொல்லிய கருத்துக்களையும் குறிப்பிட்டு



எடுத்து வைத்திருக்கிறேன். அதன் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுத்து உங்களுக்குத் தகவல் அளிப்பேன் என்பதனை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து 'அட்மினிஸ்ட்ரேஷன் ஆஃப் ஜஸ்டிஸ்'. ஒரு முக்கியமான துறை. அந்தத் துறையைத் பற்றித்தான் இங்கே பேசிய 11 உறுப்பினர்கள் பெரும்பாலான நேரத்தை எடுத்து பல்வேறு விவரங்களையெல்லாம் சொன்னார்கள். நான் சுருக்கமாக சில கருத்துக்களை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இந்திய அரசியல் சட்டத்தில் 3 அங்கங்கள் உள்ளன. ஒன்று எக்சிக்கியூட்டிவ 2வது லெஜிஸ்லேச்சர், 3-வது ஜூடிஷயரி, இந்த மூன்றும்தான் இந்திய அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற மூன்று ஆயுதங்கள். நம்முடைய போற்றுதலுக்குரிய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எக்சிக்யூடிவ்வின் தலைவராக இருக்கிறார். இன்றைக்கு போற்றுதலுக்குரிய பேரவைத் தலைவர் மாண்புமிகு முத்தையா அவர்கள் லெஜிஸ்லேச்சருக்குத் தலைவராக இருக்கிறார். அதேபோல் ஜூடிஷியரிக்கும் தலைமை நீதிபதி இருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு தவறான கருத்து நிலவுகிறது, நீதிமன்றம்தான் உயர்ந்தது என்று. அதுபற்றி விவாதிக்க கூடாது என்றெல்லாம் Myth, illusion இருக்கிறது. அதற்கு நல்ல விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இவைகள் எல்லாம் தனித்தனியாக இருக்கிறதே தவிர They are separate but are equal. இந்த மூன்று கருவிகளும், மூன்று அங்கங்களும் மூன்று பணிகளைச் செய்யுங்கள் என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் சொல்கிறது. ஆகவே, நீதிமன்றம் உயர்ந்ததா? சட்டமன்றம் உயர்ந்ததா? அல்லது நிர்வாகம் உயர்ந்ததா? என்பதல்ல. ஒன்றோடு ஒன்று சமம். அதை உணர்ந்து கொள்ளாத காரணத்தால் தான் அதில் இணக்கம் இல்லாத காரணத்தினால்தான் பல நேரங்களிலே நீதிமன்றத்தினுடைய குறைகளையெல்லாம் சொல்லுகின்ற நேரத்திலே அந்தப் பொறுப்பிலே இருப்பவர்கள் அதை உணர்ந்து இருந்தால் இந்த குறையே வந்திருக்காது. அதை முதலிலே உங்களுக்கு நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

கடந்த 8, 9 மாதங்களுக்கு முன்பாக போற்றுதற்குரிய புரட்சித் தலைவி பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பாக, நீதித் துறை செயலற்று விளங்கியது. புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்கள் ஆணையிட்ட பல நீதிமன்றங்கள் 2 ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.க. ஆட்சியிலே ஆரம்பிக்கப்படவில்லை. இங்கே அமர்ந்திருக்கிறாரே

போற்றுதற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சகோதரி ஏ. எஸ். பொன்னம்மாள் நேற்றைக்கு முன்பு அவருடைய ஊரிலே நிலக்கோட்டையிலே ஒரு கோர்ட் திறக்கப்பட்டது. 10 ஆண்டுகளாக அது திறக்கப்படவில்லை. நேற்றைக்கு ஒரு நீதிமன்றம் கொடைக்கானலிலே திறக்கப்பட்டது. திருப்பத்தூரில் 'ஸ்பெஷல் கோர்ட் ஃபார் சான்டல்-உட் அபன்ஸஸ்' அதற்கான உத்தரவு பெற்று ஆணையிட்டு உயர்நீதி மன்றத்திலே பேசி, பேசி நீங்கள் ஆச்சரியபடுவீர்கள், இந்த 8 மாத காலத்திலே உயர்நீதிமன்ற ரிஜிஸ்டாருடன் 6 முறை சந்தித்திருக்கிறேன். 6 முறை அழைத்துப் பேசி இருக்கிறேன். உள்துறை செக்ரடரியோடு பேசியிருக்கிறேன். நிதித் துறை செயலாளருடன் பேசியிருக்கிறேன். இவைகளையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து அவர்களுடைய ஒப்புதலையும் வாங்கியிருக்கிறேன். ஆட்சிக்கு வந்தவுடனே அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் கோர்ட்டுக்கு இங்கேயே உத்தரவு போட்டார்கள். சிவகெங்கை கோர்ட்டுக்கு போட்டார்கள். இராமநாதபுரத்திற்குப் போட்டார்கள். ஜுடிசியல் டிஸ்ட்ரிக்ட் என்று புரட்சித் தலைவர் ரெவின்யூ டிஸ்ட்ரிக்டை உருவாக்கினார்கள். இன்று வரையில் அவர்களுக்கு—நீதிமன்றம் கேட்ட தேவைப் பட்ட பர்னிச்சர்களைக் கொடுத்து ஆகிவிட்டது, இடத்தைக் கொடுத்தாகிவிட்டது, எல்லா வசதிகளும் கூட கொடுத்து, இன்றைக்கு ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பு உயர்நீதி மன்றத்திலே இருக்கிறது, நாளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம். அதே போல வருகிற 13-ஆம் தேதி, இங்கே உட்கார்ந்திருக்கிறாரே போற்றுதலுக்குரிய உறுப்பினர் திரு, ராஜு அவர்கள், அவருடைய அந்த மாவட்டத்தைச் சேர்ந்த கோத்தகிரியில் வருகிற சித்திரை முதல் நாள் முத்திரையிட்டு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியினுடைய பெருமையை அந்த மலைகளுடைய ராணி என்று சொல்கின்ற அந்த நீலகிரியில் தொடங்க இருக்கிறோம்,

பிற்பகல் 2-15.

அதேபோல, ஸ்பெஷல் கோர்ட். திருப்பத்தூர். உங்களுக்குத் தெரியும், இன்றைக்கு போற்றுதலுக்குரிய போக்குவரத்துத் துறை அமைச்சராகவும். வனத்துறை அமைச்சராக நம்முடைய மாண்புமிகு செங்கோட்டையன் அவர்கள், சந்தன திருட்டு பற்றி, இன்றைக்கு தமிழ்நாடு பாரஸ்ட் ஆக்டிலே இருக்கின்ற பலவீனத்தைப் பற்றி நாளும் நாளும் பேசி வருகிறார், ஒரு ஸ்பெஷல் கோர்ட் இல்லாமல் இருக்கிறது, இன்றைக்கு வேலூரில் மட்டும் 2 ஆயிரம் வழக்குகள் இருக்கின்றன, வேலூரிலே, திருப்பத்தூரிலே மலைக் காடுகள், சந்தனத் திருட்டு, இரண்டாயிரம் கேஸ்கள் பெண்டிங், 24 கோடி ரூபாய் முடங்கி இருக்கிறது, புரட்சித் தலைவி அவர்கள் வந்தபிறகு இன்றைக்கு ஒரு புதிய கோர்ட்டை சென்ற சனிக்கிழமை திறந்து வைத்தார்கள். அடுத்து



மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அடுத்து சேலத்தில். ஏன் இப்படி ஸ்பெ ல் கோர்ட், அவ்வளவு சேன்டல்வுட் அஃபன்சஸ் என்று, இவைகளை எல்லாம் எதற்காக சொல்கிறேன் என்றால். இவைகள் எல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே கருவாக இருந்தது, அதற்கு வடிவம் கொடுத்தவர் அவருடைய வாரிசு. போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி, (பலத்த மேசையைத் தட்டும் ஒலி)- இரண்டு ஆண்டுகளிலே ஒரு கோர்ட் கூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் திறக்கவில்லை, அத்தனையும் ஆணையாகத்தான் இருந்தது, கோட்டையிலே இருந்தது, உயர்நீதி மன்றத்திலே இருந்தது, அவர்களிடத்திலே சொன்னவுடன் எப்படி காவிரி புதுப்புனல் வேகமாக வருமோ அப்படி ஆணைகள் பிறந்தன, இன்றைக்கு கோர்ட்டுகளும் உருவாகிக் கொண்டிருக்கின்றன,

அதுபோல, நிலக்கோட்டையிலே சகோதரி பல முறை பேசியிருக்கிறார்கள், நானே சொல்லியிருக்கிறேன், குறிப்பிலே படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறேன், 'சகோதரி ஓலமிட்டுக் கொண்டேயிருக்கிறீர்களே, அதற்கு விடிவு புரட்சித் தலைவி ஆட்சியின் போதுதான் வரும்' என்று சொன்னேன், நேற்றைக்கு முந்தைய நாள் அந்த நிலக்கோட்டையில். நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அது ஒரு சாதாரண கோர்ட். டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் அதனுடைய ஜுரிஸ்டிக்ஷன் 15 ஆயிரம் ரூபாய், ஆனால் அது ஒரு விழாபோல, ஒரு சித்திரைத் திருநாள் போல. ஊரே கோர்ட்டுக்கு வந்துவிட்டது. புரட்சித் தலைவி ஆட்சியிலே வந்துவிட்டது வந்துவிட்டது என்றார்கள். நம்முடைய சகோதரி அன்றைக்கு பெற்ற மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அதற்கு ஒரு 'கேபபிளிட்டி' வேண்டும், முடிவெடுப்பது பெரிதல்ல. அதனை நிறைவேற்ற வேண்டும். அதை நிறைவேற்றுகிற ஆற்றல் போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உண்டு, (பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போல. திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் செல்வி நிர்மலா. எம்,எல்,ஏ,. ஒரு கருத்தைச் சொன்னார்கள், அது என்னை உறுத்தியது. ஏனென்றால். '' அண்ணா '' மாவட்டத்தைப் பிரிக்கிறபோது. புரட்சித் தலைவர் ஆணையிட்டார்கள், சீப் ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வேண்டுமென்று, ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நிறுத்தி அது மதுரையிலே வைக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி வந்தவுடனே அடுத்து மே மாதத்திலே திண்டுக்கல்லிலே சீப் ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வருகிறது, எல்லா நீதிமன்றங்களும் அங்கே இருக்கிறது, மதுரையில். திண்டுக்கல்காரன் அங்கே செல்லவேண்டும், வேடசந்தூர்காரன் அங்கே செல்லவேண்டும், ஒட்டன்சத்திரக்காரன் மதுரைக்குச் செல்ல வேண்டும். சி.ஜே.எம். கோர்ட்டுக்கு. அந்த கோர்ட்டை மாற்றுகின்ற ஆணையையும் போட்டு

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1992 மார்ச் 30

அநேகமாக இந்த கூட்டத் தொடர் முடிந்தவுடன் திண்டுக்கல்லில் அந்த காரியம் நடக்க இருக்கிறது. அதேபோல. அம்பாசமுத்திரம், அவர்கள் சொன்னார்கள், இது 100 வருடங்களாக இருக்கின்ற ஒரு பழம் நீதி மன்றம், ஆனால் அங்கே ஜுரிஸ்டிக்ஷன் பற்றி ஒரு சில உணர்வுகள் இருக்கின்றன, அதை போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி சுமுகமாகத் தீர்த்து வைப்பார்கள். இங்கே இருக்கின்ற நம்முடைய இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் உரிமையோடு இந்தப் பகுதி எனக்கு வேண்டும், அந்தப் பகுதி எனக்கு வேண்டும் என்கிறார்கள். இவைகள் எல்லாம் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினை, இவைகளையெல்லாம் அவர்கள் தீர்த்து வைப்பார்கள்,

அதுமட்டுமல்ல, டெசிக்னேட்டட் கோர்ட், இன்றைக்குத் தடா கைதிகள் 130-க்கு மேலாக இருக்கின்றார்கள், அதிலே நம்முடைய மதிப்பிற்குரிய அமரர் திரு, ராஜிவ்காந்தி கொலை வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள், பத்மநாபா கொலை வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள், மற்ற காரியங்களிலே. கேடுகளிலே ஈடுபட்டவர்கள் எல்லாம் ஒரு 130 பேர்கள். எனவே இந்த வழக்குகளைத் தீர்த்து கொடுக்க வேண்டுமென்பதற்காக போற்றுதலுக்குரிய முதல்வர் அவர்கள் இனி ஒரு டெசிக்னேட்டட் கோர்ட்டை உருவாக்கி நம்முடைய அமரர் ராஜிவ்காந்தியினுடைய வழக்கை மட்டும் ஒரு கோர்ட்டிலே விசாரிப்பது, மற்ற வழக்குளை எல்லாம் இனி ஒரு டெசிக்னேட்டட் கோர்ட் உருவாக்க அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். கருத்துரு இன்றைக்கு அரசாங்கத்திலே இருக்கிறது. அது வர இருக்கிறது என்பதனையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன், இப்படி பல திட்டங்கள் அவர்கள் கொடுத்துள்ள திட்டங்களை சொல்லுவதற்கே 2 நாட்கள் பிடிக்கும் என்ற காரணத்தினாலே சொல்கிறேன், அவர்கள் சொன்னார்கள், ஒரே ஒரு கருத்து,

பிற்பகல் 2-20

இன்றைக்கு 8 மாதக் காலமாக ஹைக்கோர்ட்டில், சில இடங்களில் லா ஆபீசர்ஸ் அமர்த்துவதில் சுப்ரீம் கோர்ட்டினுடைய ஒரு தீர்ப்பு காரணமாக தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஒரே உத்தரவிலே எல்லா லா ஆபீசர்களையும் நீக்குகிற அதிகாரம் இருந்தது. ஆனால் நாங்கள் வருகிறபோது, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி முதலமைச்சராக ஆன பிறகு சுப்ரீம் கோர்ட் ஒரு ஆணையிட்டது. நீங்கள் லா ஆபீசர்ஸ்-ஐ எடுக்க வேண்டுமென்றால் கலக்டரிடமிருந்து பேனல் வாங்க வேண்டும். அங்கே இருக்கிற டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், அவர்களுடைய கேரக்டர் பற்றி சொல்ல வேண்டும். பிறகு அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரி காண்ட்க்ட் சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டும். இவர்கள் எல்லாம் இங்கே கிரைம் பிராஞ்சுக்கு அனுப்ப வேண்டும். பிறகு ஹோம் செக்கரட்டரிக்கு அனுப்ப வேண்டும். ஹோமில் இருந்து லா-வுக்கு போக வேண்டும். லா-வில் இருந்து லா மினிஸ்டருக்கு



1992 மார்ச் 30] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

அனுப்ப வேண்டும். பிறகு புரட்சித் தலைவி அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டும். இன்றைக்கு இதை எல்லாம் தாண்டி, பெருமையோடு சொல்லிக்கொள்வேன், இதோ கடைசியாக அந்த உத்தரவையும் கூட அவர்கள் போட்டுவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு 234 இடங்களில், ஹைக்கோர்ட்டிலே 47, அதுபோல தமிழ்நாடு ஸ்டேட் அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிரிப்யூனலில் 7 இடங்கள் இருக்கின்றன. அந்த எல்லா இடங்களுக்கும், அதுபோல சபார்டினேமி கோர்ட், மற்ற மற்ற சப் கோர்ட்டுகள் செசன்ஸ் கோர்ட் இந்த வகையில் 180 மற்றும் தமிழ்நாடு பூரா 234 லா ஆபீசர்ஸ், பெரும்பான்மையான இடங்களில்,ஒன்றிரண்டு அதிலே வழக்கு போட்டிருக்கிறார்கள். வேலூரில் இருந்துகூட வழக்கு போட்டிருக்கிறார்கள். இப்படி வழக்கு போட்டிருப்பதால் நிலுவையிலே இருப்பதை தவிர இன்றைக்கு லா ஆபீசர்ஸ் எல்லா இடங்களிலும், இந்த 8 மாதக் காலங்களில் நான் மேலே சொன்ன அந்த முறையைப் பின்பற்றி கலக்டரிலிருந்து, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டிலிருந்து போலீஸ் ரிப்போர்ட்டிலிருந்து இங்கே இருக்கின்ற கிரைம் பிரான்ஞ்சில் இருந்து, பிறகு ஹோம் செக்கரட்டரி, லா செக்கரட்டரி, லா மினிஸ்டர் பிறகு சீப் மினிஸ்டர் என்று இப்படி 7, 8 கட்டங்கள். இந்தக் கட்டங்கள் எல்லாவற்றையும் தாண்டி, இன்றைக்கு ஏறத்தாழ 234 . . . (மணியடிக்கப்பெற்றது). சில அறிவிப்புகளைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

அடுத்து., திரு. ஞானசேகரன் இங்கே ஒன்றைச் சொன்னார். இந்த 234 லா ஆபீசர்ஸ்-ஐயும் கட்டுப்படுத்துவதைப் பொறுத்தவரையில் no effective administrative control over Government cases அந்தவகையில் இன்றைக்கு எவ்வளவோ வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் அரசாங்கத்திற்கு என்ன நடக்கிறது என்று தெரியாது. பப்ளிக் பிராசிக்யூட்டரைப் போடுகிறார்கள். ஏ.பி.பி. போடுகிறார்கள். ஜி.பி. போடுகிறார்கள். ஆனால் அவர்கள் எந்த வழக்குக்குப் போகிறார்கள். எந்த எந்த வழக்கு ஜெயித்தது ? என்ன பைல் செய்தார்கள் ? டிஸ்போசலா? இதற்கெல்லாம் புரட்சித் தலைவர் காலத்திலே சென்ட்ரலைசேசன் இருந்தது. உங்களுக்குத் தெரியும். டைரக்டர் ஆஃப் பிராசிகியூசன் அண்ட் லிட்டிகேசன் என்கிற இரண்டு அமைப்புகள் இருந்தன. ஆனால் தி.மு.க. வந்த உடன் அதைக் கலைத்துவிட்டது., இடையில். ஆனால் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள் புரட்சித் தலைவர் காலத்திலே இருந்ததுபோல டைரக்டர் ஆஃப் பிராசிக்யூசன் அண்ட் டைரக்டர் ஆஃப் லிட்டிகேசன் (மேசையைத் தட்டும் ஒலி). ஆக எந்த வழக்கு நடைபெற்றாலும், புரட்சித் தலைவிக்குத் தெரிந்தாக வேண்டும்.

இன்றைக்கு நீதிமன்றத்திலே என்ன நடக்கிறது என்று காலையிலே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை அல்லது ' இந்து ' பத்திரிகையை படித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால் அங்கே 5 மணிக்கு தீர்ப்பு சொல்கிறார் என்றால் ஐந்தேகால் மணிக்கே இந்த டேபிளுக்கு அந்தத் தகவல் வந்திருக்க வேண்டு மென்ற அடிப்படையில் நம்முடைய போற்றுதலுக்குரிய அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் டைரக்டர் ஆஃப் பிராசிகியூசன் என்று, கிரிமினல் வழக்குகளுக்கு மட்டும் என்று இருந்ததை இன்றைக்கு சிவில் வழக்குகளுக்கும் சேர்த்து ஒரு காம்ப்ரிஹென்சிவ் ஆக Directorate of Litigation என்ற அமைப்பும் அமைக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது சிவில் ஆக இருந்தாலும் சரி, கிரிமினல் ஆக இருந்தாலும் சரி வழக்கு என்றால் Effective caetrol on Government cases என்ற புதிய ஆரோக்கியமான நிலை, அரசு வழக்கு நடக்கிறது என்றால், அதனுடைய அசைவுகள், போக்குகள் முதலமைச்சருக்கு தெரிந்தாக வேண்டும். அதற்கு ஒரு மெசினரி இருந்தது. அதை தி.மு.க. அழித்தது. டிஸ்மான்டில் செய்தது. இன்றைக்கு அதனையும் உருவாக்கி இருக்கிறார்கள்.

அடுத்து, லீகல் எய்ட். புரட்சித் தலைவர் காலத்திலே 2 லட்சம். இன்றைக்கு 92 லட்சம் ரூபாயை அவர்கள் இந்த ஆண்டு கொடுத்திருக்கிறார்கள். இதுவரையிலே பல்வேறு வழக்குகளுக்கு, 12 ஆயிரம் வழக்குகளிலே தீர்ப்பு அளித்து அவர்களுக்கு 28 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல லா கமிஷன். இன்றைக்கு எப்படி டெல்லியிலே லா கமிஷன் இருக்கிறதோ அதுபோல இங்கேயும் ஒரு லா கமிஷன் போட்டிருக்கிறோம்.

அதுபோல டவுரி ஆக்ட் பற்றி எல்லாம் இங்கே சொன்னார்கள் 100 ஆண்டுகளாக இருப்பது என்றும் சொன்னார்கள். அன்றைக்கு போற்றுதலுக்குரிய முதல்வர் அவர்கள் Suppession of immaral Act என்ற ஆக்டிலே குற்றவாளி குற்றம் செய்கிறான் என்றால், அந்த ஆக்ட் பலவீனமான சட்டமாக இருக்கிறது, திருத்த முடியவில்லை.

பிற்பகல் 2-25

அதுபோன்ற இற்றுப்போன, செல்லரித்துப்போன சட்டங்களை புதுப்பித்து, தேவையான சட்டங்களை உருவாக்க, லா கமிஷன் அமைக்க போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டக் கல்வி என்பது அற்புதமான ஒன்று. உங்களுக்குத் தெரியும். ஏற்கெனவே நாங்கள் எல்லாம் வழக்கறிஞர்களாக இருக்கிறபோது, அப்பரண்டிஸ்—ஆக இருந்தோம். இப்போது லா காலேஜில் படித்தவுடன் ஹைக்கோர்ட்டுக்கு சென்று விடுகிறார்கள். ஆக அந்த பயிற்சியில்லாத காரணத்தாலே இன்றைக்கு சிலபஸ் சரியில்லை. அந்தக் கல்வியும் சரியில்லை என்று சொல்லப்படுவதை ஆய்ந்து, சட்டக் கல்வியிலும் ஒரு திருப்பத்தை உருவாக்க வேண்டுமென்று இருக்கிறோம். அதற்காக இதுவரை கல்வித்துறையோடு இருந்த அந்த சட்டக் கல்வித் துறையை சட்டத்துறையோடு சேர்த்திருக்கிறோம். அது சம்பந்தப்பட்ட



துறை என்ற காரணத்தால். எப்படி மெடிகல் காலேஜ் என்பதன் அட்மினிஸ்டிரேடிவ் மினிஸ்டராக சுகாதாரத்துறை அமைச்சர் இருக்கிறாரோ, எப்படி இன்ஜினியரிங் காலேஜ் என்பதற்கு அட்மினிஸ்டிரேடிவ் மினிஸ்டர் ஆக கல்வி அமைச்சர் இருக்கிறாரே அதைப் போல, சட்டக் கல்வியைப் பொறுத்தவரையில் அட்மினிஸ்டிரேடிவ் மினிஸ்டராக சட்ட அமைச்சர் இருக்க வேண்டுமென்று, அந்த லா காலேஜ் நிர்வாகத்தை சட்டத்துறையோடு அவர்கள் இன்றைக்கு இணைத்திருக்கிறார்கள்.

அடுத்து, மதுரையில் ஹைகோர்ட் பெஞ்ச் வருவதில் இப்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது கடந்த 7 மாதங்களில். 20 வருட காலமாக புரட்சித் தலைவர் காலத்திலிருந்து எழுதி எழுதி, இன்றைக்குத்தான் 3 நீதிபதிகளை மதுரைக்கு உயர்நீதிமன்றம் அனுப்பியது ; ஜஸ்டிஸ் ரத்தினம், ஜஸ்டிஸ் மிஸ்ரா, ஜஸ்டிஸ் வெங்கடசாமி என்ற மூன்றுபேரும் 13-ந் தேதி மதுரைக்குச் சென்று அங்கே இடங்களையெல்லாம் பார்த்து, அறிக்கையை போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்களுக்கு அனுப்ப இருக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் காலத்திலே மதுரையில் ஹைக்கோர்ட் வரும். எப்படி மதுரையில் மீனாட்சி கோவில் இருக்கிறதோ, அதுபோல், அங்கே மதுரையிலே ஹைகோர்ட் பெஞ்ச் வரவிருக்கிறது. எப்படி மீனாட்சி கோயில் பெருமைமிக்க அளவில் இருக்கிறதோ, அதுபோல் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் காலத்திலே அங்கே பாண்டி மண்டலத்திற்கே ஒரு ஹைகோர்ட் வரவிருக்கிறது. அதற்காக 13-ந் தேதி போய்ப் பார்த்திருக்கிறார்கள்.

அதைப்போல அட்வகேட் வெல்ப்பேர் ப்ண்ட். இங்கே ஒருவர் சொன்னார். எல்லோருக்கும் நிதி கொடுக்கிறீர்கள், எங்களுக்குக் கொடுக்கிறார்களா என்று சொன்னார்கள். அதற்கு ஒரு மசோதா கொண்டுவரச் சொல்லியிருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் மன்றம் வழக்கறிஞர்கள் நலனுக்கு ஒரு கணிசமான தொகையை ஈட்டும் வகையில் பல பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவற்றை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதுபற்றிய மசோதா இந்த நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல ஸ்டேட் அபிசியல் லாங்வேஜ் கமிஷன் திருத்தி அமைக்கப்பட இருக்கிறது. அதுபோல் வேகன்சி பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு ஏறத்தாழ 508 நீதிபதிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். ஹைக்கோர்ட் ஜட்ஜ்கள், டிஸ்டிரிக்ட் கோர்ட் ஜட்ஜ்கள், சப்-ஜுடீஷயல் மற்றும் டிஸ்டிரிக்ட் முன்சீப்புகள், அதைப்போல ஜுடீஷயல் மாஜிஸ்டிரேட்டுகள் என்று 508 பேர்கள் இருக்கிறார்கள். இதில் 29 இடங்கள்தான் காலியாக இருக்கின்றன. அந்த 29 இடங்களுக்கும் நாங்கள் பரிந்துரை செய்துவிட்டோம். ஹைக்கோர்ட் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறோம். விரைவில் ஒப்புதல் அளிக்கப்படும் என்று கருதுகிறோம்

அது வந்துவிட்டாலும் தமிழ்நாட்டில் எந்த நீதிமன்றத்திலும் நீதிபதி பதவிகள் காலியாக இருக்கிறது என்ற குறை தீர்ந்துவிடும். அடுத்து, பென்டன்சி. 10 லட்சம் வழக்குகள் இன்றைக்கு நிலுவையில் இருக்கின்றன. அதற்குக் காரணங்கள் பலவற்றைச் சொன்னார்கள். எனக்கு நேரம் இருந்தால் அதிகமாகச் சொல்லியிருப்பேன். Because there is no judicial accountability நீங்கள் எங்களைக் கேட்கலாம் 10 லட்சம் வழக்குகள் இருக்கிறதே என்று. நாங்கள் யாரைப் போய்க் கேட்பது. ஏனென்றால் நீதிமன்றம் எங்களிடம் agreeable ஆக இல்லை. ரிஜிஸ்டிரார் 10 முறை அழைத்தாலும் இங்கே வந்தவர், கேட்டுச் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுச் செல்கிறார். எப்போது கேட்கிறார் என்று தெரியாது. 10 லட்சம் இருக்கிறதே, How ure you going to liquidate their old arrearst சொல்லுங்கள். புரட்சித் தலைவி நீதிமன்றங்களைக் கொடுத்தார். நீதிபதிகளைக் கொடுக்கிறார், பணத்தைக் கொடுக்கிறார், இன்னும் சொல்லப்போனால் நீதிபதிகளைக் கொடுத்த பிறகு, அவர்களை மாற்றுகிற அதிகாரம் அவருக்கு இல்லை.

குடியாத்தம் பற்றி இங்கே உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசினார். 8 மாதமாக ஒரு மாஜிஸ்டிரேட் முறைகேடாக நடந்து வருகிறார் என்றார்கள். பத்து முறை அதைப்பற்றி உயர்நீதிமன்றத்திற்கு எழுதியிருக்கிறோம். மாஜிஸ்டிரேட்டை மாற்றுகிற அதிகாரம் எங்களுக்குக் கிடையாது. ஒரு கலெக்டரை மாற்ற டெலரக்லக்ஸ் போதும். ஒரு எஸ்.பி.யா., ஒரு டெலக்சில் மாற்றப்படுகிறார். செக்ரட்டிரியா ஒரு உத்தரவில் மாற்றப்படுகிறார். ஆனால் ஒரு மாஜிஸ்டிரேட்டை 8 மாதமாக நீதிமன்றம் மாற்றாமல் இருக்கிறது. அதனுடைய தொடர் பிரச்சினை என்னவென்றால், சட்டம் ஒழுங்கு கெடுகிறது. வக்கீல்கள் மறியல் செய்கிறார்கள். அடைக்க வேண்டியிருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன். There is no judicial accountability இன்றைக்கு 10 லட்சம் வழக்குகள் தேங்கியிருக்கின்றன என்று சொன்னால் என்ன காரணம்? ஒரேயொரு வழக்கை மட்டும் சொல்லிவிட்டு, விடைபெறலாம் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 2-30

இன்றைக்கு தமிழக அரசினுடைய வருமானத்தில் மூன்று துறைகள்தான் Channel of Income முக்கியமாக உள்ளது; ஒன்று Sales Tax, இரண்டாவது Motor Vehicles Tax, மூன்றாவது Registration. இந்த நிதி ஆதாரம் தமிழ்நாட்டிற்கு மூன்று துறைகளிலே இருந்து வருகிறது. ஆனால் அதில் ஏறத்தாழ பல வழக்குகள், பல நூறு வழக்குகள் சேல்ஸ் டாக்சிலே இருக்கின்றன. உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டில் லாட்டரி விற்பனை பற்றி. இன்றைக்கு காலையிலேதான் நான் பார்த்தேன். அதற்கு ஒரு பத்திரிக்



கையே வருகிறது. இதை வாங்கிப் பார்த்தால் எங்கு பார்த்தாலும் லாட்டரி, பூட்டான் லாட்டரி, காஷ்மீர் லாட்டரி இப்படி லாட்டரி லாட்டரியாகவே 8 பக்கங்களுக்கு போட்டு ஒரு பத்திரிகை வருகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் இந்த லாட்டரியின் மீது விற்பனை வரியைப் போட்டார்கள். இதிலே செல்வாக்கு மிக்கவர்கள் இருக்கிறார்கள், செல்வம் மிக்கவர்களும் இருக்கிறார்கள். ஒரு பத்திரிகையை நம்மாலேகூட நடத்த முடியவில்லை. ஆனால் லாட்டரிக்காக மட்டுமே சூப்பர் ஸ்பெஷல், சரணம் ஐயப்பா, ராஜ்பிரியா—டெய்லி—இவைகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இங்கே வரி செலுத்த மறுக்கிறார்கள். ஆகவே 1984-ல் அவர்கள் விற்பனை வரியை போட்டார்கள். உடனே அவர்கள் டில்லிக்குச் சென்று ஸ்டே வாங்கிவிட்டார்கள் 1984-ஆம் ஆண்டு. இரண்டாண்டுகள் கழித்து சுப்ரீம் கோர்ட்டில் மிக நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். AIR 1986 சுப்ரீம் கோர்ட், பேஜ் 63, 4—10—1985 அன்று தீர்ப்பு கூறப்பட்டுள்ளது. டிவிஷன் பென்ச். அதிலே சொன்னார்கள். ராஃபிள் என்பது ஒரு கம்மாடிட்டி. அது ஒரு பொருள்தான். அதற்கு வரி போடலாம். ஆனால் அந்த நேரத்தில் தமிழ்நாட்டு லாட்டரிக்கு மட்டும் விதிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள். "டிஸ்கிரிமினேஷன்" அதை, போக்கிவிட்டு அவர்களுக்கும், தனியாருக்கும் வரி போடுங்கள் என்று சொன்னவுடன், தமிழ்நாடு ராஃபிள் இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்கிறது. ஒரு கோடி ரூபாய் தமிழ்நாடு கருவூலத்திற்கு, நாவலர் அவர்களிடத்திலே கொடுக்கிறார்கள். தமிழ்நாடு ராஃபிள் கொடுக்கிறார்கள். ஆனால் மதுரைக்காரனும், சென்னையிலே இருப்பவர்களும் ஏறத்தாழ 140 கோடி ரூபாய் நிலுவையாக வைத்திருக்கிறார்கள், 1984-ல் இருந்து. 1984-லேயே சுப்ரீம் கோர்ட் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதைப் படிக்கிறேன்.

"If incorporeal right like copy right or an intangible thing like electric energy can be regarded as goods exigible to sales tax there is no reason why the entitlement to a right to participate in a draw which is beneficial interest in movable property of incorporeal or intangble character should not be regarded as 'goods for the purpose of levying sales tax. As stated above lottery tickets which comprise such entitlement do constitute stock-in-trade of every dealer and therefore his merchandise which can be bought and sold in the market. Lottery tickets comprising such entitlement, therefore, would fall within the definition of 'good' given in the Tamil Nadu Act என்று சொல்லி வரி போடலாம் என்று சொன்னார்கள் 1984-ல். இப்போது திடீரென்று இங்கே வந்து "கன்டெம்ட் ஆப் கோர்ட்" என்று டிவிஷன் பெஞ்சிலே போட்டார்கள் 1986-ல். அதிலே ஜஸ்டிஸ் மிஸ்ரா அவர்கள், இதிலே கன்டெம்ட்

பிற்பகல் 2-35

இல்லை, எனவே நீங்கள் வசூலிக்கலாம் என்று சொன்னார்கள். ஜஸ்டிஸ் மிஸ்ரா அண்டு கோவிந்தசாமி ஜட்ஜ்மென்ட். பிறகு இவர் வேறு ஒரு ஆளை வைத்து ஜஸ்டிஸ் கனகராஜ் அவர்கள் கோர்ட்டில், சிங்கிள் பெஞ்ச்சில் போட்டார்கள். ஏற்கனவே முடிந்துவிட்டது. டில்லியிலே 1984-ல். முடித்துவிட்டார்கள். சட்டம் படித்தவர்களுக்குத் தெரியும். இங்கே இருப்பவர்கள் Res Judicate ஒரு வழக்கு ஒரு முறைதான் நடக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட்டே சொன்னபிறகு இந்த பெஞ்சுக்கு வந்தது. ஜஸ்டிஸ் கனகராஜ் பிப்ரவரியிலேயே மிக அழகாக மீண்டும் சொன்னார்கள். போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவியினுடைய ஆட்சி வந்த பிறகு தமிழகத்தின் பாதுகாப்புக்காகச் செலவு, மதுவிலக்குக்காக பல கோடிகள் இழப்பு. இன்னும் சொல்லப்போனால் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலேயிருந்து நான் பார்த்திருக்கிறேன். டெஃபிசிட் பட்ஜெட்டே கிடையாது. தி.மு.க. வந்த பிறகுதான் டெஃபிசிட், பற்றாக்குறை. பற்றாக்குறை அரசாங்கத்தை எடுத்து, முதல் கையெழுத்திலேயே 300 கோடி ரூபாயை இழந்திருக்கிற அரசாங்கம் ரூ. 150 கோடியை எப்படி இழக்க முடியும் மது விலக்கிற்காக? Justice Kanakaraj மிக அழகாக இன்னும் சோஷியல் விஷனோடு, சமூகப் பார்வையோடு—மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற நீதிபதிகளும் இருக்கிறார்கள்—சொன்னார்கள். " I do not think that they can be accused of discrimination. It is well open to the other States " என்று சொல்லி....Before concluding, I suggest அவர்கள் சொன்னார்கள் " ஸ்டம்பிளிங் பிளாக் " ஆக வியாபாரிகள் இருக்காதீர்கள்; வரியைக் கொடுங்கள்; ஒரு வெல்ஃபர் ஸ்டேட்டினுடைய வரியை 150 கோடியை வைத்து இருக்காதீர்கள். Do not be a stumbling block இந்த ஜட்ஜ்மென்ட்டிலே இருக்கிற வாசகம். ஆனால் இந்த 3 ஆம் தேதி நமக்கு ஷாக்; இது ஒரு அதிர்ச்சி. இந்த சீஃப் ஜஸ்டிஸும் இன்னொரு ஜட்ஜும் இருக்கின்ற அந்த நீதிமன்றத்தில் அப்சலூட் ஸ்டே கொடுத்துவிட்டார். அந்த ஜட்ஜ்மென்ட்டிலே ரேஷனல் கிடையாது. In the High Court of Judicature 4th March— மார்ச் 4 ஆம் தேதி அவர் ஒரே ஒரு வார்த்தையில் The appeal should deserve early dispcsal என்று சொல்லி, 7-வது மாதம் போட்டு இருக்கிறார். ஆனால் அது வரையிலே இவர்கள் வரி கட்ட வேண்டியது இல்லை. அப்சலூட் ஸ்டே என்று சொல்லி 150 கோடி ரூபாய் இங்கு வருவாய் வருவதைத் தடுத்து நிறுத்தி, 84-லிருந்து இருக்கிறது. இந்த 10 இலட்சம் வழக்குகள் ஏன் தேங்காது? யார் போய் கேட்பது, நீதிபதியை? யார் கேட்பது? நாங்கள் பள்ளி கட்டவில்லை என்றால், நீங்கள் எங்களை கெரோ செய்கிறீர்கள். பஸ் விடவில்லை என்றால் கெரோ செய்கிறீர்கள்.



அங்கே குடி தண்ணீர் இல்லை என்றால் கெரோ செய்கிறீர்கள். குடிசைமாற்று வாரியத்தில் வீடு இல்லை என்றால், கெரோ செய்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு 140 கோடிக்கு ஒரு உத்தரவு போடுகிறார்களே! There is no accountability. இது எப்படி மாறும்? மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை இந்த மாமன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் டில்லிக்கு எழுதி, இந்த நீதிபதிகளுடைய தீர்ப்பிலே இருக்கிற குறைபாடுகளைத் தீர்க்க ஏதாவது ஒரு மெக்கானிசம், ஏதாவது ஒரு ரெமெடி செய்ய வேண்டும். இல்லையென்றால், இன்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பல வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. ஃபாரஸ்ட் வழக்குகள், லேண்டு அக்குவிசிஷன் வழக்குகள் மாண்புமிகு அமைச்சர் ஆனந்தன்—ஆதிதிராவிடர்களைப்பற்றி சகோதரி சொல்கிறபோது என் காதை அடைக்கும்; 10 வருடத்திற்கு முன்பு, ஆதிதிராவிடர்களுக்கு பட்டா கொடுக்கலாம் என்றால், அதை அக்குவிசிஷன் செய்தால் " ஸ்டே ". இது எந்தத் துறையிலே? இதை யார் கேட்பது? கேட்கக் கூடிய ஒரே ஆள் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தான். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

இறுதியாக ஒன்றே ஒன்று தான். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்று காலையில் உணர்ச்சியோடு, எழுச்சியோடு நம்முடைய போற்றுதலுக்குரிய பத்திரிக்கை நண்பர்களைப் பற்றிச் சொன்னார்கள். நானும் ஒரு பத்திரிக்கையாளர் என்ற காரணத்தினால், ஏனென்றால் எனக்கு விட்ட குறை, தொட்ட குறை இருக்கிறது என்ற காரணத்தினாலே. அவர்கள் சொன்னார்கள், இன்றைக்கு " ஸ்கரிலஸ் பேப்பர்ஸ் " பற்றி; அவர்கள் " ஸ்கரிலஸ் " பற்றி பேசினார்கள். அவதூரைப் பரப்புகிறதல்லவா புற்றீசல்போல! நான் குவாலிட்டி பத்திரிக்கைகளைப் பற்றி ஒரே ஒரு தகவல் சொல்கிறேன். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை போற்றுதலுக்குரிய பத்திரிக்கை. ஆனால் புரட்சித் தலைவி அவர்களைப் பற்றி ஒரு அவதூறுச் செய்தி என்றால் எட்டுக் காலம். அவரைப் பற்றி ஏதாவது டிஸ்டார்ட் செய்ய வேண்டுமானால்—டில்லியில் அவர்கள் நம்முடைய பிரதமரைச் சந்தித்தார்கள். ' Jayalalitha meets PM—Talks tough ' உடனே சொன்னார்கள் அவர்களிடத்திலே. இன்னும் சொன்னால் உங்களுக்குத் தெரியும். இந்த காவிரிப் பிரச்சினை தெரியும். " டஃப் " என்பது வேறு; " ஃபர்ம் " என்பது வேறு. அவர் இந்த நாட்டிற்குக் கடமைப்பட்டவர்; உறுதியாக இருந்தார். She was firm, not tough. ' Tough - என்பதற்கு அடுத்த நாள் எழுதினேன்; அவர்களுக்கு பதில் எழுதினேன். அதோடு அவர்கள் நிறுத்தவில்லை. இந்த கர்நாடகப் பிரச்சினை வந்தபொழுது, உங்களுக்குத் தெரியும், புரட்சித் தலைவி

அவர்களைப் பற்றி ஒரு அவதூறுச் செய்தி போட்டார்கள். ஏனென்றால், இந்த கர்நாடகத்திலே இருப்பவனை எல்லாம் அடிக்கச் சொன்னது; ஆள் வைக்கச் சொன்னது நம்முடைய போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் என்று ஒரு செய்தி. அடுத்த நாள் சம்பந்தப்பட்ட அதனுடைய ஆசிரியர் இருக்கிறார் அல்லவா, இன்றைக்கு பத்திரிக்கை ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற (சிரிப்பு), அந்த பிரபு சௌலா, எக்ஸிகியூட்டிவ் எடிட்டர், இந்தியன் எக்ஸ்பிரஸ், எழுதினேன். பிறகு அங்கு ஒரு நல்ல மனம் படைத்த ஒரு சகோதரி இருக்கிறார். சீஃப் ரிப்போர்டராக. அவர் என்னிடத்திலே தொலைபேசி மூலம், ''தயவு செய்து புரட்சித் தலைவி அவர்களை நான் பார்க்க வேண்டும்; நான் அவரைச் சந்திக்க வேண்டும்'' என்று சொல்லி, எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அவர்கள் எழுதுகிறார்கள்—அதை மட்டும் இந்த சபைக்கு வைத்துவிட்டு எப்படி ஒரு அவதூறைப் போடுகிறபோது, பெரிதாகப் போடுகிறார்கள். ''மறுப்பே'' போடுவதே இல்லை இப்பொழுது. அதற்கு ''மறுப்பை'' போடுவதில்லை. இந்தக் கடிதத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்—

"Deat Mr. Krishnaswamy,

Following our telephonic conversation, I spoke to my Executive Editor, Prabhu Chawla, about the sentence published in C. M., Jayalalitha's profile in 'Indian' Express, dated December 29th This is about the Tamil Nadu Chief Minister having ordered mob attacks on Kannadigas,'' கன்னடியர்களை எல்லாம் படை எடுத்துப் போய் அடி என்று, 'Mob attacks on Kannadigas' என்று வந்தது. He has asked me, யார்? அந்த ஆசிரியர் இந்த அம்மையாரிடத்தில் அந்த அம்மையார் ரக்ஷீத் பகத் சீஃப் ரிப்போர்ட்டர் எழுதிய—30—12—1991—சொல்கிறார்கள்.

பிற்பகல் 2-40

அதனுடைய எடிட்டர்

'He has asked me to assure you that this sentence has crept in inadvertantly and while revising the dummy, was missed because the last bit of the profile continues on page 3 மூன்றாம் பக்கத்தில் போனபோது, டம்மி எடுக்கிறபோது அது போய்விட்டது. நானும் பத்திரிக்கைக்காரன் தான். கடைசியாக டம்மியில் போட மாட்டார்கள். கடைசியில் 3 பேர் புரூப் பார்த்து, அப்ரூவல் பார்த்து, கன்டினுவேஷன் பார்த்துத்தான் செய்வார்கள். இவர்கள் சொல்லுகிறார்கள். . . . both of us share



your sense of outrage on this error கொஞ்சம் வேகமாகப் பேசினேன். அதைத்தான்—sense of outrage—என்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் will publish an adequate correction at the earliest இதற்கு ஒரு மறுப்பு நான் போடுவேன், விளக்கம் போடுவேன் என்று சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு போடவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் நான் பத்திரிகையை மதிப்பவன். எப்படி ஜனநாயகத்தில் மூன்று இன்ஸ்ட்ருமென்ட்ஸ் இருப்பதைப் போல fourth estate—எட்மண்ட் பர்க் ஒருமுறை சொன்னான். உங்களுக்குத் தெரியும். அந்த பாராளுமன்றத்தில் 18-வது நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் பேசுகிற போது அன்று லார்ட்ஸ் இருந்தார்கள். ஸ்பிரிச்சுவல் டெம்போரல் இருந்தார்கள். அதைப்போல காமன் ரெப்ரசென்டேட்டிவாக எட்மண்ட் பர்க் பேசினான். கடைசியாக பத்திரிக்கையாளர்களைப் பார்த்து— You are the Fourth Estate— இந்த மூன்று பேர்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அந்த உரிமை இந்த ஜனநாயகத்தில் உங்களுக்கும் இருக்கும் என்று எட்மண்ட் பர்க் - fourth estate - என்று அதைச் சொன்னார்.

எதற்காக பத்திரிகையாளர்களுக்குச் சொல்கிறேன் என்றால் உங்களுடைய சகா என்ற முறையில், அமைச்சர் என்ற முறையில் அல்ல. நானும் பல ஆண்டுகள் பத்திரிகை நடத்தி அந்த சுக துக்கத்தை அனுபவித்தவன். எனவே, தயவுசெய்து எப்படி நீதிமன்றம் ஒரு ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமோ, சட்டமன்றத்தில் பேரவைத் தலைவர் எப்படி ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமோ, மாண்புமிகு போற்றுதலுக்குரிய முதலமைச்சர் எப்படி ஆட்சியில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமோ அதைப்போல தான் - Fourth Estate - ஆக இருக்கிற நீங்கள் செய்தியை எப்படி பெரியதாக போடுகிறீர்களோ அப்படி மறுப்பையும் போடுங்கள். அல்லது செய்தியைப் போடுவதற்கு முன்னாலே முதலமைச்சரைக் கேட்டிருக்கலாம். கர்நாடகத்தில் ஒரு பெரிய பட்டாளத்தை விட்டா அவர் நடத்துவார்? இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் காலையில் ''ஸ்கரிலஸ்'' ஆபாச பத்திரிகைகள் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அது ஒருபொழுது வாழ்க்கை. அது புற்றீசல் போல அழிந்து விடும்.

இவர்கள் எத்தனையோ பெர்சிகியூஷன்களைத் தாங்கி வந்தவர்கள். அவர் சொன்னதைப் போல மலர் பாதையிலா வந்தார்கள்? மார்ச் 25-ஆம் தேதி ஒரு நாள் போதாதா - தியாகம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை மெலோட் ஆக்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும்

ஒலி) கனிவாக்கி இருக்கிறது. ஹம்பிளாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காலம் அவர்களை கனிய வைத்திருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் முதலமைச்சரைப் பார்த்திருந்தால் எப்படி இருந்திருப் பார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அமைதி யாக உட்கார்ந்து இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 2—3/4 மணி வரையிலும் கூட உட்கார்ந்து இருக் கிறார் என்றால் என்ன பொருள்? கனிந்து விட்டார். காத்து இருக்கிறார். எனவே, தயவுசெய்து பத்திரிகை நண்பர்களே, ஒரு நல்ல தலைவர் கிடைத்து இருக்கிறார். '' வாராது வந்த மாமணிபோல இருக்கிறார்''. (மேசை யைத் தட்டும் ஒலி) அவரைப் பற்றி - Character assassination - தயவு செய்து வேண்டாம். இவைகளையெல்லாம் ஜீரணித்துவிட்டார். இன்றைக்கு அவர் பாஷாணத்தில் புழுத்த புழு போல இருக்கிறார். அவரை ஒன்றுமே செய்ய முடியாது. தயவுசெய்து அவர் செய்கிற நல்ல பணிகளைச் சொல்லுங்கள். குறைகள் இருந்தால் கண்ணிய மாக உங்களுக்குச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அவர்களுக்கு பொறுமையோடு கேட்பதற்கு பக்குவம் இருக்கிறது. கனிவு இருக்கிறது. ஆகவே அதையும் நான்காவது அங்கமாக இருக்கிற சகோதரர்கள் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, போற்றுதலுக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கை களின் வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்றுக் கொண்டு நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

<u>* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வர்மா கமிஷனில் சில பேர்கள் ராஜீவ் காந்தி தமிழகத்திற்கு வந்து மீண்டு உயிரோடு திரும்பப் போனால் தானே பிரதமராக வர முடியும் என்று சொல்லியதைப் பற்றி வர்மா கமிஷனில் வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட சொல்லியிருந்தார்கள். அதுபற்றி ஒன்று கூட தெரியவில்லையே. அந்த கமிஷனிலும் காணோம். தினம் பார்த்துக் கொண்டேயிருந்தேன். அதிலே வர வில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதல்வர் அவர்கள்.



<u>* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் எழுப்பிய இதே கேள்வியை நான் பலமுறை ஏற்கனவே எழுப்பி இருக் கிறேன். சில உண்மைகள் கசக்கும். நீங்கள் கேட்டிருக்கிற கேள்விக்கு விடை எனக்குத் தெரிந்திருந்தாலும் இந்த அவைக்கு வெளியே இதைச் சொல்ல முடியாது.

ஆனால் இந்த அவைக்குள் எதைச் சொன்னாலும் அதற்கு ஒரு இம்யூனிட்டி இருக்கிறது என்ற காரணத் தினால், சிலவற்றை—திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியை எழுப்பி இருப்பதால், சொல்வது அவசியம் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 2—45

சி.பி.ஐ. டைரக்டர் இங்கே வந்திருந்தபோது, அவரிடம் நான் பேசினேன். ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே சில நாட்களுக்குள் அந்தச் சந்திப்பு ஏற்பட்டது. இப்படி, ஏற்கனவே சிலர் இங்கே வெளிப்படையாக மிரட்டி இருப்பதாக, பொதுக் கூட்டங்களிலேயே பேசி இருப்பதாக எல்லாம் தகவல்கள் வந்து இருக்கின்றனவே, ராஜீவ் காந்தி இங்கே தமிழகத்திற்கு வந்தால் உயிரோடு திரும்பிச் செல்ல முடியாது என்று வெளிப்படையாகவே பொதுக் கூட்ட மேடையிலிருந்து இத்தகைய மிரட்டல்கள் விடப் பட்டு இருக்கின்றனவே, அப்படிப்பட்டவர்களை நீங்கள் ஏன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை, அப்படிப் பட்டவர்களை ஏன் நீங்கள் அந்த அக்யூஸ்டு லிஸ்ட்டில் சேர்த்துக் கொள்ளவில்லை. எஸ். ஐ. டி. நடத்திக் கொண்டிருக்கிற விசாரணையில் கூட இவர்களுடைய பெயர்கள், அவர்களுக்குப் பின்னால் இருந்தவர்களின் பெயர்கள், இவற்றை எல்லாம் நீங்கள் ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை, ஆக்சுவலாக, இந்தக் கொலையில் சம்பந்தப் பட்டவர்களை மட்டும்தானே கைது செய்து, நீங்கள் விசாரித்து வருகிறீர்கள், இவர்கள் தாங்களாக இந்தக் குற்றத்தைச் செய்திருக்க முடியுமா? அவர்களுக்குப் பின்னால் இருந்த, அரசியல் பின்னணி என்ன, அவர்களை ஏவிவிட்டவர்கள் யார், இந்தச் சதித்திட்டத்தைத் தீட்டிய வர்கள் யார், இதைப்பற்றி எல்லாம் எங்களுக்குப் பல வாறாக தகவல்கள் வந்து இருக்கின்றனவே, இவர்களை எல்லாம், குறிப்பிட்ட சில அரசியல் கட்சித்தலைவர்களின் பெயர்களை எல்லாம் நான் அன்று குறிப்பிட்டு, இவர்களை எல்லாம் நீங்கள் ஏன் விசாரணைக்கு சேர்த்துக் கொள்ள வில்லை, ஏன் அவர்களை அக்யூஸ்டு லிஸ்டிலே சேர்க்க வில்லை என்று கேட்டதற்கு, அந்த மேல் அதிகாரி இந்தியாவிலே சி.பி.ஐ.-க்கு அவர்தான் டைரக்டர் என்றால், மிக உயர்ந்த அளவிலே இருக்கின்ற அதிகாரி, சொன்ன

பதில், அத்தகைய ஆதாரம் எதுவும் இல்லை, இப்படிப் பேசியதாக நாங்கள் கேள்விப்படவில்லை. அதற்கான ஆதாரமாக டேப் எதையாவது உங்களால் கொடுக்க முடியுமா என்று என்னிடம் கேட்டார்கள். நான் சொன்னேன், இந்தச் சம்பவங்கள் எல்லாம், இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்த நேரத்தில், நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருந்தால் எப்படியாவது அந்த ஆதாரங்களைத் தேடிக் கண்டுபிடித்து உங்களுக்குக் கொடுத்து இருப்பேன், (மேசையைத் தட்டும் ஒலி). நான் இப்போதுதானே ஆட்சிக்கு வந்திருக்கிறேன். இந்த ஆதாரங்களைத் எப்படித் தேடிக் கண்டுபிடித்துக் கொடுக்க முடியும் என்று நான் கேட்டு, இருப்பினும், இதே விஷயங்களை மத்திய உள்துறை அமைச்சர் அவர்களிடமும் நான் டெல்லியில் அவர்களைச் சந்தித்தபோது, எடுத்து வைத்தபோது, அவரும் இதே கேள்வியைக் கேட்டார்கள். உங்களால் ஆதாரங்களைக் கொடுக்க முடியுமா, டேப் கொடுக்க முடியுமா, அல்லது போலீஸ் ஏதாவது டிரான்ஸ்கிரிப்ட் எடுத்து இருந்தார்களா, பொதுக் கூட்டத்திலே பேசுகின்றபோது, அந்த ஆதாரங்களைக் கொடுக்க முடியுமா என்று. எனவே, இவற்றைப் பற்றி எல்லாம் நான் விசாரித்தபோது, எத்தகைய ஆதாரமும் இல்லை என்றுதான் தெரிய வருகிறது. இத்தகைய கேசட்டுகள் முன்பு சர்குலேசனில் இருந்தன என்று நான் கேள்விப்பட்டு இருக்கிறேன், பல இடங்களில் இந்த கேசட்டுகள் ஒலிபரப்பப்பட்டன என்பதையும் கேள்விப்பட்டு இருக்கிறேன் — ஆனால், நடவடிக்கை எடுப்பதற்காக அத்தகைய கேசட்டின் பிரதி ஒன்று வேண்டும் என்று தேடியபோது, அவைகள் கிடைக்கவில்லை. எனவே, ஆதாரங்கள் மூடி மறைக்கப்படுகின்றன என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

அதுமட்டுமின்றி, அந்தக் கொலையில், அந்தக் கொலையின் பின்னணியில் சம்பந்தப்பட்டு இருந்த, சில முக்கியப் புள்ளிகளை, அரசியல் தலைவர்களைக் காப்பாற்றுவதற்கு மேலிடத்திலிருந்தே சிலர் நடவடிக்கை எடுத்து இவற்றை எல்லாம் மூடி மறைக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து மதுரைக்கு கொண்டு செல்லப்பட்ட கைதி கொலை செய்யப்பட்டு இருக்கிறாரே அப்படிக் கொலை செய்யப்பட்ட நபருடைய குடும்பத்திற்கு நிவாரண நிதி எதுவும் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே வராது, தொடர்புடையதாக இருந்தால் பதில் வரும். (குறுக்கீடு). தொடர்பே இல்லை, சிறைத்துறை மானியத்திலே நீங்கள் கேட்பது வராது, வேறு நேரத்திலே பேசவேண்டியது.

விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 13— நீதி நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். தங்கராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக்கோரிக்கையின் கீழ் ரூ. 40,81,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்),

மறுப்போர் ' இல்லை ' என்க, (இல்லை),

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது,
(மேசையைத் தட்டும் ஒலி),

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பிற்பகல் 2-50

## (ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. எஸ். எஸ். ராம சுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராம சுப்பு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப்பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், தன்னுடைய வெட்டுத் தீர்மா னத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கை யின் கீழ் ரூ. 21,77,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர் களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது,

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது,

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (31-3-1992) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

46. தமிழ்நாடு நகராட்சிகளிலுள்ள வார்டுகளின் எல்லைகள் பற்றிய விவரங்கள் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 3-12-1990 ஆம் நாளிட்ட 1012 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

62. கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1992—93 (தமிழ், ஆங்கிலம்),

63. கோரிக்கை எண். 14—தமிழ்நாடு சிறைகளின் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1992—93 (தமிழ், ஆங்கிலம்).

64. உடுக்குறியிடாத வினாக்கள்— விடைகள் (ஒன்பதாம் பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை).

287 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

மானியக் கோரிக்கைஎண்-13

நீதி நிருவாகம்

பொருளடக்கம்.

| பொருள் சுருக்கமாக | பக்கம் |
|---|---|
| 1. முன்னுரை | 377 |
| 2. நீதித்துறையின் பதவி படிநிலை அமைப்பு | 378 |
| 3. நீதித்துறை செலவினங்களை வகைப்படுத்துதல். | 379 |
| 4. உயர்நீதிமன்றமும் அதன் அமைப்பும். | 380 |
| 5. சென்னை மாநகரிலுள்ள சிவில் நீதிமன்றங்கள். | 381 |
| 6. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை. | 381 |
| 7. வெளியூரிலுள்ள மாவட்ட நீதி மன்றங்கள். | 382 |
| 8. தாழ்த்தப்பட்டவர்-பழங்குடியினருக்கு இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும் தனி நீதிமன்றம். | 382 |
| 9. இன்றியமையாப் பொருட்களின் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள். | 383 |
| 10. சார்நிலை நீதிமன்றங்கள். | 383 |
| 11. மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள். | 383 |
| 12. குற்றவியல் நீதிமன்றங்கள். பெருநகர் மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் | 384 |
| 13. வெளியூரிலுள்ள நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றம்: | 384 |
| (அ) நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றம். | 384 |
| (ஆ) நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றம். | 385 |

| | |
|---|---|
| 14. தனி நீதிமன்றங்கள். | 385--86 |
| 15. சட்ட அதிகாரிகள். | 387--89 |
| 16. தமிழில் சட்ட இதழ். | 389 |
| 17. நீதித்துறை ஒதுக்கீடு. | 389--90 |
| 18. தமிழ்நாட்டில் புதிய நீதிமன்றங்களை தொடங்கி வைத்தல் | 390--391 |
| 19. 1992--93 ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள். | 392--393 |
| 20. நவீனப்படுத்தும் நடைமுறைகள். | 393 |
| 21. அரசு அனுமதி வழங்கியுள்ள கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்கள். | 393--395 |
| 22. மதுரையில் உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றினை ஏற்படுத்துதல். | 395 |
| 23. சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் கிளை ஒன்றினை ஏற்படுத்துதல். | 396 |
| 24. சட்ட உதவிக் குழு. | 396--398 |
| 25. சட்டக் குழு அமைப்பு. | 399 |
| 26. ஆட்சிமொழிக் குழு. | 400 |
| 27. வழக்குரைஞர்கள் நலநிதி. | 400--401 |
| 28. புள்ளி விவரம். | 401 |
| 29. தொகுப்புரை. | 401 |




1992 மார்ச் 30]

**மானியக் கோரிக்கை எண் 13.**

**நீதி நிருவாகம்**

**1992-93.**

" கொடை அளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி. "

-திருவள்ளுவர்.

**முன்னுரை.**

பன்னெடுங்காலம் தொட்டே, நீதி நிருவாகம் என்பது இன்றியமையாத பணிகளில் ஒன்றாக அனைத்து அரசு அமைப்பிலும் கருதப்பட்டுவந்துள்ளது. இக்கோட்பாடு , ., தமிழ்நாட்டிற்கு மேலும் பொருந்துவதாக இருந்து வந்துள்ளது. தமிழர்கள் தொன்மையான வரலாறு உடையவர்கள். மிகச் சிறப்புவாய்ந்த மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய குடியைச் சேர்ந்த மன்னர்கள் சாதாரண குடிமகனுக்கும் நீதி கிடைக்க வேண்டுமென்பதில் முன்னுரிமையும் தனி ஆர்வமும் காட்டி வந்தனர் என்பதை விளக்குகின்ற பல எடுத்துக்காட்டுகள் தமிழக வரலாற்று ஏடுகளில் இருந்து புலனாகிறது. கவனமின்மையால் பசுவின் கன்றைக் கொன்றதற்காக தன்மகனையே தேர்க்காலில் இட்டு கொன்று நீதி வழங்கினான் மனு நீதி சோழன். பொற்கைப் பாண்டியன், நீதியை நிலைநாட்டும் பொருட்டு தனது கரங்களையே துண்டித்து அதன் காரணமாக பொற்கைப் பாண்டியன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லனின் கொடிய நயவஞ்சக செயலுக்கு இரையாகி நீதி தவறி கோவலனைக் கொல்ல ஆணையிட்டான் பாண்டியன் நெடுஞ்செழியன். பின்னர், தனது தவறை உணர்ந்த அவன், தன் இன்னுயிரை ஈந்து நீதியினை நிலை நிறுத்தினான். இன்றைய சந்ததியினரின் உள்ளத்தை ஊடுருவி நெகிழ வைக்கும் இதுபோன்ற பல நிகழ்வுகளை எடுத்துக் காட்ட இயலும். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி தோன்றிய பின், அதனைத் தொடர்ந்து மக்களாட்சி மலர்ந்ததை அடுத்து, சுதந்திரமான நீதிநிர்வாகம் நடைமுறைக்கு வந்தது. இம்முறை சுதந்திர இந்தியாவில் முழுமையடைந்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான சட்டப் பின்னணி தரப்பட்டுள்ளது. நீதிநிருவாகம் மாநில நிர்வாகத்தில் இருந்து தனித்து செயல்பட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் நீதித்துறையின் வளர்ச்சியும், அவற்றிற்கான அடிப்படை வளர்ச்சிகளும் குறிப்பிடத் தக்க வகையில்

மேம்பாடு அடைந்துள்ளன. நீதித்துறையின் தனித்தன்மை பாதுகாக்கப்பட்டு, தகுந்த சூழ்நிலை அமைவதற்கு தமிழக அரசு மிகவும் ஆர்வம் காட்டுகிறது. சிறந்த சேவையினை வழக்காடும் மக்களுக்கு வழங்குவதற்கு தேவையான நீதித்துறைக்கான கட்டிடங்கள், மனித சக்தி மற்றும் அடிப்படை வசதிகள் வழங்க அரசு ஈடுபாடு கொண்டுள்ளது.

2. நீதித்துறையின் படிநிலை அமைப்பு :

நீதித்துறையின் படிநிலை அமைப்பு பின்வருமாறு :—

மாநிலங்களில் செயலாற்றி வரும் அனைத்து உயர்நீதி மன்றங்களை உள்ளடக்கிய வரையறையினைக் கொண்டு புது டெல்லியில் உள்ள உச்ச நீதிமன்றம், இந்தியாவின் தலைமை நீதிமன்றமாக விளங்குகிறது. மாநில அளவிலான நீதித்துறையின் படி அமைப்பு பின்வருமாறு :—

உயர்நீதிமன்றம், சென்னை.

- உரிமையியல்.
  - சென்னை நகரம்.
    - மாநகர் உரிமையியல் நீதிமன்றங்கள்.
    - சிறுவழக்குகள் நீதிமன்றங்கள்
  - மாவட்டங்கள்.
    - மாவட்ட நீதி மன்றங்கள்.
    - சார்நிலை நீதி மன்றங்கள்
    - மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்.
- குற்றவியல்.
  - சென்னை நகரம்.
    - பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றங்கள்.
  - மாவட்டங்கள்.
    - செஷன்ஸ் நீதி மன்றங்கள்.
    - நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதி மன்றங்கள்
    - நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள்



இத்துடன் பல்வேறு சட்டங்களின் கீழ் பின்வரும் நீதிமன்றங்களும் அலுவலகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன :—

1. நொடித்தவர், சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை.
2. சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை.
3. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.
4. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.
5. தொழில் நடுவர் மன்றம், சென்னை.
6. குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம், சென்னை, சென்னை மாநகர்.
7. மனித உரிமைகள் பாதுகாப்பு தனி நீதிமன்றங்கள்.
8. சென்னை, மதுரையிலுள்ள பொருளாதார விவகாரங்கள் குறித்த தனி நீதிமன்றங்கள்.
9. 'தடா' சட்டத்தின்கீழ், குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம்.

3. செலவின வகைப்பாடு :

நீதித்துறை குறித்த செலவினம், பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது :—

| சார்ட்டியவை. (1) | அனுமதிக்கப்பட்டவை. (2) |
|---|---|
| (1) உயர்நீதி மன்ற நீதிபதிகள் மற்றும், பதிவாளர் அசல் வழக்குகள் மற்றும் மேல் முறையீடுகள் ஆகியவற்றைக் கவனிக்கும் பணியாளரமைப்பு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத் துறை, சட்டத் தீர்ப்பு அறிக்கையாளர் மற்றும் பணியாளரமைப்பு உதவிப் பதிவாளர், புதுச்சேரி மற்றும் புதுச்சேரிக்கு அதிகார வரம்பை நீட்டித்தல் தொடர்பான பணியாளரமைப்பு, சென்னை மாநகர ஷெரீப் மற்றும் அவரது பணியாளர்கள். | (1) சென்னை உரிமையியல் நீதிமன்றம் உட்பட சிவில் மற்றும் செஷன்ஸ் நீதி மன்றம். <br> (2) சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை. <br> (3) பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள், சென்னை. <br> (4) குற்றவியல் சார்நிலை நீதி மன்றங்கள். <br> (5) அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை. |

(2) நொடித்தவர், சொத்தாட்சியரும், அவரது பணியாளர் அமைப்பும்.

(6) அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்.

(7) சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.

(8) பதிப்பாசிரியர், பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் வெளியீடு, சென்னை,

(9) குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றங்கள்.

4. சென்னை உயர்நீதிமன்றம் :

இம்மாநிலத்தின் வழக்காடு மன்றத் தலைமையிடம் சென்னை உயர்நீதிமன்றமாகும். உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட 28 நீதிபதிகள் உள்ளனர். வழக்குகளை விரைந்து முடிக்கும் நோக்குடன் நீதிபதிகளின் எண்ணிக்கையை 32 ஆக உயர்த்துவது தொடர்பாக தமிழ்நாடு அரசு அளித்த செயற் குறிப்பிற்கு மத்திய அரசு இசைவளித்துள்ளது. இவர்களின் பணி நிபந்தனைகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் (பணி நிபந்தனைகள்) சட்டத்திற்கு உட்பட்டவையாகும்.

உயர்நீதிமன்றம், உரிமையியல் (சிவில்) விவகாரங்கள் தொடர்பான ரிட் மற்றும் அசல் தரப்பு வழக்குகளையும், உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகாரங்கள் தொடர்பான மேல் முறையீட்டு வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்று உள்ளது. சென்னை மாநகருக்குட்பட்ட ரூ. 1,00,000-க்கு அதிகமான மதிப்புடைய அசல் தரப்பு வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரணை செய்து வருகிறது. மாண்புமிகு நீதிபதிகளுக்கிடையே பணியை மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் பிரித்து வழங்குகிறார்கள்.

உயர்நீதிமன்ற அலுவலகத்தில் நிருவாகம், அசல் தரப்பு வழக்குப் பிரிவு, மேல் முறையீட்டு வழக்குப் பிரிவு, நகல் எடுப்போர் பிரிவு, ஆய்வாளர் பிரிவு போன்ற பல பிரிவுகள் உள்ளன. பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிருவாகத் தலைவராவார். இவருக்கு உதவியாக கூடுதல் பதிவாளர்கள், மாஸ்டர், துணைப் பதிவாளர்கள், நீதிமன்றம் சார்ந்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை கவனிப்பதற்குத் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், நிருவாக அதிகாரிகள், மதிப்பீட்டுக் கணக்கு அதிகாரி ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு உயர்நீதிமன்றம், தமிழ்நாடு மட்டுமல்லாது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரியின் மீதும் அதிகார வரம்புடையதாகும். இப்பணிகளை கவனிக்கும் அதிகாரிகள், பணியாளர்கள் குறித்த செலவு, முதலில் மாநில நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. பின்னர் அச்செலவுத் தொகை பாண்டிச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

உயர்நீதிமன்றம் நீதி வழங்கும் பொறுப்பு வகிப்பதுடன் இம் மாநிலத்தில் நீதித்துறை நிருவாகத்திற்கும் பொறுப்பு வகிக்கிறது.

5. உரிமையியல் நீதிமன்றம் :

சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் 26 நீதித்துறை அதிகாரிகள் (மாவட்ட நீதிபதிகள் 8 பேர், சார்நிலை நீதிபதிகள் 18 பேர்) உள்ளனர். அதன் நிருவாகத்தினைக் கவனிக்க, மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் தனிப்பதிவாளர் ஒருவர் உள்ளார். மாநகர் உரிமையியல் நீதிமன்றம், சென்னை மாநகரின் மீது அதிகார வரம்பு உடையதாகும். மேலும், ரூ. 1,00,000 வரை மதிப்புடைய வழக்குகளையும், ரூ. 30,000 வரையிலான மேல் முறையீட்டு வழக்குகளையும் கொண்டுள்ளது. சென்னை, உரிமையியல் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்திலுள்ள சில நீதிபதிகள், குற்ற வழக்குத் திருத்தச் சட்டத்தின் கீழ் வருகின்ற பட்டியல் வழக்குகளை விசாரிக்க தனி நீதிபதிகளின் அதிகாரங்களையும் பெற்றிருக்கின்றனர்.

சென்னை, மாநகர உரிமையியல் நீதிமன்றத்திற்குரிய செலவுகளைச் செய்வதற்காக, 1992-93ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

6. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை :

மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த நீதிபதி, இந்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாவார். இவருக்கு உதவியாக சார்நிலை நீதிபதி பதவி தரத்தில் ஏழு நீதிபதிகளும், மாவட்ட முன்சீப்பதவித் தரத்தில் மேலும், ஏழு நீதிபதிகளும் உள்ளனர். இந்நீதிமன்றத்தின்பணிகளை நடத்திச் செல்ல மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில், தனிப் பதிவாளர் ஒருவரும், நிருவாகப் பணியாளர்களும் உள்ளனர். நிறைவேற்று ஆணை மனுக்கள் போன்றவற்றை ஒருவகை செய்தல் போன்ற நீதித்துறைப் பணிகளையும் பதிவாளர் செய்கிறார். இதன் தலைமை நீதிபதியும், துணை நீதிபதிகளும், மாகாண சிறு வழக்கு நீதிமன்றச் சட்டத்தின் கீழ் சிறு வழக்கு அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். மற்றும் நீதிபதிகள் V-ம் VI-ம் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கென்று தனி நடுவர் மன்றங்களாகச் செயல்படுகின்றனர். நீதிபதிகள் VII மற்றும் VIII ஆகியோர்

சென்னை கட்டிடங்கள் (குத்தகை, மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் மேல் முறையீட்டு அதிகார மன்றங்களாகச் செயல்படுகின்றனர். IX முதல் XV வரையிலான நீதிபதிகள், சென்னை மாநகரத்திற்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி, நீதிபதிகள் II IV, நீதிபதிகள் VII, VIII ஆகியோர் வாடகைக் கட்டுப்பாட்டு மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றிருக்கின்றனர். 1992–93ஆம் ஆண்டில் சிறு வழக்கு நீதிமன்றங்கள் வகையில் ரூ. 0.62 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. திருச்சிராப்பள்ளியிலும், இராமநாதபுரத்திலுள்ள முன்னாள் ஜமீன்தார் எஸ்டேட்டுகள், இனாம் ஒழிப்பு நடுவர் மன்றம், தொடர்பான இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டு பகிர்ந்து வழங்குவதற்குரிய நடுவர் மன்றத்திற்கான செலவு ரூ. 98,000 இச்செலவில் அடங்கும்.

## 7. மாவட்ட நீதிமன்றங்கள் :

இம்மாநிலத்தில் 17 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. அத்துடன், தென் ஆற்காடு, கோயம்புத்தூர், இராமநாதபுரம் வட ஆற்காடு-அம்பேத்கார் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் உள்ளது. சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட நீதிபதிகள் இருவர் உள்ளனர். சம்பந்தப்பட்ட வட்டங்களில் செஷன்ஸ் நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகளின் அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றனர்

## 8. ஆதி திராவிடர்-பழங்குடியினருக்கு எதிராக உள்ள குற்றங்கள் சார்ந்த வழக்குகளை விசாரித்தல்:

தீண்டாமைக் கொடுமையை ஒழிக்கும் நோக்குடன், இந்த அரசு, மத்திய அரசு குறிப்பிட்டிருப்பது போன்று, சென்னை, உயர்நீதிமன்றத்தைக் கலந்தாலோசித்து, 1989ஆம் ஆண்டு ஆதி திராவிடர்-பழங்குடியினர் (கொடுமைகளைத் தடுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 33/1989)14ஆம் பிரிவின் கீழ், உள்துறையின் (நீதிமன்றம்-பி) 29—1—1990ஆம் நாளிட்ட 219 ஆம் எண் அரசாணையில், 30—1—1990 முதல் வரையறை செய்துள்ளது. சென்னையிலுள்ள முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம் உட்பட ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள செஷன்ஸ் நீதிமன்றமும், ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்கு எதிராக கொடுமை இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள் என்ற வகையில் விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.



## 9. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ்வரும் வழக்குகளை விசாரணை செய்தல் :

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்காக, சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகள் பதவித்தரத்திலான நீதிபதி ஒருவர் அடங்கிய ஆறு தனி நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு 1982 ஆகஸ்ட்டில் அனுமதி வழங்கியுள்ளது. இன்றியமையாப் பொருட்கள் சட்டம் குறித்த வழக்குகளை விசாரணை செய்யும் தனி நீதிமன்றங்களைச் சேர்ந்த தலைமை அதிகாரிகளும், மாவட்ட நீதிபதிகளும், மாவட்ட நுகர்வோர் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் அமைப்பிற்குத் தலைவராக இருக்க அதிகாரம் பெற்றுள்ளனர்.

## 10. சார்நிலை நீதிபதிகள் நீதிமன்றம் :

இம்மாநிலத்தில், கோயம்புத்தூர், மதுரையிலுள்ள விற்பனை வரி மேல் முறையீட்டு கூடுதல் ஆயம் உட்பட 76 சார்நிலை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த சார்நிலை நீதிபதிகளின் அதிகார வரம்பு, உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நீதிபதிகள், பணம் சம்பந்தப்பட்ட அசல் தரப்பு வழக்குகளை நடத்த வரம்பேதுமின்றி அதிகாரம் பெற்றிருக்கின்றனர். மேல் முறையீட்டு வழக்குகளை, மாவட்ட முன்சீப்புகள் வழங்கிய தீர்ப்புகளுக்கு எதிராக ரூ.15,000 வரையிலான மதிப்புடைய சம்பந்தப்பட்ட மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்க, அதிகாரம் பெற்றிருக்கின்றனர்.

## 11. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் :

உரிமையியல் வழக்குகளைக் கவனிப்பதில். மாவட்ட முன்சீப் நீதிமன்றம்தான் அடிப்படை அமைப்பாகும். இந்த அமைப்பை அடிப்படையாகக் கொண்டுதான் உரிமை வழக்கு நீதித்துறை அமைப்பு அமைந்துள்ளது. தற்போது, 127 மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் உள்ளன. இவை நன்கு வரையறுக்கப்பட்ட நிதி மற்றும், அதிகார வரம்புகளைக் கொண்டு செயல்படுகின்றன. இந்த மாவட்ட முன்சீப் நீதிபதிகள், ரூ. 15,000 வரையிலான மதிப்புடைய வழக்குகளையும், ரூ.500 வரையிலான சிறு வழக்குகளையும், வாடகைக் கட்டுப்பாட்டு வழக்குகளையும், விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்கள்.

நகலெடுப்போர், நீதிமன்றக் கட்டளைகளைச் சார்வு செய்வோர் ஆகிய பணியாளர் அமைப்புகள் உட்பட மாவட்ட நீதிமன்றங்கள், துணை நீதிமன்றங்கள், மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் ஆகியவை தொடர்பாக, 1992–93ஆம் ஆண்டில், ரூ. 18.00 கோடி செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**12. குற்றவியல் நீதிமன்றங்கள் :**

ஏற்கெனவே பரிசீலித்தபடி நீதித்துறை உரிமையியல், குற்ற
வியல் என இரு முக்கிய கூறுகளைத் கொண்டுள்ளது. சென்னை
மாநகரில்; உரிமையியல் தொடர்பான வழக்குகளை விசாரித்து
தீர்ப்பு வழங்கும் அதிகார வரம்பை, மாநகர உரிமையியல் நீதி
மன்றங்கள் பெற்றுள்ளன. குற்றவியல் வழக்குகளை, பெருநகர்
மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் கவனித்து வருகின்றன.

**பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் :**

சென்னை மாநகரில், பெருநகர் தலைமை மாஜிஸ்ட்ரேட்
நீதிமன்றம்,பெருநகர் கூடுதல்தலைமைமாஜிஸ்ட்ரேட்நீதிமன்றம்,
உட்பட 25 பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு
வருகின்றன. மாநகர மாஜிஸ்ட்ரெட்டுகள் நடமாடும் நீதிமன்
றங்கள் இரண்டில் மாஜிஸ்ட்ரேட்டுகளாகப் பணியாற்றுகின்றனர்.
பெருநகர் தலைமை மாஜிஸ்ட்ரேட்டும், பெருநகர் கூடுதல்
தலைமை மாஜிஸ்ட்ரேட்டும் முறையே மாவட்ட, துணை நீதிபதி
பதவித் தரத்திலுள்ளவராவார். மாவட்ட நீதிபதி பதவித் தரத்
திலுள்ள பெருநகர் கூடுதல் தலைமை மாஜிஸ்ட்டிரேட்டுகள் இரு
வர் பொருளாதார குற்றங்களை விசாரிப்பதற்கென்றே நிய
மிக்கப்பட்டுள்ளனர்..

1992-93ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலுள்ள பெருநகர்
மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் தொடர்பாக ஏற்படும் செலவு
ரூ. 0.90 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**13. மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள்**

**(அ) நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்.**

தமிழ்நாடு முழுவதிலும் மொத்தம் 14 நீதித்துறை தலைமை
மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் உள்ளன. இவைதவிர,கும்பகோணம்
கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் நீதித்துறை
கூடுதல் தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களும், மதுரை-
யில் ஒரு நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதி
மன்றமும், பொருளாதார குற்றங்கள் குறித்து விசாரணை
நடத்த அமைக்கப்பட்டுள்ளன. நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்
டிரேட்டுகள் தங்கள் மாவட்டங்களிலுள்ள சார்நிலை குற்ற
வியல் நீதிமன்றங்களை பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர்.
தங்களுடைய நிருவாகப் பணியோடு மாவட்ட செஷன்ஸ் நீதி
பதிகளால் தாக்கல் செய்யப்படும் மேல் முறையீடுகளை விசார
ரணை செய்யவும் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்
சட்டக் கோவையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.



**(ஆ) நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்.**

ஏற்கனவே இருந்த நேர்வுகளில் செய்யப்பட்டுள்ளவாறு
நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் பதவி, நீதித்
துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் பதவியாக நிலை உயர்த்
தப்படவேண்டும் என்றும், நிலை உயர்த்தப்பட்ட பதவி தமிழ்
நாடு மாநில நீதித்துறைப் பணியின் கீழ் மாவட்ட முன்சீப்
பதவியுடன் ஒரே பதவித்தரமாக ஒருங்கிணைக்கப்பட வேண்டு
மென்றும் அரசு 1976ஆம் ஆண்டு வரையறுத்துள்ளது. இவ்வாறு
பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கிணங்க அரசு 1988 ஆம் ஆண்டில்
தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பணி விதிகளை தகுந்தவாறு
திருத்தி உள்ளது. இத்திருத்த விதிகள், 6—10—1988 ஆம்
நாளிலிருந்து செயலுக்கு வந்துள்ளன. உயர் நீதிமன்றம்,
மாவட்ட முன்சீப்புகள், நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்
ரேட்டுகள், உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டுகள்,
நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்டுகள் ஆகிய
பதவிகளை மாவட்ட முன்சீப்—நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டு
கள் என பதவிப் பெயர் மாற்றம் செய்துள்ளது. தற்போது
தமிழ்நாட்டில் 224 நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்
கள் உள்ளன. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்
களுக்கு 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 8.49 கோடி செலவிட
கருதப்பட்டுள்ளது.

**14. தனி நீதிமன்றங்கள் :**

(அ) ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்
படும் அநீதிகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தனி
நீதிமன்றங்கள்.

ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும்
குற்றங்களை மாவட்டங்களிலுள்ள செஷன்ஸ் நீதிமன்றங்கள்
விசாரிக்கும். இதோடுகூட இந்த அரசு 1956 ஆண்டு குடியுரிமைகள்
பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்வ
தற்காக மதுரை, திருச்சி, கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய
இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று என்ற வகையில்,நான்கு தனிநீதி
மன்றங்களை அமைத்து. இதற்கென 50 சதவீத உதவித் தொகை
யை மத்திய அரசிடமிருந்து பெறுகிறது. அரசு இது போன்ற
தீவிர முயற்சிகளை எடுத்ததன்பயனாக இவ்வாறான குற்றங்கள்
வெகுவாகக் குறைந்துள்ளன. 1992-93 ஆம் ஆண்டில், இந் நீதி
மன்றங்கள் குறித்து ரூ. 0.11 கோடி செலவிடக் கருதப்பட்
டுள்ளது.

**(ஆ) பொருளாதார குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதி
மன்றங்கள் :**

''மாவட்ட நீதிமன்றங்கள்'' என்ற பெயரில் தற்போதுள்ள
இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் வழக்கு
களை விசாரிக்க மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளின் பதவித்
தரத்தில் தலைமை அதிகாரிகளாகக் கொண்டு, ஆறு தனி

நீதிமன்றங்கள் உள்ளன. இதுபோன்ற சமுதாயக் கொடுமைகளைப் பற்றி விசாரிக்க, முக்கியமாக, பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்க, சென்னையில் இரண்டும் மதுரையில் ஒன்றுமாக மூன்று தனி நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கென அமைக்கப்பட்ட இம்மூன்று தனி நீதிமன்றங்கள் தொடர்பாக 1992–93 ஆம் ஆண்டில் ரூ. 0.11 கோடி செலவிட கருதப்பட்டுள்ளது.

(இ) குடும்பத் தகராறுகளைத் தீர்த்துவைக்கும் நீதிமன்றங்கள்.

உள்துறையின் 21—9—1988 ஆம் நாளிட்ட 2062 ஆம் எண் அரசாணையில், குடும்பத் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் நீதிமன்றம் ஒன்றை சென்னையில் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நீதிமன்றம் 3—10—1988 லிருந்து செயல்பட்டு வருகின்றது. 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். 1992–93 ஆம் ஆண்டில், குடும்பத் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் நீதிமன்றம் குறித்து ரூ. 0.13 கோடி செலவு ஏற்படும் என மதிப்பிடப்படுகிறது.

(ஈ) இரயில்வே நீதிமன்றங்கள் :

இரயிலில் பயணச் சீட்டின்றிப் பயணம் செய்வது போன்ற குற்றங்களை விசாரிக்கும் பொருட்டு, வட ஆற்காடு அம்பேத்கார், தென் ஆற்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் சென்னையிலும் இரயில்வே மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. இரயில்வே மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் குறித்து ஏற்படும் செலவை தமிழ்நாடு அரசு ஏற்கிறது. மேற்கூறிய நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத் தொகை அரசுக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

உ) நடமாடும் நீதிமன்றங்கள்.

போக்குவரத்துக் குற்றங்களை விசாரிக்க நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. சென்னையில் இரு நடமாடும் நீதிமன்றங்களும், கோயம்புத்தூரில் ஒரு நடமாடும் நீதிமன்றமும், மதுரையில் ஒரு நடமாடும் நீதிமன்றமும் இயங்குகின்றன.

(ஊ) 1987 ஆம் ஆண்டு பயங்கரவாத-நாசவேலைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட நீதிமன்றம்.

பயங்கரவாத-நாசவேலைகளைத் தடுப்பதற்கும், அவற்றைச் சமாளிக்கவும், அவை தொடர்பான அல்லது உடன் நிகழ்வுகளைத் தடுப்பதற்கெனவும், மத்திய அரசு 1987 ஆம் ஆண்டு



பயங்கரவாத-நாசவேலைகள் தடுப்புச் சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதிலும் குற்றங்களை விசாரணை செய்வதற்காக, சென்னை, உயர்நீதி மன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதியின் இசைவுடன், சென்னை. மாநகர முதல் வகுப்பு கூடுதல் சிவில்—செஷன்ஸ் நீதிமன்றத்தை குறிப்பிட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றமாக அரசு அமைத்துள்ளது. உடனடித் தேவை காரணமாக, அதாவது தற்செயல் விடுப்பில் செல்லுதல் போன்ற காரணத்தினால் தனி நீதிபதி தற்காலிகமாக அலுவலகம் வராத நேரத்தில் வழக்குகள் விசாரிக்கும் பணி தடங்கலின்றி நடக்கும் பொருட்டு, உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் இசைவுடன், கூடுதல் நீதிபதி ஒருவரை அரசு நியமித்துள்ளது. மேலும் தற்போது குறிப்பிட்ட வழக்குகளை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தின் பணிச்சுமையை அரசு கருத்தில் கொண்டும் உயர்நீதிமன்றத்தின் கருத்துக்களை ஏற்றும், திரு. இராஜீவ் காந்தி கொலை வழக்கு அல்லாத பிற அனைத்து வழக்குகளையும் "தடா" சட்டத்தின் கீழ் விசாரிப்பதற்கென்றே கூடுதல் நீதிமன்றத்தை அமைக்க அரசு கருதியுள்ளது. குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்கென்றே தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள நீதிமன்றத்தில் திரு. இராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரிக்கப்படும்.

15. சட்ட அதிகாரிகள்.

சட்ட அதிகாரிகள் படி நிலையில் தலைமை வழக்குரைஞரே தலைமை அலுவலராவர். இவரை அடுத்து அரசு உரிமையியல் வழக்குரைஞர் ஒருவரும் 8 அரசு உதவி வழக்குரைஞரும், 27 அரசு வழக்குரைஞர்களும், 2 அரசு உரிமையில் சிறப்பு வழக்குரைஞர்களும் இருக்கின்றனர். குற்றவியல் துறையைப் பொறுத்த வரையில், அரசு வழக்கு நடத்துநர் ஒருவரும், 3 உதவி வழக்கு நடத்துநரும் உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்குரைஞர்களும் (குற்றவியல்) இருக்கின்றனர் இவர்களைத் தவிர, மாநகர் அரசு வழக்குரைஞர் உரிமையியல் மாநகர் அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்கள், உரிமையியல் மாநகர் அரசு வழக்கு நடத்துநர், மாநகர் அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்கள், அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் நிலை I, நிலை II, ஆகியோரும் அரசு சட்ட அதிகாரிகளாக மாநகரில் உள்ளனர்.

வெளியூரைப் பொறுத்த மட்டில், அரசு வழக்குரைஞர்களும் அரசு வழக்கு நடத்துநர்களும் குறிப்பிட்ட கால அளவிற்கான பதவி அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். மேலும் அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் நிலை I, நிலை II ஆகியோரும், நிரந்தர காலச் சம்பள ஏற்ற முறையில் சம்பளம் பெறும் முழுநேர அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். மாவட்ட முன்சீப்நீதிமன்றங்களிலும், துணை நீதிமன்றங்களிலும் அரசு பணியாற்று

வதற்காக, அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்குவதன் பேரில், இந்த வழக்குரைஞர்கள் நியமிக்கப்படுகின்றனர், இந்த வழக்குரைஞர்களை வழக்குநடத்த நியமிக்கும் சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து இதற்கான செலவு செய்யப்படுகிறது. அவர்கள் ஆற்றும் பணியின் அடிப்படையில் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. இத்தொகை அரசினால் அல்லது சம்பந்தப்பட்ட துறைத் தலைவரால் அனுமதிக்கப்படுகிறது.

## அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் :

மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் (நிலை-I, நிலை-II) மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளை கவனிக்கின்றனர். இவர்கள் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 25 ஆம் பிரிவின் கீழ் (மத்தியச் சட்டம் 2/1974) மாநில அரசால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையான காலச் சம்பள ஏற்றமுறை வீதத்தில் சம்பளம் பெறும் முழுநேர அரசு பணியாளர்களாவர். குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரணையை விரைவுப்படுத்த வேண்டுமென்ற நோக்குடன், ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை-2) ஒருவரை அரசு நியமித்துள்ளது. வெளியூர்களிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட ஆட்சியாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழும், சென்னை மாநகரிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளனர். அரசு சட்ட அதிகாரிகளின் பணி முனைப்பாகக் கண்காணிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, அரசு வழக்கு நடத்தும் இயக்குநர் அலுவலகம் ஒன்றை மீண்டும் அமைக்கும் நேர்வு பரிசீலனையில் உள்ளது.

## அரசு வழக்குரைஞர், புதுடெல்லி :

இந்திய உச்ச நீதிமன்றத்தில், சிறப்பு அனுமதி மனுக்களைத் தாக்கல் செய்வது தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசு ஆராய்ந்து, அண்மையில் 1991 ஜூலையில் ஒருவருக்குப் பதிலாக மூன்று வழக்குரைஞர்களை நியமித்தது. அனைத்துத் துறைகளுக்கு இருவரும் குற்றவியல் வழக்குகளுக்கு மூன்றாவது வழக்குரைஞரும் இருப்பர்.

பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத் தாள் வாங்கும் வகையில் கணிசமான தொகையை அரசு உரிமையியல் வழக்குரைஞர் செலவிடுகிறார். மேற்சொன்ன செலவு, தற்போது '' 2014. நீதி நிருவாகம்-114. சட்ட ஆலோசகர்கள் வழக்குரைஞர்கள்-ஏ.பி. அரசு உரிமையியல் வழக்குரைஞர்-0·5



அலுவலகச் செலவுகள் '' என்பதன் கீழ் பற்று வைக்கப்படுகிறது. 1992-93-ஆம் ஆண்டில் சட்ட அதிகாரிகள் என்பது தொடர்பான மொத்த செலவு ரூ. 3.27 கோடி என மதிப்பிடப்படுகிறது.

## 16. தமிழில் சட்ட இதழ் :

பல்வேறு நீதிமன்றங்கள் பல்வேறு வழக்குகள் தொடர்பாக தீர்ப்புகளை வழங்கி வருகின்றன என்பது யாவரும் அறிந்ததே. இது போன்ற தீர்ப்புகளை வழக்குரைஞர்கள் அறியும் வகையில், சட்டம் குறித்த தமிழ் மாதாந்திர இதழ் நகல் ஒன்று ரூ. 10 என்ற பெயரளவு விலையில் உயர்நீதிமன்றம் வெளியிட்டு வருகிறது. சட்ட இதழ் வெளியிடுவது தொடர்பான பணிக்கென, மாவட்ட நீதிபதி நிலை-II பதவித் தரத்தில் தலைமைப் பதிப்பாசிரியரையும், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் இணைப் பதிப்பாசிரியரையும் நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இச்செயல் நோக்கத்திற்காக உதவி ஆசிரியர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள், தட்டச்சர்கள். படி திருத்துபவர்கள், அலுவலக உதவியாளர்கள் போன்ற பணியாளர்களை நியமிக்கவும் அரசு அனுமதியளித்துள்ளது. தமிழ் சட்ட இதழ் தலைமைப் பதிப்பாசிரியர் அலுவலகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், படிகள், குறித்த செலவு "ஏ.சி. சட்ட. இதழ் வெளியிடுதல்.'' எனனும் குறுங்கணக்குத் தலைப்பில் பற்றெழுதப்படுகிறது. இந்த இதழ் வெளியிடுவது தொடர்பாக, 1992-93-ஆம் ஆண்டில் ரூ. 0.07 கோடி செலவிடப்படும் எனக் கருதப்படுகிறது.

## 17. நீதித்துறை ஒதுக்கீடு

இக்குறிப்பில் ஏற்கனவே குறிப்பிட்டபடி, நீதித்துறை சுமுகமாகவும், செவ்விய முறையிலும் செயல்படுவதை உறுதி செய்வதற்கு மாநில அரசுக்கு கடமை உண்டு என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. அவ்வாறே மாநில நிதிநிலைமை அனுமதிக்கும் அளவிற்கு நீதித்துறையின் தேவைகளை நிறைவு செய்ய தமிழ்நாடு அரசு தொகை ஒதுக்கீடு செய்து வருகிறது.

1987–88ஆம் ஆண்டில் நீதித்துறை தொடர்பான செலவினத்தின் அளவு ரூ. 21.55 கோடியிலிருந்து, 1992-93ஆம் ஆண்டில் ரூ. 45.99 கோடியாக (110 சதவிகம் உயர்வு)

உயர்ந்ததிலிருந்து இது தெளிவாகும். 1987–88-லிருந்து ஆண்டுதோறும் ஏற்பட்ட செலவு, வரவு பற்றிய விவரங்கள், கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1987–88 .. .. .. .. | 21.55 |
| 1988–89 .. .. .. .. | 24.48 |
| 1989–90 .. .. .. .. | 29.70 |
| 1990–91 .. .. .. .. | 37.25 |
| 1991–92 (திருத்திய மதிப்பீடு) .. .. | 40.19 |
| 1992–93 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு). | 45.99 |

0070 நீதி நிருவாகம் மற்றும் 0030 முத்திரைத் தாள்கள் நீதித்துறை சார்ந்தவை என்ற தலைப்பின் கீழ் வருவாய் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மொத்தம். (ரூபாய் கோடியில்). |
|---|---|
| 1987–88 .. .. .. .. | 17.28 |
| 1988–89 .. .. .. .. | 18.14 |
| 1989–90 .. .. .. .. | 28.57 |
| 1990–91 .. .. .. .. | 26.16 |
| 1991–92 (திருத்திய மதிப்பீடு) .. .. | 25.65 |
| 1992–93 (வரவு-செலவு திட்ட மதிப்பீடு) — | 27.08 |

**18. நீதிமன்றங்கள் ஏற்படுத்தல் :**

முன்றாகப் பிரிக்கப்பட்ட இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர் மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்படுத்த அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. இந்த நீதிமன்றங்களும், மற்ற சில நீதிமன்றங்களும் ஏற்படுத்துவதில் உள்ள இடர்ப்பாடுகள் வகைப்படுத்தப்பட்டு, கீழ்க்காணும் நீதிமன்றங்களை துவங்க இருக்கும் நிலையில் உள்ளோம். இது அந்தப் பகுதி மக்களின் நீண்ட காலத் தேவையை நிறைவு செய்வதாக அமையும் :—



**சிவில் நீதிமன்றங்கள் :**

1. இராமநாதபுரம் மாவட்டத்துக்காக, இராமநாதபுரத்தில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

2. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்துக்காக சிவகெங்கையில் மாவட்ட, செஷன்ஸ் நீதிமன்றம்.

3. காமராஜர் மாவட்டத்துக்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

4. சிதம்பரனார் மாவட்டத்துக்காக, தூத்துக்குடியில், மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

5. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், கொடைக்கானல்.

6. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், நிலக்கோட்டை.

7. கூடுதல் துணை நீதிமன்றம், திண்டுக்கல்.

**குற்றவியல் நீதிமன்றங்கள் :**

1. இராமநாதபுரம் மாவட்டத்துக்காக, இராமநாதபுரத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றம்.

2. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்துக்காக, சிவகெங்கையில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

3. காமராஜர் மாவட்டத்துக்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றம்.

4. சந்தனமரக் கடத்தல் குற்றங்களை விசாரிக்க, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில், திருப்பத்தூரில் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களுக்காக தனி நீதிமன்றம்.

5. நீலகிரி மாவட்டத்தில், கோத்தகிரியில் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றம்.

புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ளது போலவே வேலூரில் தற்போது இயங்கும் கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை உரியவாறு இடமாற்றம் செய்து, திருவண்ணாமலையில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

## 19. 1992–93-ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள் :

புதிய நீதிமன்றங்களை அமைக்கவும், நீதிமன்றங்களுக்கு இட வசதியளிக்க கட்டிடங்கள் கட்டுவதற்கும், நீதிமன்ற வளாகத்தில் வசதிகள் செய்து தருவதற்கும், மற்ற தேவைகளுக்கும் கோரிக்கைகள் குவிந்துள்ளன. அரசு தன்னிடம் உள்ள குறைந்தளவு நிதி ஆதாரங்கள் மூலம், படிப்படியாக ஆண்டுதோறும் இத்தகைய கோரிக்கைகளை நிறைவேற்ற பெரிதும் முயன்று வருகிறது. அரசு ஆண்டு தோறும் இது போன்று புது நடவடிக்கைகளை செயற்படுத்துகிறது. 1992–93-ல் கீழ்க்காணும் புதிய பணிகளை நிறைவேற்ற அரசு கருதியுள்ளது.

| தொடர் எண். (1) | திட்டங்களின் விவரம். (2) | மொத்தச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுதல் :** | |
| 1. | தென் ஆற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டையில் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்திற்காக ஆவணங்களை பாதுகாக்கும் அறை கட்டுதல் .. .. .. | 1.00 |
| 2 | திருப்பத்தூரில் உள்ள நீதிமன்றக் கட்டிடங்களுக்கு சிறப்பு பழுதுபார்ப்பு பணிக்கும், வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூரில் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தலும் .. .. .. | 1.57 |
| 3 | புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் பதிவேட்டு அறை, பாதுகாப்புப் பெட்டக அறை கட்டுதல் .. .. .. | 7.46 |
| | **நீதிமன்றங்கள் ஏற்படுத்துதல் :** | |
| 4 | தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை ஏற்படுத்துதல் .. .. .. .. | 9.19 |
| 5 | திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரத்தில் துணை-நீதிமன்றத்தை ஏற்படுத்தல் .. .. | 10.65 |
| | **ஏனையவை :** | |
| 6. | சேலம், மாவட்ட நீதிமன்றத்தில் நீரடிக் கழிப்பிட வசதி செய்து கொடுத்தல் .. | 0.60 |
| 7. | சேலத்தில் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ள குடியிருப்புகளில் சிறப்புபழுது பார்ப்பு பணிகளை மேற்கொள்ளல் .. .. | 1.20 |
| | மொத்தம் .. | 31.67 |



## 20. நவீனப்படுத்துதல் :-

நமது நாட்டில் உள்ள நீதிமன்றங்களில் சென்னை உயர்நீதிமன்றம் காலத்தால் பெருமையும் புகழும் பெற்றதாகும். உயர் நீதிமன்றத்தின் வளாகத்தில் கணிப்பொறி முறையைக் கொண்டு வருதல் முதலிய நவீன வசதிகளை அளித்தலில் நாட்டம் செலுத்த வேண்டியது மிகஅவசியமாகும். சென்னை, வழக்கறிஞர்கள்சங்கம் அரசுக்கு இந்த கோரிக்கையை அண்மையில் கொடுத்துள்ளது. இது குறித்து உரிய கவனம் அளிக்கப்பட்டு வருகிறது.

## 21. நீதி மன்றக் கட்டிடங்கள் :

நீதித்துறையில் உயர்நீதிமன்றக் கட்டிடங்கள், பிறகட்டிடங்களின் பராமரிப்புக்காகும் செலவு கோரிக்கை எண். 13-ல் " 2059. பொதுப்பணிகள் " என்ற கணக்குத் தலைப்பின்கீழ் காட்டப்பட்டுள்ளது. 1991–92-க்கான திருத்திய மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட ரூ. 1.09 கோடிக்கு எதிராக 1992-93 ஆம் ஆண்டுக்கு செலவிடக் கருதப்பட்ட தொகை ரூ. 1.31 கோடியாகும்.

1991-92-ல் பின்வரும் இனங்களுக்குச் செலவிட அரசு அனுமதி அளித்துள்ளது :—

### 1. கட்டிடங்கள் குறித்த செயற்குறிப்பு :

(அ) உயர்நீதிமன்றக் கட்டிடத்திற்கும் புதிய கட்டிடத்திற்கும் இடையே கீழ்தளம், முதல் தளம் இணைப்பு வழி கட்ட அரசு ரூ. 10.50 இலட்சம் அனுமதித்தது.

(ஆ) கூடுதல் உயர்நீதிமன்றக் கட்டிடங்களில் உள்ள மூன்று கட்டிடத் தொகுதியின் வெளிப்பக்கத்தில், ரூ. 2.50 இலட்சம் செலவில் சிமிட்டி பூச, சென்னை பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) அனுப்பிய செயற்குறிப்புக்கு அரசு அனுமதித்துள்ளது.

(இ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், இராணிப் பேட்டையில் உள்ள துணை நீதிமன்றத்திற்கு இடவசதி அளிக்கும் வகையில் அங்கு தற்போது உள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளையும் மேம்பாடுகளையும் மேற்கொள்ள ரூ. 1 இலட்சம் அரசு அனுமதித்தது.

(ஈ) பல்வேறு சிவில், குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 15 இனங்களில் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளவும், பூவிருந்தவல்லி துணை நீதிமன்றத்திற்கு குடிநீர் வழங்க ஏற்பாடுகளை செய்து தரவும் அரசு ரூ. 8.65 இலட்சம் அனுமதித்துள்ளது.

(உ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் ஆரணியில் உள்ள நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்தில் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ. 68;000 அனுமதிக்கப்பட்டது.

(ஊ) சேலம் மாவட்டம், ஆத்தூர் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்தில் (எண். 2) குடிநீர் வழங்கல்-துப்புரவு ஏற்பாடுகளுக்காக சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ. 45,500 அனுமதிக்கப்பட்டது.

(எ) சேலம், குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்கத்தில் நீரடிக் கழிப்பிடம் கட்ட அரசு ரூ. 40,000 அனுமதித்துள்ளது.

(ஏ) சேலம் மாவட்டம், மேட்டூர் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றக் கட்டிடத்திற்கு சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ள அரசு ரூ. 50,000 அனுமதித்துள்ளது.

(ஐ) கோயம்புத்தூர் மாவட்ட நீதிபதி வீட்டின் வளாகத்தில் 6'' துளைக்கிணறு அமைக்க அரசு ரூ. 46,000 அனுமதித்துள்ளது.

**2. அறைகலன்கள் :**

(அ) நீதிமன்றத்தின் கூடங்கள், நீதிபதிகளின் அறைகள் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்காகவும், சென்னை உயர் நீதி மன்றத்தின் புதிய நிருவாகத் தொகுதியைச் சேர்ந்த நிருவாக அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் பயன்படுத்துவதற்காகவும் மேசை நாற்காலிகள் போன்றவற்றை வாங்கவும் ரூ. 27.91 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

(ஆ) சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் 14 அறைகளில் மரத்தாலான தடுப்பு அமைக்க அரசு ரூ. 68,750 அனுமதித்துள்ளது.

(இ) உயர்நீதி மன்றத்தின் அறைகளில் கூடுதலாக மேல்கூரை விசிறிகள் 20 பொருத்த அரசு ரூ. 41000/- அனுமதித்துள்ளது.



(ஈ) உயர் நீதிமன்றத்தின் குற்றவியல் பிரிவில் பயன்படுத்த 41 உருக்கு பதிவேட்டு அடுக்குகள் வாங்குவது தொடர்பாக அரசு ரூ. 1,25,015 அனுமதித்துள்ளது.

## 22. மதுரையில் உயர் நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை ஏற்படுத்தல்

மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அவசியத்தை அரசு 1972 ஆம் ஆண்டிலேயே பரிசீலித்தது. உயர் நீதிமன்றத்தை ஏற்படுத்துவதும் அமைப்பதும் இந்திய அரசியலமைப்பின் 246-ஆம் பிரிவின் கீழ் மத்திய நாடாளுமன்றத்திற்கே உரிய தனிச் சிறப்புரிமையாகும். எனவே மாநிலத்தின் தென் மாவட்டங்களில் உள்ள வழக்காடும் மக்களின் தேவைகளை நிறைவு செய்ய ஆயம் ஒன்றை அல்லது முகாம் நீதி மன்றத்தையாவது ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இந்த அரசு 1973 ஆம் ஆண்டிலேயே மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்தது. மாநிலத் தலைநகர் தவிர பிற இடங்களில் உயர்நீதிமன்றம் ஆயம் அமைப்பது தொடர்பான அனைத்துக் கூறுகளையும் ஆராய, பணியிலிருந்து ஓய்வு பெற்ற இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதியான திரு. ஜஸ்வந்த்சிங் அவர்களை மத்திய அரசு அக்குழுவின் தலைவராக நியமித்தது. மத்திய அரசு, இந்த அரசின் கோரிக்கையைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியது. இக்குழு 1984 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு மூன்று முறை வருகை தந்து, இந்த அரசின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி, கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, கொடைக்கானல், திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களிலுள்ள வழக்காடும் மக்கள், இதில் ஆர்வமுள்ள மக்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக்களை கேட்டறிந்து, உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதியுடனும், தமிழ்நாடு அரசின் ஏனைய அதிகாரிகளுடனும் விவாதித்தது. இக்குழு அதன் அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தது. மத்திய அரசு குழுவின் அறிக்கையையும், பரிந்துரையையும், தமிழ்நாடு ஆளுநர், முதலமைச்சர், சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஆகியோருக்கு அனுப்பி, சென்னை, தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டது. சென்னை, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டுள்ளார். மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைப்பதற்கான அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வது தொடர்பான பிரச்சினையை சென்னை, உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகிறது. ஆயம் ஒன்றினை விரைவாக நிறுவ அரசு ஆர்வத்துடன் உள்ளது. இதற்குத் தேவையான வசதிகளை செய்துதர விரும்புகிறது. இது குறித்து உயர்நீதி மன்றத்துடன் அடிக்கடி தொடர்பு கொண்டுள்ளது.

## 23. சென்னையில் உச்சநீதிமன்ற ஆயம் ஒன்றை ஏற்படுத்துதல் :

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 246-ஆம் பிரிவின்படி உச்சநீதிமன்றத்தினை நிறுவுதல், அமைத்தல், அதிகார வரம்பினை வரையறுத்தல், அதிகாரங்களை நிர்ணயித்தல் ஆகியவை நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரிய அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின்படி இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்திய தலைமை நீதிபதி அவ்வப்போது குறிப்பிடக்கூடியவாறு டில்லியில் அல்லது வேறு இடம் அல்லது இடங்களில் உச்ச நீதிமன்றம் கூடும். சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை நிறுவுவதற்கு மத்திய அரசின் இசைவினைப் பெறவேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக விரைவில் முடிவு எடுக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. அமைக்கக் கருதியுள்ள உச்சநீதிமன்ற ஆயத்திற்கான, கட்டிடங்கள் நீதிபதிகளுக்கான, குடியிருப்பு போன்ற தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்றும் இம்மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இது தொடர்பான செயற் குறிப்பு இந்தியத் தலைமை நீதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மத்திய அரசு 1983 ஆம் ஆண்டு, ஜுன் திங்களில் இம்மாநில அரசுக்கு தெரிவித்தது.

சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயத்தை நிறுவுவதற்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஆதரவளிக்கவில்லை என்றும் 1989 மார்ச்சுத் திங்களில் மத்திய அரசு தெரிவித்தது. எனினும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின்கீழ் சென்னையில் உச்ச நீதிமன்ற ஆயத்தை விரைவில் நிறுவ, இசைவளிக்கும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின்படி உச்சநீதிமன்ற ஆயத்தை நிறுவுவது தொடர்பாக இந்தியத் தலைமை நீதிபதியின் கருத்துக்களை அறிந்து தெரிவிக்கும்படி இந்திய உச்ச நீதிமன்றப் பதிவாளரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்று 1989 நவம்பர் திங்களில் மத்திய அரசு தெரிவித்தது. சென்னையில் ஆயம் ஒன்றை நிறுவ உச்சநீதிமன்றம் இசைவளிக்கவில்லை என்று மத்திய அரசு உள்துறை விவகார அமைச்சகம் அரசுக்கு தற்போது தெரிவித்துள்ளது. மாநில அரசு இதுகுறித்து மத்திய அரசுடன் மீண்டும் கலந்தாலோசிக்கஉள்ளது.

## 24. தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-ஏ பிரிவின்படி ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு, 1977-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு மாநில சட்ட உதவிக் குழுவை அமைத்தது.



இக்குழுவின் பணிகளை அரசு அலுவலர்களும் அரசு அலுவலர் அல்லாத ஏனையோரும் அடங்கிய நிருவாகக் குழு கவனிக்கிறது.

18 மாவட்ட குழுக்கள், 88 வட்ட குழுக்கள், 35 சட்ட உதவி மையங்கள், 149 ஆலோசனை மையங்கள், 76 சமரச மையங்கள் 25 பெண்களுக்கான ஆலோசனை மையங்கள் ஆகியவை உள்ளன.

இக்குழுவின் நடவடிக்கைகள் பின்வருமாறு விரிவான முறையில் அமைந்துள்ளன :

(1) அனைவருக்கும் இலவச சட்ட ஆலோசனை.

(2) வறிய நிலையிலுள்ள மக்கள் பல்வேறு அரசு ஆணைகளில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும் பெறுவதற்கு வகை செய்யும் பொருட்டு உதவி செய்தல்.

(3) சிவில் நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை நடத்த அல்லது எதிர்த்து வாதிட வறிய மக்களுக்கு உதவி செய்தல்.

(4) விவாகரத்து கோரும் மீண்டும் திருமண பந்தத்தையும் புதுப்பிக்கும், குழந்தைகளைப் பொறுப்பெடுத்துக் கொள்ளுதல், ஜீவனாம்சம் பெறுதல், ஏனைய சொத்து தொடர்பான பிரச்னைகளை தீர்ப்பதற்காக மகளிருக்கு உதவி புரிதல்.

(5) விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, விபத்து கோரிக்கை நடுவர் மன்றங்களில் உள்ள வழக்குகளில் இழப்பீட்டுத் தொகை பெறுவதற்கு உதவி புரிதல்.

(6) பணிபுரியும் பிரிவினருக்கு உதவி புரிதல்.

(7) கைது செய்யப்படும் நேரத்திலிருந்து வழக்கு நடைபெறும் போதும், மேல்முறையீடு செய்யும்போதும், சிறைச்சாலையில் உள்ள தண்டனை அளிக்கப்பட்ட கைதிகளின் குடும்ப சொத்து தொடர்பான பிரச்சினைகளை களைவது தொடர்பாக உதவி செய்தல்.

(8) இராணுவத்தில் பணியாற்றுகின்றவர்களுக்கும், இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் உதவி செய்தல்.

அரசு தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழுவிற்கு அதன் செலவுகளுக்காக ஆண்டுதோறும் மானியம் வழங்குகிறது. இக்குழுவிற்கு 1991-92ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்த ரூபாய் 0.70 கோடி மானியத்திற்கு எதிராக ரூபாய் 0.91 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1992-93ஆம் ஆண்டில், ரூபாய் 0.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நாட்டின் பல்வேறு மாநிலங்களில் செயற்பட்டு வரும் சட்ட உதவித் திட்டப் பணிகளுக்குச் சட்டப்படிக்கான வடிவம் அளிக்கும் பொருட்டும், அவற்றை மிகவும் பயனுள்ள வகையில்

செயற்படுத்தும் பொருட்டும் 1987-ஆம் ஆண்டு சட்டம் பணிகள் அதிகார மன்றங்கள் சட்டத்தை (மத்தியச் சட்டம் 39/1987) மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் இதுவரை செயலுக்கு கொண்டு வரப்படவில்லை.

மக்கள் நீதிமன்றம்.

தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழுவின் பல திட்டங்களில், மக்கள் நீதிமன்றங்களின் கூட்டங்களைக் கூட்டும் திட்டமும் ஒன்றாகும். "லோக் அதாலத்" என்பது மக்கள் நீதிமன்றம் என்று பொருள்படும். சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு இடையேயான சட்டப்படிக்கான பிரச்சினைகளையும் பேச்சு வார்த்தைகள் மூலமும் இணக்கப் பேச்சு வார்த்தைகள் மூலமும் தீர்த்து வைப்பதும், சமூக நலனை நோக்கமாகக் கொண்ட அனுபவம் வாய்ந்தவர்கள் அடங்கிய குழு உறுப்பினர்களின் உதவியுடன், இசைவு பொது அறிவு மனிதாபிமான அணுகுமுறை ஆகியவற்றின் மூலம் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதுமே இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின் நோக்கங்கள்:

(அ) இதுவரையில் நீதிமன்றங்களுக்குச் செல்லாத பிரச்சினைகளையும் (வழக்கு தொடர்வதற்கு முன்னர்)

(ஆ) நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்படாமலுள்ள வழக்குகளையும் (நிலுவையாகவுள்ள வழக்குகள்) விசாரித்து தீர்ப்பதே ஆகும்.

இரண்டாவது நோக்கம் தொடர்பாக நீதிமன்றங்களிலும், நடுவர் மன்றங்களிலும் தீர்ப்பு வழங்கப்படாமலுள்ள வழக்குகள், மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்காக, சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் அனைவரின் இசைவைப் பெற்று, மக்கள் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையொட்டி ஆணைகளைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கும், நடுவர் மன்றங்களுக்கும் திரும்ப அனுப்பி வைக்கும் வகையில் இக்குழு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. வழக்குகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வர இக்குழு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. ஈட்டுறுதி செய்யப்பட்ட வண்டிகள் சம்பந்தமான மோட்டார் விபத்துக்கள் உரிமைக் கோரிக்கைகள், நீதிமன்றங்களிடம் தீர்ப்பாகாமலுள்ள உரிமை கோரிக்கைகள் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான வண்டிகள் தொடர்பான ஒரு சில வழக்குகள் ஆகியவற்றை முடிப்பதற்காகவும் இக்குழு இதுவரையில் மக்கள் நீதிமன்றக் கூட்டங்கள் பலவற்றைக் கூட்டியுள்ளது. இதுவரையில் பல்வேறு குழுக்கள் 11,909 வழக்குகளுக்குத் தீர்ப்பளித்து ரூபாய் 27.43 கோடி வழங்க உத்தரவிட்டுள்ளது.



25. சட்டக் குழு அமைத்தல்

ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்றபோது நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வரும் சட்டங்கள் அதற்கு பின்வரும் காலத்தில் இயற்றப்பட்ட ஏனைய சட்டங்கள் ஆகியவை தற்போதுள்ள சூழ்நிலைகளுக்குபொருந்துவதாக உள்ளதா என்பது குறித்து பரிசீலிப்பதற்காகவும், அவசியமேற்படின் அவற்றில் திருத்தங்கள் செய்வதற்கான கருத்துக்களைத் தெரிவிக்கும் பணியை மேற்கொள்வதே தற்போது ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ள சட்டக்குழுவின் நோக்கமாகும். மேலும் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ள சட்டக்குழு, மேற்சொன்ன சட்டங்கள், உச்சநீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புகளுக்கிணங்க தீர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளதா என்று பரிசீலித்தும், அவசியமேற்படின் இச்சட்டங்களில் திருத்தங்கள் செய்வது குறித்து கருத்தை தெரிவிக்கும் பணியையும், பின்வரும் காரியங்களை கவனிக்க வகை செய்யும் நோக்குடன் சட்டக்குழு ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

(அ) தற்போது செயலிலுள்ள சட்டங்களில் காணப்படும் விடுபாடுகளை நீக்கி அவற்றிற்குப் பதிலாகத் தகுந்த மாற்று வழிகளை ஏற்படுத்தும் வகையில் தேவையான திருத்தங்கள் ஆகியவற்றைச் செய்வதற்காக ஆலோசனை வழங்குதல்.

(ஆ) சமூக, பொருளாதார நிலைக்கு ஏற்ப, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் சட்டமியற்ற ஆலோசனை வழங்குதல்.

(இ) மாநில—மத்திய அரசுகளுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆலோசனை வழங்குதல்.

(ஈ) நீதி நிருவாகத்தில் சீர்திருத்தங்களை செய்வதற்காக மிக நல்ல முறையிலும், விரைவான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது குறித்து பரிந்துரைகளைத் தெரிவித்தல்

(உ) மாநிலச் சட்டங்கள் தவிர, இம்மாநிலத்திற்குப் பொருந்தக்கூடிய மத்திய சட்டங்களில் திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் செய்வது குறித்து ஆலோசனை வழங்குதல்.

மத்திய அரசு ஏற்கெனவே மத்தியச் சட்டக்குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அக்குழு, கடந்த பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. மத்திய சட்டக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்தியச் சட்டங்கள் தகுந்தவாறு திருத்தப்பட்டுள்ளன. இதைப் போன்றே மேற்சொன்ன சட்டக்குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க மத்திய அரசும் பல புதிய சட்டங்களை இயற்றியுள்ளது.

மத்திய பிரதேசம், ஒரிசா, அசாம் போன்ற மாநிலங்களில் சட்டக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கிணங்க. மேற்சொன்ன பணிகளுக்கென இம்மாநிலத்திலும், சட்டக்குழு ஒன்றை ஏற்படுத்த அரசு கருதியுள்ளது.

## 26. மாநில ஆட்சி மொழி (சட்டமன்ற) ஆணைக்குழு :

மாநிலச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் அவற்றின் கீழ் இயற்றப்படும் விதிகள், மத்திய சட்டங்கள், மத்திய அவசரச் சட்டங்கள் அவற்றின் கீழ் இயற்றப்படும் விதிகள் அறிவிக்கைகள் ஆகியவற்றை தமிழில் மொழி பெயர்ப்பதற்காக நீதிபதி திரு. எம். அனந்த நாராயணனை தலைவராகக் கொண்டு, 1985–ஆம் ஆண்டில் முதன் முதலாக மாநில ஆட்சி மொழி (சட்டமன்ற) ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழு அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டது. சட்டப்பேரவை அரசு செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற திரு. எம். சண்முகசுப்ரமணியன் தற்போது இந்த ஆணைக்குழுவின் தலைவர். 1989–ஆம் ஆண்டில் இக்குழு திருத்தியமைக்கப் பட்டது.

2. இந்திய அரசிடமிருந்துப் பெற்ற முன்னுரிமைச் சட்டம் அடிப்படையில் இச் சட்டங்களை மொழியாக்கம் செய்யும் பணியை இந்த ஆணைக்குழு மேற்கொண்டது. இந்த ஆணைக்குழு ஆட்சிசொல் அகராதியை தயாரித்து முடித்து 1969–ஆம் ஆண்டில் வெளியிட்டது. இந்த ஆணைக்குழு இதுவரையில் இந்திய அரசிடமிருந்து இரு முன்னுரிமை பட்டியல்களைப் பெற்றுள்ளது. இப்பட்டியலில் இடம் பெற்ற சில சட்டங்கள் மறு மொழியாக்கம் செய்யப்பட்டு இறுதி வடிவம் பெற்று அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழு இதுவரையிலும் 21 மத்திய அரசு சட்டங்களையும் 7 மாநில அரசு சட்டங்களையும் மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ளது.

3. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தமிழ் மொழியாக்கம் 1988–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்த அரசியலமைப்பு மொழியாக்கம் குறித்து [1988–ஆம் ஆண்டுப் பதிப்பு] பல்வேறு துறைகளிடமிருந்து எண்ணற்ற புகார்கள் வந்த காரணத்தால் தற்போதைய ஆணைக்குழு 1988–ஆம் ஆண்டு பதிப்பினைத் திருத்தி வடிவமைத்தது. 1989–ஆம் ஆண்டில் இந்த ஆணைக்குழு திருத்தி அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தப்பட்ட தமிழ் மொழியாக்கத்திற்கு மத்திய மாநில அரசுகளின் ஒப்புதல் பெற்று அச்சிடப்பட்டது.

4. தற்போதைய மாநில ஆட்சிமொழிக்குழுவை (சட்டமன்றம்) திருத்தியமைப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் தீவிர ஆய்விலுள்ளது.

## 27. வழக்குரைஞர்கள் நல நிதி :

வழக்குரைஞர்கள் தாங்கள் வழக்கு நடத்துவதை இடையில் நிறுத்தி விடும் போது, தமிழ்நாடு மாநில ஓய்வு பெற்ற வழக்குரைஞர்களுக்குச் சலுகைகள் அளிப்பதற்கென்று நலநிதி ஒன்றை



ஏற்படுத்தும் பொருட்டு வழக்குரைஞர்கள், தங்கள் தொழில் சம்பந்தமான சலுகைகளையும் அதன் இடை நிகழ்வான சலுகைகளை அவர்களுக்கு அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் நலநிதிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 49/1987) இயற்றப்பட்டது. கேரள வழக்குரைஞர்கள் நலநிதிச் சட்டத்தில் அடங்கியுள்ள விதித் துறைகளின் அடிப்படையில், மேற்சொன்ன சட்டம், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றில் சில திருத்தங்களை கொண்டு வர, தமிழ்நாடு வழக்குரைஞர் மன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது.

வழக்கறிஞர் மன்றத்தின் கருத்துக்களை ஏற்று இது தொடர்பாக திருத்த சட்டமொன்றை இயற்றுவதென்று அரசு முடிவு செய்துள்ளது. வழக்கறிஞர்கள் வக்காலத்துக்கு ஆஜராவதற்கான குறிப்பாணைகள் அல்லது ஆஜர் ஆவதற்கான ஏனைய ஆவணங்களை தாக்கல் செய்வது ஆகியவற்றின் போது நீதிமன்ற தபால் தலையுடன் சேர்த்து தற்போது 1 ரூபாய் என்று இருப்பதற்கு பதிலாக 2 ரூபாய் மதிப்புள்ள வழக்கறிஞர் மன்றத் தபால் தலைகளை ஒட்ட வேண்டும். என்பது அம்மன்றம் தெரிவித்துள்ள முக்கியமான திருத்தமாகும். இதன் மூலம் வழக்கறிஞர் நல நிதியின் நிதிவளம் அதிகரிக்கும்.

## 28. புள்ளி விவரங்கள் :

சென்னை உயர்நீதி மன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் (உரிமையியல், குற்றவியல், நீதிமன்றங்கள் இரண்டிலும்) 1989, 1990 மற்றும் 1991 ஆகிய மூன்று ஆண்டுகளில் தொடரப்பட்ட வழக்குகள், தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள், விசாரணை முடிவுறாமலுள்ள வழக்குகள், ஆகிய விவரங்களைக் காட்டுகின்ற விவர அறிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

29. இறுதியாக தமிழ்நாட்டில் நீதித்துறை அமைப்பு செவ்வனே அமைக்கப்பட்டு, தேவையான வசதிகள் வழங்கப்பெற்று செயல்படுகின்றது. அதே நேரத்தில் வழக்காடும் மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றத் தேவையான வசதிகள் மேலும் செய்யப்பட வேண்டும் என்ற நிலைமையினை அரசு முழுமையாக அறியும். நிதி இன்னபிற நிலைகளை அனுசரித்து, இத்தேவைகளை அரசு படிப்படியாக நிறைவேற்றும். சுருங்கக் கூறின், நீதித்துறை தனித்தும், வழக்காடும் மக்களுக்கு நீதி விரைவாக கிட்டும் வகையிலும், செயல்பட தகுந்த சூழலை உருவாக்கி அதற்கான வசதிகளை அரசு அளித்து வரும்.

## இணைப்பு.

1989, 1990, 1991 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றம், சார்நிலை நீதிமன்றங்கள் (உரிமையியல்) ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட, தீர்ப்பு வழங்கப்பட்ட, விசாரணையில் உள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

| தொடர் எண். | நீதிமன்றங்களின் பெயர். | 1989 இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 1989 தீர்ப்பு வழங்குவதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | 1989 இவ்வாண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 1989 இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | உயர்நீதிமன்றம், சென்னை .. | 73,383 | 2,66,893 | 79,093 | 1,87,800 |
| 2 | மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை. | 54,108 | 1,02,376 | 44,854 | 57,522 |
| 3 | சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை | 18,182 | 42,039 | 18,247 | 23,792 |
| 4 | மாவட்ட நீதிமன்றங்கள் .. .. | 40,285 | 49,698 | 40,522 | 9,176 |
| 5 | துணை நீதிமன்றங்கள் .. .. | 1,36,530 | 2,39,529 | 1,37,105 | 1,02,424 |
| 6 | மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் .. | 3,30,241 | 6,96,401 | 3,59,009 | 2,37,392 |





| தொடர் எண். | நீதிமன்றங்களின் பெயர், | 1990 இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 1990 தீர்ப்பு வழங்குவதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | 1990 இவ்வாண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 1990 இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (7) | (8) | (9) | (10) |
| 1 | உயர்நீதிமன்றம், சென்னை .. .. | 85,644 | 2,73,444 | 73,886 | 1,99,558 |
| 2 | மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை. | 45,238 | 1,02,760 | 46,239 | 56,521 |
| 3 | சிறுவழக்கு நீதிமன்றம், சென்னை .. | 13,791 | 37,583 | 16,939 | 20,644 |
| 4 | மாவட்ட நீதிமன்றங்கள் .. .. | 52,340 | 61,516 | 49,824 | 11,692 |
| 5 | துணை நீதிமன்றங்கள் .. .. | 1,49,861 | 2,52,285 | 1,37,418 | 1,14,867 |
| 6 | மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் .. | 3,76,673 | 7,14,065 | 3,70,863 | 3,43,202 |

| தொடர் எண். | நீதிமன்றங்களின் பெயர். | 1991 இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | தீர்ப்பு வழங்குவதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (11) | (12) | (13) | (14) |
| 1 | உயர் நீதிமன்றம், சென்னை .. | 82,629 | 2,82,187 | 66,687 | 2,15,500 |
| 2 | மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை. | 43,965 | 1,00,486 | 47,445 | 53,041 |
| 3 | சிறுவழக்கு நீதிமன்றம், சென்னை .. | 12,592 | 33,236 | 16,207 | 17,029 |
| 4 | மாவட்ட நீதிமன்றங்கள் .. | 36,535 | 48,227 | 37,871 | 10,356 |
| 5 | துணை நீதிமன்றங்கள் .. .. | 1,32,394 | 2,47,261 | 1,08,090 | 1,39,171 |
| 6 | மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் .. | 2,05,511 | 5,48,713 | 2,74,100 | 2,74,613 |



சென்னை உயர்நீதிமன்றத்திலும் (குற்றவியல்), சார்நிலை நீதிமன்றங்களிலும் 1989, 1990 1991-ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட, முடிவு செய்யப்பட்ட, விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

| தொடர் எண். | நீதிமன்றங்களின் பெயர். | 1989 இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1 | உயர்நீதி மன்றம், சென்னை | 19,016 | 39,641 | 13,459 | 26,182 |
| 2 | செசன்சு நீதிமன்றங்கள் | 7,811 | 14,203 | 7,519 | 6,684 |
| 3 | பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் நீதிமன்றம். | 3,22,897 | 3,53,428 | 3,16,979 | 36,449 |
| 4 | நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றம். | 10,22,406 | 12,67,579 | 9,81,739 | 2,85,840 |

| தொடர் எண், நீதிமன்றங்களின் பெயர். | 1990. இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) |
| 1 உயர்நீதி மன்றம், சென்னை | 16,316 | 42,498 | 23,620 | 18,878 |
| 2 செசன்ஸ் நீதிமன்றங்கள் | 7,653 | 14,337 | 6,941 | 7,396 |
| 3 பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் நீதிமன்றம். | 2,85,931 | 3,22,360 | 2,75,284 | 47,096 |
| 4 நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள். | 8,35,306 | 11,21,140 | 6,52,288 | 2,61,861 |



| தொடர் எண். நீதி மன்றங்களின் பெயர். | 1991 இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (10) | (11) | (12) | (13) |
| 1 உயர்நீதி மன்றம், சென்னை | 24,393 | 43,271 | 23,167 | 20,104 |
| 2 செசன்ஸ் நீதிமன்றங்கள் | 7,519 | 14,915 | 7,313 | 7,602 |
| 3 பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் நீதிமன்றம். | 3,16,001 | 3,68,097 | 2,96,268 | 66,829 |
| 4 நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் | 7,58,987 | 10,20,848 | 7,76,719 | 2,47,129 |

[1992 மார்ச் 30

## அத்தியாயம் 1.

## சிறைகள் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு

(1992–93)

### 1. குறிக்கோள் ஒரு கண்ணோட்டம் :

சிறைச்சாலைகள் குற்றவியல் நீதி முறையின் ஓர் அங்கமாக மாநில அரசின் கீழ் இயங்கி வருகின்றன. குற்றவியல் நீதி முறை ஏற்பாட்டில் ஒரு பகுதி என்கின்ற வகையில் சிறைச்சாலைகளுக்கு முறையான அமைப்பு உண்டு. அவை ஆற்றுவதற்கு என திட்டவட்டமான அலுவல்களும் உண்டு. பழங்காலத்திலும், இடைக்காலத்திலும் தண்டனை குறித்த சிந்தனைகளில் பழிதீர்க்கும் கோட்பாடே ஆதிக்கம் செலுத்தியது. எனவே அந்த நாட்களில் கொடிய உடல் ஒருப்புத் தண்டனைகள் ( Corporal Punishment ) எனும் சித்திரவதை தண்டனைகள் அளிப்பதே அடிப்படை விதியாக வழக்கத்தில் இருந்தது. சிறைச்சாலையில் அடைப்பது உட்பட தண்டனை முறைகளில் முக்கியமான இடம் பெறுவது ஒரு குற்றவாளியை அச்சுறுத்தி குற்றத்தில் இருந்து தடுக்கும் கொள்கை ஆகும்.

இந்தியாவின் சிறைத் துறை நிருவாக வரலாற்றில் முதன் முறையாக 1919–20ஆம் ஆண்டில் இந்திய சிறைச்சாலைக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு சிறைச்சாலை நிருவாக அணுகுமுறையில் சீர்திருத்தி நெறிப்படுத்தும் மரபினை கைக்கொள்ள வேண்டுமென்று பெரிதும் வலியுறுத்தியது. ஓர் குற்றவாளி உருவாவதற்குச் சில நேரங்களில் பொறுப்பாளியாக அமைந்து விடுகிற இந்தச் சமுதாயமே குற்றவாளிகளைச் சீர்திருத்தி நன்நெறிப்படுத்துவதற்கும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் தெளிந்த மனதுடன் பங்காற்றுவதற்கு உரிய பொறுப்பை ஏற்க வேண்டியது பொருத்தமானதெனத் தோன்றுகிறது. இவ்வாறாக குற்றவாளிகள் விடுதலையாகி வந்த பிறகு மீண்டும் குற்றம் செய்வதற்கு தலைப்படா வண்ணம் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு திட்டவட்டமான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது அரசின் தலையாய கடமைகளில் ஒன்றாகி விட்டுள்ளது.

சிறைத் துறையின் முதன்மை குறிக்கோள் குற்றவாளிகளை சிறைகளில் அடைத்து வைத்து அவர்கள் இனிமேலும் குற்றம் இழைக்காத வண்ணம் அச்சுறுத்தி தடுப்பதுடன் நின்று விடுவது இல்லை; அதற்கு மேல் அவர்கள் விடுதலை ஆகி வந்த பிறகு சமுதாயத்தில் எவ்வித கட்டுப்பாடும் தடையும் இல்லாமல் கலந்து பழகவும் பயனுள்ள குடி மக்களாக வாழவும் இயலச் செய்யும் வகையில் அவர்களை சீர்திருத்தி அவர்களுக்கு புது வாழ்வு அளித்து அவர்களை மீண்டும் சமுதாயத்தில் இரண்டற கலக்குமாறு செய்வதும் இத்துறையின் முதன்மைக் குறிக்கோள் ஆகும். இக்குறிக்கோளைக் கருத்தில் கொண்டு சிறைச் சாலைகளில் உள்ள

நிலைமைகளை மேம்படுத்துவதற்கான பல திட்டங்களுடன் சிறைவாசிகளின் நலனுக்காகப் பல்வேறு சீர்திருத்தத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

## II. துறையின் கட்டமைப்பும் நிருவாக ஏற்பாடும் :

(i) தமிழ்நாட்டில் சிறைச்சாலைகளின் நிருவாகம் சிறைத் துறையிடம் நிலை பெற்று உள்ளது. இத்துறை பின்வரும் நிறுவனங்களின் அமைப்பு, கட்டுப்பாடு, மேலாண்மை ஆகியவற்றிற்குப் பொறுப்பு வகிக்கிறது :—

| | |
|---|---|
| (1) மத்திய சிறைச் சாலைகள் .. .. | 8 |
| (2) மகளிர் தனிச் சிறைச்சாலைகள் .. | 2 |
| (3) தனிக் கிளைச் சிறைச்சாலைகள் .. .. | 6 |
| (4) கிளைச் சிறைச்சாலைகள் .. .. | 114 |
| (5) திறந்த வெளிச் சிறைச்சாலைகள் .. | 1 |
| (6) சேலம் மத்திய சிறைச்சாலையுடன் இணைந்த பண்ணைச் சிறைச்சாலை | 1 |
| (7) இளைஞர் சீர்திருத்தப் பள்ளி. .. .. | 1 |

நன்னடத்தைப் பிரிவு சிறைத் துறையின் நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. அரசினர் மறுவாழ்வு இல்லங்களும், மேல்பாக்கத்தில் உள்ள அரசினர் ஏதிலார் காப்பு இல்லமும் (Government Care Camp) துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

(ii) சிறைத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவர் ஆவார். அவருக்கு உதவியாக சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்கள்நால்வர் உள்ளனர். முறையே, சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களில் இவர்களது சரக அலுவலகங்கள் அமைந்து உள்ளன. சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் சரக எல்லைக்குள் வருகின்ற மத்திய சிறைச்சாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மீது அதிகார வரம்பை பெற்று இருப்பார்கள். மத்திய சிறைச்சாலை ஒவ்வொன்றும் ஒரு சிறைக் கண்காணிப்பாளர் தலைமையில் இயங்குகின்றது. அவரது கட்டுப்பாட்டு அதிகாரத்தின் கீழ் பல நிருவாக, மருத்துவ, தொழில் நுட்ப அலுவலர்களும், பணியாளர்களும் மற்றும் சார்நிலை அமைச்சுப் பணியாளர்களும் பணி புரிகின்றனர். நன்னடத்தைப் பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் தலைமையில் இயங்குகிறது. மறுவாழ்வு இல்லங்களும், மேல்பாக்கத்தில்



உள்ள அரசினர் ஏதிலார் இல்லமும் (Government Care Camp) தலைமைக் கண்காணிப்பாளர் ஒருவரது கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. இந்த இரண்டு தலைமைக் கண்காணிப்பாளர்களும் சிறைத் துறைத் தலைவரின் பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் பணி புரிகின்றனர்.

(iii) இத்துறையின் நிருவாக அமைப்பு ஏற்பாட்டினை காட்டுகின்ற அமைப்பு வரைபடம் ஒன்று இணைப்பு I—இல் கொடுக்கப்பட்டுள்ளது.

(iv) இத்துறையின் பணியாளர் தொகுதியில் பல்வேறு வகைப்பட்ட 3,846 அலுவலர்களும், பணியாளர்களும் உள்ளனர்.

## III. வரவு-செலவுத் திட்ட விபரங்கள் :

இத்துறையின் 1988–89 ஆம் ஆண்டிலிருந்து வரவு-செலவு விபரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| | செலவு. | வரவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | |
| 1988–89 .. .. .. .. | 15,32,91 | 4,52,53 |
| 1989–90 .. .. .. .. | 16,54,46 | 3,58,12 |
| 1990–91 .. .. .. .. | 19,89,69 | 2,66,72 |
| 1991–92 (திருத்திய நிதி ஒதுக்கீடு) .. | 20,78,66 | 74,35 |
| 1992–93 (வரவு-செலவு திட்டம்) .. | 21,77,87 | 74,35. |

## IV. சிறைகளின் வகைப்பாடும் மற்றும் சிறைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனங்களும் :

பொதுவாக ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும், ஒரு திங்களுக்குக் குறைவாகத் தண்டனை பெற்றவர்களும், கிளைச் சிறையில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த கைதிகள் இளங் குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். ஆண் கைதிகளும், பெண் கைதிகளும் தனித் தனிச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் சேலம் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். வழக்கமாகச் சிறைக் குற்றம் செய்யும் சிறைக் கைதிகள் இதர சிறைக் கைதிகளைக் கெடுத்து விடக் கூடாது என்பதற்காக மற்றவர்களிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். எனவே, இத்தகைய சிறைக் கைதிகள் கீட்டுார்

மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். ஒரு திங்களுக்கும் மேலாகச் சிறைத் தண்டனை பெற்ற பெண் கைதிகள் வேலூர் மற்றும் மதுரையில் உள்ள பெண்கள் தனிச் சிறையில் வைக்கப் படுகின்றனர். இச்சிறைகள் பெண்களுக்கே உரிய சிறைகளாகும் பெண்களே இங்கு அதிகாரிகளாக இருந்து இச்சிறைகளை நிறுவகிக்கின்றனர். இளஞ் சிறைக் கைதிகளைக் காவலில் வைத்திருப்பதற்காக புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி இயங்குகிறது. மன நோய்வாய்ப்பட்ட குற்றவாளிகள் சென்னை அரசினர் மன நலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழு நோய் கைதிகளுக்காக தனிச் சிறைக் கூடங்கள் வேலூர் மத்திய சிறையில் உள்ளன. கிளைச் சிறைகள் மற்றும் மத்திய சிறைகளில் மொத்தம் 18,228 சிறை வாசிகளை அனுமதிக்க இடவசதி உள்ளது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் 4,250 பேர்களை (பெரியவர்கள் 4,000, சிறுவர்கள் 250) அனுமதிக்க இடவசதி உள்ளது. மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமில் 950 பேர்களை (ஆண்கள் 770, பெண்கள் 180) அனுமதிக்க இடவசதி உள்ளது. தற்போது பதிவு செய்யாத இலங்கை அகதிகள் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டையிலும் மற்றும் 15 கிளைச் சிறைகளிலும் வைக்கப்பட்டு அவர்கள் வருவாய்த் துறையின் பாதுகாப்பில் உள்ளனர். மேலும் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலைச் சதி வழக்கில் கைதானவர்கள் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தனிக் கிளைச் சிறை, செங்கல்பட்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

## V. கைதிகளின் வகைப் பாடும், சிறப்புரிமைகளும் :

சிறைகளில் உள்ள கைதிகளுக்காக 'எ', 'பி' என்ற இரு பிரிவுகள் மட்டுமே உள்ளன. விசாரணை மற்றும் காவல் கைதிகளுக்குச் சிறப்பு வகுப்பு நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. ஒரு கைதியின் சமூக தகுதி, கல்வி, வாழ்க்கைத் தரம், நடத்தை, முன் வரலாறு, சொந்தமாக வைத்துள்ள சொத்து விபரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அக்கைதிக்கு 'எ' வகுப்பு முதலில் நீதிமன்றத்தாலும், பின்னர் அரசாலும் உறுதிப்படுத்தப்படுகிறது. சமூகத் தகுதி, கல்வி, பழக்க வழக்கம், ஆகியவற்றால் உயர்தர வாழ்க்கை முறையில் பழக்கப் பட்டிருக்கும் சிறைக் கைதிகள் 'எ' வகுப்பு பெறத் தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரிகமற்ற முறையில் அல்லது நன்னடத்தையற்ற முறையில் நடந்துகொண்டு குற்றத்தைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட எவருக்கும் 'எ' வகுப்பு அளிக்கத் தகுதியில்லை. 'எ' வகுப்பைச் சேராத இதர சிறைக் கைதிகள் 'பி' வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

## VI சிறை வாசிகளுக்கான வசதிகள் :

### (அ) உணவு :

முற்காலங்களில் பொதுவாக சிறை வாழ்க்கை என்பது சிறைவாசிகளுக்கு கேழ்வரகு கஞ்சி போன்ற தரமற்ற உணவு வழங்கப்படுவது மற்றும் கல் உடைப்பது போன்ற கடின வேலை



களில் ஈடுபடுத்தப்படுவது என்ற நிலை இருந்தது. தற்போது, இதுபோன்ற கஷ்டங்கள் இல்லை. தற்போது சிறைவாசிகளுக்கு கீழ்க்கண்டவாறு சுழற்சி முறையில் வாராந்திர அட்டவணையின் கீழ் நல்ல உணவு வழங்கப்படுகிறது :—

காலை— பொங்கல்-சட்னி அல்லது உப்புமா-சட்னி அல்லது கஞ்சி-சட்னி.

மதியம்— சாதம், சாம்பார், பொரியல் மற்றும் மோர் அல்லது புளி சாதம், கூட்டு மற்றும் மோர், அல்லது தேங்காய் சாதம், உருளைக் கிழங்கு மற்றும் மோர் : அல்லது சாதம், கீரை, பொரியல் மற்றும் மோர் அல்லது சாதம், சாம்பார், பொரியல்.

மாலை— வேர்க்கடலை சுண்டல்.

இரவு— சாதம், சாம்பார்.

'எ' வகுப்பு சிறைக் கைதிகளுக்கு கொடுக்கப்படும் பல்வேறு வகை உணவின் விபரமும் அவற்றின் ஒரு நாள் செலவும் வருமாறு:—

| | நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு. ரூ. பை. |
|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக் கைதி ஒருவருக்கு. | 20.90 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக் கைதி ஒருவருக்கு. .. | 20.00 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக் கைதி ஒருவருக்கு. .. | 20.20 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக் கைதி ஒருவருக்கு. .. | 17.35 |

'பி' வகுப்பு சிறைக் கைதிகள், சாதாரண காவலில் வைக்கப்பட்டவர்கள், விசாரணையிலுள்ள சிறைக் கைதிகள் ஆகியோருக்கு திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு வகைகள் வழங்குவதற்கான செலவு வருமாறு:—

| | அரிசி உணவு | கோதுமை உணவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை |
| வேலை செய்வோர் மற்றும் வேலை செய்யாதோர். | 10.95 | 11.00 |

பாலூட்டும் பெண் சிறைவாசிகளுக்கு சிறப்புஉணவாக 1/2 லிட்டர் பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுடன் தங்கும் ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின்படி, க்ளாஸ்கோ/அமுல் போன்ற குழந்தை உணவு கள் வழங்கப்படுகின்றன.

'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்தச் செலவில் பழங்களையும், பிஸ்கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவு பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புச் சிறைச் கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர், கைதி களுக்கு மருத்துவக் காரணங்களுக்காக பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய் மற்றும் பழங்கள் ஆகியவற்றைக்கொடுக்க அனுமதி வழங்கலாம்.

பொங்கல், சுதந்திர தினம், ஆகிய நாட்களில் சிறைக் கைதிகள்ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில்சிறப்புணவு வழங்கப்படுகிறது.

(இ) உடையும் படுக்கையும் :

'ஏ' வகுப்பு சிறைக்கைதிகள் சொந்த படுக்கையை புயன் படுத்தவும், வேலை நேரத்தை தவிர மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனும்திக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தில் அவர்கள் சிறைச்சாலை உடையில் இருக்க வேண்டும். 'ஏ'வகுப்புச் சிறைக் கைதிகள் அவர்களின் உறவினர்களைக் காணும்போது தங்கள்சொந்த உடைகளை அணியலாம். ஆனால், 'பி' வகுப்புச் சிறைக் கைதிகள் எல்லா நேரங்களிலும் சிறைச் சாலை உடைகளையே அணிய வேண்டும். பெண் சிறைவாசி களுக்கு மூன்று ஜோடி உடைகளும், இரண்டு டவல் மற்றும் மூன்று உள்ளாடைகள் (பாவாடை, சோளி, பிரா) வ்ழங்கப்படு கிறது. ஆயுள் தண்டனை பெண் சிறைவாசிகளுக்கு அரக்கு நிற சேலையும், மற்ற பெண் சிறைவாசிகளுக்கு நீலநிற சேலையும் வழங்கப்படுகிறது.

(உ) இதர வசதிகள்:

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக சிறைக் கைதி ஒவ் வொருவருக்கும் திங்களுக்கொரு முறை 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்குச் சீகைக்காய்த்தூளும் சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்திய சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைக் கைதி களுக்குக் கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை உடைய அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்கு தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்,



'ஏ' வகுப்புச் சிறைக் கைதிகள், மரச் சாமான்கள், கொசு வலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும், அருந்து வதற்கும், தேவைப்படும் அவர்களது சொந்த பாத்திரங்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற வசதிகளை பயன்படுத்தவும் அனுமதிக்கப் படுகிறார்கள்- தண்டனைச் சிறைக் கைதிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்தும் அவர்கள் அனுபவித்துள்ள தண்டணைக் காலத்தைக் கணக்கிட்டும், இரவு காவல்காரர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் காவலர்கள் என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர். சிறைக் கைதிகளின் தேவையை நிறைவு செய்வதற் காக அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக் கோட்டையில் உள்ள பார்ஸ்டல் பள்ளியிலும் முடி வெட்டுபவர்கள் உள்ளனர். அரசு தற்போது 'பி' பிரிவு வகுப்பு சிறைவாசிகள் தங்களது துணிகளை சிறையில் உள்ள சலவையகத்தில் அவர்களது செலவில் சலவை செய்து கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

(எ) நேர் காணலும், கடிதங்களும் :

'ஏ' வகுப்பு சிறைச் கைதிகள் வாரத்திற்கு ஒரு முறை கடிதம் எழுதுவதற்கும் ,பெறுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில், மூவருடன் அரை மணி நேரம் கலந்துரை யாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைக் கைதி கள் மாதத்திற்கு நான்கு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவ தற்கும், மேலும் இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப் படுகிறார்கள்.

(ஐ) செய்தித் தாள்களும், குறித்தகால வெளியீடுகளும்:

அரசுச் செலவில் 'பி' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு கீழ்க்கண்ட நாளிதழ்கள் 40 சிறைவாசிகளுக்கு ஒன்று என்ற வீதம் வழங்கப் படுகிறது.

1. தினமணி
2. தினத்தந்தி
3. தினமலர்
4. இந்து
5. நமது எம்.ஜி.ஆர்.

ஒவ்வொரு மத்திய சிறைக்கும் இரண்டு இந்து நாளிதழ்கள் வழங்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட கால முறை பத்திரிக் கைகள் 100 பேருக்கு ஒன்று என்ற வீதத்தில் வழங்கப்படுகிறது.

ஏ' வகுப்புச் சிறைக் கைதிகள் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த செய்தித் தாள்களை வாங்கிக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புச் சிறைக் கைதி களும் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிக் கைகளை வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். சிறைக் கைதிகளின் பயனுக்காக நல்ல தரமான புத்தகங்கள்

சிறை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் உள்ளூர், நூலக ஆணைக் குழுவிடமிருந்தும், புத்தகங்கள் பெறப்பட்டு, சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறைக் கண்காணிப்பாளர்கள் தேவையெனக் கருதினால் மாவட்ட கல்வி அதிகாரி மற்றும் அவர்களது உதவியாளர்களைக் கலந்து ஆலோசித்துத் தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியலிலுள்ள புத்தகங்களை வாங்குவதற்கு இயலும் வகைகளில் அப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

## (ஒ) சிறைவாசிகளுக்கான பொழுதுபோக்கு வசதிகள் :

ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் சிறை விடுமுறை நாட்களில் மத்திய சிறைகளிலுள்ள, எல்லா சிறைக் கைதிகளும், கைப்பந்து கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும், வேலூரிலுள்ள பெண்கள் தனிச் சிறையில் பெண் சிறைக் கைதிகள் வளை பந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியான முறை, அனைத்து மத்திய சிறைச் சாலைகளிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், மகரிஷி நிறுவனம் மூலம் விரும்பும் சிறைக் கைதிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள மத்திய சிறைக் கைதிகளுக்கு, சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்த அரசு அனுமதித்துள்ளது. தற்போது, அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறை, வேலூர், மதுரை மற்றும் திறந்த வெளிச் சிறை சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் பொது மக்கள் சேவை செய்பவர்களால் தொலைக் காட்சிப் பெட்டி சிறைவாசிகளின் உபயோகத்திற்காக வழங்கப்பட்டுள்ளது..

## VII. சிறைக் கைதிகளுக்கான செய் தொழிலும், சிறைகளில் தொழிற்சாலைகளும் :

கடுங்காவல் தண்டனை பெற்ற சிறைக் கைதிகள் மட்டும் முன்பு சிறையில் பலவித வேலைகளில் அமர்த்தப்பட்டார்கள். தற்போது விருப்பம் உள்ள விசாரணை மற்றும் காவல் கைதிகளும் சிறைகளில் வேலை செய்யவும், ஊதியம் பெறவும் அனுமதிக்கப்படுகின்றனர். சிறைக் கைதிகள் விடுதலை அடைந்த பின்பு அவர்களுக்குப் புதுவாழ்வு கிடைக்க வகை செய்வதே அதன் நோக்கமாகும். எனவே பயனில்லா வேலை மற்றும் உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறை வேலை, கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின் படி சிறைக் கைதிகளுக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. சிறைக் கைதிகள் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோல் பொருட்கள் செய்யும்



பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல், மற்றும் பினாயில் செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் நவீன வேளாண்மை முறைகள், பால் பண்ணை ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவு மற்றும் சாயப் பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது. இந்த சிறை தொழிற் பிரிவுகளில் சுமார் 5,00,000 சிறைவாசிகள் வருடந்தோறும் ஈடுபடுத்தப்படுகின்றனர். அரசு தற்போது இத்துறையை ''பணித்துறை'' என அறிவித்து ஆணை வெளியிட்டு உள்ளது. இதனால் இத்துறையில் செய்யப்பட்ட பொருட்களை வாங்கும் பிற அரசு துறைகள் இந்த பொருட்களுக்கான மதிப்பினை செலுத்த தேவையில்லை. இந்த ஏற்பாடு சிறைத் துறையின் உற்பத்திக்கான கூடுதல் வழங்குதல் ஆணைகள் பிற அரசு துறைகளிடமிருந்து பெறவும் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் உதவும். இந்த சிறை தொழிற் பிரிவுகளின் சராசரி வருடாந்திர உற்பத்தி ரூ. 3.50 கோடி ஆகும்.

## VIII. சிறைவாசிகளுக்கு எளிய சிறு தொழில்கள் கற்றுக் கொடுத்தல் :

சிறைவாசிகளைச் சீர்திருத்தி, மறுவாழ்வு அமைத்து கொடுப்பது என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் தற்போது சிறைவாசிகள் அரசின் கீழ் உள்ள அடிமைகளாகக் கருதப்படாமல், அரசின் காப்பில் உள்ள குடிமக்களாகக் கருதப்படுகின்றனர். சிறைவாசிகள் சிறையிலிருந்து விடுதலையடைந்த பின்பு சமூகத்தில் சேர்ந்து வாழவும் மற்றும் அவர்கள் குற்றவாளிகள் / முன்னாள் சிறைவாசிகள் என்ற களங்கமுடைய நிலையினை மாற்றியமைக்க வேண்டும் என்பதே தலையாய கடமையாகும். உண்மையில் ஒரு சிறைவாசி, சிறையினுள் அடைக்கப்படும் பொழுது இருப்பதை விட சிறையை விட்டு விடுதலை ஆகும் பொழுதுதான் மிகவும் வருத்தப்படும் சூழ்நிலையில் உள்ளனர். அவர்களுக்கு ஏற்படும் இந்த மனநிலையை மாற்றும் கருத்துடன், சிறைகளில் பல்வேறு தொழிற் பிரிவுகளும் மற்றும் சிறு தொழில்களும் இயங்கி வருகின்றன. இந்த பிரிவுகளில் பணி புரியும் சிறைவாசிகள், இங்கு அளிக்கப்படும் பயிற்சியினைக் கொண்டு, சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர் தங்களது வாழ்க்கையினை நடத்திச் செல்ல இந்த பயிற்சி பெற்ற தொழில்கள் மூலம் குறைந்த முதலீட்டில் சொந்தமாக தொழில் நடத்தி வருவாய் ஈட்ட இயலும்.

தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்த பள்ளியிலும் உள்ள சிறைக் கைதிகளுக்குப் பயிற்சி அளிப்

பதற்காக அரசு கீழ்க்காணும் எளிய சில தொழில்களை அவற்றிற்கெதிரே குறிப்பிட்ட சிறைகளில் துவக்கியுள்ளது.

| | |
|---|---|
| 1. செங்கல் கட்டுமானத் தொழில் | மத்திய சிறை, வேலூர். |
| 2. குழாய்களை பழுது பார்த்து : இணைத்தல். | மத்திய சிறை, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, பாளையங்கோட்டை. |
| 3. எளிய மின் இணைப்பு பயிற்சி .. | மத்திய சிறை, சென்னை, கடலூர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. |
| 4. வண்ணம் பூசுதல் (பெயர் பலகை எழுதுதல் உள்பட). | மத்திய சிறை, கோவை. |

வேலூர் பெண்கள் தனிச் சிறையிலுள்ள இருபது பெண் கைதிகளுக்கு ஒவ்வொராண்டும், வேலூர் நேரு யுவக் கேந்திரா பயிற்சி ஆசிரியர்கள் மூலம் தையல் தொழிலில் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்றும், அரசு கட்டளையிட்டுள்ளது. மேலும் அத்தொழிலில் தேர்ச்சிப் பெற்றவர்கள் அரசினர் தொழில் நுட்ப நிறுவனத் தேர்வுக்கு அனுப்பப்படுவார்கள். ஒரு வருடம் சுமார் 1,000 சிறைவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

## IX சிறைவாசிகளுக்கான ஊதியம் ஈட்டும் திட்டம் :

அனைத்து மத்திய சிறைகளிலும், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச்சிறை, வேலூரிலும் சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் தற்போது செயலிலுள்ளது. சிறைவாசிகள் தங்கள் தொழில் திறமைக்கேற்ப இத்திட்டத்தின் கீழ் ஊதியம் ஈட்டலாம். இத் திட்டத்தின் கீழ் சிறைவாசி ஒருவருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படக் கூடிய ஊதிய வீதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் .. | 2.00 |
| 2. | ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | 1.00 |
| 3. | தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் .. | 0.50 |

## மருத்துவம், துப்புரவு வசதிகள் :

ஒவ்வொரு மத்திய சிறையிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மருத்துவமனை உள்ளது. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும்



ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவரும், ஒரு செவிலியரும் ஒன்று அல்லது இரண்டு மருந்தாக்குநரும், இரண்டு அல்லது மூன்று செவிலியரும் உதவியாளர்களும் உள்ளனர். கண் மருத்துவம் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசு செலவில் தேவைப்படுகின்ற கைதிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும் சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவரால் கைதிகளுக்குப் பல்நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. வேலூர் மத்திய சிறையில் தொழுநோய் கைதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக இயற்கை முறை மருத்துவர் அமர்த்தப்பட்டுள்ளார். மனநிலை சரியில்லாத கைதிகள், மனநோய்க் குற்றவாளிகள், ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவமனை உள்நோய் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் சென்னை அரசு மனநல காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அரசு தற்போது அனைத்து மத்திய சிறைகளிலும் நோயுள்ள சிறைவாசிகளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல ஒரு நோயாளி ஊர்தி வழங்கி உள்ளது.

அனைத்து மத்திய சிறை, பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச்சிறை, வேலூரில் இரத்த பரிசோதனை நிலையம் அமைக்கவும் மற்றும் இ. சி. ஜி. சாதனம் வாங்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், தனிக் கிளைச் சிறைகளிலும் மற்றும் அனைத்து கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## XI சிறைவாசிகளுக்கு கல்வி வசதி :

ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற்பிக்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் புதிய முறையில் கைதிகளுக்கு கல்வி புகட்டப்படுகிறது. கல்வி பயிற்சிக்கான பொருட்கள் மாநில திறமையளிக்கும் நிறுவனம் மூலமாக சிறைகளுக்கு வழங்கப்படும். சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்து சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். அஞ்சல் வழிக் கல்வி மூலம் முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வும், பி.ஜி.எல்., பி.எல்., பிஎட், எம்எட், போன்ற கல்வித் தேர்வுகளையும் எழுத சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகிறார்கள் இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வு கட்டணம் குறித்த செலவு, இதர இடை நிகழ் செலவு ஆகிய செலவுகள்

முழுவதையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. சிறைவாசிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால், மறு முறையும் அரசு செலவில் தேர்வு எழுதலாம் இது போன்ற மொத்தம் மூன்று தடவை தேர்வுக்கு செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். சிறைவாசிகள் தேர்வு எழுதச் செல்லும் போது அவர்கள் சங்கடப்படாமல் இருக்க சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதே போன்று அவர்களைக் காவல் காத்து அழைத்துச் செல்லும் வழித்துணைக் காவலர்களும் சாதாரண உடை அணிந்து செல்கின்றனர், தற்போது 42 சிறைவாசிகள் உயர் கல்வி கற்கின்றனர்.

நீதி அல்லது மதம் சம்பந்தமாக போதனைகள் என்ற பெயரால் மத மாற்றம் செய்தல் கூடாது என்ற நிபந்தனையுடன் சிறையில் மதம், நீதி நெறி வகையான போதனைகளும் விருப்பப்படும் கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

## XII. திறந்த வெளிச் சிறைகள் :

இம்மாநிலத்திலுள்ள ஒரே ஒரு திறந்த வெளிச் சிறை தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது. மேலும் சேலம் மத்திய சிறையுடன் பண்ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த திறந்த வெளிச் சிறையின் நோக்கங்கள் பின்வருமாறு :—

(i) சிறைகளில் நெருக்கடியைத் தவிர்த்தல்;

(ii) சிறைக் கைதிகளின் எதிர்காலப் புது வாழ்விற்காக அவர்களுக்குச் சரியான முறையில் உழவுத் தொழிலில் பயிற்சி அளித்தல்;

(iii) நன்முறையில் நடந்து கொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கையின் பேரில் அவர்களுக்கு ஓரளவு உரிமை அளித்தல்; மற்றும்

(iv) கைதிகள் குறைந்த அளவு காவலிலுள்ள சிறைகளில் அடைத்து வைக்கப்பட வேண்டும்; சிறைகளில் அவர்களை நல்ல முறையில் நடத்த வேண்டும்; அவர்கள் மீதான கட்டுப்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பன போன்ற கோட்பாடுகளைச் செயலுக்குக் கொண்டு வருதல்.

சிங்காநல்லூரிலுள்ள திறந்த வெளிச்சிறையில் சிறைக் கைதிகளுக்கு நவீன வேளாண்மை முறைகளில் பயிற்சியளிப்பதற்காக, உதவி வேளாண்மை அலுவலர் ஒருவர் உள்ளார். மற்றுமொரு திறந்த வெளிச்சிறைச்சாலை தஞ்சாவூரிலுள்ள திருமலைசமுத்திரத்தில் அமைப்பதற்கான செயற்குறிப்பு நீதிமன்ற வழக்கு காரணமாக நிலுவையில் உள்ளது.



## XIII. இளைஞர் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை.

(i) 16 வயதிலிருந்து 23 வயது வரை உள்ள இளங்குற்றவாளிகள் புதுக்கோட்டை இளைஞர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாணவர்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்களில் அல்லது வாழ்க்கைத் தொழில் கல்வியில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1. தச்சு வேலை ;
2. கருமார் வேலை ;
3. புத்தகம் கட்டுதல் ;
4. தையல் வேலை ;
5. வேளாண்மை ;
6. கட்டுமான் வேலை ;
7. சலவை தொழில் ;
8. பாண்டு இசைக் கருவி பயிற்சி, மற்றும்
9. சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

(ii) அவர்கள் அங்கிருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னர் வேலை தேடிக் கொள்ள இயலும் பொருட்டு அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இங்குள்ள துயிற்கூடம் ஒன்று இளங்குற்றவாளிகளுக்கான இடமாகமாற்றப்பட்டு அங்கு 16—23 வயது தொகுதியைச் சேர்ந்த இளங்குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர்.

(iii) அவர்கள் 23 வயது வரை பள்ளியில் வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை இளைஞர் சீர்திருத்தப் பள்ளியிலுள்ள துயிற்கூடம் 1894-ஆம் ஆண்டு சிறைச்சாலை சட்டத்தின் கீழ் ' சிறையாக ' அறிவிக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தப் பள்ளியிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களின் புது வாழ்வுக்காக, இயந்திரங்கள், பசு அல்லது எருமை வாங்க நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வகையாக அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அவர்கள் விரும்பினால் எளிய தவணையிலும் வசூலிக்கப்படுகிறது.

(iv) தமிழ்நாடு சிறைச் சீர்திருத்த கமிஷன் பரிந்துரையின்படி இல்லவாசிகள் பணியாளர் ஒருவரின் பொறுப்பில் 15 நாட்களுக்கு திறந்த வெளியில் ஒரு கூடாரத்தின் கீழ்த் தங்கியிருக்க இளைஞர் சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த 25 பேர்களுக்கு ஆண்டு முகாமிற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. தற்போது புதுக்கோட்டை இளைஞர் சீர்திருத்தப் பள்ளியில் இலங்கை அகதிகள் வைக்கப்பட்டுள்ளனர். இதனால் பார்ஸ்டல் பள்ளி இல்லவாசிகள் தற்போது திருச்சி மத்திய சிறையிலுள்ள தனி வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளனர்,

## XIV. சிறைப் பார்வையாளர்கள் :

மாஜிஸ்ட்ரேட்டுகளையும், நீதிபதிகளையும் மற்றும் மருத்துவம், நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப் பணிகள், ஏனைய துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசு சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள், முக்கியமாக சமூகப் பணியாளர்கள், உளநோய் மருத்துவ வல்லுநர்கள், உளநூல் வல்லுநர்கள் மற்றும் சமூக அறிவிலாளர்கள் ஆகியோர் ஒவ்வொரு சிறையிலும் அலுவல் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நடத்தும் விதம், சிறைகளை நிருவகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியன சிறைகளில்உரியவாறு செயற்படுத்தப்படுகின்றனவா என்றும், சிறைகளில் பல பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டு அவர்களில் எவரேனும் அவர்களிடம் புகார் செய்தால் அதனை சரி செய்யவும் செய்கின்றனர். சிறைப் பார்வையாளரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

## XV. சிறைவாசிகளை விடுப்பில் விடுவித்தல் :

(i) மூன்று ஆண்டு ஆரம்ப சிறைத் தண்டனை அனுபவித்துள்ளவரும், இதுவரையில் விடுப்பில் செல்லாதவருமான சிறைவாசிகளுக்கு முதலில் ஒரு மாத சாதாரண விடுப்பு சிறைத்துறைத் துணைத் தலைவ்ரால் அளிக்கப்படுகிறது. தனி நேர்வுகளில் இந்த விதியினை தளர்த்தி காப்பு விடுப்பில் செல்ல அரசு அனுமதி அளிக்கிறது. இன்னும் 3 ஆண்டுக் காலம் மட்டும் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய கைதிகளுக்கு அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின், வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

(ii) இவ்விடுப்புடன் சிறைவாசிகள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/கணவன்/மனைவி/சொந்த மகன்/சொந்த சகோதரி/சொந்த சகோதரன் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து போனாலோ அவர்களைச் சென்று பார்க்கவும், சிறைவாசிகள் அல்லது அவர்களின் நெருங்கிய உறவினர்களான சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரர்/சொந்த சகோதரி ஆகியோரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும் சிறைக் கண்காணிப்பாளர்களால் அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு ஓர் ஆண்டிற்கு 15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 4 முறைகளில் சிறைவாசியின் வசதிக்கேற்ப (6+3+3+3) என அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள் சிறைவாசியின் நடத்தை நன்முறையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது.



## XVI தண்டனை குறைப்பு :

(i) சிறைவாசிகளின் நன்னடத்தை, வேலை செய்யும் ஆர்வம், ஆகியவற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கவும் பலவிதமான தண்டனை குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைவாசிகள் நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், சாதரண வகை தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. சிறைப் பணிகளுக்காக ஞாயிறு அன்றும், ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் சமையற்காரர்களாகவும், துப்புரவு செய்வோராகவும், பணிபுரிய வேண்டிய கைதிகளுக்கு இவ்விதிகளின்கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக் குறைப்பும் வழங்கப்படுகிறது. தண்டனைக் கைதியாக இருந்து பின்னர் கைதிக் காவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளில் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டை பேணிவரும் சிறைவாசிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும், சிறந்த நற்பணிக்காக சிறப்பு தண்டனைக் குறைப்பாக சிறைத்துறைத் தலைவரால் ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் சிறைவாசிகளுக்கு உயரளவு ஓராண்டுக்கால சிறப்புத் தண்டனைக் குறைப்பும், இரத்த தானம் செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரு சமயத்தில் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர ஆயுள் தண்டனை அடைந்த, மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனையடைந்த சிறைவாசிகளை முன்னதாக விடுதலை செய்வது குறித்து ஒவ்வொரு சிறையிலுமுள்ள அறிவுரைக் கழகம் பரிசீலனை செய்கிறது.

(ii) அந்த சிறைவாசியின் கடந்த கால நன்னடத்தை பற்றிய குறிப்பையும், உள்ளூர் அதிகாரிகளின் அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர், நன்னடத்தை அலுவலர், சிறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து, அச்சிறைவாசியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறை தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க, அரசின் பரிசீலனைக்காக இக்குழு தனது பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

(iii) சென்னை உயர்நீதிமன்றம் டபிள்யூ.பி. எண். 3430/82, நாள் 2–11–1983ல் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் ஆயுள் தண்டனையடைந்த சிறைவாசிகளை முன்விடுதலை செய்வது குறித்து பரிசீலனை செய்வதற்காக பின்பற்றத் தக்கதான சில வழிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது. இந்த ஆணையின்படி, ஒரு ஆயுள் தண்டனை அடைந்த சிறைவாசி 10½ ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க வேண்டும். 10½ ஆண்டுகள் தண்டனை

அனுபவித்த ஆயுள் தண்டனையடைந்த சிறைவாசிகளின் நேர்வு மட்டுமே முன் விடுதலைக்காக அறிவுரைக் கழகத்தால் பரிசீலனை செய்யப்படுகின்றன. குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 433-ஏ பிரிவின்படி ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகள் (அதாவது 18–12–1978 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ தண்டனையடைந்தவர்கள்) 14 ஆண்டு காலம் தண்டனை அனுபவித்த பின்பே அறிவுரைக் கழகத்தால் முன் விடுதலைக்காக பரிசீலனை செய்யப்படுகிறார்கள். இவ்வகையான நேர்வுகள் 18–12–1992க்குப் பின்னர் தான் பரிசீலனைக்கு வரும்.

(iv) 18–12–1978க்கு முன் ஆயுள் தண்டனை பெற்ற வியாதியுள்ள சிறைவாசிகளை மருத்துவ காரணங்களை முன்னிட்டு முன் விடுதலை செய்வது தொடர்பாக சிறை மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் மாநில சிறைச்சாலை நடைமுறை நூலில் உள்ள விதிகளின்படி பரிசீலனை செய்யப்படுகிறது.

(v) புதுக்கோட்டை, சீர்திருத்தப் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்தவரையில் தண்டனைக் காலம் முடியுமுன் விடுதலை செய்யும் முறை (விடுதலை அல்லது நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல்) செயலில் உள்ளது. ஆனால் இது குறித்து பின்பற்றப்படும் நடைமுறை வேறாகும். 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விவரங்களையும், உரிய விசாரணைகளைச் செய்து, அவற்றின் மூலம் பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில், அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் வெளியூர்களாயிருந்தால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள நன்னடத்தை அலுவலர்களுக்கும், சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளருக்கும், சீர்திருத்தப் பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பி வைக்க வேண்டும். நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள இளங்குற்றவாளிகள் பற்றி பரிசீலித்து, பின்னர் சிறைத்துறைத் தலைவர் ஆணை பிறப்பிக்கிறார்.

(vi) அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு ஆணை எண் 1762, உள்துறை (சிறை-6), நாள், 20—7—1987ல் கீழ்க்காணும் வகையைச் சார்ந்த சிறைவாசிகளின் நேர்வுகள் முன் விடுதலைக்காக பரிசீலிக்கப்படக் கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது.

(அ) கற்பழிப்பு, பொய் கையெழுத்து, கொள்ளை ஆகிய குற்றங்களுக்கான தண்டனை பெற்ற சிறைவாசிகள், பயங்கரவாத குற்றவாளிகள் மற்றும் மாநிலத்திற்கெதிரான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள், மற்றும் இந்திய



தண்டனை சட்டத்தின் பிரிவுகள் 224, 376, 396 முதல் 400 வரை, 402, 467, 471, 472, 474, 489-ஏ, 489-பி மற்றும் 489-டி ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனை அடைந்த சிறைவாசிகள்.

(இ) பொருளாதாரக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள், பொருட்களை பதுக்கி வைத்தல், கடத்தல் மற்றும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதற்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள்.

(உ) லஞ்ச ஒழிப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற சிறைவாசிகள், பெண்கள் மகளிர் விபச்சாரத் தடைச் சட்டம், மருத்துவச் சட்டம் மற்றும் உணவுக் கலப்படத் தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள்.

## XVII. 1992 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சிறப்பு தண்டனைக் குறைப்பு :

(i) அரசு, 18—12—78-க்கு முன்னர், ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகளில் கொள்ளை, ஆதாயத்திற்காகக் கொலை, கற்பழிப்பு முதலிய குற்றங்களில் ஈடுபட்டு தண்டனை பெற்றவர்கள் தவிர, மற்ற அனைவரையும் நல்லெண்ணம் மற்றும் மனித நேயத்தின் பேரில் விடுதலை செய்ய ஆணையிட்டுள்ளது. இதேபோன்று, 18—12—78-க்கு பிறகு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு, பன்னிரண்டு ஆண்டுகள் சிறைவாசம் கழித்த அனைத்து சிறைவாசிகளையும் ஒரு சில நிபந்தனைகளின் பேரில் விடுதலை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. இதனைத் தவிர்த்து, 18–12–78க்கு பிறகு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு, 10 வருடங்கள் சிறைவாசம் கழித்த அனைத்து பெண் சிறைவாசிகளையும் விடுதலை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

(ii) கொலை, கொள்ளை மற்றும் கள்ளக்கடத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் தவிர அனைவருக்கும் சிறப்பு தண்டனைக் குறைப்பு வழங்க முடிவு செய்யப்பட்டு, பெண் சிறைவாசிகளைப் பொறுத்தமட்டில் முழு தண்டனை குறைப்பும், ஆண் சிறைவாசிகளைப் பொறுத்தமட்டில் 6 மாதங்கள் தண்டனை குறைப்பும் வழங்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு தண்டனைக் குறைப்பு 24-2-92 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது

(iii) இந்த சிறப்பு தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, 209 ஆயுள் தண்டனை சிறைவாசிகளும், ஆயுள் தண்டனை பெற்றவர் அல்லாத 33 பெண் சிறைவாசிகளும் மற்றும் குறைந்த கால தண்டனை பெற்ற 713 சிறைவாசிகளும் பயனடைந்துள்ளனர்.

**XVIII. சிறைவாசிகளின் நலன் :**

மத்திய சிறை ஒவ்வொன்றிலும், ஒரு பதவி விதம் எட்டு மத்திய சிறைகளில் எட்டு பதவிகளும், வேலூரில் பெண்கள் தனிச் சிறையில் ஒரு பதவியும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியில் ஒரு பதவியும் ஆக மொத்தம் பத்து நல அலுவலர் பதவிகள் உள்ளன. இந்த நல அலுவலர் சிறையின் விதிமுறைக் கேற்ப சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும் அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்தும் வருகிறார். மேலும் தனிப்பட்ட முறையில் மேல்முறையீடு செய்ய வசதி இல்லாத சிறைவாசி களுக்கு மேல் முறையீடு செய்யவும் உதவி செய்கிறார்.

பெண் சிறைவாசிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால், அக்குழந்தைகள் தாயோடு, சிறையில் வைக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக ஒரு குழந்தைகள் காப்பகமும், வேலூர் மாநில மகளிர் சிறையில் செயல்பட்டு வருகிறது. அவர்களை சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன்வராவிட்டால், அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன் தங்கள் தாயாருடன் தங்கியிருக்க தகுதியற்றவர்களாவர் அப்பொழுது அவர்கள் சென்னை மாநகரைச் சேர்ந்தவர்களாயிருந்தால், சென்னையிலுள்ள பால மந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர பாகங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால் மதுரை, காந்தி கிராமத்திலுள்ள குழந்தை இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர். சிவானந்தா அனாதை இல்லம் மற்றும் தாம்பரத்திலுள்ள எஸ்.ஓ.எஸ் அனாதை இல்லம் ஆகிய இல்லங்களில் சிறைவாசிகளின் குழந்தைகளை கவனித்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மத்திய சிறையிலும், சிறைவாசிகளின் பயனுக்காக பண்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த பண்பாட்டுக்குழு சிறைவாசிகளின் நன்மைக்காக சிறைக்குள் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை திரைப்படம் காட்டுகிறது. மேலும் வெளியில் உள்ளவர்களைக் கொண்டு பலவகை கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்கிறது. அனைத்து மத்திய சிறைகளில் ஒரு 35 எம்.எம். திரைப்படம் காட்டும் கருவி உள்ளது.

மத்திய சிறைகள் அனைத்திலும், சிறைவாசிகளுக்காக சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைவாசிகளும், பணிக்கொடை ஈட்டும் சிறைவாசிகளும் இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இந்திய குடியரசு தலைவரால், கருணை மனு நிராகரிக்கப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் சிறைவாசிகளின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/மனைவி/மகன்/மகள்/சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகிய நெருங்கிய உறவினர்கள்



5 நபர்களுக்கு மேற்படாமல், அச்சிறைவாசி தூக்கிலிடப்படுவதற்கு முன் வந்து பார்த்து திரும்புவதற்கு வசதியாக தமிழ் நாட்டிலுள்ள எவ்விடத்திலிருந்தும், குறைந்த வழித்தடம் மூலம், குறைந்த பட்ச வகுப்பில் புகை வண்டி அல்லது சாலை வழிப்பயண போக்குவரத்து செலவுகளை அனுமதிக்க எல்லா மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி மற்றும் வேலூர் மாநில மகளிர் சிறை ஆகியவற்றின் கண் காணிப்பாளர்களுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது.

**XIX சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவி :**

விசாரணை சிறைவாசிகளுக்கும், தண்டனை அடைந்த சிறைவாசிகளுக்கும், தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனை குழு இலவச சட்ட உதவி அளித்து வருகிறது. சிறைவாசிகளுக்கு சட்ட உதவி அளிப்பதற்காக இக்குழு பணி வழக்குரைஞர்களை அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பி வருகிறது. 1991-ம் ஆண்டு இலவச சட்ட உதவித் கழகம் மூலம் 2,335 சிறைவாசிகள் பயனடைந்துள்ளனர்.

**XX சிறைகளில் புகார் பெட்டிகள் வைத்தல் :**

எல்லா மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மூன்று புகார் பெட்டிகளும் மற்றும் வேலூர் தனி மகளிர்ச் சிறையில் இரண்டு புகார் பெட்டிகளும் சிறைவாசிகள் தங்கள் குறைகளை தெரிவிக்க இயலும் வகையில், புகார் மனுக்களைத் தாக்கல் செய்ய முத்திரையிடப்பட்ட புகார்ப் பெட்டிகள் சிறைவாசிகளுக்கு எளிதில் எட்டும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளுக்கு எழுது பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. புகார்/குறை மனுக்கள் போடப்பட்டுள்ள பெட்டிகள், ஒவ்வொரு மாதத்தின் முதல் பணி நாளில், சிறை அதிகாரிகளால் மாவட்ட செசன்ஸ் நீதிபதிகளின் முன்னிலையில் கொண்டு வரப்படுகின்றன. அவை ஒவ்வொன்றையும் அவர்கள் திறந்து, அம்மனுக்களை ஆய்வு செய்து, சிறை அதிகாரிகள் அல்லது அரசு அல்லது சிறைத்துறைத் தலைவர், நடவடிக்கை எடுக்க வேண்டியவற்றின் பகுதி நகல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவர். சிறைவாசிகள் கொடுக்கும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்காணும் நிறுவனங்களில் முறைகேடு செய்ய இயலாவண்ணம் இரும்பினால் தயாரிக்கப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

**XXI மனிதவள மேம்பாடு :**

**(அ) சிறைக் காவலர்களின் பயிற்சிப் பள்ளி, வேலூர் :**

இப்பயிற்சிப் பள்ளியில் பல்வேறு சிறைகளிலுள்ள 100 இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு உடற்பயிற்சி, ஒழுங்கு, சிறை நிர்வாக கோட்பாடுகள் மற்றும் சீர்திருத்த முறைகளை கடைப்பிடித்தல் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்

கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு 6 திங்களாகும். மேலும், 25 முதல்நிலை சிறைக் காவலர்களுக்கும், 4 முதன்மை தலைமை காவலர்களுக்கும், முறையே 30 மற்றும் 15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பயிற்சிக் காலத்தில் சீர்திருத்த முறைப்படி சிறைவாசிகளை அணுகும் முறை குறித்துப் பயிற்சி அளிக்க முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. தற்போது, வீடியோ புகைப்படக் கருவி வீடியோ மற்றும் வண்ண தொலைக்காட்சிப் பெட்டி இப் பயிற்சி நிலையத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளியினை முன்னேற்றம் செய்ய அரசு தற்போது ரூ. 24.07 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(இ) மண்டல சிறை சீர்திருத்த பயிற்சி நிறுவனம், வேலூர் :

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு) குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கான மண்டல சிறை சீர்திருத்த பயிற்சி நிறுவனம் ஒன்று வேலூரில் 1—10—1979 முதல் செயல்பட்டு வருகிறது. சிறைகள், நன்னடத்தை கண்காணிப்புப் பிரிவு, சான்றளிக்கப் பட்ட பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் சீர்திருத்தப் பணியிலும் அது தொடர்பான பணிகளிலும் ஈடுபட்டிருக்கிற இதுபோன்ற பிற நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள அலுவலர் களுக்கு குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைச் சீர் திருத்தவும், குற்றவாளிகளுக்கு மறு பணி நோக்கப் பயிற்சித் திறன் ஆகியவற்றில் பயிற்சி அளித்து, சமூக தொழில் மறு வாழ்வுக்கு அவர்களைத் தயார் செய்வது பயிற்சிப் பள்ளியின் நோக்கமாகும். மத்திய சிறைகளில் உதவி சிறை அலுவலர் முதற்கொண்டு கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர் வரை யுள்ளவர்களுக்கும், ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள அதற்கு நிகரான பதவித் தர அலுவலர்களுக்கும், இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நலப்பணி, சட்டம், நிறுவன மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரே சமயத்தில் இம்மாநிலத்தைச் சேர்ந்த 12 அலுவலர்களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப் படுகிறது. இதுவரை இம்மாநிலத்தைச் சார்ந்த 224 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இந்நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடரா இனச் செலவுகள் நான்கு தென் மாநிலங்களாலும் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மத்திய அரசு இப் பயிற்சி நிறுவனத்தில் ஆய்வு மற்றும் மேம்பாட்டு பிரிவு அமைக்க சிறைகளை நவீனப்படுத்தும் மத்திய திட்டத்தின் கீழ் ரூ. 68.92 இலட்சம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(உ) நற்பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப் பதக்கம் வழங்குதல் :

நவம்பர் 1985 முதல் தமிழ்நாடு முதலமைச்சர் சிறைத் துறை நற்பணிப் பதக்கம் என்றதொரு பதக்கம் சிறந்த சேவை செய்பவர்களுக்கு வழங்க வழிவகை செய்யப்



பட்டுள்ளன. சிறைக் காவலர்கள், நேர்மையுடனும், விசுவாசத்துடன், கடமையுணர்வுடனும், திறமையுடனும், உயர்தர ஒழுங்குடனும் மற்றும் தியாக மனப்பான்மையுடனும் பணியாற்ற அவர்களை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் தினத்தன்று தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சிறைக் காவலர் களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கங்களைப் பெறும் சிறைக் காவலர்கள் நிலை—I மாதமொன்றுக்கு ரூ. 25 என்ற வீதத்திலும் சிறைக் காவலர்கள் நிலை—II மாதமொன்றுக்கு ரூ. 20 என்ற வீதத்திலும் மாதாந்திரப்படி பெறுவதற்கு தகுதி யானவர்களாவர்.

XXII நன்னடத்தை பிரிவின் நிர்வாக அமைப்பு மற்றும் பணிகள் :

(i) நன்னடத்தை கண்காணிப்பு பிரிவு தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளரின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், சிறைத் துறைத் தலைவரின் ஒருமித்த கட்டுப்பாட்டின் கீழும் இயங்குகிறது. இப்பிரிவில் ஒரு மண்டல நன்னடத்தை அலுவலரைக் கொண்டு நன்னடத்தை ஆராய்ச்சி பிரிவு ஒன்று உள்ளது. இந்த பிரிவானது 1958 ஆம் வருடத்திய குற்றவாளி கள் நன்னடத்தை சட்டத்தினை அமுல்படுத்துவதற்கு பொறுப்பு ஏற்கிறது.

(ii) இந்த பிரிவில் 12 மண்டல நன்னடத்தை அலுவலர் களும் 96 நன்னடத்தை அலுவலர்களும் பணிபுரிகின்றனர். இந்தப் பிரிவு குற்றவாளிகளின் சுற்றுப்புற சூழ்நிலையையும் அவர்கள் நடந்து கொள்ளும் விதம் பற்றியும் பிணைய பத்திரத்தின் பேரில், உரிய காலத்திற்கு முன் கூட்டியே நன்னடத்தை ஜாமீன் அளிப்ப தின் பேரில் விடுதலையான குற்றவாளிகள் பார்ஸ்டல் பள்ளி யிலிருந்தும், சீர்திருத்த பள்ளியிலிருந்தும், ஒழுக்கக் கண்காணிப்பு இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆகியோர் குறித்தும் விசாரிப்பது, கண்காணிப்பது அவர்களைப் பற்றி நீதிமன்றங்களுக்கு தகவல் கொடுப்பது முதலியன நன் னடத்தை அலுவலர்களின் பணியாகும். நன்னடத்தை அலுவலர் களின் பணி மண்டல நன்னடத்தை அலுவலர்களால் ஆய்வு செயல்படுகிறது.

XXIII. விடுதலையடைந்த சிறைவாசிக்கு புதுவாழ்வு அமைத்தல்.

(அ) தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகளின் உதவிச் சங்கம்.

தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம் 1921-ல் அமைக்கப்பட்டது. தற்செயலாகக் குற்றம் புரிபவர்களும், இளங்குற்றவாளிகளும் கைதேர்ந்த குற்றம் புரிகிறவர்வர்களாக மாறுவதை தடுக்கும் நோக்குடன், கைதி

களுக்கு புது வாழ்வு அமைத்துக் கொடுத்தல், அவர்களுக்குத் தேவைப்படும் சகலவித உதவிகள் செய்துக் கொடுத்தல், அவர்களின் நலனுக்காகச் சட்டங்களை இயற்றுதல்ஏற்கெனவே இருக்கும் சட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்தி புதிய சட்டங்களை இயற்றுதல் ஆகியவை இச்சங்கத்தின் நோக்கங்களாகும். விடுதலை செய்யப்பட்ட கைதிகள் சிறு தொழில்களை மேற்கொண்டு நடத்தவும் கருவிகள், தேநீர் கெட்டில், தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், இச்சங்கம் உதவித் தொகை வழங்கி வருகின்றது. மேலும், புகைவண்டி அல்லது பேருந்து கட்டணத்திற்கான உதவித் தொகையையும், தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும், வேலை வாய்ப்பைத் தேடிக் கொள்ளவும், வழிகாட்ட சட்ட உதவி பெறுவதற்கும் முதியோர் உதவிப் பணம் பெறுவதற்கும் உதவித் தொகை அளிப்பதோடு ஆடைகள் மூக்குக் கண்ணாடி முதலியவற்றையும் வழங்குகிறது. அரசால் இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 18,000 உதவி மான்யமாகக் கொடுக்கப் பட்டு வரப்படுகிறது.

(ஆ) சிறையிலிருந்து விடுதலைப் பெற்ற கைதிகளுக்கு நிதியுதவி

சிறையிலிருந்து விடுவிக்கப்படும் கைதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக, சிறைத் துறைக்கு அனுமதிக்கப்படும் நிதியுதவியை தற்போதுள்ள ஒதுக்கிடான ரூ. 8,000 லிருந்து 1992-93 ஆம் ஆண்டு முதற்கொண்டு ரூ. 1 இலட்சமாக அரசு உயர்த்தும்,

## XXIV. சென்னை மாநகரிலும், செங்கல்பட்டு — எம். ஜி. ஆர். மாவட்டத்திலும் உள்ள தண்டனைக் கைதிகளை வைப்பதற்கென ஒரு புதிய சிறையை புழலில் (செங்குன்றம்) கட்டுதல் :

தற்போது சென்னையில் உள்ள மத்திய சிறையினை நகருக்கு வெளியே மாற்றும் பொருட்டு புழல் கிராமத்தில் தற்போது சிறைத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது அரசு முதல் மற்றும் இரண்டாம் கட்ட பணிகளுக்காக இதுவரை ரூ. 320.97 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தப் பணிகள் யாவும் நிறைவுபெற்று விட்டன. தற்போது சிறை நிர்வாகத்தினை நவீனப்படுத்தும் மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 79.48 இலட்சத்திற்கான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. தற்போது ரூ. 294.07 இலட்சம் அளவில் மூன்றாம் கட்ட பணிகளுக்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. தற்போது இந்த சிறையில் இலங்கை தமிழ் அகதிகள் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேறு இடத்திற்கு மாற்றப் பட்ட பின் தற்போதுள்ள மத்திய சிறையில் உள்ள தண்டனைச் சிறைவாசிகள் இவ்வளாகத்திற்கு மாற்றப்படுவர். விசாரணைக் கைதிகள் தற்போது பூங்கா நகரிலுள்ள மத்திய சிறையிலேயே வைக்கப்படுவர்.



## XXV. அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் அறிக்கை :

அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் சில முக்கிய பரிந்துரைகள் பின்வருமாறு.—

(i) சிறைச்சாலைகள் சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகள் நடைமுறை நூல் இல்லா மாநிலங்களில் புதிய சிறைச்சாலை நடைமுறை நூல் இயற்றுதல், மற்றும் சிறைச்சாலை நடைமுறை நூல் உள்ள மாநிலங்கள், தற்போதுள்ள நடைமுறை நூலினை தற்போதைய நிலைமைக்கேற்ப மாற்றியமைத்தல்.

(ii) சிறைச்சாலைகளில் எட்டு மணிநேர வேலையினை அமுல்படுத்துதல்.

(iii) சிறைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தல்.

(iv) கிளைச் சிறைகளின் நிர்வாகத்தினை காவல் துறையிலிருந்து பிரித்து சிறைத் துறையிடம் அளித்தல்.

(v) சிறைச்சாலைகளின் கட்டிடங்கள் பற்றிய ஒரு முழு மாதிரி திட்டம் தயாரித்து அதனை நிறைவேற்றுதல்.

(vi) சிறைவாசிகளுக்கு நீரடிக் கழிப்பிடங்கள், கழிவு நீரகற்று வசதி மற்றும் தண்ணீர் வசதிகள் செய்து கொடுத்து சுகாதார வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

(vii) சிறைவாசிகளுக்கு அவசர விடுப்பு மற்றும் சாதாரண விடுப்பு வழங்குதல்.

(viii) 200 சிறைவாசிகளுக்கான கூடம் கட்டுதல்.

(ix) சிறைவாசிகளுக்கு சிற்றுண்டிசாலை வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

(x) சிறை நிர்வாகத்தினை சீரமைத்து மேல்நிலைக் கண்காணிப்பிற்காக சிறைத் துறைத் துணைத்தலைவர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்.

(xi) சிறைகளில் உளவியல் வல்லுநர்கள் மற்றும் சமூக நல பணியாளர்கள் நியமித்தல்.

அரசு கூடுதல் செலவினம் இல்லாத பரிந்துரைகளை ஏற்பதென கொள்கையளவில் முடிவு செய்து, பல நேர்வுகளில் அரசாணை ஏற்கெனவே வழங்கியுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றிட, மத்திய அரசு நிதி உதவி செய்தல் வேண்டும் என்பது ஒரு பரிந்துரை ஆகும். இதனை தொடர்ந்து

ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரை மற்றும் சிறைகளை நவீனப் படுத்தும் திட்டங்களின்கீழ் அளிக்கப்பட்ட நிதி உதவி இந்த பரிந்துரைகளை அமுல்படுத்த முழுவதுமாக செலவழிக்கப்பட்டு வரப்படுகின்றது.

## XXVI. சிறை நிருவாகத்திற்கான அலுவலர்குழு பற்றிய அறிக்கை:

இந்திய அரசு, சிறை நிருவாகம் மற்றும் சிறைகளை நிருவகிக்கும் பணி தொடர்பான பல்வேறு பொருட்களை குறிப்பாக சிறைகளில் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான பொருட்களை ஆராய்ந்து, அவைகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை பரிந்துரை செய்வதற்காக திரு. ஆர். கே. கபூர், இ.கா.ப. (ஓய்வு) தலைமையில் அலுவலர்கள் அடங்கிய ஓர் சிறு குழுவை 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நியமனம் செய்தது. இக்குழுவின் அறிக்கை இந்திய அரசிடமிருந்து 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெறப்பட்டது. இந்தக் குழுவின் முக்கிய பரிந்துரைகளாவன: 75 சதவிதம் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் அமைத்துக் கொடுத்தல், உலோக கண்டுப்பிடிப்பான கருவி ஏற்படுத்திக் கொடுத்தல், வாக்கி— டாக்கிகள் நிறுவுதல், உள் இணைப்பு தொலைபேசி நிறுவுதல், தொலைக்காட்சி பெட்டிகள் படம் பிடிக்கும் வசதியுடன் ஏற்படுத்திக் கொடுத்தல், எக்ஸ்ரே கருவி அமைத்தல், வெடி மருந்து கண்டுபிடிப்பான கருவி, காவல் பணியாளர்களின் எண்ணிக்கையினை உயர்த்துதல், சுற்றுச் சுவரின் உயரத்தினை உயர்த்துதல் முதலியன ஆகும். மத்திய அரசு அளித்த நிதி உதவியினைக் கொண்டு உலோக கண்டுபிடிப்பான் கருவி அனைத்து மத்திய சிறைகளிலும், வாங்கி வழங்கப் பட்டுள்ளது. தற்போது பழைய இணைப்பு தொலைபேசிகளை மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது அரசு வாக்கி— டாக்கி நிறுவ அங்கீகாரம் வழங்கியுள்ளது. வாக்கி— டாக்கி நிறுவிட தமிழ்நாடு மின் அணுக்கழகம், சென்னையுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இதர பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## XXVII. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல் ;

(அ) மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ் நவீனப்படுத்துதல் :

சிறை நிருவாகத்தினை மேம்படுத்தும் மதநிய நிதி உதவித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு 1987–90ஆம் வருடம் ரூ. 864 இலட்சம் இலக்கு நிர்ணயித்தது. இந்த திட்டக்காலம் தற்போது 31–3–1992 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்ட உதவி ஒரு சில நேர்வுகளில் 50 : 50 இணை மானியம் மற்றும் ஒரு சில நேர்வுகளில் 100 சதவிகித மானியம் என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது. இந்த மத்திய நிதி உதவியில் மத்திய அரசு இதுவரை ரூ. 196.41 இலட்சம் விடுவித் துள்ளது. தமிழக அரசு இத்திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு இதுவரை ரூ. 359 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி யுள்ளது. இதரத் திட்டங்கள் மத்திய அரசு மற்றும் தமிழக



அரசின் பரிசீலனையில் உள்ளன. இந்த மத்திய நிதி உதவியின்கீழ் நிதி உதவி வழங்கப்பட்ட திட்டங்களுக்கு பாதுகாப்பு, சிறைவாசிகளுக்கு மருத்துவ வசதிகள், தொடர்பு வசதிகள் பணியாளர் பயிற்சி மற்றும் சிறைவாசிகளுக்கு இதர வசதிகள் என்பதன் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை அங்கீகாரம் வழங்கப்பட்டு செயல்படுகின்ற திட்டங்களின் விவரம் இணைப்பு—II இல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசு ரூ. 235.59 இலட்சம் சிறை நிருவாகத்தினை நவீனப்படுத்த மத்திய நிதி உதவியாக தற்போது விடுவித்துள்ளது.

(ஆ) சிறைச் சாலைகளில் எச்சரிக்கை ஒலி மின்னணுச் சாதனத்தை அமைத்தல் :

சிறைக் கைதிகள் சிறையில் இருந்து தப்பிச் செல்வதை தடுக்கும் நோக்குடன், எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் பாதுகாப்பு எச்சரிக்கை ஒலிச் சாதனங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

## XXVIII. பணியாளர் நலன் :

பணியாளர்களால் ஆண்டு தோறும் அளிக்கப்படும் தொகையுடன் அரசு சிறை நல நிதிக்கு உதவித் தொகை ரூ. 7,000 ஆண்டு தோறும் வழங்குகிறது. தற்போது களப்பணியாளர் களில் 30 சதவிகித பணியாளர்களுக்கு மட்டுமே சிறையின் அருகில் குடியிருப்புகள் உள்ளது. ஆகவே அனைத்துப் பணியாளர் களுக்கும் சிறையின் அருகில் குடியிருப்பு கட்டும் பொருட்டு மத்திய நிதி உதவிப் பெற தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. அனைத்துப் களப் பணியாளர்களுக்கு தற்போது அரசு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 இடர்ப்படி (Risk Allowance) வழங்கியுள்ளது. தற்போது அரசு அத்தியாவசிய உணவுப் பண்டங்களை சிறை அலுவலரிலிருந்து இரண்டாம் நிலைக் காவலர் வரை, சலுகை விலையில் வழங்க ஆணை பிறப்பித் துள்ளது.

காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் சிறைச்சாலைப் பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் வீடுகள் கட்டுவதற் காகவும், தற்போது உள்ள வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக வும், அரசு சிறப்புத் திட்டம் ஒன்றை மேற்கொள்ளும்.

## XXIX. பகுதி-II திட்டம்:

சிறைச்சாலைகளிலும், கிளைச் சிறைச்சாலைகளிலும் குடிநீர் வழங்கல், வடிகால் வசதி, துப்புரவு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது தொடர்பாக, 1992–93 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 29.70 இலட்சம் செலவில் பதினாறு பகுதி-II திட்டப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



## இணைப்பு II.

சிறைச்சாலைகளை நவீனப்படுத்தும் மத்திய அரசு திட்டத்தின் கீழ் 1991–92 ஆம் வருடம் அங்கீகரிக்கப்பட்ட பணிகளின் விபரம்.

| வரிசை எண். | எண்ணும் பணியின் பெயரும். | அங்கீகரிக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) | அங்கீகரிக்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | மத்திய சிறை, புழலுக்கு ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் ஜீப் வாங்குதல். | 1.31 | அரசாணை நிலை எண். 756, உள் (சிறை-இ) துறை, நாள் 6–5–1991. |
| 2 | திறந்த வெளிச் சிறை, சிங்காநல்லூருக்கு ஒரு நோயாளி ஊர்தி வாங்குதல் — ஒரு ஓட்டுநர் பணியிடத்துடன். | 1.65 | அரசாணை நிலை எண், 1659, உள் (சிறை-இ), துறை, நாள் 8–11–1991. |
| 3 | சிறைத் துறைத் தலைவர் அலுவலக உபயோகத்திற்கென ஒரு ஜீப் வாங்குதல். | 1.50 | -ஷெ- |
| 4 | மத்திய சிறை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் பாளையங்கோட்டை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டையின் இண்டர்காம் நிறுவுதல். | 4.00 | -ஷெ- |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5 | சிறைவாசிகளுக்கு தனியாக தொழில் முறை மோட்டார் வைண்டிங் முதலிய வற்றில் 25 பேருக்கு பயிற்சியளித்தல். | 1.25 | அரசாணை நிலை எண் 165 உள்(சிறை) துறை, நாள் 8-11-1991. |
| 6 | சிறைவாசிகளுக்கு தனியான தொழில் முறை, உருவாக்குதல் மற்றும் மர வேலைப் பிரிவில் முறையே 50 பேருக்கு பயிற்சி அளித்தல். | 2.04 | ஷெ |
| 7 | மத்திய சிறை, திருச்சியின் பழைய உற்பத்திப் பிரிவுக் கிடங்கினை சிறப்பு பழுது பார்த்தல். | 0.33 | ஷெ |
| 8 | மத்திய சிறை, திருச்சியின் 11-வது தொகுதியின் உப்பந்திக் கூடத்தினை சிறப்பு பழுது பார்த்தல். | 0.64 | ஷெ |
| 9 | மத்திய சிறை, திருச்சியின் 5-வது மற்றும் 6-வது தொகுதிக்கு இடையில் உள்ள நெசவுத் தொழிற்சாலையினை சிறப்பு பழுது பார்த்தல். | 0.58 | ஷெ |
| 10 | மத்திய சிறை, திருச்சியின் 7-வது தொகுதியின் கூரை அமைத்தல் மற்றும் சிறப்பு பழுது பார்த்தல். | 0.93 | ஷெ |
| 11 | மத்திய சிறை, திருச்சியின் தொகுதி எட்டினை இரண்டு பகுதிகள் சிறப்பு பழுது பார்த்தல். | 0.37 | ஷெ |
| 12 | மத்திய சிறை, திருச்சியின் பண்டக சாலையின் மேற் கூரை அமைத்தல் மற்றும் சிறப்பு பழுது பார்த்தல். | 0.80 | ஷெ |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 13 | மத்திய சிறை, திருச்சியின் மருத்துவ மனைக்கு மேற் கூரை அமைத்தல் மற்றும் சிறப்பு பழுது பார்த்தல். | 0.87 | அரசாணை நிலை எண் 1659, உள் (சிறை) துறை, நாள் 8-11-1991. |
| 14 | மத்திய சிறை, திருச்சியின் தச்சுத் தொழிற் கூடத்திற்கு மேற் கூரை அமைத்தல் மற்றும் சிறப்பு பழுது பார்த்தல். | 0.13 | ஷெ |
| 15 | மத்திய சிறை, திருச்சியின் 4-வது தொகுதி 48 குடியிருப்புகள் வடக்கு காவலர்கள் குடியிருப்பு மேற் கூரை அமைத்தல் மற்றும் சிறப்பு பழுது பார்த்தல். | 1.64 | ஷெ |
| 16 | மத்திய சிறை, திருச்சியின் 4-வது தொகுதி 38 குடியிருப்புகள் தெற்கு காவலர்கள் குடியிருப்பு மேற் கூரை அமைத்தல் மற்றும் சிறப்பு பழுது பார்த்தல். | 1.21 | ஷெ |
| 17 | மத்திய சிறை, திருச்சியின் 6-வது தோட்டத்தில் உள்ள கிணற்றினை ஆழப்படுத்தி சிறப்பு பழுது பார்த்தல். | 1.48 | ஷெ |
| 18 | மத்திய சிறை, திருச்சியின் 7-வது தோட்டத்தில் உள்ள கிணற்றினை ஆழப்படுத்தி சிறப்பு பழுது பார்த்தல். | 1.36 | ஷெ |
| 19 | மத்திய சிறை, திருச்சியின் இணைப்பு சாலையினை சிறப்பு பழுது பார்த்தல். | 2.84 | ஷெ |
| 20 | தொழிற் கூடங்கள் | 33.60 | ஷெ |

## அத்தியாயம் 2.

### தமிழ் நாட்டில் அரசினர் மறுவாழ்வு இல்லங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1992-93.

**I. குறிக்கோள் ஒரு கண்ணோட்டம் :**

தொழு நோயால் அவதியுறும் பிச்சைக்காரர்கள் நோயினைக் குணப்படுத்தவும், அவர்கட்கு புதுவாழ்வு அளிக்கவும் தமிழ் நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கென மறுவாழ்வு இல்லங்கள் அமைத்துள்ளது :—

1. பரனூர், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.
3. பர்கூர், தருமபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
6. மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.
7. யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
8. மல்லவாடி, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்
9. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.
10. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.

**II. நிருவாகம் :**

மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநரின் கீழ் இயங்கி வந்த அரசு மறுவாழ்வு இல்லங்கள், 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் நாள் முதல் சிறைத் துறைத் தலைவர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மறுவாழ்வு இல்லமும் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிருவாக அலுவலரின் தலைமையின் கீழ் இயங்குகிறது.

**III. அனுமதி மற்றும் நீக்கம் :**

ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியவர்களும் (ஆண், பெண் உட்பட) 25 சிறுவர்களும் தங்குவதற்கு வசதியுள்ளது. தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களும், பிச்சை எடுத்ததற்காகத் தண்டனை வழங்கப்பட்டவர்களும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களில் கணவனோ அல்லது மனைவியோ தொழு நோயால் பாதிக்கப்பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால், மற்றவரையும் இவ்வில்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின் அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.



உள்ளிருப்போர்கள், தொழு நோய் இல்லாதவர்கள் என்று மருத்துவ அதிகாரிகளால் சான்று அளிக்கப்பட்டால், அவர்கள் சொந்த முயற்சியில் வாழ்க்கை நடத்த இயலுமாயின் அவர்கள் வெளியில் அனுப்பப்படுகிறார்கள். மேலும் திரும்பத் திரும்ப ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்வோர் மற்றும் இல்லம் சீரிய முறையில் நடைபெற தடையாய் இருப்போர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

**IV. உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள்:**

இவ்வில்லத்தில் உள்ளிருப்போருக்கு இலவசமாகத் தங்க வசதியும் உணவு, உடை மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும் திரைப்படம் காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**(அ) உணவு :**

இவ்வில்லத்திலிருப்பவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியும், தேநீரும், மதிய உணவும், மாலை தேநீரும் மற்றும் இரவு உணவும் அளிக்கப்படுகின்றது. நாள் தோறும் மோர் வழங்கப்படுகிறது. வாரம் ஒரு முறை இறைச்சியும் வழங்கப்படுகிறது. இதற்காக வயது வந்த இல்லவாசி ஒவ்வொருவருக்கும் தினமும் ரூ. 5.50-ம் அவர்களைச் சார்ந்த உறவினர் மற்றும் சிறுவருக்கு தினமும் ரூ. 4.00-ம் செலவிடப்படுகிறது. சுதந்திர தினம், காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் முக்கியமான நாட்களிலும் ஒவ்வொரு உள்ளிருப்போருக்கும், கூடுதல் ரூபாய் மூன்றுக்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

**இ. இருப்பிடம் :**

உளுந்தூர்பேட்டை, பர்கூர் இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக்கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (பிளாக்) கீழ் தளத்தில் கட்டப்பட்டுள்ளன. மேலும், முதல் மாடியில் தனியாள் தங்குவதற்குத் துயில் கூடங்கள் (Dormitories) கட்டப்பட்டு உள்ளன. உளுந்தூர்பேட்டை, பர்கூர் இல்லங்கள் ஒற்றைக் கட்டிடமாகவும், நிரந்தர கொட்டகையாகவும் கட்டப்பட்டுள்ளன.

**ஈ. உடை :**

பொங்கல் நாள், சுதந்திர நாள் ஆகிய தினங்களில் உள்ளிருப்போருக்கு (இருமுறை) உடைகள் வழங்கப்படுகின்றன. மேலும் மூன்று ஆண்டுக்கு ஒரு முறை ஒரு போர்வையும் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு ஆண்டுதோறும் இரப்பர் காலணிகளும் வழங்கப்படுகின்றன.

எ. மருத்துவ வசதிகள் :

இல்லவாசிகளுக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இரு மருத்துவ அதிகாரிகள், இரு செவிலியர்கள், ஒரு ஆய்வுக் கூட தொழில் நுட்பப் பணியாளர் ஒரு மருந்தாளுநர், ஒரு உடற்கூறு பயிற்சியாளர், ஒரு தாய்மை மருத்துவ துணை செவிலியர், ஒரு உதவி ஆண் செவிலியர், ஒரு உதவி பெண் செவிலியர் முதலானவர்கள் ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசிகளின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கின்றனர். அங்குள்ளவர்களுக்குத் தொழுநோய் சிகிச்சை அளிப்பதோடு மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தீவிர சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள், 10 பேர் தங்கக்கூடிய தனி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்பு உணவு மற்றும் மருந்துகள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகளும் கொண்ட அறுவை சிகிச்சைக் கூடங்கள் பர்கூர், உளுந்தூர்பேட்டை இல்லங்களைத் தவிர மற்ற இல்லங்களில் உள்ளன. கைவிரல் முடமானவர்கள் கால் விளங்காதவர்கள் மற்றும் உடற்கூறு சரியில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. கண்நோயால் அவதியுறுபவர்களுக்கு பரிசோதனைக்குப் பின் மூக்கு கண்ணாடிகளும் மற்றும் கறுப்பு மூக்கு கண்ணாடிகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. மாவட்ட காசநோய் மருத்துவ நிபுணர்களும் மற்றும் கண் மருத்துவ நிபுணர்களும் இவ்வில்லவாசிகளின் மற்ற நோய்களையும் கண்டறிய இவ்வில்லங்களை பார்வையிடுகின்றனர். இல்லவாசிகளாலேயே செய்யப்படும் தனிச் சிறப்பு வாய்ந்த காலணிகள் மற்றும் செயற்கை உறுப்புகள் (கை, கால்) முதலியவைகள் வழங்க இல்லம் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 300 செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. விரல்கள் செம்மையாக இல்லாத இல்லவாசிகளுக்கு பாய், தட்டு, கரண்டி, எண்ணெய், சோப்பு, பற்பொடி, பல்துலக்கும் பிரஷ் முதலியன அளிக்கப்படுகின்றன.

ஐ. உடற்பயிற்சியும், தொழிற் பயிற்சியும் :

ஒவ்வொரு இல்லத்திலும், ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். இவர் மின் கருவி (Electric stimulator) மெழுகு தொட்டி (wax bath) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்பினர்களுக்கும், உடற்கூறு பயிற்சி தேவையுள்ள உள்ளிருப்போர் அனைவருக்கும் பயிற்சி அளிக்கிறார். குடற்புண் மற்றும் உறுசிதைந்த நோயாளிகளை உடற்கூறு பயிற்சியாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவை சிகிச்சைக்காக தெரிந்தெடுக்கின்றனர்.

இல்லவாசிகளுக்கு நுண்ணிய துளையுடன்கூடிய ஏப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன.



ஒ. பொழுதுபோக்கு வசதிகள் :

ஒவ்வொரு இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 200 அரசு அனுமதித்துள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும், இல்லவாசிகள் இன்புற்று இருக்க வருடத்துக்கு ரூ. 400-க்கு இசைக் கருவிகளும் வாங்கி அளிக்கப்படுகின்றன.

ஔ. கல்வி மற்றும் இதர வசதிகள்.

இல்லவாசிகளுக்காக இரு தினசரி செய்தித் தாள்கள் வழங்கப்படுகின்றன. அவர்களின் இலக்கியம் மற்றும் பொதுக்கல்வி மேம்பாட்டிற்காக இலக்கிய நூல்கள் வழங்கப்படுகின்றன. இல்லத்தில் உள்ள இல்லவாசிகள் சமச் சடங்குக்காக அரசு ரூ. 100 செலவினம் செய்ய அனுமதித்துள்ளது.

IV. இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் :

தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஏத்தாப்பூர் என்னும் இடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் கூடுமான வரையில் தனியாகப் பிரிக்கப்பட்டு, இவ்வில்லங்களின் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

முதன்மை செலவினங்களுக்காகவும், சீருடை, புத்தகங்கள், பெட்டி முதலியவைகளுக்காகவும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் ரூ. 75 அரசு வழங்குகிறது.

மறுவாழ்வு இல்லங்களிலிருந்து பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் மேற்கொண்டும் படிப்பிற்காக, வகுப்பு வாரியாக ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) ரூ. 120 (ஆறு ஆண்டுகளுக்கு).

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புகளுக்கு ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) ரூ. 60 (ரூபாய் அறுபது மட்டும்) இரண்டு ஆண்டுகளுக்கு.

பத்தாம் வகுப்பிற்கு ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்).

பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கு ரூ. 75 (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்) ரூ. 150 (இரண்டு ஆண்டுகளுக்கு).

## V. இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் :

இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழுநோயாளிகளில் உடல் நலத்துடன் இருப்போருக்கு கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது :—

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி).
2. பாய் பின்னுதல்.
3. செருப்பு செய்தல் மற்றும் பழுது பார்த்தல்.
4. தையல்.
5. தச்சு வேலை.
6. விவசாயம்.
7. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லத்தில்)

பரனூர் மறுவாழ்வு இல்லத்தில், காட்பாடியிலுள்ள ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவைச் சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடத்தில், பயிற்சி அளிக்கப்பட்டவர்கள், திருச்சி, காட்பாடி ஆகிய இடங்களில் உள்ள மேற்படி சங்கத் தொழிற்சாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், உள்ளிருப்போருக்கு பட்டறைகளில் (லேத்) தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. முக்கியமாக, இத்தொழிற்சாலைகளில் கட்டுப்பாடான ஒழுங்கு முறையில் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

## VI. கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகள் :

தற்பொழுது 135 கைத்தறிகளும், 77 பாய்தறிகளும், எல்லா இல்லத்திலும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள் போக, மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட மருத்துவ மனைகளுக்கு விற்கப்படுகின்றன. கிராமப்புற நூற்பு கேந்திரம், யா. புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளது. இவைகளில், பிரதி மாதம் 10,000 சிட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 34 தையல் மிஷின்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள், தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.



## VII காகித உறை தயாரிப்புப் பிரிவு :

புதுக்கோட்டை, அரசு மறுவாழ்வு இல்லத்தில் காகித உறை தயாரிப்பு பிரிவு 1—8—1978 முதல் இயங்கி வருகிறது.

## VIII. இல்லங்களில் உள்ள இல்லவாசிகளின் விவரம் மற்றும் சில விவரங்கள் :

தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இல்லவாசிகள், பணியாளர் விவரம் மற்றும் இல்ல உற்பத்தி பொருட்களின் லாப நஷ்ட கணக்கு விவரங்கள் முறையே படிவங்கள் I, II மற்றும் III -ல் அளிக்கப்பட்டுள்ளது.

## படிவம் I

**அரசு மறுவாழ்வு இல்லங்களில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் நிலவரப்படி தங்கியுள்ள உள்ளிருப்போர் விவரம்.**

| வரிசை எண்ணும் மறுவாழ்வு இல்லத்தின் பெயரும். | உள்ளிருப்போர் மொத்த எண்ணிக்கை. (400 பெரியவர்கள் 25 சிறியவர்கள்) | பெரியோர்கள். | | சிறியோர்கள். | | | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள் | பெண்கள் | சிறார். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 உளுந்தூர்பேட்டை .. | 425 | 130 | 81 | 6 | 16 | 8 | 241 |
| 2 புதுக்கோட்டை .. | 425 | 206 | 121 | 9 | 9 | .. | 345 |
| 3 யா. புதுப்பட்டி .. | 425 | 247 | 121 | 24 | 22 | .. | 414 |
| 4 மல்லவாடி .. .. | 425 | 135 | 64 | 7 | 10 | .. | 216 |
| 5 மனையேரிப்பட்டி .. | 425 | 274 | 101 | 4 | 7 | .. | 386 |
| 6 பர்கூர் ... .. | 425 | 182 | 126 | 12 | 14 | .. | 334 |
| 7 தேவியாக்குறிச்சி .. | 425 | 164 | 94 | 7 | 13 | .. | 278 |
| 8 பரனூர் .. .. | 425 | 222 | 160 | 18 | 25 | — | 425 |
| 9 செல்லியம்பட்டி .. | 425 | 193 | 105 | 17 | 7 | .. | 322 |
| 10 விண்ணப்பள்ளி .. | 425 | 97 | 61 | 6 | 4 | 1 | 169 |
| | 4,250 | 1,850 | 1,034 | 110 | 127 | 9 | 3,130 |



## படிவம் II.

**அரசு மறுவாழ்வு இல்லங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.**

| வரிசை எண்ணும் பதவியின் பெயரும். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1 தலைமைக் கண்காணிப்பாளர் (மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் இரவலர் இல்லங்கள்). | 1 |
| 2 உதவி தனி அலுவலர் (மருத்துவம்) | 1 |
| 3 உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 4 தலைமை தொழில்நுட்பப் பயிற்சி பணியாளர் | 1 |
| 5 அலுவலகக் கண்காணிப்பாளர்கள் | 2 |
| 6 உதவியாளர்கள் | 5 |
| 7 இளநிலை உதவியாளர் | 1 |
| 8 தட்டச்சர் | 1 |
| 9 சுருக்கெழுத்து தட்டச்சர் (தலைமைக் கண்காணிப்பாளருக்காக). | 1 |
| 10 அலுவலக உதவியாளர் (தலைமைக் கண்காணிப்பாளருக்காக). | 1 |
| 11 அலுவலக உதவியாளர் (இல்லம்) | 1 |
| 12 ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர் | 1 |
| 13 உதவி தனி அலுவலருக்காக (மருத்துவம்) நியமிக்கப்பட்ட அலுவலக உதவியாளர். | 1 |
| 14 அலுவலக உதவியாளர் (அலுவலகம்) | 1 |

**பத்து (10) மறுவாழ்வு இல்லங்களில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் :**

| | |
|---|---|
| 1 நிருவாக அலுவலர்கள் | 10 |
| 2 உதவி மருத்துவர்கள் | 20 |
| 3 செவிலியர்கள் | 20 |
| 4 தாய்மை மருத்துவ துணைச் செவிலியர்கள் | 10 |
| 5 தொழுநோய் உடற்கூறு பயிற்சியாளர்கள் | 10 |
| 6 ஆய்வுக்கூட தொழில் நுட்ப பணியாளர்-நிலை-1 | 10 |
| 7 மருந்தாளுநர்கள் | 10 |
| 8 ஆண் செவிலி உதவியாளர்கள்—நிலை-2 | 10 |
| 9 பெண் செவிலி உதவியாளர்கள்—நிலை-2 | 10 |
| 10 துப்புரவுப் பணியாளர்கள் | 20 |
| 11 சமையலரின் உதவியாளர்கள் | 20 |

படிவம் II—தொடர்ச்சி

| வரிசை எண்ணும், பதவியின் பெயரும் | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 12 அலுவலக உதவியாளர்கள் | 10 |
| 13 சமையலர்கள் | 10 |
| 14 அலுவலகக் கண்காணிப்பாளர்கள் | 10 |
| 15 பண்டகக் காப்பாளர் மற்றும் கணக்கர்கள் | 10 |
| 16 இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் | 10 |
| 17 ஓட்டுநர்கள் மற்றும் சுத்தம் செய்பவர்கள் | 10 |
| 18 தொழில் பயிற்சிப் பணியாளர்கள் | 3 |
| 19 தலைமைக் காப்பாளர்கள் | 20 |
| 20 காப்பாளர்கள் | 80 |
| 21 மின் பணியாளர்— நிலை-2 | 10 |
| 22 மின்விசைத் தறி விரிவுரையாளர் | 1 |
| 23 இளநிலை முதலாள் | 1 |
| 24 இளநிலை புத்தகம் கட்டுபவர்கள் | 1 |



படிவம் III.

மறுவாழ்வு இல்லங்களில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு விவரம்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | 1984-85. (2) | 1985-86. (3) | 1986-87. (4) | 1987-88. (5) | 1988-89. (6) | 1989-90. (7) | 1990-91. (8) |
|---|---|---|---|---|---|---|---|
| மூலப்பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு. | 4.00 | 4.04 | 4.68 | 5.63 | 6.47 | 6.05 | 4.04 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு. | 3.95 | 3.98 | 5.62 | 6.76 | 5.39 | 5.86 | 4.85 |
| ஆதாயம்/இழப்பு.. | (—) 0.05 | (—)0.06 | (+)0.94 | (+)1.13 | (—)1.08 | (—)0.19 | (+)0.81 |

## அத்தியாயம் 3.

## அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம், பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1992–93.

### I. குறிக்கோள் ஒரு கண்ணோட்டம் :

காவல் துறையின் மேற் பார்வையில் 1–3–1954 முதல் நடத்தப்பட்டு வந்த மேல்பாக்கம் அரசினர் காப்பு முகாம் இத் தகைய முகாம்களில் முதன்மையானதாகும். சென்னை நகரில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைத் தடுத்து அவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் தொழிற் பயிற்சி கொடுத்து சிறந்த ஒரு குடிமகனாக ஆக்குவதே இவ்விடுதியின் நோக்கமாகும்.

### II. நிருவாகம் :

இவ்வில்ல நிர்வாகம் 1–10–1973 முதல் சென்னை, காவல் துறைத் தலைவர் பொறுப்பிலிருந்து சமூக நல இயக்கு நர் தலைமைப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டு மீண்டும் 1–12–84 முதல் சிறைத் துறைத் தலைவர் தலைமையின் கீழ் மாற்றப் பட்டுள்ளது. இந்த இல்லம் ஒரு ஆட்சியரின் தலைமையில் இயங்கும், அவர் தலைமைக் கண்காணிப்பாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிவார்.

### III. அனுமதி மற்றும் நீக்கம் :

இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட இல்லவாசிகளின் எண் ணிக்கை 950 பிச்சைக்காரர்கள் (770 ஆண்கள், 180 பெண்கள்) ஆகும். அரசாணை நிலை எண். 891, சமூக நலத்துறை, நாள் 30–9–1972-ல் வெளியிடப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க இவ்வில்லம் நடத்தப்பட்டு வருகிறது. 1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்புத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்டு பரா மரிக்கப்பட்டு வருகிறார்கள். தண்டனைக் காலம் ஒரு வருடத் திலிருந்து மூன்று வருடங்களாகும். இங்கு சேர்க்கப்படும் இல்லவாசிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலம் முடிவடைகிற தேதியில் விடுதியிலிருந்து விடுவிக்கப்படுகிறார் கள். எந்த ஒரு இல்லவாசியும் குற்றத் தீர்ப்பு ஆணையில் குறிப்பிடப்பட்ட தண்டனைக் காலம் முடிந்த பின் விடுதியில் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை.

### IV. உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள் :

இம்முகாமில் இருப்போருக்கு இலவசமாக சாப்பாடு, தங்கும் வசதி, ஆடைகள், மருத்துவ வசதிகள் வழங்கப்படுவது டன் பல்வேறு துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.



#### (அ) உணவு :

இல்லவாசிகளுக்கு உணவுக்காக நாளொன்றுக்கு உரிய வய தடைந்த ஒரு நபருக்கு ரூ. 5.50 வீதமும், குழந்தைகளுக்கு ரூ. 4.00 வீதமும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத் தொகைகளுக்குள் இவர்களுக்கு சைவ உணவு வழங்கப்பட்டு வருகிறது. காலை கேழ்வரகு கஞ்சி மற்றும் வெங்காயம், பகல் உணவு, இரவு உணவு வழங்கப்பட்டு வருகிறது. நாள் தோறும் மோர் வழங்கப்படுகிறது. முக்கியமான நாட்களான புது வருடப் பிறப்பு, சுதந்திர தினம் போன்ற குறிப்பிட்ட நாட் களிலும், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் போன்ற சில பண்டிகை நாட்களிலும் ஒரு இல்லவாசிக்கு ரூ. 1.00 வீதம் சிறப்புணவு வழங்கப்பட்டு வருகிறது.

#### (இ) இருப்பிடம் :

இவ்வில்லம் ஏறக்குறைய 9 ஏக்கர் பரப்பளவில் அமைந் துள்ளது. ஒரே தளமுள்ள படுக்கைக் கூடங்களில் இல்லவாசி கள் தங்க வைக்கப்படுகின்றனர். ஒரு கூடத்தில் 100 பேர் வீதம் தங்குவதற்குரிய நான்கு படுக்கைக் கூடங்கள் உள்ளன. இந்த நான்கில் ஒன்று பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

#### (உ) உடை :

இரண்டு துண்டுகள், இரண்டு சட்டை மற்றும் இரண்டு கால் சட்டைகள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இரண்டு சேலை மற்றும் இரண்டு ஜாக்கெட்டுகள் ஆண்டுக்கு ஒரு முறை இலவச மாக வழங்கப்படுகிறது. விடுதியில் சேர்க்கப்படும் நாள் அன்று ஒரு துண்டு, ஒரு சட்டை, ஒரு கால் சட்டை வீதம் வழங்கப்படு கிறது.

#### (எ) இதர வசதிகள் :

(i) ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய், படுக்கை விரிப்பு, தட்டு, நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது.

(ii) இல்லத்தில் அனுமதிக்கப்படும் போது ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஒரு அஞ்சல் அட்டையும், மேலும் அவர் களின் தேவைக்கு ஏற்ப கூடுதல் அஞ்சல் அட்டையும் வழங்கப் படுகிறது.

(iii) தண்டனைக் காலம் முடிந்து வெளியேறும் இல்ல வாசிகளுக்குஅவர்களின் சொந்தஊர் செல்ல வசதியாக ரெயில்வே வாரண்ட் அல்லது பேருந்து கட்டணம் அளிக்கப்படுகிறது.

(iv) இல்லவாசிகளுக்கு இரண்டு தினசரி செய்தித் தாள்கள் வாங்கப்படுகிறது.

(v) இல்லவாசிகள் விளையாடுவதற்கான வசதியும், தொலைக் காட்சிப் பார்க்க வசதியும், வானொலி போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

(ஐ) மருத்துவ வசதிகள் :

இவ்விடுதிக்கென ஒரு மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் ஒரு மருத்துவ அலுவலரும், ஒரு செவிலியரும், ஒரு ஆண் உதவி செவிலியரும், ஒரு பெண் உதவி செவிலியரும் மற்றும் இரு மருந்தாளுநரும் பணியாற்றுகின்றனர். சாதாரண பிணிகளை நீக்கும் மருந்துகளும் மற்றும் மாத்திரைகளும் போதிய அளவில் உள்ளன. சிறப்புத் தன்மை உடைய வைத்திய வசதிக்காக நோய்களுக்கேற்ப சென்னையின் உள்ள பல்வேறு மருத்துவ மனைகளுக்கு பிணியாளர்கள் பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறார்கள். தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், உளுந்தூர்பேட்டை தொழுநோய் மறுவாழ்வு இல்லத்திற்கு மாற்றம் செய்யப்படுகின்றனர். சென்னை மனநல மருத்துவமனையிலிருந்து மனநல மருத்துவர் வாரத்திற்கு ஒரு முறை விடுதிக்கு வந்து மனநலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்.

V இல்லவாசிகளுக்கான மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் :-

இவ்வில்லத்தில் உடல் வலிமையுள்ள பிச்சைக்காரர்கள் ஏதாவதொரு சிறு தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்வில்லவாசிகளுக்கு கைத்தறி, தச்சு, மேலும் தையல் போன்ற சிறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பல தரப்பட்ட தொழில்களில் ஈடுபடும் இல்லவாசிகளுக்கு ஒரு ஆளுக்கு நாளொன்றுக்கு 10 காசு ஊக்கத் தொகையாக அளிக்கப்படுகிறது.

(அ) நெசவு :

கைத்தறிப் பிரிவில் 9 மேசைத் தறிகள் உள்ளன. இதில் சுமார் 15 இல்லவாசிகள் பயிற்சி பெறுகிறார்கள். இத்தறிகளில் தயாரிக்கப்படும் துணிகள் இவ்வில்லவாசிகளின் ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

(இ) தையற் பிரிவு :

தையல் இயந்திரங்கள் ஆறு இப்பிரிவில் உள்ளன. இல்லவாசிகள் இப்பிரிவில் பயிற்சி பெறுகிறார்கள்.



(உ) தச்சு வேலை :

இப்பிரிவில் சுமார் பத்து இல்லவாசிகள் வேலை செய்கிறார்கள். அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் எல்லாவிதமான மரச்சாமான்களும் இங்கு பழுது பார்க்கப்பட்டு அத்துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

VI இல்லவாசிகளின் எண்ணிக்கை மற்றும் இதர விபரங்கள் :

இந்த இல்லத்தின் மொத்த இல்லவாசிகளின் எண்ணிக்கை 31-12-1991-ல் 61 ஆகும் (58 ஆண்கள், 3 பெண்கள்). இந்த இல்லத்தின் பணியாளர்கள் விபரம் மற்றும் உற்பத்தி பொருட்களின் இலாப நஷ்ட அறிக்கை முறையே படிவம் 'அ' மற்றும் 'இ'-ல் அளிக்கப்பட்டுள்ளது.

படிவம் அ.

## அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம் அலுவலர்கள் பற்றிய விவரப்பட்டியல்.

| வரிசை எண். | பதவியின் பெயர். | பதவியின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | நிருவாகி | 1 |
| 2 | துணை நிருவாகி | 1 (இந்தப் பதவி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 3 | மருத்துவ அலுவலர் | 1 |
| 4 | அலுவல கண்காணிப்பாளர் | 1 |
| 5 | உதவியாளர்கள் | 2 |
| 6 | இளநிலை உதவியாளர்கள் | 2 |
| 7 | தட்டச்சர் | 1 |
| 8 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 |
| 9 | சமூக நல ஊழியர் | 1 |
| 10 | போதகர்கள் | 5 |
| 11 | அலுவலக உதவியாளர்கள் | 2 |
| 12 | தலைமைக் காவலர் | 1 |
| 13 | காவலர்கள் | 11 (9 பதவிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.) |
| 14 | வாயிற்காவலர்கள் | 2 |
| 15 | தலைமைக் காப்பாளர் | 1 |
| 16 | காப்பாளர்கள் | 9 (7 பதவிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.) |
| 17 | சமையற்காரர்கள் | 3 |
| 18 | துப்புரவுப் பணியாளர்கள் | 3 |
| 19 | சலவையாளர்கள் | 2 |
| 20 | சவரப் பணியாளர்கள் | 2 |
| 21 | மருந்தாளுநர்கள் | 2 |
| 22 | செவிலியர்கள் | 2 (1 பதவி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.) |
| 23 | பெண் செவிலி உதவியாளர்கள் | 2 |
| 24 | ஆண் செவிலி உதவியாளர்கள் | 2 |
| 25 | ஓட்டுநர் | 1 |
| | மொத்தம் | 62 |



படிவம் இ.

## அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு விபரம்.

| விவரம். | 1985-86. | 1986-87. | 1987-88. | 1988-89. | 1989-90. | 1990-91. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | | |
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு. | 0.12 | 0.16 | 0.17 | 0.12 | 0.04 | 0.05 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு. | 0.24 | 0.20 | 0.20 | 0.15 | 0.11 | 0.07 |
| ஆதாயம்/இழப்பு .. | (+)0.12 | (+)0.04 | (+)0.03 | (+)0.03 | (+)0.07 | (+)0.02 |

164972